என்றும் உங்களுடன் புத்தகம்-1

ங்கையர் மலர்

NGAYAR MALAR ஜனவரி 2008 258 பக்கங்கள் ரூ.18/-



டெப் கட்டிங்
ஸைனர்
ளவுஸ்!

ஸ்.எம்.எஸ்
போட்டி!

த்தாண்டு
ராசிபலன்!

3 புத்தகங்கள்

ணைப்பு



ராண்ணு
ப்பிள்ளை

www.jfa.in

JFA வழங்கும்

ஓம் பூஜா மண்டபம்

இறைவனுக்கென்றோர் இல்லம்



ஆவாஹனம் ஸமர்பயாமி

ஓம் பூஜா மண்டபங்கள், உங்கள் பூஜை அறைக்கு மேலூர் புனிதத்தன்மையை கூட்டுகிறது. தினசரி பூஜையின் பொழுது நீங்கள் இறைவனை அழைத்து, மந்திரங்களை ஜபித்து பக்தியுடன் பிரார்த்திக்கையில் தெய்வரீதியான அதிர்வுகளுடன் சேர்ந்து மன நிம்மதியை தரும் திவ்வியமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.

பல டிசைன்களில், பல அளவுகளில், மிகுந்த வேலைப்பாடுகளுடன் மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட ஓம் பூஜா மண்டபங்கள் கிரஹப்பிரவேசத்திற்கோ அல்லது திருமணத்திற்கோ உகந்த பரிசுப்பொருள்.



Chennai Showrooms Open on Sunday!

JFA

- Royapettah (Opp. Pilot Theatre) : Ph : 2813 1384, 2813 2403
- Anna Nagar : Ph : 2622 3377, 4210 3996
- Ashok Nagar : Ph : 2371 3493, 4203 3202
- Adyar : Ph : 2440 5120, 4211 7867
- Perambur : Ph : 2662 0552
- Ambattur : Ph : 4208 6731
- Nanganallur : Ph : 4358 6661
- Coimbatore : Ph : 438 0333, 438 0666
- Salem : Ph : 233 0259 / 69

An ISO 9001 - 2000 Certified Company

Also Available at:

Modfurn

Royapettah : Ph : 2811 1624, 2811 1872, 2811 7406



Thanks.... ரொம்ப thanks

வருடம் முழுவதும் காளீஸ்வரி நிறுவனத்தின் கோல்டு வின்னர், வனஸ்பதி, ஸ்ரீ கோல்டு பருப்பு வகைகள், கார்டியா ஹெல்த் ஆலிவ் ஆயிலுக்கு நீங்கள் தரும் ஆதரவுக்கு ரொம்ப தேங்க்ஸ்

காளீஸ்வரி நிறுவனத்தின் இனிய
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

KALEESUWARI

Gold Winner

Gold Winner VANASPATI

SREE GOLD பருப்பு வகைகள்

CARDIA HEALTH EXTRA VIRGIN EDIBLE OLIVE OIL

KALEESUWARI REFINERY PRIVATE LIMITED

முதலில் படிக்க...

ஒரு வார்த்தை - 5
அன்பு வட்டம் - 92

சிறுகதைகள்

இதமான சுமைகள் - 52
பாவம் அப்பா! - 42



34 அடையாளம் சொன்ன பரங்கிப் பூ!

கறவை - 24
கேட்டானே ஒரு கேள்வி - 114

மருத்துவம்

தைராய்டு நோய்களின் ராஜா- 126



8 ஸ்டெப் கட் ப்ளவுஸ்!

குஷி பக்கங்கள்

வண்ணக் கோலங்கள் - 102

வடாம் 64!



'மார்ச்' மாத மங்கையர் மலரின் இணைப்பாக வெளி வரவிருக்கும் 'வடாம் 64! குட்டி புக்குக்கு வாசகியர் எழுதி அனுப்பலாமே!

'வடாம் 64' என்று குறிப்பிட்டு விதவிதமான வடாம் வகைகள், டிப்ஸ் என அஞ்சலட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்க. ஒருவரே எத்தனைக் குறிப்புகள் வேண்டுமானாலும் எழுதலாம்.



முக்கிய அறிவிப்புகள்

20,21,141,146,152

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்
தரத்திலும் ந

என் செல்லமே - 58
குட்டீஸ் ஜூட்டி - 38
அம்மா பொண்ணு - 134

நெஞ்சில் நிற்கும் தொடர்கள்

பெண்ணே, நீ வாழ்க! - 130
ஸ்ரீ அன்னை - 88
அமாவாசை நிலவு - 104

அசத்தல் தொடர்

மூலிகை மந்திரம் - 74

இளமை

பூஞ்சாரல் பக்கங்கள் - 136

குழந்தை வளர்ப்பு

வாலாட்டும் வாண்டுகளை வசப்படுத்த - 110

ஜோதிடம்

2008 எப்படி?- ராசிப் பலன்கள் - 117

சமையல்

இம்மாத இல்லத்தரசி - 154

மினுக்கும் அழகை மீண்டும் பெற - 18


எங்க வாழ்க்கை - 147

அட்டையில் : ஸ்ரீதேவி
படம் : சங்கர் சத்யமூர்த்தி



மகளிர் மாத இதழ்!
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
மலர் : 27 இதழ் : 12 ஜனவரி 2008

ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!



ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திர முண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் **மறையகம் பாபா.** உடனே அணுகவேண்டிய முகவரி:

அருள்

மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட்,
நெ. 3, அப்துல் ரசாக் தெரு,
நூர்ஜஹான் தியேட்டர் எதிரில்
(தற்போது ராஜ் தியேட்டர் என்று மாற்றப்பட்டுள்ளது),
சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
☎ : 2435 1190, 2433 2047.
செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சனை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சனைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.

Estd. 1989 ஸ்ரீசுந்தர விநாயகர் துணை உ தேவதானப்பட்டி ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை

காலை காபி, 3 வேளை சைவ உணவு, தங்கும் வசதி, தினசரி ஒரு லிட்டர் மினரல் வாட்டர் மற்றும் Rs. 1 Lakh Travels Insurance உள்பட 3 Tier இரயிலில் சுற்றுலாக்கள்.

23-02-08 & 03-03-08 (மஹாசிவராத்திரி சுற்றுலா) & 18-03-08 & 16-04-08 & 09-05-08 & 23-05-08 மற்றும் 15-06-08 முதல் :
திரிவேணி–காசி–சாரணாத்–வியாசகாசி–கயா–புத்தகயா–கல்கத்தா – 9 நாட்கள் ரூ. 4200
★ இத்துடன் டெல்லி–பூரி–புவனேஸ்வர்–கோனார்க் உள்பட – 11 நாட்கள் ரூ. 4990
★ இத்துடன் ஆக்ரா–மதுரா–அமிர்தசரஸ்–வாகாபார்டர்–ஹரித்துவார்–ரிஷிகேஷ் உள்பட – 14 நாட்கள் ரூ. 6490

11-05-08 & 19-05-08 & 10-06-08 முதல் 13 நாட்கள் மதுரா–ஆக்ரா–பிருந்தாவன்–டெல்லி–ஹரித்துவார்–ரிஷிகேஷ்–பத்ரிநாத்-கேதார்நாத் ரூ. 6400
★ இத்துடன் திரிவேணி–காசி–கயா–கல்கத்தா–பூரி–புவனேஸ்வர்–கோனார்க் உள்பட – 17 நாட்கள் ரூ. 8200

18-02-08 & 27-02-08 13-03-08 & 11-04-08 & 04-05-08 & 18-05-08 முதல் 12 நாட்கள் : மதுரா-ஆக்ரா பிருந்தாவன்-டெல்லி–குருக்ஷேத்திரம்–சண்டிகர்–சிம்லா-குப்ரி-மணிக்கரன்-குலு-மணாலி- ரோத்தங்பாஸ்–பசிஷ்டாபாத் ரூ. 6590
★ இத்துடன் அமிர்தசரஸ்–வாகாபார்டர்–ஜம்மு–வைஷ்ணவதேவி உள்பட 16 நாட்கள் ரூ. 7990

18-03-08 & 16-04-08 & 07-05-08 & 18-05-08 & 10-06-08 முதல் 12 நாட்கள் பூரி–புவனேஸ்வர்–கோனார்க்–கல்கத்தா சயன்ஸ்சிட்டி–டார்ஜிலிங்-கேங்டாக்(சிக்கிம்)–சங்குலேக்–பாபாமந்திர்–மந்தாகினி வாட்டர் பால்ஸ் உள்பட ரூ. 6590

11-01-08 & 18-01-08 & 15-02-08 முதல் அந்தமான் சுற்றுலா, கப்பல் 10 கப்பல் 10 நாட்கள் பங்க்கிளாஸ் ரூ. 7990
★ IInd Class கப்பல்–Return விமானம் 8 நாட்கள் ரூ. 11990 ★ போக வர விமானம் 6 நாட்கள் ரூ. 15990

அமர்நாத், கைலாஷ், முன்னாறு, நேப்பாள், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா சுற்றுலாக்களுக்கு அணுகவும்

★ 60 நாட்களுக்கு முன் முழுப் பணம் செலுத்துவோருக்கு கட்டணத்தில் 5% சலுகை உண்டு.

மதுரையிலிருந்து அனைத்து சுற்றுலாத்தலங்களுக்கும் செல்லுவதற்கு DVD வசதியுடன் கூடிய A/c மற்றும் Non A/c கார், வேன், பஸ் வாடகைக்கு கிடைக்கும்.

* L.T.C. ரசீது தரப்படும். II Tier A/c & III Tier A/c சுற்றுலா உண்டு

சன் டிராவல்ஸ்

Prop. K. சிதம்பரம், B.Sc., B.Ed.
செல் : 98421 - 56668

மதுரை : 3, தெற்கு மாசி வீதி, T.M. கோர்ட் (நாகலு காபி எதிரில்) மதுரை – 1. போன் : 2341133
சென்னை : 30, நடேசன் தெரு, (சிவா–விஷ்ணு ஆலயம் அருகில்) T. நகர், சென்னை–17. போன் : 24359194, செல் : 93645-59194
திருப்பூர் : J.B. அப்பார்ட்மென்ட் 31-C, கோல் நகர், சிவா பார்க் தியேட்டர் ரோடு, திருப்பூர்–6. செல் : 93446 10317

ஒரு வார்த்தை!



இன்னும் எத்தனை எத்தனை ஆனந்தாக்களும், ரிஷிஜிகளும் வந்து உபதேசித்தாலும், வாழ்க்கை என்னவோ, நாளுக்கு நாள் முடிச்சு விழுந்த நூல் கல்கண்டு போல சிக்கலாகிக் கொண்டேதான் போகிறது!

என்னல்லாம் செய்தால் வாழ்க்கை இன்னும் சுலபமாகவும், எளிதாகவும் இருக்கும் என்று நான் ஒரு பட்டியல் போட்டிருக்கிறேன். இது, உங்களுக்குப் பயன்படுமா என்று பாருங்களேன்!

ஆட்டோ ரெகுலேஷன் அவசியம் :-

நம் இஷ்டத்துக்கு இந்த உலகம் மாறணும்னு எதிர்பார்க்கிறோம் இல்லையா? ஆனால், அது அத்தனை சுலபமாக இல்லையே. நீங்கள் மாறுங்கள். அதுதான் சுலபமானது. ''என் கணவர் இப்படி மாறினால்தான் நான் சந்தோஷமாக இருப்பேன். என் சக ஊழியர் இப்படி செய்தால் நான் டென்ஷனில்லாமல் இருப்பேன்!'' என்று நினைத்து அவர்களை மாற்றும் முயற்சியில் ஈடுபடாதீர்கள். அது முடியவும் முடியாது. நீங்கள் உங்கள் அணுகு முறையையும், மனப்பாங்கையும் மாற்றிக் கொள்வது எளிதானது. ''அவங்க சுபாவமே அதுதான்!'' என்று மனதார ஏற்றுக் கொண்டு விடுங்கள்!

பாசம் வெச்சா மோசம்தான்! :-

பாசம், பற்றுதலைத் தருகிறது. பற்றுதல் எதிர்பார்ப்புகளை ஏற்றிவிடுகிறது. எதிர்பார்ப்புகள் தான் ஏமாற்றங்களுக்குக் காரணம். அது நீங்கள் வைத்த பன்னீர் ரோஜா செடியாகட்டும்... பத்து மாசம் சுமந்தெடுத்த பிள்ளையாகட்டும்... நாம் சற்று ஓவராக (அல்லது நியாயமாகவே கூட!) எதிர்பார்க்க, அந்தப் பக்கத்திலிருந்து அந்த அளவுக்கு ரெஸ்பான்ஸ் இல்லாதபோது, மனம் ஒடிந்து போகும்!

அதிகச்சுமை, அல்லல்தரும்! :-

நமது அன்றாடத் தேவைகளைக் குறைத்துக் கொள்ளாவிட்டால் கூட பரவாயில்லை; அதிகரித்துக் கொண்டுவிடக் கூடாது! தேவைகள் குறையக் குறைய, மன நிம்மதி பெருகும்! ஒரு காலத்தில் ஆடம்பரமாகக் கருதப்பட்ட ஏஸி கார், இன்று அத்தியாவசியமாகிவிட்டது! ஆனால் அதோடு நிறுத்திக் கொள்ளாமல், இன்னுமொரு வெளிநாட்டுக் காருக்கு ஆசைபட்டால், அதற்கு எல்லையே இல்லாமல் போய் டென்ஷன் அதிகமாகும்!

கல்கி

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

நாத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பாரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பாரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி : 2225 1522,
2225 0623, 2225 1324
தொலைநகல் : 044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
மங்கையர் மலர்
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

ஒப்பீட்டை ஓரங்கட்டுங்க! :- ''ஐயோ! அவ அப்படி இருக்காளே! நான் இப்படி இருக்கேனே!'' என்று மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மனம் புழுங்கத்தான் செய்யும்! யானைக்கு யானை பசி; பூனைக்குப் பூனை பசி! யானை சாப்பிடுதே என்று பூனையும் சாப்பிட்டால் செரிக்குமா?

மாற்றுத் திட்டங்கள் இருக்கட்டும்! :-
எந்தவொரு வேலையில் இறங்கினாலும், நூறு சதவிகித ரிஸ்க்கும் நூறு சதவிகித தோல்வியும் உண்டு என்பதை உணர்ந்தே செய்யுங்க. 'பேக்-அப் பிளானிங்' எனப்படும் இன்னொரு மாற்றுத் திட்டத்தையும் யோசித்து வைத்திருந்தால், ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம்.

முன்னுரிமைகள் இடம் மாறும் :-
வாழ்க்கையும், உறவுகளும் எப்போதும் நம்மைச் சுற்றியே சுழன்று கொண்டிருக்காது. ''அம்மா... அம்மா!'' என்று சுற்றிச் சுற்றி வந்த மகனோ / மகளோ, நாளை தத்தம் அலுவல், குடும்பம் என்று அடியோடு மாறிப் போகும் போது, மனம் படாத பாடுபடும்தான்! 'ப்ரையாரிடி ஷிஃப்டிங்' என்பது சகஜம்தான் என மனதார ஏற்றுக் கொண்டு விட்டால், அவ்வளவு வலி தெரியாது.

பணம் தரும் பலம்! :- 'கோவணத்தில் ஒரு காசிருந்தா... அந்தக் கோழிக்குக் கூட பாட்டு வரும்!' என்பது நிஜம்தான். நமக்கு என்று நிரந்தர வருமானம் இருந்தால், யார் கையையும் எதிர்பார்க்காமல், சுயமரியாதையுடன் வாழலாம்! அதனால் இளம் வயதிலேயே அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது மிக அவசியம்!

எல்லாம் அவன் பார்த்துக்குவான்! :-
எது நடந்தாலும், என்ன வந்தாலும் ''எல்லாம் நன்மைக்கே!'' என்று எடுத்துக் கொள்ளும் மனோபாவம் நல்ல பலனைத் தரும். ''வேண்டுவதை அறிவாய் நீ! வேண்டியதை தருவாய் நீ!'' என்று கடவுளிடம் சரண் அடைந்து விட்டால், ''அது நடக்கலை; இது கிடைக்கலை!'' என்ற மன அலைச்சலின் வேகம் வெகுவாகக் குறைந்துவிடும்!

அனுஷா நடராஜன்



என்ன?
ஜான்ஸன்ஸ் பேபி
மில்க் லோஷன்
இப்போது
அம்மாவுக்குமா?
ஜான்ஸன்ஸ் பேபி மில்க் ரேஞ்ச் மூலம் இப்போது பேபி சாஃப்ட் சருமம் அம்மாவிற்கும் கிடைக்கும். இதில் பாலின் இயற்கை குணங்கள் இருக்கின்றன. இது உங்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து உங்கள் சருமத்தை மிருதுவாக்குகிறது. உங்கள் குழந்தைக்கு சிறந்த இந்த தயாரிப்பு உங்களுக்கும் சிறந்ததாக இருக்கும். இன்னும் என்ன, உங்கள் சருமத்தை சீராட்டுங்கள்.

ஃபேஷன் டிஸைனிங்-2

சென்ற இதழ் மங்கையர் மலரில் வெளிவந்த அனார்கலி ரவிக்கைக்கு நல்ல வரவேற்பு.


''அதென்னம்மா...? அனார்கலி பிளவுஸ் தைச்சுக் குடுங்கன்னு நிறையப் பேர் கேட்டுக்கிட்டு வராங்க.. இந்த புக்கை வேற காட்டறாங்க...'' என்று எங்கள் தையற்காரர் கேட்டபோது, மனசில் நிறைவும் முகத்தில் மர்மச் சிரிப்புமாய்... நாம்...

இந்த இதழ்ல பார்க்கப் போறது... 'ஸ்டெப் கட்' பிளவுஸ்!






■ சரண்யா




நீளம் - 38 செ.மீ.,
மார்பளவு - 92 செ.மீ.,
இடுப்பளவு - 71 செ.மீ.,
தோள் பட்டை - 36 செ.மீ.,
கை நீளம் - 27 செ.மீ.,
கை வளைவு - 24 செ.மீ.
ஆர்ம் ஹோல் - 48 செ.மீ.

மிஸ். சரண்யா அணிந்திருக்கிற இந்த பிளவுஸைப் பாருங்க.

இதற்கான அளவுகளும் சென்ற முறை நாம் கொடுத்திருந்த 34 இன்ச் ரவிக்கைக்கு ஏற்ற அளவுகள்தாம்.






ஸ்டெப் கட் ப்ளவுஸ்!

பொதுவாக, ரவிக்கைக்கு மூன்று பாகங்கள். கழுத்து, மார்புப் பகுதி, கைகள் என்று. கழுத்து வகைகளை போன இதழில் பார்த்தோம். சரி, இப்ப கைப்பகுதி என்று எடுத்துக் கொண்டால் இரண்டே வகைதான். ஒல்லிக் கை, அகன்ற கை...

அகன்ற பருமனான கைகள் கொண்டவர்கள் அகலமான ஜரிகையை, புடைவை, ரவிக்கை இரண்டிலுமே நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும். ரவிக்கையில் ஜரிகையா.. ஒரு அங்குலத்துக்கு மேல் அகலம் வேண்டவே வேண்டாம்! கற்கள் வைத்து டிசைனர் பிளவுஸ் போட ஆசையா...? போடுங்க... ஆனால் மறக்காம அந்தக் கற்களை செங்குத்தாக அல்லது ஜிக்ஜாக் ஆக வச்சுத் தைத்துக் கொள்ளுங்க. 'மோடிஃப்'னு (motif) சொல்வோமே... அந்த டிசைன்களை (அதாவது பெரிய மாங்காய் போல)





கையின் நடுப்பகுதியில் வைக்க வேண்டாம். அது கையை மேலும் பருமனாகக் காட்டும்.

எம்பிராய்டரியோ, டிசைனோ... பார்டர் அகலம் கொஞ்சமா வைத்துத் தைக்கலாம். முரட்டுத்தனமான அல்லது ஸ்டிஃப்பா நிக்கிற துணி இதெல்லாம் குண்டுக் கைகள் கண்டிப்பாய்த் தவிர்க்கணும்!

உங்களுக்கு நீண்ட ஒல்லியான கைகளா...? தாராளமா கஃப், ஃப்ரில், அடுக்கடுக்காய் துணி வைத்து கைப் பகுதி... ஜமாய்ங்க!

அகல ஜரிகை உங்களுக்குப் பொருந்தும். குட்டைக் கை வைத்த பிளவுஸ் என்றால், அகலமான பெரிய மோடிஃப்களை வைத்துக் கொள்ளலாம்.

ஒரே பிளவுஸ்லே உடம்புப் பகுதிக்கு ஒரு துணி, கைக்கு வேறு துணின்னு இருந்தா... அது உங்க மாதிரி ஒல்லிக் கைக்கு பொருந்தாது!

ஆனா ஒரே ரவிக்கையில வேற வேற நிறம் இருக்கலாம்... ஓகே..!

எந்த மாதிரி மார்புப் பகுதி இருந்தால் எப்படி ரவிக்கை அணியலாம்? அடுத்த இதழ்ல பார்க்கலாம்!

நன்றி : இன்ஸ்டிடியூட் ஆஃப் டிஸைன், சென்னை - 34.

ஏற்பாடு : பத்மினி பட்டாபிராமன்

படங்கள் : ஸ்ரீஹரி

வேண்டிய எடை - வேண்டும் ல்டலமைப்பு

புத்தாண்டுப் பரிசாக ஜனவரி மாதத்தில் வகுப்புகளில் சேர்பவர்களுக்கு கட்டணத்தில 30 சதவீதம் தள்ளுபடி அளிக்கிறார் ரிஷிதா. தவிர போனஸாக ஒரு மாதத்திற்கு இலவச வகுப்புகளும் உண்டு.

"எடையைக் குறைக்க பல நிறுவனங்கள் இருக்கலாம். ஆனால் எங்களுடையது ஸ்பெஷல்தான்" என்ற ரிஷிதா அதற்கான காரணங்களைப் பட்டியலிட்டார்.

" கடுமையான டயட்டில் இருக்க வேண்டும், வாக்கிங் பயிற்சி தேவை என்றெல்லாம் நாங்கள் சொல்வதில்லை. பிஸியாக இருக்கும் பலராலும் இவற்றைப் பின்பற்ற முடிவதில்லை என்று எங்களுக்குத் தெரியும். எனவே நபருக்குத் தகுந்தமாதிரி உணவுப் பழக்கத்தில் மாறுதல்களை மட்டுமே செய்யச் சொல்கிறோம்.

எடையைக் குறைக்க வைக்க பல புதுமையான கருவிகளை இறக்குமதி செய்திருக்கிறோம். இந்தக் கருவிகளைப் பயன்படுத்திய முதல் நாளே சுமார் இரண்டரை இன்ச் அளவுக்கு வயிற்றுச் சுற்றளவு குறையும். இதைக் கண்கூடாக (இன்ச் டேப் உதவியுடன்) பார்க்கலாம்.



வகுப்புகளில் சேர்ந்த நான்கைந்து நாட்களிலேயே ஒன்றிலிருந்து இரண்டு கிலோ எடை குறைவது உறுதி. மொத்தம் பதினான்கு வகுப்புகள் உண்டு.

இதன் முடிவில் எட்டிலிருந்து பதினைந்து கிலோ எடை குறையும். எடை குறைந்தபிறகு அதைத் தொடர்ந்து பராமரிக்கவும் ஆலோசனைகள் அளிக்கிறோம்.

உடல் முழுவதும் ஒரே அளவுக்கு எடை குறைவது சரியில்லை. வயிறு, தொடை, பின்புறம் போன்ற குறிப்பிட்ட சில பகுதிகளில் எடை அதிகம் குறையுமாறு பார்த்துக்கொள்கிறோம். அதேசமயம் எங்கேயும் தோல் தொள தொளவென்று ஆகிவிடாமல் 'டைட்டனிங்' மற்றும் 'டோனிங்' செய்கிறோம்.

எடை குறையும் - எழில் கூடும்

எங்கள் நிறுவனத்தில் டயடீஷியன்கள் மற்றும் டாக்டர்களின் ஆலோசனைகளைப் பெறலாம். இவர்களுக்கென்று எந்தவித அதிகப்படியான கட்டணமும் செலுத்த வேண்டாம்.

மனநலம் சிறக்கவும் ஆலோசனைகளை வழங்குகிறோம். எடை குறையும்போது தன்னம்பிக்கை அதிகமாகிறது. சரியான தீர்மானங்களை எடுக்க முடிகிறது. சக்தி அதிகமாகிறது. வாழ்க்கையை மேலும் அனுபவித்து வாழலாம்.

வகுப்புகளில் சேர்ந்த ஐந்து நாட்களிலேயே உடல் கொஞ்சம் லேசானதாக மாறியிருப்பதை உணர்ந்திருப்பீர்கள்.

கடவுளின் அருளால் இன்னொரு சந்தோஷமான விஷயமும் நடந்து வருகிறது. உடல் வனப்பு இல்லாததால் திருமணம் தள்ளிப் போகும்

பெண்களுக்கு எங்கள் மையத்தில் சேர்ந்த கொஞ்ச நாளிலேயே கல்யாணம் நிச்சயமாகிவிடுகிறது. இதை ஒரு முக்கியமான செண்டிமெண்ட்டாகவே பலரும் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.



எடைக்குறைப்பு பற்றி சில விஷயங்களில் தெளிவு தேவை. வகுப்புகளின்போது சிலருக்கு சீராக உடல் எடை குறையும். வேறு சிலருக்கோ தொடக்கத்தில் குறைவாகவே எடை குறைந்தாலும் பிறகு வெகுவேகமாக எடை குறையும். எனவே நம்பிக்கையும் பொறுமையும் இதில் அவசியம். 'இன்னைக்கே எடை குறையணும்' என்று அடம் பிடிக்கக் கூடாது. என்றாலும் ஏழெட்டு நாட்களில் இதை உணர்ந்து கொள்ளலாம். வருடக்கணக்காக உடலில் சேர்த்து வைத்திருக்கும் கொழுப்பு குறைய ஓரளவாவது அவகாசம் அளிக்க வேண்டாமா?

கவலையே வேண்டாம். உடலுக்குள் எந்தவித பாதகமான மாற்றமும் நிகழாது. சொல்லப்போனால் எந்தவித பக்கவிளைவுகளும் எங்கள் சிகிச்சையால் ஏற்படுவதில்லை.

ஃபேஸ்-லிஃப்டிங் (முக அழகுக்கு)

மிகவும் பருமனான முகம், துருத்திக் கொண்டிருக்கும் முகவாய் (டபுள் சின்), சுருக்கங்கள், கண்களுக்குக் கீழ் கருவளையம் போன்றவற்றை நீக்க முடியும். பயிற்சியில் சேர்ந்த அரை மணிநேரத்திலேயே விளைவுகள் தெரியத் தொடங்கிவிடும். மொத்தம் உள்ள பத்து வகுப்புகளின் முடிவில் வியக்கத்தக்க மாற்றங்கள் தெரியும். முக பாகங்கள் எடுப்பான (ஷார்ப்) தோற்றம் பெறும். நிறமும் மேம்படும்.

தொடர்பு கொள்ள - ரிஷிதா, தி.நகர்.

(044) 24332838 / 94444 13224

SLIM & CAARE

கடிதத்தைச் சேர்ப்புச் சான்றிதழ் (சர்ட்டிஃபிகேட் ஆஃப் போஸ்டிங்) பெற்று அஞ்சலகத்தில் கொடுத்தால் அது பத்திரமாகப் போய் சேரும் என்று பலரும் எண்ணுகிறார்கள். அது சேர்ப்பித்ததற்கான சாட்சி மட்டுமே. பிறகு எந்தத் தனிக் கவனமுமின்றி லட்சக்கணக்கான கடிதங்களுடன் கலந்தே அது அனுப்பப்படுகிறது.

அதேபோல் ஸ்டாம்ப் குறைவாக ஒட்டினால் 'பேரிங்' என்று கவனமாக அனுப்புவார்கள் என்று எண்ணுகிறார்கள். பட்டுவாடா அலுவலகத்தில் கவனித்துத் தொகையை (அபராதத்துடன்) வசூலிப்பார்களே தவிர, முந்தைய கட்டங்களில் அதற்கு எந்த தனிக் கவனமும் செலுத்தப்படுவதில்லை என்பதே உண்மை.



நிலம், வீடு போன்ற ஒரு சொத்து வாங்குவதைச் சப்-ரிஜிஸ்திரார் பதிவு செய்து கொடுத்தால் அது பிரச்னையற்றது என்று பலர் எண்ணுகிறார்கள். அதைக் கவனிப்பது சப்-ரிஜிஸ்திரார் வேலை அல்ல. போதிய கட்டணம் செலுத்தினால் அவர் எதையும் ரிஜிஸ்டர் செய்வார். விசாரித்துத் தெரிந்து கொள்வது முற்றிலும் நம் பொறுப்புதான்.

அட்டா... அப்படியா?

பூர்விகச் சொத்து உரிமை பற்றி பல பெண்களுக்கு சரியான நிலவரம் தெரியவில்லை! ஹிந்து வாரிசுரிமைச் சட்டப்படி பிதுரார்ஜித சொத்தில் ஆண்களைப் போல் பெண் வாரிசுகளுக்கும் சம உரிமை உண்டு என்பது வெவ்வேறு மாநிலங்களில் அதற்கான சட்டம் இயற்றப்பட்ட தேதியிலிருந்துதான் அமுலாகும் என்பது சமீபகாலம் வரை இருந்த நிலை. (அதாவது 1987-ல் ஒரு மாநிலத்தில் அச் சட்டம் இயற்றப்பட்டிருந்தால் அதற்கு முன் திருமணமான பெண்களுக்கு அவ்வுரிமை இல்லை என்றிருந்தது)



சுப்ரீம் கோர்ட்டின் சமீபத்திய தீர்ப்பின்படி இவ்வித்தியாசங்கள் அகற்றப்பட்டுவிட்டன. எந்த மாநிலத்திலும் ஒரு பெண்ணுக்கு எந்தத் தேதியில் திருமணமாகியிருந்தாலும் பிதுரார்ஜித சொத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம பங்கு உண்டு என்பதே தற்போதைய நிலை. இத் தகவல் இன்னும் பல பெண்களைச் சென்றடையவில்லை என்பதே வருத்தத்துக்குரிய உண்மை.

- எஸ்.சரோஜினி,
பெங்களூரு - 72

பில்ராத் மருத்துவமனை


வழங்குகிறது

இருதய நோய்களுக்கான சிகிச்சை முறைகள்

- இருதயத்தில் உள்ள இரத்த நாளங்களின் அடைப்பைக் கண்டறிந்து நீக்குவதற்கான சிகிச்சை (Angiogram & Angioplasty)
- பேஸ் மேக்கர் (Pace Maker Implantation) மிக எளிதாகப் பொருத்தலாம்
- இருதய Bypass அறுவை சிகிச்சை (Coronary Artery Bypass Grafting)
- இருதய நோய்க்கான தீவிர சிகிச்சைப் பிரிவு வசதியும் உள்ளது
- இருதய வால்வுகளை மாற்றி அமைத்து அறுவை சிகிச்சை செய்யலாம்.
- மாரடைப்பு மற்றும் இருதய வலிக்கு 24 மணி நேர சிறப்பு சிகிச்சைப் பிரிவு உண்டு.

- 1.5 Tesla MRI
- CT Scan
- Dual Head Gamma Camera
- Digital X-ray
- 4D Ultrasound / Echocardiogram
- Mammography
- Bronchoscopy
- EEG. EMG
- PFT
- Computerised ECG

24 மணி நேர அவசர சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் புதிய அதிநவீன கருவிகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.



24 Hours Services in All Specialities

Billroth Hospitals

எண்.43, லட்சுமி திரையரங்க சாலை, செனாய் நகர், சென்னை-600 030.

போன்: 2664 0020 / 2664 1777

இவை எல்லாமே...

புது வருடப் பிறப்பன்று விடியற்காலை பூஜையறையில் விளக்கேற்றி பணம், பழங்கள், பூ இவற்றை சுவாமிப் படத்திற்கு எதிரே கண்ணாடி வைத்து அனைவரும் பார்த்தால் வருஷம் பூராவும் சுபிட்சமாக இருக்கும்.

- கே. விஜயா, திருச்சி.



வருஷம் பூரா சுபிட்சம்!

சபரிமலை நெய் அப்பம் சாப்பிட மிகவும் கடினமாக இருந்தால் அதை ஆவியில் சிறிது நேரம் வைக்கவும். மிருதுவாகிவிடும்.

- ஆர்.எஸ்.கனகம்,
கேரளா.

பிளாஸ்டிக் கவர்களில் காய்களை போட்டு ஃப்ரிஜ்ஜில் வைத்தால் இரண்டு நாட்களுக்கு மேல் தங்குவதில்லை. துணிப்பையில் தனித்தனியாக வைத்தால் ஒரு வாரம் வரை புதிது போல இருக்கும்.

– ரா. ராஜேஸ்வரி,
சென்னை – 33.

பிறந்த குழந்தைகளுக்கு மல் துணியில் ஜபலா தைக்கும் போது முன்பக்கம் அல்லது பின்பக்கம் பட்டன் வைக்காமல் தோளில் கட்டும்படி நாடா வைத்தால் போடவும், அவிழ்க்கவும் எளிதாக இருக்கும்.

- ஜெயலக்ஷ்மி கணேசன்,
மும்பை - 71.

வெந்நீருக்காக கெய்சரை ஆன் செய்துவிட்டு, சில நேரங்களில் அதை மறந்தே விடுகிறோம். தண்ணீர் சூடாகி விட்டது என்பதை நமக்கு உணர்த்த ஏதேனும் ஒலி எழுப்புவது போலத் தயாரித்தால் பயனுள்ளதாக இருக்கும். கரண்ட் செலவும் மிச்சப்படும்.

- எல். மோஹனசுந்தரி கோபி,
கிருஷ்ணகிரி - 1.

நாம் தபால் செய்ய வேண்டிய தபாலின் எடையையும் அதற்குரிய தபால்தலை மதிப்பையும் நாமே சுலபமாக சரிபார்த்து அறிந்து கொள்ள, தபால் அலுவலகங்களில் ஆட்டோமேட்டிக் செக்கிங் மிஷின்களை அறிமுகப்படுத்தலாம். இதனால் இரு தரப்பினருக்கும் வேலை சுமை குறைந்து நேரம் மிச்சமாகுமே!

- ஹ.கிருத்திகா,
குளித்தலை

கைவினைப் பொருள்கள் செய்யும்போது டிசைனை கார்பன் பிரதி எடுக்கும்போது, காலி ஆன ரீஃபில் பேனாவைப் பயன்படுத்தினால் ஒரிஜினல் வீணாவதைத் தடுக்கலாம்.

- தீபா பாலச்சந்தர்,
பாளையங்கோட்டை.

என்னதான் எக்ஸாஸ்ட்பேன் ஓடினாலும் தாளிக்கும்போது எண்ணெயில் சிறிதளவு உப்பு போட்டுவிட்டு தாளித்தால் கமறாமல் இருக்கும். சமையலிலும் உப்பு சீராகப் பரவியிருக்கும்.

- கே. சுவர்ணா,
சென்னை - 64.

...ஆஹா 50 தான்!

ஏஞ்சல்ஸ்®

Since 1991

அட்வான்ஸ்ட் கிளினிக் (பி) லிட்

ஹேர், ஸ்கின் & பாடி கேர்

Angels®

Since 1991

Advanced Clinic (P) Ltd

Hair, Skin & Body Care


COSMETIC CLINIC



GOOD BYE TO BALD HEAD WITHIN ONE HOUR THRU SILICON SYSTEM

வழுக்கை தலையினால் அவதி படுகிறீர்களா ? கவலையை விடுங்கள், ஏஞ்சல்ஸ் இப்போது வழுக்கை தலையை ஆராய்ந்து அவர்களின் முக அமைப்புக்கு ஏற்றவாறு சிலிக்கான் சிஸ்டம் என்ற நவீன சிகிச்சை மூலம் ஒரே மணி நேரத்தில் பொருத்தி விடுகிறார்கள்.

(சிலிக்கான் சிஸ்டம்)



NO MORE WORRY OF UNWANTED HAIR

(Ex. UpperLip, Chin, Cheeks, Abdomen, Chest, Ears)

தேவையற்ற ரோமங்களை நீக்க தற்போது ஏஞ்சல்ஸில் நம்பகமான சிகிச்சை அளிக்கின்றது. NDYAG Long Pulsed லேசர் சிகிச்சையின் மூலம் மிகவும் தத்ரூபமாக தேவையற்ற ரோமங்களை மிகவும் குறைந்த சிட்டிங்கில் நீக்கி வருகின்றனர்.

WEIGHT REDUCTION TREATMENT AT ANGELS

தற்போது உடல் எடையை குறைப்பதற்கு கவலைப்பட தேவையில்லை. ஏஞ்சல்ஸில் மிக அருமையான சிகிச்சை அளித்து வருகின்றது. இவர்களின் அக்வா தெர்ம் செல்லுலைட் தெரபி, பாடி பார்மர், புரோட்டீன் தெரபி என்ற சிகிச்சையின் மூலம் உடல் எடையை மிக அதிக அளவில் உடல் பருமனுக்கு ஏற்றவாறு குறைக்கின்றனர்.



SKIN COLOUR IMPROVEMENT AT ANGELS

உங்கள் சருமத்தில் ஓவர் ஆக்டிவேட் ஆன மெலனின் பிக்மெண்டுகளை Imported Inhibitors உதவியுடன் கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் நிறத்தை மேம்படுத்தலாம். இவ்வாறு ஏற்படும் முன்னேற்றம் நிரந்தரமானதென்பது எங்களின் சிறப்பம்சமாகும்.

PHOTO LASER THERAPY



HAIR FALL CONTROL & REGROWTH IS POSSIBLE FOR LADIES thru PHOTO LASER THERAPY

பெண்களுக்கு அடர்த்தி தன்மையற்ற தலைமுடிக்கு ஃபோட்டோ லேசர் தெரபி என்ற அதிநவீன சிகிச்சையின் மூலம் (HAIR REGROWTH) தலைமுடியை வளர செய்யலாம்.



Chennai: 2B, 3rd Avenue, T-53/99, Rajeshwari Mansion, Anna Nagar, Chennai - 40. **Cell: 98400 46599. Ph: 044-42176679 / 26212547 / 26213468**

Coimbatore: RR Complex, V.O.C. Road, 117/B, West Sambandham Rd, R.S.Puram, Coimbatore. **Ph: 0422 - 6547577, 2547889. Cell: 92444 15899**

மேலும் விவரங்கள் அறிய [illegible] VIJAY TV - [illegible] காலை 10.30 முதல் 11.00 மணி வரை காணத்தவறாதீர்கள்.

அடிச்சாங்க பரிசு!

ஆஹா பரிசு (டிசம்பர்) போட்டியில், '500 ரூபாய் நோட்டு, நிறத்திலும், அளவிலும் 100 ரூபாய் போன்றே இருப்பதால் அடிக்கடி ஏமாற நேர்கிறது. இதைத் தடுக்க 500 ரூபாயை நிறம் அல்லது அளவை மாற்றி வெளியிடலாம்' என்ற குறிப்பை எழுதி ரூ. 150/- பரிசு பெறுகிறார் ஞா. கலையரசி, புதுச்சேரி. அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு பெறுகிறார் யோகம் சுவாமிநாதன், சென்னை - 94.



இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து, எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் ரூ. 150/- பரிசு! 'ஜனவரி -ஆஹா பரிசு!' என்று மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி : 15.1.2008

பெட்டிக்கதைப் போட்டி! வாசகர் விருப்பம்

பெட்டிக்கதைகளை எழுதிக் குவித்து வரும் வாசகர்களுக்கு நன்றி! இந்த இதழில் மூன்று கதைகள் பிரசுரமாகியுள்ளன.

நீங்கள் எழுதும் கதைகளிலிருந்து, இந்த மாதம் மூன்று பெட்டிக் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாகும். பிரசுரமாகும் கதைகள் தலா ரூ. 150/- பரிசு பெறும்.

சிம்பிள் கண்டிஷன்ஸ் : 100 வார்த்தைகளுக்கு மிகாமல், சொந்த கற்பனையில், பெயர், முழு விலாசம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் *இன்லான்ட் லெட்டரில்* மட்டுமே எழுதி 'பெட்டிக்கதைப் போட்டி' என்ற குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.




... நெஞ்சு வலியா ?

...... மாரடைப்பா ?

.... அறுவை சிகிச்சையா ?

பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு தயங்குகிறீர்களா ?





இருதயத்துக்கு இதமான அறுவையில்லா பைபாஸ் சிகிச்சை ....

- 70% - 100% வரை இதய அடைப்புகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- வலி இல்லை.
- அறுவை சிகிச்சை இல்லை.
- நீண்ட நாட்கள் மருந்து இல்லை.
- மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை.

NEOMED HOSPITAL

CARE FOR BETTER LIVING

Consultation : Weekdays 9 am to 6 pm.

Salem : 127 / 1, Varalakshmi Towers/ Gandhi Road, Ph : 0427-2311818, 2311819.
Madurai : 11, Lakeview Road, Opp. Sundaram Theatre, K.K. Nagar, Ph : 0452-2581414, 2581515.
Chennai : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Ph : 044-2620 1147 / 2620 0882.
Fax : 2620 0631.

www.neomedhospitals.com

''சருமம் மினுமினுப்புடன் அழகாய் மிளிர்வதற்கு உடலில் கொஞ்சம் கொழுப்புச் சத்தும் அவசியம்'' என்கிறார் நேச்சுரல்ஸ் உரிமையாளர் வீணா.

மினுக்கும் அழகை மீண்டும் பெற...

naturals
UNISEX SALON & SPA

வீணா



‘டயட்’ என்கிற பெயரில் உணவைக் குறைத்துக் கொண்டு உடலை ஸ்லிம்மாக வைத்துக் கொண்டால் போதுமா? இதனால் சருமத்தில் உள்ள சத்துக்கள் குறைந்து, பொலிவிழந்து, சருமம் வறண்டு காணப்பட்டால் வெளிப்புற தேகத்துக்கு என்னதான் ‘மேக்-அப்’ செய்தாலும் பயனில்லை.

இன்றைக்கு சந்தையில் அழகுக்காகப் பொருட்கள் ஏராளமாய்க் கொட்டிக் கிடக்கின்றன. இருக்கும் அரைகுறை அறிவை வைத்துக்கொண்டு அனைத்தையும் வாங்கி, முகத்தில் அப்பி, உடலில் பூசி பின்பு அவதிப்படுபவர்கள்தான் அநேகம் பேர்.

முதலில் நம் சருமம் எந்த வகையைச் சார்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வறண்ட சருமமா, எண்ணெய் வழியும் சருமமா என்பதை ஒரு கைதேர்ந்த அழகுக்கலை நிபுணரிடம் கேட்டறிந்து கொண்டு அழகு பராமரிப்பை மேற்கொண்டால், அழகு என்றென்றும் நம் பக்கம்தான். மேலும் நம் உணவில் சமச்சீரான சத்துக்களடங்கிய டயட் இடம்பெற வேண்டும். ஒருசிலர், வாளிப்பான தேகமும், மினுமினுப்பான சருமமும் கொண்டு செழிப்பாகக் காட்சியளிப்பார்கள். இதற்கு மிக முக்கியக் காரணம் சமச்சீரான உணவுப் பழக்கமே.

இப்படிப்பட்ட அழகை நிரந்தரமாகத் தக்கவைத்துக்கொள்ள, தொடர்ந்து பராமரிப்பும் தேவை. வாரம் ஒருமுறை சருமத்தில் சேரும் அழுக்கை உடல் முழுவதும் ‘ஸ்க்ரப்’ செய்து நீக்கி, முகம், கை, கால்களுக்கு மசாஜ் எடுத்துக் கொண்டால் சருமச் சுருக்கங்களை நீக்கலாம். வறண்ட தேகம் உடையவர்கள், பதினைந்து நாட்களுக்கொருமுறை ஏதாவது ‘ஃப்ரூட் பேக்’ எடுத்துக்கொண்டு

'ஃபேஷியல்' செய்துகொள்வது அவசியம். இதனால் சருமத்தில் இழந்த தண்ணீர்ச் சத்துக்கள் மீண்டும் பெறப்படுகின்றன.

தற்பொழுது வேலை பார்ப்பவர்களின் சூழ்நிலையும் 24 மணிநேரமும் குளிரூட்டப்பட்ட அறைகளில்தான் அமைகிறது. இதனால் உடல் மேலும் வறண்டு போய்விடும். இதற்கென்றே 'நேச்சுரல்ஸ் க்ளோ ஃபேஷியல் ஸ்பெஷல் பேக்' அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால் வியர்வையே ஏற்படாமல், நீர்ச்சத்து இழந்து காணப்




படும் சருமத்துக்குப் புத்துணர்ச்சியும், பொலிவும் உடனடியாகக் கிடைக்கிறது.

கூலிங் ஐ மஸாஜ் : இரவு, பகல் பாராமல் கம்ப்யூட்டர் முன் அமர்ந்து வேலை செய்பவர்களுக்கு இச்சிகிச்சை ஒரு வரப்பிரசாதம். கண்களுக்கு உண்டாகும் அதிகக் களைப்பு, சூடு இவையெல்லாம் அடியோடு நீங்கிவிடும். இதற்கென்றே உருவாக்கப்பட்ட 'ஜெல் மாஸ்'கை ஃப்ரீசரில் வைத்து எடுத்து கண்களைச் சுற்றி அணிவித்து சிகிச்சை தரப்படுகிறது.

மைக்ரோ டெர்மா அப்ரஷன் : இது முக்கியமாக, சருமத்தில் காணப்படும் இறந்த செல்களை நீக்கி ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் ஆக்க உதவுகிறது. வெயிலில் அதிகம் சுற்றி, வேலை பார்த்து சருமம் கறுத்துக் காணப்படுபவர்கள் குறிப்பாக இளைஞர்கள் இச்சிகிச்சையை மேற்கொண்டால் இழந்த அழகை மீண்டும் பெறலாம்.

ஐ ஸோன் ட்ரீட்மெண்ட் : சிலருக்குக் கண்ணுக்கு அடியில் கருவளையம் தோன்றி, சருமம் பொலிவிழந்து மங்கலாகக் காணப்படும். இச்சிகிச்சையைத்



தொடர்ந்து எடுத்துக்கொள்ள கருவளையம், சுருக்கங்கள் நாளடைவில் மறையும்.

- சுநயனா

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

28வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது...

அட்டடட்டடட்டா!

இரட்டைப் புத்தகம்!
அதிகப் பக்கங்கள்!
அதே விலையில்!

ஆண்டு மலராச்சே!
சம்திங் ஸ்பெஷல்
இல்லாமலா?

வெற்றிக் குழு விருது!

சித்திரை விரைவில் பிறக்கவிருக்கிறது. புத்தாண்டின் பெயர் - சர்வதாரி! அனைத்தையும் தரித்துக் கொண்டிருப்பவர் என்று அர்த்தம். எல்லாவற்றையும் ஆதாரமாகத் தாங்கிக் கொண்டிருப்பவர் என்றும் சொல்லலாம்!

''முன்னுக்கு வரவேண்டும்!'' என்ற குறிக்கோளைத் தரித்து, சுய உதவிக் குழு அமைத்து, வீட்டுக்கும் நாட்டுக்கும் சுபிட்சம் சேர்த்து, எல்லா வளங்களுக்கும் ஆதாரமாக இருக்கும் மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்காக ஒரு சிறப்பு விருதை மங்கையர் மலர் உருவாக்கியுள்ளது.

வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சுய உதவிக் குழுப் பெண்கள், தங்கள் குழுவின் செயல்பாடுகள், சாதனைகள் பற்றி, தத்தம் குழுவின் பதிவேடு எண், முழு விலாசம், உறுப்பினர் எண்ணிக்கை போன்ற விவரங்களைத் தகுந்த ஆதாரத்துடன் எழுதி அனுப்புங்க.

மாதம் ஒரு 'மகளிர் சுய உதவிக் குழு' தேர்ந்தெடுக்கப்பட்டு, வருடத்தின் இறுதியில் வெற்றிக் குழுக்களிலிருந்து ஒரே ஒரு குழு மட்டும் மங்கையர் மலர் வாசகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு (வாக்குப் பதிவு முறையில்) அந்தக் குழுவுக்கு 'சர்வதாரி' விருதுடன் ரூ. 10,000 அன்பளிப்பும் பட்டயமும் வழங்கப்படும். எங்கே... உடனே எழுத ஆரம்பிங்க. உங்கள் வெற்றிக் குழுவைப் பற்றி!

(ஆர்.)





'வின்னர்ஸ்'
மெஹந்தி டிஸைன்ஸ் – 64!

"படப்பிடிப்பு
தொடங்கியது. நான்
மலைப்பாம்பின்
கழுத்தைப் பிடித்துக்
கொண்டு, திமிறியபடி,
விடுவித்துக் கொள்ள
வேண்டும். ஆனால்
என்னால் அப்படிச்
செய்ய முடியவில்லை.
பாம்பு என்னை
இறுக்கத் தொடங்கியது.
நான் பயந்துபோய்
அலறிக் கொண்டே
மயங்கி விழுந்து
விட்டேன்..."



ஆண்டு மலரில்

பி. சரோஜாதேவி

எழுதும் நினைவலைத் தொடர்

தொட்டால் பூ மலரும்!

ஆரம்பம்

இவை எல்லாமே...



சரியான பதம்!

ஒரு ஸ்பூன் சட்னியை ஒரு தட்டில் போட்டதும் அதிலிருந்து தண்ணீர் தனியே வரக்கூடாது. கெட்டியாக அப்படியே இருக்க வேண்டும். இதுவே சரியான சட்னி பதம்.

- எஸ். நிரஞ்சனி, போரூர்.

பெருங்காயம் ரத்தசோகையைப் போக்கும். பெருங்காயத்தில் கால்சியம் இருக்கிறது. மூட்டுவலி, எலும்புத் தேய்மானம் உள்ளவர்களுக்கு பெருங் காயம் அரிய மருந்து. குழந்தைகளின் மாந்தம் மற்றும் வயிற்றுப் பொருமலுக் கும் பெருங்காயம் நல்ல மருந்து.

- கீதா பாஸ்கர், மதுரை.

உங்கள் தலைவலியைப் பற்றி ஒரு டைரியைப் பராமரியுங்கள். அதில் என்ன நேரத்தில் என்ன உணவு உண்டால் அல்லது என்ன செய்தால் தலைவலி வருகிறது என்று குறித்து வைத்தால், அவற்றைத் தவிர்க்கலாமே!

- க. வேடியப்பன், கும்மிடிப்பூண்டி.

வீட்டில் கல்யாண வயதில் இருக்கும் பெண்களை சமைக்கச் சொல்லவும். புகுந்த வீட்டில் சமையல் தெரியாது என்று சொன்னால் நன்றாக இருக்காது. இதுபோல் நல்ல அறிவுரைகள் சொல்லி பழக்கினால் புகுந்த வீட்டில் நல்ல பெயர் கிடைக்கும். பெற்றோருக்கும் பெருமைதானே!

- ஜி. ஸ்ரீலதா, திருநின்றவூர்.

சிறிதளவு புளோரைடு கலந்த தண்ணீர் குடிப்பது வளரும் குழந்தையின் பற்களுக்கு நல்லது. ஏனெனில் புளோரைடு ஈறுகளை வலுப்படுத்துவதுடன் பற்குழியை உண்டாக்கும் பாக்டீரியாவை எதிர்க்கிறது. இதனால்தான் சில நாடுகளில் தண்ணீரில் புளோரைடு சேர்க்கிறார்கள்.

- இரா. கமலா, திருச்சி மாவட்டம்.

டி.வி.யில் நிகழ்ச்சிகள், அன்றாட சீரியல்கள் பார்க்கும்போது விளம்பர இடை வேளையின்போது நிட்டிங், தையல், கீரை ஆய்வது, பூ கட்டுவது போன்ற உபயோக மான வேலைகளைச் செய்து கொண்டே பார்த்தால், நேரமும் வீணாகாது. நம் வேலை யும் முடிந்துவிடும்.

- ஜெயலக்ஷ்மி கணேசன்,
மும்பை - 71.

குழந்தைகளின் பள்ளிச் சீருடையில் காலில் சாக்ஸும், ஷூவும் அவசியம். மழைக்காலங்களில் பள்ளியில் நுழையும் போதே நனைந்த கால்களுடன் சென்று, பல மணி நேரம் வகுப்பில் அப்படியே இருந்து விடுவதால், மறுநாள் ஜுரம், சளி, தும்மல் வந்து விடுகிறது. மழைக் காலங்களில் மட்டும் செருப்புகள் அணிய அனுமதிக்கலாமே!

- ஸ்ரீவித்யாஜம்புநாதன்,
வடபழனி.

...ஆஹா 50 தான்!

அடையார் இயற்கை வைத்திய மையம்

தீராத மூட்டு வலியா

இனி தேவையில்லை கவலை



• மத்திய உள்துறை அமைச்சர்
திரு. சிவராஜ் பாட்டீலுடன் டைரக்டர் திரு. S.P. நாயுடு
S.P. Naidu - Ex. President of Madras Diamond Manufacturer's Association, Former Trade Protocol agent of Romania & Former MD of Balaji Marine Company

பக்க விளைவுகள் இன்றி அறுவை சிகிச்சையற்ற சிறந்த வைத்திய முறை



- மூட்டுவலி (எல்லா வகை)
- குதிகால் எலும்பு வளர்ச்சி
- கழுத்து, இடுப்புவலி
- வெரிகோஸ் வெயின்ஸ்
- ருமடாய்டு ஆர்த்ரெடிஸ்
- ஆஸ்துமா
- பார்கின்ஸன்ஸ் / ஹண்டிங்டன்ஸ்
- உடல் பருமன்
- சர்க்கரை நோய்
- தூக்கமின்மை

- Therapeutic Herbal Oil Massage
- Herbal Paste Application & Soaking
- Hydrotherapy
- Physiotherapy
- Yoga Therapy
- Oxygen & Relaxation Therapy
- Diet Therapy
- Health Counselling

அனைத்து வியாதிகளுக்கும் தாங்கள் எங்களிடம் ஆலோசனை பெறலாம்.

ADYAR NATURE CURE CENTER ™

No. 6, IInd Cross Street, Kasturba Nagar, Adyar, Chennai - 20.
☎ : 044 - 2441 3399, 2440 2470.
email : adyarnaturecure@yahoo.com **Website** : www.adyarnaturecure.com

குறிப்பு: A/c., Deluxe rooms, Rooms, ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதி உள்ளன.
சைவ உணவு மட்டும் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்.

கறவை!

ச.சுமதி

"ம்மா..." - லக்ஷ்மியின் குரல் பசியுடன் ஒலித்தது.

"இதோ வந்துட்டேண்டி செல்லம்... பசிக்குதா? கொஞ்ச நேரம் பசிதாங்க மாட்டியே... வரேன் வரேன்."

"கௌரி, கொஞ்சம் அடுப்பைப் பார்த்துக்கோ. நான் போய் லக்ஷ்மிக்கு தீனி வெச்சுட்டு வரேன்" கைவேலையை விட்டுவிட்டு மரகதம் வந்தாள்.

"சரி அத்தே. உங்களுக்கு எங்களையெல்லாம்... ஏன் உங்க பிள்ளையைவிட லக்ஷ்மிதான் உசத்தின்னு எனக்குத் தெரியாதா..."

"அடி போடி! என் பிள்ளையை பார்த்துக்கத்தான் ராசாத்தி நீ இருக்கியே... வேலைக்கும் போய்க்கிட்டு... வீட்டையும் பார்த்துக்கிட்டு.. அப்புறம் எனக்கென்ன கவலை?"

"சரி, சரி போதும் புகழ்ந்தது. போங்க, உங்க லக்ஷ்மி கூப்பிடறா."

"நம்ம ஏரியாவிலேயே அதிகமா பால் கறக்கற மாடு நம்ம லக்ஷ்மிதான். அத வயிறு வாட விடலாமா...?" மரகதம் கொல்லைப் பக்கத்துக்கு ஓடினாள்.

* * *

"கௌரி மேடம், எப்படி ஒருநாள் கூட லீவு போடாம, லேட்டா வராம உங்களால இருக்க முடியுது?" சக ஊழியை வருணா வியந்தாள்.

"வீட்ல மாமியார், மாமனார், புருஷன் எல்லாம் தலைக்கு மேல தாங்கினா, வெளி வேலைக்கு ஒழுங்கா வரது ஒண்ணும் அதிசயமில்லே!"

"ஓ! யு ஆர் லக்கி! எம்.டி., இத உடனே ஃபேக்ஸ் அனுப்பச் சொன்னாரு..."

"ஓகே! நான் அனுப்பிடறேன்."

"மேடம், பதி அன் கோ.விலிருந்து ஏதாவது தகவல் வந்ததா?"

"இல்லே நடராஜ் சார். இதோ இப்பவே விசாரிக்கிறேன்."

"கௌரி, இந்த நம்பருக்கு ஃபோன் போட்டு பேமெண்ட் ரெடியான்னு கேளுங்களேன், ப்ளீஸ்..."

"அதுக்கு ஏன் வருணா கெஞ்சறே. இரு, ஒரு நிமிஷத்துல கேட்டுச் சொல்றேன்."

சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்த கௌரியை, முதலாளி ரங்கநாதனின் குரல் அழைத்தது.

"குட்மார்னிங் கௌரி..."

"குட்மார்னிங் சார்... நீங்க ஏன் சார் இங்க... கூப்பிட்டிருந்தா நானே வந்திருப்பேனே..."

"கூப்பிட்ட குரலுக்கு ஓடி



வர்றதும், சொன்ன வேலையைச் சீக்கிரமா, தப்பில்லாம செஞ்சு முடிக்கறதும் உங்களுக்குப் புதுசா என்ன? நீங்க எங்க கம்பெனிக்குக் கிடைச்ச கிஃப்ட்.''

''தாங்க்யூ ஸார்!'' என்று அடக்கத்துடன் கௌரி சிரித்தாலும், மனசுக்குள் பெருமை பூத்தது!


* * *

''வாம்மா வருணா... உட்காரு, காப்பி சாப்பிடறியா?''

''இல்லேம்மா பரவாயில்லை. இப்ப கௌரி மேடத்துக்கு எப்படி இருக்கு?'' வருணா கவலையுடன் விசாரித்தாள்.

''ம்... கண் முழிச் சுட்டா... ஆஸ்பத்திரியிலே நர்ஸைப் பார்த் துக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன். வீட்டு வேலையையும் கவனிக்கணுமே...''

''எனக்குக் கிடைச்சது மாமி யார் இல்ல. அம்மான்னு கௌரி மேடம் அடிக்கடி சொல்வாங்க. அவ்வளவு அக்கறையா கவனிச்சுப்பீங்களாமே...''



''ஆமா போ... என்ன கவனிச்சு என்ன? கடவுளுக்குக் கண்ணே இல்லே. இப்படியா அவ தொண்டையைக் கம்பியால கிழிக்கறது? அந்த லாரிக்காரன் நாசமாப் போக... ஒழுங்கா கம்பிகளைக் கட்டி எடுத்துக்கிட்டு வரமாட்டானா...?''

''சரி விடுங்கம்மா... உயிருக்கு ஆபத்தில்லாமப் போச்சே! அதை நினைச்சு சந்தோஷப்படுங்க. அப்புறம்... ஒரு விஷயம்... எங்க கம்பெனியில கௌரி மேடத்தை வேலையிலிருந்து எடுத்துட்டாங்க. அவங்க சரியாகி வர்றவரைக்கும் பொறுமையா இருக்க முடியாதாம். ஏதோ கதை சொல்றாங்க. அவங்க இருந்தபோது ஆஹா ஓஹோன்னு புகழ்ந்தாங்க. இப்பப் பாருங்க...''

''ஐயோ! அப்படியா! ஏகப்பட்ட கடன் இருக்கே. அவ சம்பளம் இல்லேன்னா கஷ்டமாச்சே?''

''என்னம்மா இது? மேடம்கிட்ட சொன்னா வருத்தப்படுவாங்கன்னு உங்கக்கிட்ட சொன்னா, நீங்க அதுக்கு மேல இருக்கிங்களே! அவங்க திறமைக்கு எத்தனையோ வேலை கிடைக்கும். கவலைப்படாதீங்க...''

''உனக்கென்னம்மா தெரியும் எங்க கஷ்டம்? சரி விதிப்படி நடக்கட்டும். நீ கிளம்பு, நான் சமயம் பார்த்து அவகிட்ட சொல்லிக்கறேன்.''

''சரிம்மா. வரேன்''

* * *

"என்ன கௌரி, நல்லாத் தூங்கினியா?'' - கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் அவளது கணவன் மகேஷ்.

''வாங்க... என்னால எல்லாருக்கும் கஷ்டம். ஏதாவது எனக்கு வேலை கிடைச்சுதா?''

''வேலை என்ன அவ்வளவு சுலபமா? நல்ல சம்பளம் கிடைக்கணும்னா லேட்டுதான் ஆகும். உன் கம்பெனி உன்னைத் தலையில தூக்கி வச்சு ஆடுதுன்னு சொன்ன; ஆனா, இப்ப... கீழே போட்டுடுச்சு. நீ இங்க ஆஸ்பத்திரியில உக்காந்துக்கிட்டு உனக்காக நான் வேலை தேடணும்னா... லேட்தான் ஆகும். சரி, நான் கிளம்பட்டா?''

''தனியா போர் அடிக்குதுங்க. கொஞ்ச நேரம் இருங்களேன் ப்ளீஸ்...'' தோளைப் பிடித்துக்கொண்ட கௌரியின் கைகளை விலக்கினான்.

''அது சரி, நான் என்ன உன்னை மாதிரி வேலைவெட்டி இல்லாதவனா? ஆயிரத்தெட்டு வேலை இருக்கு. நான் போறேன்.''

''ஆ! சொல்ல மறந்துட்டேன். லக்ஷ்மி கறவை நிறுத்தி ஒரு மாசம் ஆச்சே! தண்டத்துக்கு செலவு பண்ணி, அதை ஏன் வீட்ல வைச்சக்கணும்னு தரகர்கிட்டே விற்கச் சொல்லிட்டா அம்மா. நாளைக்கு அவன் வந்து மாட்டை ஓட்டிட்டுப் போறான். அம்மா சொல்லச் சொன்னா. நான் வரேன்... பை!'' ●



ஆஹா 50!

பல வண்ணங்களில் இருக்கும் பயணச் சீட்டுகளை ஆண்கள் பர்ஸிலோ, சட்டைப் பாக்கெட்டிலோ வைக்கிறார்கள். வியர்வையில் நனைந்து அதில் உள்ள நிறம் அப்படியே சட்டையில் ஒட்டிக் கொள்வதோடு, அதில் வைக்கும் ரூபாய்த் தாள்களிலும் நிறம் ஒட்டிக் கொண்டு விடுகிறது. அந்த ரூபாய்களை யாரும் வாங்குவதில்லை. எனவே போக்குவரத்து நிர்வாகம், பயணச் சீட்டுகளை வெள்ளைத் தாளில் அச்சிட்டால் மிகவும் வசதியாக இருக்கும்.

- மீனா சுந்தர், எடப்பாடி


இது சலுகை அல்ல.
உறவின் அடையாளம்!
இட்லி கடாய்
இலவசம்*
Shree
TILTING GRINDER
Sakthi
6
Swathi
110v
AVAILABLE FOR
USA & CANADA
SOWBAGHYA®
AN ISO 9001:2000 CERTIFIED COMPANY
32A North Usman Road, T Nagar, Chennai - 600017 Tel: 044-28341760/ 28342908
B.O.: 5 Hasthinapuram Main Road, Chrompet, Chennai Tel: 22234420
Fax: 044-42023926 grind@sowbaghya.com
314 Perundurai Road, Erode - 638 011 Ph: 0424 2260245, 2269965
1254 Mettur Road (E.V.N. Road), Erode - 638 011 Ph: 0424 2224499

நீங்கள் தினமும் சமையலில் உபயோகிக்கும் பொடி உப்பு, எப்படித் தயார் செய்யப்படுகிறது என்று யோசித்ததுண்டா?

ஒதுக்காதீங்க!




உப்பளங்களில் தயாரிக்கப்படும் கல் உப்பில் உள்ள கால்சியம், பொட்டாசியம், மினரல்ஸ் போன்ற சத்துக்களை அடியோடு நீக்கி பிறகு பொடி செய்யப்பட்டு சிறிது அயோடின் சேர்க்கப்பட்டு (அதுவும் 1 கிலோவிற்கு அயோடின் சேர்க்க 5 பைசாவிலிருந்து 20 பைசா வரை செலவு) அயோடைஸ்டு உப்பு என்று பெயர் சூட்டப்பட்டு அந்தச் சத்தில்லாத உப்பை அதிக விலைக்கு விற்று கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள்.

அப்படி உப்பிலிருந்து பிரிக்கப்பட்ட கால்சியம், பொட்டாசியம் மினரல்ஸை அப்படியே செயற்கை உரங்களாகத் தயாரித்து அதிலும் லாபம் பார்க்கிறார்கள்.

வளரும் குழந்தைகளுக்கு அயோடின் 10 வயது வரை தேவை. அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு, ஏன் வயதானவர்களுக்குக் கூட இந்த எக்ஸ்ட்ரா அயோடின் தேவையில்லை. காற்றில் இருப்பதே போதும். மலைவாழ் மக்களுக்குத் தான் அயோடைஸ்டு உப்பு தேவை. ஏனெனில் அங்கு காற்றில் அயோடின் சத்து குறைவு.

இல்லத்தரசிகளே! இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு, உப்புப் பெறாத விஷயம் என்று ஒதுக்காமல் இனிமேல் கல் உப்பை பொடித்து அனைத்து சத்துக்களும் நிறைந்த பொடி உப்பாக்கி சாலட், பொரியல், சூப், சப்பாத்தி என அனைத்திலும் உபயோகித்து நன்மை பெறுங்கள்.

- என். கலாமணி, நாமக்கல்.



மார்கழி கோலத்தின் வெண்மை பிரம்மாவையும், சாணத்தின் பசுமை விஷ்ணுவையும், செம்மண்ணின் செம்மை சிவனையும் நினைவுபடுத்துகின்றன. பூசணிப் பூவின் மஞ்சள் நிறம் மங்கலத்தின் சின்னம். சாணிப் பிள்ளையார் அனைவருக்கும் அருள்வதற்குப் பிரசன்னமாகிறார்.

- நெ. இராமன், சென்னை - 24.



இதன் சுவை அறிந்தவர்கள்
மற்றொன்றை தேடுவதில்லை!
ICE CREAM POWDER
CUSTARD POWDER
JELLY CRYSTALS
CORN FLOUR
BAKING POWDER
Mfg. & Packed by
ROOPAM ENTERPRISES
CHENNAI-600 035
Custard Powder
Jelly Crystals
CORN FLOUR
UNIQUE : 98408 34031



கஸ்தூரியின் பாரம்பரியமிக்க தரம் என்றென்றும் நிரந்தரம்
கஸ்தூரி கைத்தறி சேலைகள்
கோவை காட்டன்
சில்க் காட்டன்
பத்திக் பிரிண்ட்
செட்டி நாடு காட்டன்
சுடிதார் மெட்டீரியல்
பொள்ளாச்சி காட்டன்
கோரா சில்க்
பாலி காட்டன்
காஞ்சி காட்டன்
வேஸ்டிகள்
புதிய
தூய பருத்தி பட்டு சேலைகள்
மற்றும் புதிய
புத்தாண்டு பொங்கல்
சேலை ரகங்கள்
Mfrs :
P.K.C.Paramasiven
Sri Kasthuri & Coy
45/163,S.S.Kovil street,Pollachi-642 001.



Colour Full Greetings

OUR SHOWROOMS :

OUR NEW BIG SHOWROOM
75, Pondy Bazaar, Next to Universell, T.Nagar, Chennai - 600 017. Ph : 4212 3228, 4260 6080

"SHREE SAKTHI PLAZA"
Basement, # 70, Pondy Bazaar, T.Nagar, Chennai - 17. (Next to Maya's Plaza) Ph : 2815 0144, 4207 1161

"ANNA NAGAR"
Anna Nagar Plaza, Shop # 1, Ground Floor, C-47, IInd Avenue, Anna Nagar, Chennai - 40, Ph : 4207 1121, 4268 3132

"ADAYAR"
120, L.B. Road, (Opp. Pizza Corner, Adyar Anandha Bhavan) Adyar, Chennai - 20. Ph : 4211 6068, 2445 3002

ORIGINAL

NARAYANA PEARLS

GEMS & JEWELS

MAIN SHOWROOM : "SUDHAS PARADISE"
62, Pondy Bazaar, Below Karur Vysya Bank), Opp. Hotel Saravana Bhavan, T.Nagar, Chennai - 17. Ph : 2432 2644, 2433 1060

e-mail : narayana_thenarayanapearls@yahoo.co.in www.thenarayanapearls.com

ஸ்ரீ ராமஜெயம்



ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

2A, II Floor Mathura Enclave - No.95/123, Perambur High Road, Perambur, Chennai - 11. Ph 25511786 மொபைல் போன் : 9444035876

அன்பு வாடிக்கையாளர்களுக்கு இனிய 2008 புத்தாண்டு வாழ்த்துகள்.

(நாமசங்கீர்த்தனத்துடன் அன்பர்களை அழைத்துச் செல்லும் ஆன்மிகச் சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

① 11.2.08 முதல் 15.2.08 வரை 5 நாட்கள் கொண்ட **அகோபிலம் (6 நரசிம்மர் மட்டுமே) மந்த்ராலயம், ஸ்ரீசைலம்** - 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ் மூலமாக பயணம் - கட்டணம் ரூ. 2050/- (சாப்பாடு, இரவு தங்குதல் உட்பட)

② 21.02.08 முதல் 29.02.08 வரை 7 நாட்கள் கொண்ட கர்நாடக மாநில யாத்திரை - சென்னை - பெங்களூர் - சென்னை - இரயில் பயணம். இதர இடங்களுக்கு 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ் மூலமாக பயணம் - கட்டணம் ரூ. 3850/- **மேல்கோட்டை, ஸ்ரீரங்கப்பட்டணம், தலைகாவேரி, தர்மஸ்தலா, சுப்ரமண்யா, உடுப்பி, மூகாம்பிகை, முருடேஸ்வர், சிருங்கேரி, கோகர்ணம், கலாச அன்னபூர்ணா, பேளூர், ஹலபேடு** ஆகியவை.

③ 17.03.08 முதல் 28.03.08 வரை 12 நாட்கள் கொண்ட **காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம்** ஆகியவை. சென்னை - காசி - சென்னை இரயில் பயணம் இதர இடங்கட்கு 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ் மூலமாக பயணம். கட்டணம் ரூ. 5750/- காசி, கயா ஆகிய இடங்களில் பித்ரு காரியங்கள் தகுந்த புரோகிதர்களைக் கொண்டு முறைப்படி நடத்தித்தரப்படும்.

④ 17.03.08 முதல் 04.04.08 வரை 19 நாட்கள் கொண்ட **காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம் மற்றும் பசுபதி நாத்.** முக்திநாத் (சாளக்கிராமம்) கொண்ட நேபாள யாத்திரை. ரூ. 9250/- **சாளக்கிராம யாத்திரை (முக்திநாத்)** ஹெலிகாப்டர் மூலமாக கட்டணம் ரூ. 9000/- தனி. மேற்படி யாத்திரை அனைத்துக் கட்டணம் ரூ. 18,250/-

⑤ 24.03.08 முதல் 04.04.08 வரை 12 நாட்கள் கொண்ட காசி, மற்றும் **நேபாள பசுபதிநாத்** மற்றும் **முக்திநாத் (சாளக்கிராமம்)** யாத்திரை சென்னை-காசி-சென்னை இரயில் பயணம். காசியிலிருந்து நேபாளத்திற்கு 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ் மூலமாக கட்டணம் ரூ. 6750/- **முக்திநாத் சாளக்கிராம யாத்திரை** ஹெலிகாப்டர் கட்டணம் ரூ. 9000/- உட்பட அனைத்து கட்டணம் ரூ. 15,750/-




V. சீனிவாசன்

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்!

மேற்படி யாத்திரையின் கட்டணம் மற்றும் விவரம் அறிய சுய விலாசமிட்ட ரூ. 5/- ஸ்டாம்ப் கவருடன் விண்ணப்பிக்கவும். மாருதி யாத்திரை பக்தியுடன் பகவத் அனுகிரஹத்தைப் பெறுவதற்கே

பழைய காலத்துப் பாத்திரங்களின் பயன்பாடே தனிதான்!



வெள்ளித் தட்டில் தங்கக் காசு!

ஈயச் சொம்பு ரசம்!

வாய் குவிந்த, சின்ன ஈயச் செம்பில், கரிக்குமுட்டி அடுப்பில் ரசம் கொதிக்கும்போதே, நமக்குப் பசி எடுத்து, சாப்பிட 'வா வா' என அழைக்கும்.

கோதாவரி குண்டு எனும் வெண்கலப்பானை

வெண்கலப் பானையில், அரிசி களைந்து போட்டு, நன்கு கொதித்து வந்ததும், கஞ்சி வடித்து, பின்னர், அதனை இலையில் பரிமாறும்போது, 'பொலபொல' என்ற மல்லிகைப்பூ சாதம் ரெடி!

மண் சட்டி வெந்தயக் குழம்பு

மண் சட்டியில், வெந்தயக் குழம்பிற்குத் தாளிக்கும்போதே வாசனை மூக்கைத் துளைக்கும். வெந்தயம் எண்ணெயில் பொரிந்து பின்பு குழம்பு கொதிக்கும்போது ஆஹா, அதன் ருசியே அலாதிதான்!

கற்சட்டி

மாக்கற்சட்டி பார்த்திருக்கீங்களா? இரு புறமும் பிடிகளுடன், கறுப்பு நிறத்தில் 'பளபள' என்றிருக்கும். இதில் மாவடு போடுவார்கள். சிலர் தயிர் தோய்ப்பார்கள். தயிர் கெட்டியாகத் தோயும்.

மண்பானை

ஒரு முக்காலி ஸ்டாண்டில், ஒரு பெரிய மண் பானையை வைத்து, அதில் சுத்தமான வடிகட்டிய தண்ணீரை நிரப்பி வைத்து மூடி விட்டால், தொண்டைக்கு எந்தக் கெடுதலும் செய்யாத குளிர்ந்த தண்ணீர் தயார். ஃப்ரிஜ் இருக்கும் அக்கம் பக்கத்து வீடுகளில்



உள்ளவர்கள் எங்கள் வீட்டுப் பானைத் தண்ணீருக்கு ஓடி வருவார்கள். அவ்வளவு டிமாண்ட். இரண்டு முறை தினமும் நிரப்பி வைப்பேன். அவ்வளவு சுத்தமாகக் குளிர்ந்த தெளிவான தண்ணீர் அது.

கச்சா வெண்கலம்

கச்சா வெண்கலம் என்ற இந்தப் பாத்திரத்தில் அரிசி உப்புமா கிளறினால், மிக மிக ருசியாக இருக்கும். வெண்ணெய் கூடக் காய்ச்சலாம்.

திரட்டுப்பால் உருளி!

திரட்டுப்பால் கிளறுவதற்கு என்றே ஏற்பட்ட, பெரிய கனமான பளபளப்பான பாத்திரம் இது. திருவனந்தபுரம் பக்கத்தில் இது மிக மிகப் பிரசித்தம். விலை ரொம்ப ஜாஸ்தி. இப்போது இந்தப் பாத்திரத்தில் நிறைய தண்ணீர் நிரப்பி, தாமரை, ரோஜா போன்ற மலர்களை, மிதக்க விடுகிறார்கள்.

ஊறுகாய் ஜாடிகள்

இரண்டடி உயர ஜாடியில், ஆவக்காய் ஊறுகாய்ப் போட்டு, அதன் மேல், வெள்ளைத் துணியைக் கட்டி வைக்கும் அழகே அழகு. திறந்தால், செக்கச் செவேல் என்று ஆவக்காய் மாங்காய் கண் சிமிட்டும். அதில் ஊறிய கொத்துக்கடலை படுஜோர். உப்பு ஜாடி, புளி போட மரவை என்று கூட விதவிதமாக இருந்தன.

தாமிரப் பாத்திரம்

எங்கள் வீட்டில் தாமிரத் தவலைகளில் தான் தண்ணீர் நிரப்பி, குடித்து வந்தார்கள். இப்போது சொல்கிறார்களே, தாமிரப் பாத்திரத்தில் இரவில் தண்ணீர் வைத்து காலையில் குடிப்பது நல்லது என்று, அன்றே இவர்கள் இதனைக் கடைபிடித்தனர்

கொட்டாங்குச்சிகள், மரக்கரண்டிகள்

பெரிய தேங்காய் உடைத்தால், தேங்காய் பயன்படுத்திய பின்னர் மேற்புறத்தில் உள்ள நாரை நீக்கி எடுத்து, 'வழுவழு' என்றாக்கி பயன்படுத்துவோம். என் மாமனார் கொட்டாங்குச்சியை அழகுபடுத்துவதில் வல்லவர்.

மரக்கரண்டிகளைத்தான், ஊறுகாய் பரிமாறப் பயன்படுத்துவார்கள். தூக்கிண்ணங்கள், சுத்தம் செய்வது கஷ்டம். சூடும் தாங்கும். வெள்ளித் தம்ளரில் பால், காப்பி குடிப்பார்கள். வெள்ளித் தட்டில் சாப்பிட்டால் ஆயுள் விருத்தியாகும். அதனால்தான், குழந்தைகளின் முதல் ஆண்டு நிறைவிற்கு, அதாவது ஆயுஷ்ஹோமத்திற்கு வெள்ளித் தட்டும், தம்ளரும் பரிசாக வாங்கித் தருவார்கள். வசதி உள்ளவர்கள், சின்ன தங்கக் காசை, தட்டின் நடுவில் பதித்துக் கொடுப்பார்கள். குழந்தைகளுக்கு நீண்ட ஆயுள் ஏற்படும் என்று எவ்வளவு தீர்க்கதரிசியாகச் செயல்பட்டுள்ளனர்!

- வஸந்தா வேணுகோபால்,
சென்னை - 24.



தீக்குச்சிகளில் வைக்கப்படும் மருந்தின் அளவு வரவரக் குறைந்து கொண்டே போகிறது. தீபம் ஏற்றுவதற்குள் அணைந்து விடுவதால் மனம் சங்கடப்படுகிறது. விலையை ஏற்றினால் கூடப் பரவாயில்லை. மருந்தை போதிய அளவு வைக்கலாமே. தீப்பெட்டி தயாரிப்பாளர்கள் கவனிப்பார்களா?

- ஜெகா, கும்பகோணம்.





புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்

மகிழ்வித்து மகிழுங்கள்.

ஆதரவற்ற பெண் குழந்தைகளின் புகலிடம்

வேதாரண்யம்

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்

வேண்டுகோள்

பேரன்புடையீர்:


கல்விபயிலும் ஏழை, எளிய, ஏதிலிச் சிறுமியருக்கு உதவுங்கள்.

கடை கோடி கிராமப்புறத்தில் காந்தியச் செம்மல் வேதாரண்யம் உப்பு சத்யாகிரஹ தியாகி சர்தார் வேதரத்னம் அவர்களும் அவர்தம் ஒரே மைந்தர் பத்மஸ்ரீ வே. அப்பாகுட்டி அவர்களும் இந்திய சுதந்திரத்திற்கு முன்பே (1946) காந்தி அடிகளின் ஆசியுடன் தொடங்கிய மகளிர் தொண்டு நிறுவனமான கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் என்ற எளிய சமுதாயத்தில் வாழும் சுமார் 3,000 பெண் குழந்தைகள் சார்பில் இந்த வேண்டுகோளை வைக்கிறோம்.

பெருந்தலைவர்களான, பூஜ்ய விநோபாபாவே தொடங்கி வைத்த கோசாலை,பாரத ரத்தினங்கள் ராஜாஜி தொடங்கி வைத்த அன்னபூர்ணாலயம், முதல் பார்லிமெண்ட் சபாநாயகர் ஜி.வி. மாவ்லங்கர் தொடங்கி வைத்த கலைமகள் நிலையம், சி.சுப்ரமண்யம் அவர்கள் தொடங்கி வைத்த நசிகேத நிவாஸ், காமராஜ், ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் தொடங்கி வைத்த குடிநீர் திட்டம், மஹாத்மாவின் பேரன் துஷார் காந்தி, மத்ய அமைச்சர்கள் ப.சிதம்பரம், EVKS இளங்கோவன், G.K. வாசன், இராஜாஜியின் பேரன் C.R. கேசவன் ஆகியோர் தொடங்கிய பேக்கரி, மருத்துவமனை ஆகியவற்றை பெற்று அவர்கள் நல் ஆசியுடன் காந்திய வழியில் வாழ பயிற்சி எடுக்கிறோம்.

கிராமப்புற ஏழை எளிய ஏதிலி அகதிப் பெண் குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருப்பிட வசதி, கல்வி, தொழிற்கல்வி, (ஆஃப்செட் அச்சுப்பள்ளி, தொலைக்காட்சி கட்ட - பழுது நீக்க, கம்யூட்டர் கட்ட - பழுதுநீக்க, மின்னணு சாதனங்கள் செய்ய, சிவில் ட்ராப்ட்ஸ்மன், ரேடியோ டிவி, ஆடை தயாரித்தல், பசு பராமரித்தல், சித்தவைத்யம், ஊதுவத்தி, செவிலியர், பேக்கரி, அலுவலக நிர்வாகம் போன்ற பயிற்சிகள்) ஆகியன அளித்து 61 ஆண்டுகளாக ஆதரிக்கும் குருகுலம் மகளிர் தொண்டு நிறுவனத்திற்கு ஆதரவு தாருங்கள்.

ஆதரவற்ற பெண்களின் வாழ்வில் மகிழ்ச்சி, மலர்ச்சி, வாழ்க்கையில் பிடிப்பு ஆகியன ஏற்படுத்தித்தர உங்களுடைய, தங்கள் அன்பர்களுடைய அன்பளிப்புகளை, நன்கொடைகளைப் பொருளாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். ஆதரியுங்கள். மகிழுங்கள்.



நிறுவனர்

அமரர்.

சர்தார்.

வேதரத்னம்

தபால்தலை

முகவரி: கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் தேசிய விருது பெற்ற மகளிர் தொண்டு நிறுவனம் த.பெ.எண்.2. வேதாரண்யம் - 614 810. நாகப்பட்டினம் மாவட்டம் போன்:(04369)250227, 250027,250011

தந்தி : GURUKULAM. VEDARANIAM -614 810.

www.gurukulam.org E mail: gurukulam vdm @ g mail.com

அரசு சலுகை: உள்ளாட்சி, கதர், அரசு நிறுவனங்கள், திருக்கோயில்கள், கல்வி நிலையங்கள், விலைப்புள்ளி கோராமல் குருகுல அச்சகத்திற்கும், குருகுல எலக்ட்ரானிக்ஸ்க்கும், வேலை கொடுக்கலாம். விற்பனை வரி கிடையாது

Govt.of India வெளிநாட்டு உதவி பெற அனுமதி. FCRA No. 075960069

கொடுத்தால் வரும்



அடையாளம் சொன்ன பரங்கிப் பூ!

போகிப் பண்டிகையன்று விடியற்காலையில் பெண்கள் வீட்டு வாசலில் சாணம் தெளித்து, அழகிய கோலமிட்டு அதன் நடுவில் பசும் சாணத்தை உருண்டைகளாக வைத்து, அதன் மீது மஞ்சள் நிறமுள்ள பரங்கிப் பூவை செருகி வைப்பார்கள். இதற்கு பழங்காலக் கதைப்படியும் தற்கால விஞ்ஞானத்தின்படியும் இரண்டுவித விளக்கங்கள் உள்ளன. மாட்டின் சாணம் ஒரு கிருமிநாசினி. இதைத் தண்ணீரில் கரைத்து வீட்டின் முன் தெளிப்பதால் பூரான், தேள் போன்றவை வீட்டின் உள்ளே வராது. மேலும் இது காற்றையும் தூய்மைப்படுத்துகிறது.

அதே போல் பரங்கிப் பூவில் உள்ள மகரந்தத் தூளுக்கும் நோயை எதிர்க்கக்கூடிய மருத்துவ குணம் உண்டு. வீட்டின் முன் சாண உருண்டையில் பரங்கிப் பூக்களை வைக்கும்போது காற்றில் அந்த மகரந்தத் துகள்கள் கலந்து அந்தக் காற்றை

சுவாசிப்பவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கிறது. இதனால்தான் கிராமங்களில் இன்றும் வீட்டின் கூறைகளின் மேல் இந்த பரங்கிக் கொடியைப் படரவிடுகிறார்கள்.

இதை விளக்கும் ஒரு பழங்கதை உண்டு. பாரதப் போர் முடிந்ததும் பகவான் கண்ணன், வீதிகளில் வலம் வரும்போது போரில் பாண்டவர்களுக்காக சண்டையிட்ட வீரர்களுக்கு அருள் வழங்க வேண்டும் என்று ஆர்வப்பட்டாராம். பகவான் கண்ணனுக்கு அந்த வீரர்களின் வீடுகள் அடையாளம் தெரியவேண்டும் என்பதற்காக வீட்டின் முன்பு பெண்கள் சாணத்தில் பரங்கிப்பூவை வைத்தார்களாம். அதே போல், கடவுளின் அருட்பார்வை நமக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக போகி அன்று இன்றும் சாணத்தில் பரங்கிப் பூவை வைப்பதாக ஒரு ஐதிகம்.

பொங்கலுக்கு முந்தைய நாளான போகிப் பண்டிகை தினத்தில், மழைக்கு அதிபதியானவனும் போகத்தை அனுபவிப்பதில் சிறந்தவனுமான இந்திரனைப் போற்றி வணங்குவது வழக்கம். இதனால் இந்திரன் தன்னை சர்வ வல்லமை படைத்தவனாக எண்ணிக் கொண்டு மிகவும் கர்வமும் செருக்கும் அடைந்தான். இதை அறிந்த பகவான் கிருஷ்ணர், இந்திரனின் கர்வத்தை அடக்க எண்ணி தமது மக்களான ஆடு மேய்க்கும் இடையர்களிடம் இந்திரனை வணங்குவதற்குப் பதில் கோவர்த்தன மலையை வணங்குமாறு கேட்டுக் கொண்டார்.

மக்களும் அவ்வாறே வணங்கினார்கள். இதை



அறிந்த இந்திரன் ஏழு
மேகக் கூட்டங்களை
அனுப்பி மின்னல்
இடியுடன் கூடிய
பெருமழையைப்
பொழியச் செய்து,
அதன் மூலம்
பிரளயத்தை ஏற்படுத்தி
இடையர்களை அழிக்க
ஆயத்தமானான்.
உடனே, பகவான்
கிருஷ்ணர் தன்னுடைய
சக்தியால் அந்த
கோவர்த்தன
மலையையே ஒரு
விரலில் குடையாகத்
தூக்கிப் பிடித்து, அதன்
அடியில்
இடையர்களையும்
அவர்கள் வளர்த்த ஆடு
மாடுகளையும் வந்து
தஞ்சம் அடையச்செய்து
காப்பாற்றினார். இதை
அறிந்த இந்திரன் தான்
செய்த தவறை உணர்ந்து
பகவான் கண்ணனிடம்
மன்னிப்பு கேட்டான்.
பகவான் கண்ணனும்
அவனை
மன்னித்தருளினார்
என்றும் அந்த போக
தேவேந்திரனை
வணங்கும் நாளே
'போகியாக'
கொண்டாடப்படுகிறது
என்பதும் கதை.

பொங்கல் பண்டிகையின் மூன்றாவது நாள் மாட்டுப் பொங்கல். உழவர்களின் உற்ற நண்பனாக உழைக்கும் கால்நடைகளுக்கு நன்றி சொல்லும்விதமாக மாடுகளுக்கு அன்று ஓய்வு கொடுத்து, அலங்கரித்து பூஜை செய்வார்கள். இதைப் பற்றியும் ஒரு புராணக் கதை கூறுவதுண்டு.

ஒருமுறை சிவன் தன்னுடைய வாகனமான பசவன் என்ற காளையிடம், ''நீ பூலோகம் சென்று அங்குள்ள மானிடர்களிடம், தினமும் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளித்து மாதம் ஒருமுறை உணவு சாப்பிட வேண்டும் என்று கூறிவிட்டு வா'' என்று கட்டளையிட்டாராம். 'சரி' என்று கூறிவிட்டுச் சென்ற அந்தக் காளை பூலோகம் சென்று தான் சொல்லவேண்டியதை அப்படியே மாற்றி, ''மனிதர்களே, நீங்கள் தினமும் உணவு உண்டு, மாதம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டும்'' என்று தவறாகக் கட்டளையிட்டுவிட்டு வந்து விட்டாராம்.

இதை உணர்ந்த சிவன் கோபம் அடைந்து தனது காளையிடம், ''நீ நிரந்தரமாக பூலோகத்திலேயே இருந்து உழவர்களுக்கு நிலத்தை உழுது, உழவுத் தொழிலுக்கு உதவ வேண்டும்'' என்று சாபமிட்டு விட்டாராம். இதுவே, மாடுகள் உழவுத் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

- எஸ். செல்லம்மாள், வேளச்சேரி.



Estd.:1955

ஸ்ரீ:

நன்றி மறவாத யாத்ரீகர்கள் துணை

Founder : K.E. NAMPILLAI. Organisers : N. KULASEKARAN, N. GANGADHARAN

20.1.08 **28.1.08**	**4** நாட்கள் மலைநாட்டு திருப்பதிகள் (திவ்ய தேசங்கள்) குருவாயூர், திருவனந்தபுரம், தங்குமிடம் போஜனம் உள்பட ரூ.**2200/- (2 x 2)** வேன் மூலம்.
28.2.08	**17** நாட்கள் மஹாசிவராத்திரி காசி யாத்திரை சென்னையிலிருந்து **28.2.08**ம் தேதி தனி **3** டயர் கேரேஜ் மூலம் புறப்படுகிறது. காசி, கயா, திரிவேணி, ஹரித்வார், ரிஷிகேஷ், டில்லி, ஆக்ரா, மதுரா, பூரி, புவனேஸ்வர், கோணார்க் பார்த்து சென்னை திரும்புகிறோம். தங்குமிடம் போஜனம் உள்பட நபருக்கு கட்டணம் ரூ.**8950/-** வயதானவர்களுக்கு வசதிகள் நிறைந்தது. சௌகர்யமான பர்த்துகளுக்கு (இடங்களுக்கு) உடன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். லக்கேஜ்களை கேரேஜுகளிலே வைத்துக்கொள்ளலாம்.
27.3.08	**4** நாட்கள் மந்திராலயம், பஞ்சமுகி, பிக்ஷாலயா, கல்ஹூர் மஹாலெஷ்மி, ஆனேகுந்தி, நவபிருந்தாவனம், ஹம்பி, திருச்சியிலிருந்து இரயில் மூலம் புறப்படுகிறோம். தங்குமிடம், போஜனம் உள்பட நபருக்கு கட்டணம் ரூ.**2750/-**
14.4.08	**16** நாட்கள் முக்திநாத் நேபாள், கோரக்பூர், அயோத்யா, நைமிசாரண்யம், அலகாபாத், காசி, கயா, பூரி, புவனேஸ்வர், சென்னை, நபருக்கு கட்டணம் ரூ.**8575/-** (ஹெலிகாப்டர் கட்டணம் ரூ.**8500/-** தனியாக செலுத்துதல் வேண்டும்.
09.5.08	**20** நாட்கள் கோடைக்கால பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்வார், காசி, கயா, டில்லி, ஆக்ரா, மதுரா, பூரி, புவனேஸ்வர், கோணார்க் யாத்திரை தனி **3** டயர் கேரேஜ் மூலம் திருச்சியிலிருந்து புறப்பட்டு மீண்டும் திருச்சி வருகிறது. பத்ரி, கேதார்நாத் கட்டணம் உள்பட நபருக்கு ரூ.**12575/-**

ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்

(Regd)

No.34-A/2, அக்ரஹார வீதி, மேலச்சிந்தாமணி, (அண்ணாசிலை-சிதம்பரம் மஹால் சமீபம்), திருச்சி-2.

✆ 0431-2706823, 2713336 Cell : 94431 77023, 94435 59594

மூட்டு வலியா? சர்க்கரையா? இனி கவலை வேண்டாம்



சிறுவர் முதல் பெரியவர் வரை சர்க்கரை நோயால் இப்போது பாதிக்கப்படுகின்றனர். அந்தக் காலத்தில் நல்ல ஆரோக்கிய உணவு, கடின உழைப்பு, தூய்மையான சுற்றுச்சூழல் இருந்ததால் சர்க்கரை நோய் பாதிப்பு இல்லை. இப்போது உடல் உழைப்பு இல்லாத குடும்பத் தலைவிகள், எப்போதும் ஏ.சி., கம்ப்யூட்டருடன் மாணவர்கள், ஷிப்ட் வேலை காரணமாக அதிக உடல் பருமன், உடல் பருமனால் மூட்டு வலி ஆகியவை ஏற்படுகின்றன. அந்தக் காலத்தில் பரம்பரை காரணமாகத்தான் சர்க்கரை நோய் வரும்.

சர்க்கரை குறையும்: இந்த பாதிப்பைத் தடுக்கவே மூலிகை உணவு, கீரையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சத்துள்ள உணவுப் பொருள் அளிக்கப்படுகிறது. இதை காலை, இரவு வேளைக்கு கஞ்சியாகச் சாப்பிடலாம். 3 மாதங்களில் சர்க்கரை அளவு இயல்பான அளவுக்கு வந்துவிடும்; மேலும் பக்க விளைவுகள் இல்லை.

மூட்டு வலி குறைய...: "சையாட்டிகா" என்பது தொடை நரம்பு பாதிக்கப்பட்டதால் ஏற்படும் ஒரு விதமான வாதம். இந்த வாதம் ஏற்பட்டவர்களுக்கு முழங்கால் வலி மற்றும் வீக்கம், பாதத்தில் எரிச்சல், கால் சாய்ந்து நடப்பார்கள், உடலில் வாதம், பித்தம் அதிகமாவதுதான் மூட்டு வலி ஏற்பட முக்கியக் காரணங்கள். மேலும், உடலில் கால்ஷியம் குறைவதால் மூட்டுகளில் உள்ள ஈரப்பசை உலர்ந்து விடுவதும் கூடக் காரணமாகலாம். இந்த மாதிரி மூட்டுவலி வந்தால் 7 நாட்களுக்கு ஆயில் மசாஜ், மூலிகை ஒத்தடம் தரப்படும். உள்ளுக்குச் சாப்பிட மருந்து அளிக்கப்படும். தலை / முக பராமரிப்பு, தைராய்டு பிரச்சினைகள், உடல் பருமன் குறைய மற்றும் அனைத்து வகை வியாதிகளுக்கு நிவாரணம் பெற...

டாக்டர் ஆர். பானுமதி (சித்தா ஆயுர்வேதம்)

ஸன்ரைஸ் ஹெர்பல் கிளினிக்

10, மன்னார் தெரு, தி.நகர், (பஸ் ஸ்டாண்ட் எதிரில்), சென்னை - 600 017.

கோவையில் கிளை உண்டு.

பெங்களூரில் –

A. Kumar

Cell: 92411 20715

"டைரக்டரா, ஸ்டாரா?"

என் மகள் மூன்றாம் வகுப்பு படிக்கிறாள். அடிக்கடி எங்களிடம் வாட்ச் கேட்டு நச்சரிப்பாள். ஊரிலிருந்து வந்திருந்த என் தாயாரிடமும் அதேபோல் கேட்டு அடம் பண்ணியிருக்கிறாள். என் தாய் அவளிடம், ''உன் அம்மா பெரிய பெண் ஆனதும்தான் அவளுக்கு வாட்ச் வாங்கிக் கொடுத்தோம், நீ இப்பவே கேட்கிறியே?'' என்றதும் என் மகள், ''அப்ப அம்மாவுக்கு டைம் பார்க்கத் தெரிந்திருக்காது பாட்டி!'' என்றாளே பார்க்கலாம்.

- ஜே. வனிதா ஜெயராம், சென்னை - 1.



ஒருநாள் மதியம், தூங்கிக் கொண்டிருந்த தாத்தா திடீரென எழுந்தார். என் குட்டித் தங்கை சங்கீதா ''என்ன தாத்தா?'' என்றாள்.

''எறும்புக் கடிக்குது!'' என்றார்.

''தாத்தா, நீங்க சர்க்கரை வியாதிக்காரர் அல்லவா? எறும்புக் கடிக்கத்தானே செய்யும்?'' என்றாள்.

என் தாத்தா, சிரித்து விட்டு, வருவோரிடமெல்லாம் பேத்தியின் ஜோக்கைச் சொல்லி மகிழ்ந்தார்.

- டி.ஆர். பூர்ணிமா ராம், குரோம்பேட்டை



எங்கள் வீட்டுக்கு அருகே தெலுங்கு பேசும் குடும்பம் ஒன்று வசிக்கிறது. அந்தக் குடும்பப் பெண் தன் குழந்தையிடம் அடிக்கடி 'நட' என்பதற்குத் தெலுங்கில் 'நடி' என்று கூறுவார். இதைக் கவனித்த எங்கள் குட்டிப் பையன், ''ஏம்மா அந்த ஆன்ட்டி என்ன சினிமா டைரக்டரா? அந்தக் குழந்தை என்ன சினிமா ஸ்டாரா? அடிக்கடி 'நடி நடி'ன்னு சொல்றாங்களே?'' என்று கேட்டான். ஒரே 'கலகல' தான்!

- ஒப். ஆர்த்தி, ஈரோடு.



சுப யாத்ரா



எண்.43, தெற்கு மாட வீதி,
(சித்ரகுளம் எதிரில்) மயிலாப்பூர், சென்னை-4
Ph : 2495 0218, 24952319

ஷிரிடி பாபா தரிசனம் பிரதி வாரம் வியாழக்கிழமை
4 நாட்கள் ரயில், பஸ் மற்றும் தங்கும் வசதி ரூ.2200/-

மந்திராலயம், நவபிருந்தாவனம்
07.02.2008 | 06.03.2008
3 நாட்கள் ரூ.2000/-

பண்டரிபுரம், துல்ஜாபூர், சோலாபூர்
31.01.2008 | 28.02.2008
3 நாட்கள் ரூ.2000/-

சாய்சரண்
முதியோர் இல்லம்
தங்கள் வாழ்க்கையில் முதுமை கட்டத்தில் உள்ள தூய்மை உள்ளங்களுக்கென்று பிரதயோகமாக ரம்யமான சூழலில் ஆறுதல் சேவை அளிக்கும் இல்லம். அத்தகைய பெரியோர்கள் மற்றும் நன்கொடை அளிப்பவர்கள் அணுகவும்
Ph : 2495 0218, 24952319

உ
"ஸ்வாகதம்" 2008–ல் சுபிட்ஷம் உண்டாகட்டும்
ஸ்வாமியே சரணம் ஐயப்பா – "கேரளத்து நம்பூதிரி ஜோதிஷம்"



நினைத்தது நிறைவேறிட "கார்யசித்தி" - தாம்பத்ய ஒற்றுமைக்கு "வசீகரம்" - பகைவர் தொல்லையில் இருந்து விலகிட "சத்ரு விலக்கல்" - கெட்ட சக்தியிலிருந்து விடுபட "துர்சக்தி சம்காரம்" செய்வினை கோளாறுகளில் இருந்து விடுபட - "அமாவாசை" பூஜை - ஹோமம் - சகல நன்மைக்கு "மிளகாய் ஹோமம்" - பௌர்ணமியில் மனநிலை சரியில்லாதவர்களுக்கு "தன்வந்த்ரி ஹோமம்" - காணாமல் போனவர்களை பற்றியும் - காணாமல் போன பொருட்கள் பற்றி அறிய "பிரசன்னம்" "நவகிரக தோஷங்களை" போக்கிட சகல கிரக தோஷ பூஜா பரிகாரம் பித்ரு தோஷத்தினை போக்கிட "தில ஹோமம்" பிரும்மஹத்தி தோஷ நிவர்த்தி "பிரும்ம ஸ்ரீ பாலக்காடு ஸ்ரீ சூரியன் நம்பூதிரி"

முன் அனுமதியுடன் கூடிய கடித நேரிடை - தொடர்பிற்கு

ஸ்ரீ சாஸ்தா ஜோதிஷாலயா

140/45, சுப்பிரமண்ய முதலி தெரு, சைதாப்பேட்டை, (Opp. Boara Hospital) சென்னை - 15.
☎ : 91- 044 - 65171890 / 9840102001 / 9884943309 / www.namboodrijothisham.com

குறிப்பு: வெளியூர் அன்பர்கள் ஜாதக நகலுடன் (or) விரிவான கடிதத்துடன் தங்களது பிரச்சனைகளை எழுதி ஆலோசனை கட்டணமாக ரூபாய் 500க்கான M.O / D.D. யுடன் கடித தொடர்பு கொள்ளவும்)

இவை எல்லாமே...

சமீபத்தில் ஒரு பலகையில் இருந்த வாசகம் என்னைக் கவர்ந்தது. 'Remove your chappals and worries also' என்ற அந்த வாக்கியத்தை அனைவரும் உணர்ந்து வீட்டுக்குள் நுழைந்தால், உறவுகளிடையே அன்பு அதிகரிக்கும். இல்லத்தரசிகளும் இதைப் பின்பற்றி சமையலறைக்குள் நுழைந்தால் சமையலும் ருசிக்கும். ஆரோக்கியம் கூடும். நிம்மதியும் பிறக்கும்.

- பா. பனிமலர், மதுரை -14.



கழற்றுங்க கவலைகளை!

உஷ்ணத்தால் ஏற்படும் வயிற்று வலிக்கு எலுமிச்சம் பழத்தின் சாறைப் பிழிந்து இளநீரில் கலந்து கொடுத்தால், வயிற்றுவலி உடனே நின்றுவிடும்.

- பா. குணா, வயலூர்.

விமானத்தில் செல்பவர்களுக்கு காப்பி, தேநீர், சாப்பாடு தருவதைப் போல, நீண்ட தூரப் பிரயாணிகளுக்கு காப்பி, தேநீர், சாப்பாடு செய்யும் பொறுப்பை மகளிர் சுய உதவிக் குழுவிடம் விடும்படி அரசுக்குக் கோரிக்கை வைத்து சில சலுகைகளையும் அவர்களுக்குக் கேட்டுத் தரலாமே.

- ஆர். தங்கராஜ், இருப்பூர்.

உப்புமா செய்யும்போது இலேசாகப் புளித்த தயிரை சேர்த்தால், உப்புமாவின் ருசி கூடும்.

- சுமித்ரா ராஜு, சுண்ணாம்பு கொளத்தூர்.

தலைமுடியை ஷாம்பு போட்டுத் தேய்த்த பின் அரைத் தம்ளர் பாலை தலையில் விட்டுத் தேய்த்து அலசி விட்டால், முடி மென்மையாக இருக்கும்.

- ஆர். ராஜலட்சுமி, விழுப்புரம்.

அரை லிட்டர் தேங்காயெண்ணெயில் நூறு கிராம் கற்றாழைக் கதுப்புகளைப் போட்டுக் காய்ச்சி, தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால், தலைமுடி நன்றாக வளரும். கண்கள் குளிர்ச்சி பெறும்.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 13.

கேரட் அல்வா கிளறும்போது அதில் பால்கோவா, அல்லது கன்டென்ஸ்டு மில்க் சேர்ப்பதற்குப் பதில் ஒரு கப் கரைத்த பால் பவுடரைச் சேர்த்தால், இரண்டு பங்காக அல்வா காணும். அதோடு ருசியும் அபாரமாக இருக்கும்.

- ஆர். அபர்ணா, சென்னை - 4.

...ஆஹா 50 தான்!

புத்தாண்டு 2008 மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்..

குறைந்த கட்டணத்தில் அதிக சலுகை	ரூ.	நாட்கள்
1. புவனேஸ்வர், பூரி, கொல்கத்தா, டார்ஜிலிங், சிக்கிம்	- 6500/-	12
2. வாரணாசி, அலகாபாத், அயோத்யா, போக்ரா, காட்மாண்ட் முக்தி நாத் (By Helicoptor) லும்பினி	- 7500/-	14
3. வாரணாசி, அலகாபாத், கயா, புவனேஸ்வர், பூரி	- 4500/-	10
4. பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்துவார், ரிஷிகேஷ், டெல்லி, அக்ஷர்தாம்	- 5900/-	13
5. சிம்லா, மணாலி, அம்ரிஸ்தர், சண்டிகர், ஆக்ரா, மதுரா, டெல்லி	- 6100/-	13
6. டெல்லி, அம்ரிஸ்தர், வைஷ்ணவி தேவி மற்றும் பல தேவி ஆலயங்கள்	- 6500/-	13

மேற்கண்ட டூர்கள் அனைத்தும் சைவ உணவு, தங்குமிடம், மற்றும் 2x2 புஷ்பேக் பஸ்ஸில்* நடத்தப்படும். கம்பெனி குரூப் டூர்களுக்கும், கிளப் குரூப் டூர்களுக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி சுற்றுலாவும் மிக குறைந்த கட்டணத்தில் மிக சிறந்த முறையில் ஏற்பாடு செய்து தருகிறோம். டூரிஸ்ட் டாக்சிகளும் ஏற்பாடு செய்து தரப்படும்.

HIMSAGAR TOURS & TRAVELS (P) LTD

(SPECIALISED SOUTH INDIAN GROUP TOUR OPERATORS, SINCE 1995)

I- 311, NARAINA VIHAR, NEW DELHI - 110028.

Ph : 011-65710726 / 25793217, Cell : 09312238426 Telefax : 91-11-25792540

e-mail : himsagar@vsnl.net, Website : www. himsagartravels.com

*தேதி மற்றும் முழு விவரங்களுக்கு எங்களை தொடர்புக் கொள்ளவும் :

Br. Off : 15, Sandeep Plaza, 1, Kuppaiah Street, Station Road, Chennai - 33.

Chennai : 044-24748426, 32938341, Cell : 9382849648

"கட்டுங்கள் கனவு இல்லத்தை வாழுங்கள் வசதியாக"



வீடு கட்டும் பொழுது வாஸ்து சாஸ்திரம் அவசியமா ?
கட்டிட ஒப்பந்தகாரரை தேர்வு செய்யும் முறை
வீடு கட்டும் பொழுது எங்கெல்லாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
சந்தைக்கு வந்துள்ள புதிய கட்டிடப் பொருட்கள்
வீடு கட்டும் பொழுது முக்கியமாக கவனிக்க வேண்டிய வழிமுறைகள்
வீட்டை கட்டியப்பின் ஏற்படும் சிறு குறைகள் மற்றும் அவற்றை சரி செய்யும் முறை

போன்ற பல தகவல்கள் (பட விளக்கங்களுடன்) அடங்கிய 257 பக்கங்கள் கொண்ட "கட்டுங்கள் கனவு இல்லத்தை" என்கின்ற புத்தகத்தை எழுதிய ஆசிரியர் **P. கோகுலபாலன்** 25 வருட காலம் கட்டிட துறையில் உள்ள அனுபத்தினைக் கொண்டு எழுதியுள்ளார் . புத்தகத்தின் விலை ரூபாய் 250/- மட்டுமே.
டிசம்பர் 2007, மங்கையர் மலர் மாத இதழின் குட்டி புக்கிலிருந்த டிப்ஸ் வழங்கியவரும் இவரே.

இவர் எழுதிய "கட்டுங்கள் கனவு இல்லத்தை" என்ற புத்தகத்தை பல பத்திரிக்கைகள் நன்கு விமர்சனம் செய்தனர்.

இந்த நூலில் கூறப்பட்ட விவரங்களை தெரிந்துக் கொண்டால் மிகவும் திட்டமிட்டு வீட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும் கட்டி முடிக்கலாம். வீண் செலவையும் தவிர்க்கலாம் – **தினமணி 9/11/2006**

வீடு கட்ட நினைப்பவர்கள் இந்த புத்தகத்தை வாங்கிப் படிப்பது நல்லது.– **தினத் தந்தி 13/12/2006**

வீடு கட்ட கனவு காண்பவர்க்கும் சிவில் இன்ஜினியரிங் படித்து வேலையை தொடங்குபவர்க்கும் இந்நூல் வாரி வழங்கும் ஆலோசனைகள். – **தினமலர் 13/5/2007**

சொந்தமாக வீடு கட்டுபவர்கள், பில்டர்கள் மற்றும் கட்டிடவியல் பயிலும் மாணவர்கள் ஆகிய அனைவரும் அவசியம் வாங்கி படித்து பயனுற வேண்டிய நூல் – **Builder's Line – NOV.-2006**

புத்தகம் நேரில் பெற :– சென்னை : நியூ புக் லேண்ட்ஸ் : Ph : 28158171 இலாஹி : Ph : 24765940 கோவை : விஜயா: Ph : 2394614 மதுரை : செல்வி : Ph : 4380169 திண்டுக்கல் : சக்தி : Ph : 2426069 சேலம் : சந்திரா : Ph : 2265635 திருச்சி : திருச்சி புக் ஹவுஸ் : Ph : 2766815 திருநெல்வேலி : அருள் நந்தி சிவம் : Ph : 2339692 ஸ்ரீவில்லிபுத்தூர் : ஈஸ்வரி : Ph : 265149 கரூர் : ஸ்ரீ வாணி : Ph : 264291 தர்மபுரி : சதீஷ் : Ph : 268112 பாண்டி : சித்ரா & Co. : Ph : 2335133 தஞ்சாவூர் : அன்னம் : Ph : 279288 திருப்பத்தூர் : (வேலூர் மாவட்டம்) : மாஸ் : Ph : 221924 .

தபால் அல்லது கூரியர் மூலம் பெற புத்தகத்தின் விலை 250/- தபால் மற்றும் கட்டுச்செலவு 30/- சேர்த்து 280/- M.O. (or) D.D. அனுப்பி பெற்றுக் கொள்ளவும். V.P.P. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

கடிதம் எழுத வேண்டிய முகவரி : **LAND MARK PUBLICATION,** OFF NO. 5, VANIGA VALAGAM.

மினி தொடர்-2

சென்ற இதழின் தொடர்ச்சி...

கதைச் சுருக்கம்...

பெரிய குடும்பத்தை நடத்த சிரமப்படும் அப்பாவுக்கு உதவும் வகையில் தனக்கு வேலை கிடைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சியில் இருக்கிறாள் மீனா. அப்போது நடிகையாகி விட்ட அவளது மூத்த அக்கா குணஸ்ரீ வீட்டுக்கு வர....



"ஏது... மூலாம்பழ வாசனை வர்றதே?'' என்று அப்பா கேட்டதும், ''பெரிய அக்கா கொண்டு வந்தாள்'' என்று வாய் தவறி உண்மையைச் சொல்லி விட்டாள்.

அப்பாவுக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் ஆசையோடு வாங்கி வந்திருந்தாள் அக்கா. எங்கே ஒளித்து வைத்தாலும், வாசனையே காட்டிக் கொடுத்து விடுமே!

அப்பாவுக்கு வந்ததே கோபம். ''யாரடி... அந்த ஓடுகாலியை உள்ளே விட்டது? சுடுகாடு போன பிணம் வீடு திரும்பாதுடி. நமக்குன்னு இருக்கும் கொஞ்ச

நஞ்ச மானம் மரியாதையையும் குலைக்கக் காத்துலே பறக்க விடலாம்னு வந்தாளாமா? மானங்கெட்ட கழுதை!''

காலில் விழாத குறையாக, மன்றாடி மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பிறகும் அம்மாவை இலேசில் மன்னிக்கவில்லை அவர். வெகுநாள் வரைக்கும் முகங்கொடுக்காமல் பேசியே அம்மாவைத் தண்டித்தார்.

நான்கைந்து மாதங்களுக்கு முன் ஒருநாள்.

காய்ச்சலோடு கடையிலிருந்து வந்தார் அப்பா. அவருடைய முதுகிலும், விலாப் பக்கத்திலும் பொடிப் பொடியாக சிவந்த கொப்பளங்கள்... எரிச்சலும் வலியும் தாங்காமல் அவர்பட்ட பாடு உண்டே! வைத்தியம், மருந்து, மாத்திரை என்று அதிகச் செலவால், அப்பா திணறித்தான் போய்விட்டார்.



அம்மாவின் கழுத்தில் தாலிக் கயிறும், கைகளில் கண்ணாடி வளையல்களுமே மிச்சம். காதுக் கம்மல்கள் அரை பவுன் கூடத் தேறாது. அதிலும் எண்ணெயே ஒரு கிராம் இருக்கும். எதைக் கொண்டு போய் விற்பது வீட்டின் மேல் ஏற்கெனவே கடன்... தினகரும், சுமதியும் இன்னும் படிக்கும் பருவத்தில் இருக்கிறார் கள். இந்த நேரத்தில் எனக்கொரு வேலை கிடைத்தால் சந்தோஷமாக இருக்காதா என்ன? அப்பாவின் முகம் மலரப் போகும் அந்தக் காட்சியைப் பார்க்க ஆவலாக இருந்தேன்.

சுமதி உள்ளே ஓடி வந்தாள்.

''அம்மா! மீனா அக்கா!''

''ஏண்டி... இப்படித் தலைதெறிக்க ஓடி வர்றே? நாந்தான் இதோ இங்கே முன்னாலேயே நிக்கறேனே. தெரியலை?''

''உன்னையில்லை... அக்கா! பெரிய அக்கா வர்றா... பெரிய காருலே... இதோ... வர்றா... பாரு!''

நிஜந்தான். வாசலையடைத்துக் கொண்டு நிற்கும் பெரிய காரிலிருந்து தேவதை போல் இறங்கி வந்தாள்.

பாவம் அப்பா!

ஆர்.குமுதினி

வெள்ளை வெளேரென்ற மிடுக்கான உடையில், பெரிய பழக்கூடையொன்றைச் சுமந்து வந்து கூடத்தில் வைக்கும் கார் டிரைவரிடம்,

''நான் வர்ற வரைக்கும் காரிலே வெயிட் பண்ணு'' என்று உத்தரவிடும் அக்காவின் குரலில்...எத்தனை மிடுக்கு..

அம்மா முகத்தில்... கொஞ்சம் சந்தோஷம்... நிறையத் திகைப்பும் பயமுமாக உணர்ச்சிகளின் கலவை.

உடம்பு தேவலையாகி அப்பா இப்போ தான் திரும்பவும் கடைக்குப் போக ஆரம்பித்திருக்கிறார்... ஒருவேளை அவர் சீக்கிரமே திரும்பி விட்டால்... ஐயோ! என்ன நடக்குமோ!

இதற்குள் அக்கம் பக்கத்துக் குழந்தைகள் அக்காவைப் பார்க்கும் ஆர்வத்தில் எட்டிப் பார்க்க,

''கதவைச் சாத்திட்டு வா... போடி!'' என்று அம்மா சுமதியை விரட்டுகிறாள்.

''ஏம்மா! அப்பாவுக்கு உடம்பு சரியில்லையாமே? நம்ம வாசுகி மாமி மகன் சம்பத்தைப் பொள்ளாச்சி 'அவுட்டோர் ஷூட்டிங்'ல தற்செயலாப் பார்த்தேன்... அவன், நீங்க படற கஷ்டத்தை எல்லாம் சொன்னான். என்னதான், 'வராதேன்'னு தடுத்தாலும், என் மனசு கேட்கலை. அப்பா காலடியிலே விழுந்து கதறணும். உன் மடியிலே படுத்து 'ஓ'ன்னு அழணும் போல இருக்கு. இதோ, ஓடோடி வந்து விட்டேன். அம்மா! நான் செஞ்சது தப்புதான். ஆனா, என்னை மன்னிக்கக் கூடாதா... நீங்க இரண்டு பேரும்?''

அக்கா உடைந்து போய் அழ ஆரம்பிக்க, அம்மாவும் விம்முகிறாள். பின் பேசுகிறாள்.

''நீ ஏண்டி திரும்பவும் வந்தே? அப்பா முன்னை விடக் கோபக்காரரா மாறிட்டார். பேச்சு கம்மி. சதா சிடுசிடுப்பு. சமயத்துலே யாரோடும் பேசாம மௌனமா இருக்கார். சரி அதை விடு! உன்னைப் பத்தி.. ஏதேதோ சொல்றாளே? கடை, கண்ணி எங்கே போனாலும் பாக்கறவா கேட்கற கேள்வி மொதல்லே அதுதான்... உம்! எல்லாம் எங்க தலையெழுத்து! எப்படியெல்லாம் உன்னை வளர்த்தோம். என்னவெல்லாம் கனவு கண்டோம். ஒரே நொடியிலே தரைமட்டமாக்கிட்டுப் போயிட்டயேடி எல்லாத்தையும்...

அம்மா தயங்குகிறாள்.

'ஏம்மா நிறுத்திட்டே?' இருந்திருந்து, அந்த வயசான தயாரிப்பாளரின் தாலி' கட்டாத மனைவியா... சின்ன வீடாகப் போகணும்னு உனக்கென்னடி தலையெழுத்து'ன்னு கேக்க வந்தே இல்லையா? 'நீ கெட்டதுமில்லாம வேறொரு குடும்பத்தைப் பிரிச்ச பாவத்தையும் கொட்டிக்கிட்டு வந்து நிக்கறேயடி'ன்னு நீ திட்டினா அது நியாயந்தான். ரவி, என்னை ஏமாத்திட்டுப் போனப்புறம் இவர்தான் எனக்கு ஆறுதலா இருந்தார். நிஜமாவே அன்பு காட்டினார். பின்னாலே எப்படியோ... நம்பித்தான் ஏத்துக்கிட்டேன். ஒரு நடிகையின் வாழ்க்கையிலே எதுவுமே நிரந்தரமில்லே. நிச்சயமில்லை. உடம்புக்கும் இளமைக்கும்.நான் மவுசு கார், பங்களா, பணம், பேர், புகழ் எல்லாம் இருக்கு எங்கிட்டே! ஆனா அதுக்கு விலையா நிம்மதியையும், சந்தோஷத்தையும் கொடுத்துட்டேன். பயம்... எப்பவும் பயம்... பயம் இருக்கற எடத்துலே ஏது



காய்கறி மார்க்கெட்டுக்குச் செல்லும் போது நெட்லான் பைகள் 5, 6 எடுத்துக் கொண்டு தனித்தனியாக வாங்கிக் கொண்டால் வந்தவுடன் சிங்கில் வைத்து அப்படியே கழுவி, நீர் வடிந்தவுடன் ஃப்ரிட்ஜில் வைத்து விடலாம். கலந்த காய்கறிகளைப் பிரிக்கும் வேலை மிச்சம்.

- ஜெகா, கும்பகோணம்.

எளிதில் எடையைக் குறைக்கலாம்!


இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களின் ரிய சவால் எது? தேர்வில் வெற்றி அடைவது, லை கிடைப்பது என்பது போன்ற வரிசையில் பத்தில் இன்னொன்றும் சேர்ந்துள்ளது. அது - ல் எடையைக் குறைப்பது. சொல்லப் ானால் வயது வித்தியாசம் பாராமல் பலரையும் ட்டிப் படைக்கிறது இந்த சவால்.

இது குறித்து சித்த மருத்துவர் டாக்டர் எம். லப்ப பிள்ளையிடம் கேட்டோம்.

"முதலில் உணவுமுறை குறித்து சித்த வைத் யம் கூறுவதை விளக்குகிறேன். செரிக்கக் கூடிய, த்துநிரம்பிய உணவைத்தான் உட்கொள்ள வண்டும். காலையில் அதிகமாகவும், மதியத்தில் தைவிடக் குறைவாகவும், இரவில் மிகக் குறை ாகவும் உண்ண வேண்டும். இந்த வேளைகளில் ம் உணவில் சேரவேண்டியவற்றை "இஞ்சி, சுக்கு, டுக்காய்" என்போம். அதாவது காலை உணவில் ஞ்சி சேர்த்துக் கொண்டால் அதற்கு முன்னிர ல் உடலில் உண்டாகியிருக்கக்கூடிய பித்தம் ரியாகிவிடும். மதிய ணவில் சுக்கு சேரும் பாது உடலின் வப்பமும் றைகிறது, ரணமும் திகமாகிறது. ரவு உணவில் டுக்காய் சேரும் பாது தூக்கமும் நன் ாக வரும், மறுநாள் ாலையில் மலமும் தடை ன்றி வெளியேறும்.

உணவுப் பழக்கம் மட்டுமல்ல, மரபணுக்கள், டற்பயிற்சியின்மை இவையும் உடல் பருமனுக் க் காரணமாகலாம். தைராய்டு சுரப்பிகள் றைபாடு காரணமாகவும், நம் உடலில் லோரிகள் மெதுவாக எரிக்கப்பட்டு கொழுப்பு சருவதாலும் (Metabolic Changes) கூட உடலில் டை போடலாம்.

முதலில் பருமன் தொடர்பான சில தவறான ம்பிக்கைகளைப் பார்ப்போம். உயரம் மற்றும் யதுக்குத் தகுந்த எடைதான் இருக்க வேண்டும். றடி உயரம் உள்ள ஒருவர் "எனக்கு எழுபது லோ எடை அறுபது கிலோவை விட யாருமே திகமாக இருக்கக் கூடாதே!" என்று கூறக்



கூடாது. அதே போல் உடல் இளைக்க வேண்டுமென்று சிலர் சாப்பிடுவதை மிகவும் குறைத்துக் கொள்வார்கள். அது தவறு. மாறாக கொழுப்புச்சத்தும் மாவுச் சத்தும் அதிகம் சேராத சமச்சீர் உணவு சாப்பிடுவதுதான் நல்லது. வறுசிலர் தங்கள் உணவிலிருந்த எண்ணெயை

தவறு. நம் திசுக்களின் பாதுகாப்புக்கு, குளிர் மற்றும் வெப்பத்தை எதிர்கொள்வதற்கும் நம் உடலில் எண்ணெய் சத்து தேவை. ஓட்ஸ் உட்கொண்டாலே போதும் என்று சிலர் இப்போது நினைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஓட்ஸ் உணவைக் கொஞ்சம் உட்கொண்டாலே வயிறு நிறைந்துவிட்ட உணர்வு உண்டாகும் என்பது உண்மை. ஆனால் இதை மட்டுமே சாப்பிட்டால் உடலுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைக்காது. அந்தக் காலத்திலேயே அவல் பொரி, பயறு ஆகியவற்றை அவ்வப்போது கொஞ்சமாகக் கொரிப்பது வழக்கம்தான். இவற்றில் சத்துக்களும் உண்டு. வயிறு நிறைந்த உணர்வும் உண்டாகும்.

தவிர, வேகமாக எடை குறைவது ஆபத்தானது. இது இதயம், மூளை நரம்புகள், ஹார்மோன்களின் செயல்பாடுகளை பாதிக்கும். அதுவும் டீன் ஏஜில் இப்படி வேகமாக எடையைக் குறைத்தால் வளர்ச்சியும் குறைந்து விடும்.

உடல் பருமனானவர்களின் எடை மேலும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வதுதான் மருத்துவரின் முதல் கடமை. பிறகு உரிய மருத்துவ ஆலோசனைகள் மூலம் எடையை குறைக்க வைக்கலாம்.

அதிக எடையோடு ஒருவர் வந்தால் ரத்த சோதனையின் மூலம் அவரது உடலின் செயல்பாட்டை (Metabolism) கணிப்போம். சிலருக்கு ரத்த சோகை காரணமாகவும் (இதை 'பாண்டு' என்போம்) உடல் ஊதிப்போகும். இரும்பு டானிக் அளித்தால் உடல் இளைத்து விடும் (ஆனால் பலரும் "ஏற்கனவே உடல் பருமன். இதிலே டானிக் வேறு குடித்தால் உடம்பு இன்னும் ஊதி விடாதா?" என்று தவறாக கேட்பார்கள்). அவரது பழக்கவழக்கங்கள், ஹார்மோன் செயல்பாடுகள் ஆகியவற்றையும் கணிப்போம்.

ஆசனப்பயிற்சி என்பது ஒருவரது வாழ்க்கை முறையிலேயே இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அதிக எடை கொண்டவர்கள் இதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

கருத்தரிப்பு தாமதமாவதுகூட உடல் பருமனால் ஏற்படலாம். உடலில் எடை அதிகமாகும் போது ஹார்மோன் அளவு மாறுபடலாம். சினைப்பையின் வேலைகளும் மாறுபடலாம். எனவேதான் கருத்தரிப்பு தள்ளிப்போகிறது. எடையை சரியான விதத்தில் குறைக்கும் மருந்துகள் மற்றும் ஆலோசனைகளால் கருத்தரிப்பு நிகழ வாய்ப்பு உண்டு என்றால் டாக்டர் கோலப்ப பிள்ளை.

டாக்டர் M. கோலப்ப பிள்ளை, தாம்பரம், சென்னை.



தலையில் உள்ள சொட்டை மற்றும் வழுக்கை மறைய, சின்ன வெங்காயத்தைத் தோல் நீக்கி, செம்பருத்திப் பூவுடன் கலந்து அரைத்து அந்தச் சாறை மேற்குறிப்பிட்ட இடங்களில் தடவினால், தலைமுடி வளர வாய்ப்பு உண்டு.

- இரா. பார்த்திபன், வையூர்.

சந்தோஷம்? நிம்மதிதான் உண்டா?''

அக்கா தன் அவல வாழ்க்கையை எடுத்துச் சொல்லி அழ, ஆதங்கத்தோடு கேட்க மட்டுமே முடிகிறது அம்மாவால்...

அடுத்து, தன் கைப்பையைத் திறக்கிறாள் அக்கா. உள்ளிருந்து... அப்பா! அக்காவிடம் இவ்வளவு பணமா...?

''இந்தத் தடவையாவது வாங்கிக்கோ அம்மா. லட்சம் லட்சமா எங்கிட்ட இருக்கு... உங்கக் கஷ்டத்துலே உதவ நினைக்கிறேன். ஏங்கறேன். அது தப்பா? சொல்லும்மா. அப்பா என்னை மன்னிக்கப் பழையபடி, 'குணா! இங்கே வா'ன்னு கூப்பிட மாட்டாரான்னு மனசுக்குள்ளே அழறேம்மா. இந்தாம்மா. நீதான் எப்படியாச்சும் அவர் மனசை மாத்தணும்.''

அக்கா, நீட்டும் பணக்கட்டுகளை வாங்க அம்மா தயங்குகிறாள். ''வாங்கிக் கொள்'' என்கிறது தேவை... ''வாங்காதே!'' என்கிறது மனம். பாவம் அம்மா!

''வேண்டாம் அம்மா! வாங்கிக்காதே. அப்பா ஏத்துக்க மாட்டார்'' என்று சொல்லித் தடுக்க நினைக்கிறேன். நல்லவேளை! அம்மாவே உறுதியாக மறுத்து விடுகிறாள்.

''அப்பா வருமுன்னே நீ நல்லவிதமா எடத்தைக் காலி பண்ணு...''

ஏமாற்றத்தோடு அக்கா கிளம்ப, ''இதோ இதையும் நீயே திரும்ப எடுத்துண்டு போயிடு'' என்று அம்மா பழக் கூடையைக் காட்டினாள், பொங்கிவரும் அழுகையோடு.

அப்பா, இரவு வீடு திரும்பும்போது மணி ஒன்பதுக்கும் மேலிருக்கும். சுமதியும் கிஷோரும் சாப்பிட்டுத் தூங்கி விட்டார்கள். கை கால் அலம்பி இலை முன் அமர்ந்த அப்பா... கேட்டார்.

''அவள் வந்து விட்டுப் போனாளாமே?''

யாரோ முந்திக் கொண்டு விட்டார்கள். வழியில் கண்டு, சிரத்தையாய், விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

திடுக்கிட்ட அம்மா.. அதிர்ச்சியில், பேசவே திணறினாள். ''உங்ககிட்டே.... அப்புறமா சொல்லலாம்னு நெனைச்சேன். நம்ம சம்பத்தைத் தற்செயலாப் பார்த்தாளாம். உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு தெரிஞ்சப்புறம்.. மனசு கேக்காமே.. ஓடி வந்திருக்கா. 'அப்பா என்னை மன்னிக்கவே மாட்டாரா என்னிக்கும்'னு சொல்லி அழுதா.. அப்புறமா, கத்தை கத்தையாப் பணத்தைக் குடுக்க வந்தா... தொட மாட்டேன்னுட்டேன். உம்.. உங்களுக்கு ஒரு சந்தோஷ சமாசாரம்... நம் மீனாவுக்கு இன்னிக்கு ஒரு வேலை கெடைச்சிருக்கு. சம்பளம் அறுநூறு ரூபாயாம்!''

''ப்ச்! பனி பெய்தா குளம் ரொம்பப் போகுது? அது சரி! முலாம்பழம் வந்ததா...? கொண்டா!''

அம்மா விக்கித்துப் போய் நிற்க, நான் அதிர்ச்சியில் உறைகிறேன்.

அப்பாவா...! அப்பாதானா... சொன்னவர்... புதை மணலில் புதைந்த தவிப்பாய்... ஏழ்மையைக் கஷ்டங்களை, எதிர்கொள்ள முடியாமல்... மாற்றம் காலத்தின் கட்டாயத்தால் நேர்ந்ததோ!

எதுவோ எப்படியோ... என்றாலும், எனக்கு வலித்தது. ஆனால் அழுகை வரவில்லை.

பாவம்... அப்பா..! ●



பொங்கலின் புது சுவை!

* பொங்கலில் அன்னாசிப் பழத் துண்டுகளை பொடியாக நறுக்கி, நெய்யில் வதக்கிப் போட்டால் வித்தியாசமான சுவை தரும்.

- ஜி.பி. மீனாக்ஷி, மதுரை.

* சர்க்கரைப் பொங்கல் செய்யும் போது, பாதி வெல்லம் பாதி சர்க்கரை போட்டுச் செய்யுங்கள். சுவையில் வித்தியாசத்தை நீங்களே உணர்வீர்கள்!

* சர்க்கரைப் பொங் கலுக்கு சுவை கூட்ட கெட்டியான தேங்காய்ப் பால் ஒரு கரண்டி (அ) சுண்ட வைத்த பால் ஒரு கரண்டியை இறக்கும்போது சேர்த்துக் கிளறலாம். ஏலக்காய் சேர்ப்பதற்குப் பதில் ஏதாவது எஸென்ஸ் சில துளிகள் சேர்த்தால் மணமாக இருக்கும்.

- வி. விஜயராணி, திருப்பூர்.

★ கரும்புச் சாறு கிடைத்தால் அதை விட்டுப் பொங்கல் செய்தால் மிகவும் ருசியாக இருக்கும்.

- ஆர். பிருந்தா இரமணி, மதுரை- 20.

★ வெண்கலப் பானையில் மஞ்சள் இலை கட்டும்போது இலையைப் பின்னல் போல் பின்னி, பானையின் வாய்ப்புறம் சுற்றிக் கட்டி விட்டால் அடுப்புத் தீயில் இலை படாமல் இருக்கும்.

- துர்கா பாலகிருஷ்ணன், பெங்களூர் - 13.





மரம் தரும் வருவாய்!

மிரங்களை வெட்டுவது மனிதகுலம் அழிய வழிவகுக்கும் என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனங்களும், வல்லுநர்களும் நாள்தோறும் வலியுறுத்தினாலும் நாம் கேட்பதேயில்லை.

வளர்ந்த மரம் ஒன்று ஒரு ஆண்டில் கால்நடைத் தீவனம், எரிபொருள், கட்டுமானப் பணிகளுக்கான மரவகை, பிசின், கோந்து, மருத்துவப் பொருட்கள், இவை தவிர 16 லட்சம் ரூபாய் ஈட்டுத் தருகிறது என்றால் நம்ப முடிகிறதா?

1. ஒளிச்சேர்க்கை மூலம் வெளிப்படுத்தும் பிராண வாயு	- 2.5 லட்சங்கள்
2. சுற்றியுள்ள காற்றின் மாசுத் தன்மையை அகற்றுவதன் மூலம்	- 5.0 லட்சங்கள்
3. நிலத்தை பலப்படுத்துவதன் மூலம்	- 2.5 லட்சங்கள்
4. சுற்றுச்சூழலின் தட்பவெப்ப நிலையைச் செப்பனிடுவதன் மூலம்	- 3.0 லட்சங்கள்
5. வனவிலங்குகளைப் பாதுகாப்பதன் மூலம்	- 2.5 லட்சங்கள்
6. சுற்றுச்சூழலில் வியாபித்திருக்கும் நைட்ரஜன் சத்தை பூமிக்கு ஈர்த்து புரதச்சத்தை உருவாக்குவதன் மூலம்	- 25,000/-
ஆக, ஒரு ஆண்டில் தரும் பயன் :	15.75 லட்சங்கள்

இந்தக் குறிப்பை, கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியர் டி.எம். தாஸ் என்பவர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வெளியிட்டிருந்ததைப் படித்தபோது நான் அதிர்ந்து போய்விட்டேன்.

- காஞ்சி. டி.ஜி. உஷா,

சென்னை - 24.

for quick, delicious and variety of recipes



ANJALI®
हर घर में

more than 350 products in - Kitchenware - Appliances - Nonstick - Tableware

Contact : CHENNAI : Usha Distributor - 94440 26303, TRICHY : S.Ibrahim & Co. - 0431-2709152, TIRUNELVELI TOWN : Jai Marketing - 94434 53384, COIMBATORE : Jayalakdhmi Agency - 94437 01432, PONDICHERRY : Star Metal Stores - 93454 50990, 93445 50990, MADURAI :ASV Agencies - 0452-2675150, 9843062309, SALEM : Akshy Dist 99943 79993

உடல் எடை குறைக்க

சுகர் - மூலிகை சிகிச்சை

உடல் எடை குறைக்க: அதிகபட்சமாக வீட்டில் இருந்தால் ஒரு மாதத்தில் 15 கிலோ வரை / இங்கு தங்கினால் 12-நாளில் 10 கிலோ வரை குறைகிறது. உடலில் உள்ள அழுக்குகள், துர்நீர் வெளியேறுவதால் உடல் எடை குறைகிறது. அப்போது அல்சர்,பிரசர், முழங்கால் வலி, தலைவலி, மாதவிடாய் பிரச்சனைகள் போன்ற மற்ற நோய்களும் தொந்தரவுகளும் இயற்கை முறையில் பாதுகாப்பாக பெருமளவு குணமாகின்றன. பலருக்கு ஒரே வாரத்தில் எடை குறைவது நன்கு தெரியும் இரண்டாம் மாதத்திலிருந்து மேலும் மேலும் எடை குறைவதோடு உடல் அளவும் (SIZE) வேகமாக குறைந்து உடல் நன்கு இறுகும், பலமும் அழகும் அதிகரிக்கும்.

உடலிலுள்ள கொழுப்பு , ஊளைச் சதை போன்றவை நீங்குவதால் பெண்களுக்கு கருத்தரிக்கும் வாய்ப்பு மிகவும் பிரகாசமடையும். ஆண்களுக்கு நேரம், பலம் திறன், உறுதி ஆகியவை நன்கு மேம்பட்டு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தாம்பத்திய உறவு சிறப்படையும்.

உடலின் இயற்கையான இயக்கத்தின் மூலம் அழுக்குகள் வெளியேற்றப்படுவதால் எவ்வித பின்/பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை. ஒரு மாத மருந்து ரூ.1100/- முதல் ஐந்து விலைகளில் கிடைக்கும். போனில் முகவரி தெரிவித்து V.P.P.மூலமாகவும், நேரிலும் மருந்துகளைப் பெறலாம்.

சுகர்: உடல்நிலையைப் பொறுத்து நிறையப் பேருக்கு ஒரு மாதத்திற்குள் நார்மலாகிவிடும் வாய்ப்புள்ளது. பின்பு எமது மூலிகை மருந்துடன் எளிய உணவுமுறையில் வாழ்நாள் முழுவதும் பக்க / பின் விளைவுகளின்றி சுகரை நன்கு கட்டுப்படுத்தலாம். பூரண ஆரோக்கியத்தைத் திரும்பப்பெறலாம்.

எமது மூலிகை மருத்துவத்தில் எந்த தொந்தரவுக்காக சிகிச்சை பெற்றாலும் மொத்த உடல் ஆரோக்கியமே மேம்படும். பசி, தூக்கம் ஒழுங்காகும். அல்சர், கேஸ்ட்ரபுள் போன்றவை நீங்கும். முடி உதிர்வது , முகப்பருக்கள் குணமாகும். இரத்தம் சுத்தமாகும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். மேலும் தலைவலி, உடல் வலிகள், வயிற்றுக் கோளாறுகள் குழந்தையின்மை உட்பட, உணவு சாப்பிட்டு நடமாடும் நிலையில் உள்ளவர்களின் எல்லா நோய்களுக்கும்

Dr.M.முத்துக்குமார் B.Sc., DNYS, இயற்கை மருத்துவ இல்லம் (பதிவு), ஸ்ரீ குருகுலம் பள்ளி எதிரில், மூலவாய்க்கால், கரட்டடிபாளையம் (Po), கோபிசெட்டிபாளையம்-638453, ஈரோடு (Dt)



பெண் என்னும் பிராண்ட்!

கமலா தோதாத்ரி

பெண்ணே!
எல்லா இடங்களிலும் நீ!
ஆடை, ஆபரணம், அலங்காரப்
பொருட்கள்
ஆக அனைத்தும் நீயின்றி
ஜொலிக்குமோ - மனைத்தான்
ஜெலிக்குமோ!

அட, இதுவென்ன
ஆடவர் ஆடையும் கூடவா!
தளிர் மென்மைப்பெண்ணும்
உடன் வர
பெண் அல்ல அவள் 'ப்ராண்ட்' எனக்
கட்டியம் கூறும் - கன்ஸ்யூமர்
அயிட்டம்!

ஆப்பிளும் ஆரஞ்சும் என்,
பேரீப்பழமும்

சூப்பர் மார்ட் பழச்சந்தையிலே
ஸ்டிக்கர் வைத்து
சிலிர்க்கிறது, விலையில்!
மணமகள் தேவைக் கட்டத்தில்
உன் கதையெப்படி?

அழகும் நிறமும் ஹைடெக் டிகிரியும்
குடும்பப் பாங்கும் குலப் பின்னணியும்
இன்னுமோர் ஸ்டிக்கர் -

டாலர் வாழ்க்கையே
கனாவாக வாழ்ந்திருக்க
நீயும் ஓர் 'ப்ராடெக்டோ'?

நல் உறவும் நுண் அறிவும் கொண்டு
சுயசாதனைச் சிற்பியாக
வலம் வர
எத்தனை பேர் தயார்?
செய்தித்தாள்கள்
காத்திருக்கின்றன!

பொட்டில் அடித்தாற் போல்...

இனி உங்களைப் பற்றியும் உங்கள் பிரச்னைகளுக்கு சரியான தீர்வையும் துல்லியமாக அறிந்து கொள்ள இதோ ஓர் உலகத்தரம் வாய்ந்த எளிய வழி...

நமது சரியான **பிறந்த தேதி** மற்றும் **பெயரை** மட்டும் கொடுத்தால் போதும், மிகத் துல்லியமாக **நாம் ஏதும் கூறாமலேயே பொட்டில் அடித்தாற் போல்** நம்மைப் பற்றியும் நாம் சந்தித்து வரும் பிரச்சனைகள் பற்றியும் **AAN*** விஞ்ஞான முறைப்படி நேரில் பார்த்து போல் கூறி, நிரந்தரத் தீர்வு காண எளிய மற்றும் சிறந்த பரிகார முறைகளைப் பற்றியும், ஆலோசனை வழங்கி வருகிறார் மாமேதை **Master of AAN*** திரு. **'பக்ஷி' தி. வேணுகோபாலன்** அவர்கள். இவர் இந்தியாவிலேயே முதலாவதாக **AAN*** முறைப்படி பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே சக்திபெற்ற, செறிவூட்டப்பட்ட (Energised & Enriched) உயர்தர (imported) இரத்தினக் கற்களை வழங்கி அவர்களது வாழ்வில் அதிசயிக்கத்தக்க நிகழ்வுகளை நிகழ்த்தியும் வருகிறார். 15 வருடங்களுக்கும் மேலாக அனுபவம் மிக்க இவர் புதுதில்லியில் உள்ள Institute of Numerology (R&D)யின் சீனியர் மெம்பராகவும் உள்ளார்.

இந்த அற்புதமான கலையைப் பரிசோதிக்க விரும்பும் ஜோதிடர்கள் மற்றும் எண் கணித நிபுணர்கள் மறைமுகமாக அல்லாமல் நேரிடையாகவே முன்பதிவு செய்து வரலாம் என்று சவால் விடுகிறார் திரு. **'பக்ஷி' தி. வேணுகோபாலன்.** மேலும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தையும் அமைப்பையும் உருவாக்கி எந்தத் தொழில், என்ன வியாபாரம் செய்தால், குறுகிய காலத்தில் பெரு வெற்றி பெறலாம் என்பதையும், அரசியலில் வெற்றி, **இராகு - கேது தோஷங்களால் ஏற்படும் திருமணத் தடைகளை ஏற்ற பரிகாரங்கள் மூலம் துரித நிவர்த்தி செய்வது,** குழந்தை பிறப்பு, வெளிநாட்டில் வேலை வாய்ப்பு, உங்களைச் சார்ந்த ஆண் - பெண்ணின் ஒழுக்கம் போன்ற பல்வேறு சந்தேகங்களுக்கும், அத்துடன் ஒவ்வொரு இரத்தின மணியும் எவ்விதமான Energies (either Projective + or Receptive - Measured in Electron Volts- 'eV') வெளியிடுகிறது (அ) உள்ளிழுக்கிறது என்பதையும், மேலும் இவற்றை நாம் எப்படி ஒருங்கிணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் (in order to regain the equilibrium position in our body Electro - Magnetic field - AURA) இவரது AAN* முறையில் மட்டுமே மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

(எ-கா) ஒரு செறிவூட்டப்பட்ட சுத்தமான வைரம் 5.5 'eV' Projective Wave Energy வெளியிடுகிறது.
Courtesy: Gemmological Association of Great Britain.
இவரது தொடர்பு முகவரி:(பாண்டிச்சேரி) **'AAN* - ADVANCED AURIC NUMEROLOGY'**

'பக்ஷி' தி. வேணுகோபாலன் Master of AAN* & Aura Viewer
(Senior Member, Institute of Numerology (R&D) Nangal Raya, New Delhi - 110 064)
ஆலோசனைக்காக : 6. 'பக்ஷி பவனம்' வ.உ.சி வீதி, காமராஜ் நகர், (வேல். சொக்கநாதன் திருமண மண்டபம் மற்றும் மதர் தெரசா பள்ளி அருகில்) பாண்டிச்சேரி- 605 011. Phone: 0413 - 2211667 Cell: 94426 - 86227, 98423 - 68855
Consulting Hours : 9.00 a.m to 1.00 p.m & 3.00 p.m. to 8.00 p.m

Do you know what is NAME?

N = Natal's
A = Abstract
M = Maintained by
E = Eternal

Space Sponsored by Institute of Numerology (R&D) New Delhi
Visit our website at : www.pakszhi.com E-mail : pakszhi@gmail.com

சம்பாவின் பட்டு போல் மிளிரும் காட்டன் புடைவைகளுடன் இந்த புது வருடம் மற்றும் பொங்கலை கொண்டாடுங்கள்

வானவில்லை ஒத்த கோட்டா புடவைகள்,
பிரமிக்கவைக்கும் கொரநாடு சேலைகள்,
கண்கவர் வேலைப்பாடுடன் எம்ப்ராய்டரி சேலைகள்,
மற்றும் சுடிதார் வகைகள்,
இன்னும் பல ரகங்களின் அணிவகுப்பை
காண வாருங்கள் சம்பாவிற்கு!

ஒரு முறை விஜயம் செய்து பாருங்களேன்!!!

Champa

No.5, 3rd Street, Abirampuram,
Chennai - 600 018. Tel : 24996907
VISA, Master & Bobcards accepted

Timings:
11 am - 1pm
3pm - 8 pm
SUNDAY HOLIDAY

சில பேரைப் பார்த்தால் கேள்வி கேட்கத் தோன்றாத ஒரு நம்பிக்கை பிறந்துவிடும். அதனால்தானோ என்னவோ மணிகண்டன் டிரைவர் வேலை கேட்டு வந்தபோது, அவனிடம் எந்த ரெஃபரன்ஸும் இல்லாமல் இருந்தும், அவன் வண்டி ஓட்டும் திறமையை மட்டுமே பார்த்து பணியில் அமர்த்தினேன். அவனும் சரி, எத்தனை மணி நேர வேலை, என்ன சம்பளம், லீவ், ஓவர்டைம், போனஸ் எதுவுமே எவ்வளவு என்று கேட்காமல் வேலைக்குச் சேர்ந்து விட்டான்.

பார்க்க சுத்தமாக இருந்தான். பணிவுடன் பேசினான். ஒழுங்காக வேலைக்கு வந்தான். பத்திரமாக வண்டி ஓட்டினான். பத்து நாள் பழகியதில் சிகரெட், புகையிலை, குடி, சீட்டு என்று எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை என்பது புரிந்தது. பரமதிருப்தி என் திருமதிக்கு. பழகப் பழக மணியின் பல நற்குணங்கள் எனக்குப் புரிய, மிகப் பெருமையாக இருந்தது. டிரைவர் என்று சொல்வதைவிட எங்கள் வீட்டுப் பையன் என அறிமுகப்படுத்தத் தோன்றியது.

எங்கள் பிள்ளையைவிட இரண்டு மூன்று வயது பெரியவன். ஏதோ படிப்பு இல்லாததால் இப்படி வேலைக்கு வந்திருக்கிறான். வசதி இருந்தால் படித்திருப்பானோ? புத்திசாலிதான், ஆனால் படிப்பில் ஆர்வமில்லை. கற்பதில் சலிப்பு என்றாலும் காது திறந்திருந்தது. சூட்டிகை. காரைப் பற்றி சகலத்தையும் அறிந்து கொள்வதில் ஆர்வமிருந்தது.

மணி வேலைக்குச் சேர்ந்த ஒரு மாதத்



இதமான சுமைகள்

தில் அவனுடைய இருபத்து மூன்று வருட சரித்தை முழுவதுமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டாள் என் மனைவி. அவள் ஒரு எழுத்தாளி. கதை எங்கே, தகவல் எங்கே என்று அலையும் மனப்பான்மை. அவள் அறிந்த தகவல்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ச்சிகள் கலந்து எனக்கு வந்து சேரும். ஒன்று விடாமல் நேரில் பார்த்தது போலக் கூறுவாள்.

''பாவம் மணி, ஒம்பது வயசிலேர்ந்து தாராவியிலே ஒண்டியா இருக்கானாம். பத்து பேர் ஒரு ரூம்ல. படுக்க மட்டும் இடமாம்...''

இப்படி ஆரம்பித்து, மணி என்ன ஜாதி, அவன் சொந்த ஊர் திருநெல்வேலி, கல்லிடைக்குறிச்சி பக்கத்தில் கிராமம். (கல்லிடைக்குறிச்சிலதான் நம்ம மீனு நாத்தனார் இருக்கா). மணிக்கு இரண்டு தம்பி, இரண்டு தங்கைகள். அப்பா டீ எஸ்டேட்ல வேலை பார்க்கறார். அம்மா வீட்டிலே பீடி சுத்தி சம்பாதிக்கிறாளாம். ஒன்பது வயசிலே உறவுக்கார மாமன் ஒருத்தனோட இங்கே வந்தானாம். முதல்ல வேலைக்குச் சேர்ந்தது முறுக்கு தயாரிக்கிற இடம். நாள் முழுவதும் முறுக்கு அடுக்குவது, பாத்திரம் தேய்ப்பது, பிறகு ஒரு பெட்டிக்கடையில எடுபிடி, அப்புறம் சைக்கிள் கடை, லாட்டரி விற்பது என்று ஒரு வேலை பாக்கி இல்லை. ஆறு மாசம் அல்வா கூட கிண்டி இருக்கானாம். என்ன கஷ்டம் பாருங்க'' என்று கதையை முடிப்பாள்.





❖ பானு குமார் ❖

''அம்மா அப்பாவை விட்டுட்டு வந்து கண்காணாத ஊரில் கஷ்டப்பட்டாதான் புரியும்...'' இது எங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு மறைமுகச் சூடு.

''ஏன் தம்பி நீ படிக்கலை?''னு கேட்டேன்.

''அப்பா என்னவோ நல்ல ஸ்கூல்லதான் சேர்த்தார். எனக்குத்தான் படிப்பு ஏறலே. ரொம்ப சேட்டை

பண்ணுவேன். நாலாம் கிளாஸ் வரை தாக்குப்பிடிச்சேன் ஸார். அப்புறம் நின்னுட்டேன்'' என்று உண்மையாகப் பதில் அளித்தான்.

அப்புறமா.. மணி வெட்டியா ஊர் சுற்றுவானாம், குளத்தில் மணிக்கணக்காகக் குளிப்பது, எருமை மேல ஊர்வலம் போவது, மரம் ஏறுவது, கோலி விளையாடுவது என வெட்டிப் பொழுது போக்குவதைத் தடுக்க அவனை யாரோ தூரத்து மாமாவுடன் மும்பை அனுப்பி விட்டாராம் அவனது அப்பா.

''பாவம், மணிக்கு அப்ப பத்து வயசுகூட ஆகல்லே.'' இப்படித் தினமும் மணியைப் பற்றிச் செய்தி வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள் என் மனைவி.

மணியின் அனுபவங்கள் பலவிதம். அவன் வேலை செய்த பல இடங்கள், சந்தித்த மனிதர்கள், அவர்களின் குணாதிசயங்கள், இப்படி சுவாரசியமான கதை.

கடந்த 13 வருடங்களில் அவன் ஒரு தடவைகூட ஊருக்குப் போகவில்லையாம். இரண்டு வருடங்களுக்கு முன், ஐயப்ப சாமிகளோடு கன்னிச்சாமியாக மலைக்குச் சென்று திரும்புகையில் திருச்செந்தூர் வரை சென்றானாம். அப்படியே ஊருக்குச் சென்றானாம். ஆனால் வீடு பூட்டியிருந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்ததில் அவன் பெற்றோர் குடும்பத்துடன் சேலம் சென்று விட்டதாகத் தெரிந்ததாம். தனக்குத் தகவல் தெரிவிக்க வில்லை என்ற கோபம். இப்படி உறவே விட்டுப் போயிடுச்சாம்.

''அதெப்படி உறவு விட்டுப் போகும்? என்ன இருந்தாலும் அவங்க உன்னைப் பெத்தவங்க. ஏதோ நிர்ப்பந்தம். வீடு மாறிய தகவல் சொல்ல முடியாமப் போயிருக்கும்...'' என்று என் மனைவி வாதாடினாள்.

''நல்லாயிருக்கு நீ பேசறது. ஏறத்தாழ பன்னிரண்டு வருஷம், மணியைப் பத்தி அவங்க விசாரிக்கலே. அவன் எங்க இருக்கான், எப்படி இருக்கான்னு தெரிஞ்சுக்கலே...''

''அதனால என்ன? அவங்க அவனைப் பத்தி நினைக்கலேன்னு சொல்லிட முடியுமா..?''

''நெனைச்சிருந்தா கூடப் பொறந்த தங்கை... அவ கல்யாணத் தகவல் கூடவா சொல்லாம இருந்திருப்பாங்க...''

நான் என்ன சொல்லியும் எடுபட வில்லை.

அடுத்த வருஷமே கோடை விடுமுறைக்கு நாங்கள் சென்னை சென்ற பொழுது என் மனைவி மணிகண்டனையும் கூட அழைத்து வந்தாள். சென்னையில் தொடங்கி திருநெல்வேலி வரை என்



நமது வீட்டில் திருமணத்திற்குக் காத்திருக்கும் பெண் அல்லது பிள்ளை இருந்தால் வரன் தேடும்போது ஃபோட்டோ கேட்பார்கள். ஃபோட்டோ அனுப்பும் போது புகைப்படத்தின் பின்னால் பெண்/பிள்ளை பெயர் மற்றும் நமது வீட்டு விலாசம், ஃபோன் நெம்பர் குறித்து அனுப்பினால், இருவீட்டாருக்கும் தடுமாற்றம் இல்லாமல், மேல்நடவடிக்கை எடுக்க சௌகர்யமாக இருக்கும். பெண்/பிள்ளை பிடிக்கவில்லையென்றாலும் ஃபோட்டோ நமக்குத் திரும்பி வர ஏதுவாகும்.

- எஸ். ராதிகா கண்ணன், கொரட்டூர்.

இஞ்சியையும், வெள்ளைப் பூண்டு பற்களையும் அரைத்து பஜ்ஜி மாவில் கலக்கி விடுங்கள். எண்ணெயால் ஏற்படும் போராட்டம் இல்லை; வாயுத் தொந்திரவு மாயமாய் மறைந்து விடும். சுவையான பஜ்ஜியும் கிடைக்கும்.

– என். கோமதி, நெல்லை – 7.



தம்பியின் காரை எடுத்துக்கொண்டு, மணி காரை ஓட்ட, குடும்பத்துடன் விஸ்தாரமான பயணத் திட்டத்துடன் கிளம்பினோம்.

வழியெல்லாம் கும்மாளம், பாட்டு, சிரிப்பு... கோயில் தரிசனம்; மூக்கு பிடிக்கச் சாப்பாடு என்று ஜாலிதான். இளநீர், நுங்கு, கடலை உருண்டை, முறுக்கு என்று ஸ்டீரியோவில் பாட்டு கேட்டவாறு செவிக்கு உணவோடு வயிற்றுக்கும் இட்டோம்.

மதுரை மீனாட்சி, பிள்ளையார் பட்டி விநாயகர் என்று பயணித்து திருநெல்வேலி சேர்ந்துவிட்டோம்.

''நேர உங்க கிராமத்துக்குப் போ...'' என்று பணித்தாள் என் மனைவி. வள்ளியூருக்குச் சென்று, அங்கு மணியின் பாட்டி வீட்டைக் கண்டுபிடித்து, மணியை அங்கே விட்டுவிட்டு நாங்கள் ஓட்டலுக்குச் சென்றோம்.

பாட்டியிடம் ஃபோன் நம்பர் வாங்கி சேலத்தில் மணி அப்பா வேலை செய்த கம்பெனிக்கு ஃபோன் செய்து அவர்களை ஊருக்கு வரவழைத்தாள். தகவல் கிடைத்தவுடன் மணியின் பல உறவினர் வந்தனர். அவனுடைய அப்பா, அம்மா அங்கு வந்ததும் நடந்த உணர்ச்சி நாடகம் இருக்கே, அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

மணியின் தாய் கண்களில் அருவியாக வழிந்த நீர், தந்தையின் முகத்தில் வேதனை கலந்த மலர்ச்சி. தம்பி, தங்கைகள் முகத்தில் சிரிப்பு. மும்பையிலிருந்து வாங்கி வந்திருந்த ஆடைகளை, மணியை விட்டு தரச் செய்தாள். பிறகு மணியிடம் இரண்டாயிரம் ரூபாய் தந்து, நீ மூணு நாள் டூட்டிக்கு வர வேண்டாம். நாங்க கல்லிடைக்குறிச்சியில் தங்கி, குற்றாலம், அகஸ்தியர் ஃபால்ஸ், தாமிரவருணில குளிச்சு, ரெஸ்ட் எடுக்கப் போறோம்'' என்றாள்.

மூன்று நாட்கள் கழித்து கிளம்புகையில், மணியின் பாட்டி வீட்டுக்குச் சென்று அவனை பிக்-அப் செய்தோம். விடைபெறுகையில் மணியின் அம்மா ஒரே அழுகை.

''அம்மா, நீங்க நூறு வருஷம் நல்லா இருக்கணும். என் புள்ளைய கண்ணால பாக்காமலே செத்துடுவேனோன்னு எவ்வளவு நாள் அழுதிருக்கேன். அவனை என் கண்ணுல காமிச்சீங்களே. உங்க குடும்பம் நல்லா இருக்கணும், பிள்ளை குட்டியெல்லாம் நல்லா இருக்கணும்'' என்ற அந்தத் தாயின் உளமார்ந்த ஆசீர்வாதம் மனதைத் தொட்டது.

''இனிமே நீங்கதான் அவனுக்கு எல்லாம். பத்திரமா பாத்துக்கோங்க,'' என்று அவன் அம்மா பரிந்துரைத்தாள்.

பதிலுக்கு என் மனைவி, ''உங்களுக்கு அடிக்கடி ஃபோன் பண்றேன். நீங்களும் ஏதானா தகவல்னா எங்க நம்பருக்கு ஃபோன் பண்ணுங்க...'' என்று ஃபோன் நம்பர் தந்தாள்.

அங்கு ஆரம்பித்தது வினை! நாங்கள் மும்பை திரும்பிய மறுநாளே ஃபோன். அடிக்கடி ஃபோன் வரத் தொடங்கியது. மணியை ஊருக்கு லெட்டர் எழுதச் சொன்னாள் என் மனைவி. பதில் லெட்டர் வந்தால் அதில் குசல விசாரிப்பு இரண்டு வரி,

தொடர்ந்து பணம் கேட்டு, ஆயிரம், இரண்டாயிரம் என... கோரிக்கை... மணி அனுப்ப அனுப்ப, தொகை கூடியது.

இடையில் வீடு ரிப்பேர் செய்ய பணம் பத்தாயிரம் கேட்க, என் மனைவி பரிந்துரைக்க, நான் கடன் தர, அதை மாதம் ஆயிரமாக சம்பளத்தில் கழித்து அடைத்தான் மணி. அந்தக் கடன் முடிவதற்குள் கடைசித் தங்கை பெரிய மனுஷி ஆகிவிட்டாள் என ஐயாயிரம் ரூபாய் டிமாண்ட்.

கடந்த வாரம் ஒரேயடியாக இருபத்தையாயிரம் ரூபாய்க்கு லெட்டர். கிராமத்தில் அவர்கள் இருந்த வீடு, கஷ்டத்தில் விற்ற வீட்டை மறுபடி வாங்க ஒரு சந்தர்ப்பம்... அவன் அப்பா கெஞ்சாத குறையாக, என் மனைவிக்கு சிறிது சலிப்பு கூடவே கோபம்.

''பாவம் மணி என்ன செய்வான்? அவனுக்கு மட்டும் பணம் செடியிலயா காய்க்குது? இப்படி அடிக்கடி பணம் கேட்டா அவன் எங்கே போவான்? கஷ்டப்பட்டு நாலு காசு சேர்க்கறதுக்குள்ள நாலாயிரத்துக்கு செலவு வருது...''

''அவன் நிம்மதியா இருந்தான். குடும்பத்தோட சேர்த்து வைக்கிறேன் பேர்வழி என்று நாமதான் இப்படிக் குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கோம்.''

''நல்லாயிருக்கு நீங்க சொல்றது. இவ்வளவு வருஷமா பிள்ளை எங்கேன்னு கூடத் தெரியாம இருந்தபோது செலவை எப்படிச் சமாளிச்சாங்க? நாங்களேதானே எல்லாச் செலவையும் ஈடுகட்டினாங்க? இப்ப மணி நல்ல வேலைல இருக்கான்னு இப்படியா பிடுங்கறது.''

மணியிடம் நான் கேட்டே விட்டேன்.

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாங்கற மாதிரி நாங்க நல்லது செய்யப் போக பாதகமாயிடுச்சோ...?''

''இல்ல சார், நீங்க எனக்கு நல்லதுதான் செஞ்சிருக்கீங்க. இத்தனை நாள் வரை ஏதோ குதிக்கோன் இல்லாம நாடோடி போல இருந்தேன். நீங்க சொன்னபோதுதான் எனக்குப் புரிந்தது. பெத்தவங்க இல்லாம நான் முளைக்கல்லே. என் பிறப்புக்குக் காரணமா இருந்தவங்களைப் புறக்கணிக்கிறது என்ன நியாயம்? இப்ப எனக்குப் பணம் புரட்டறது கஷ்டம். ஆனாலும் எனக்கு சந்தோஷமாதான் இருக்கிறது. நானும் ஒரு வகையில் உபயோகமாக இருக்கேன்னு நினைச்சாலே நம்பிக்கையாக இருக்கு. வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம். ஆனந்தம் கிடைச்சது போல இருக்கு. மனுஷ உடம்பு மண்ணுக்குள்ள போறதுக்கு முன்னே முழுமையா பயன்பட்டு உதவினால் அதுதான் சரி. நானும் இப்படி உதவி செய்ய முடியுங்கிற நம்பிக்கையே எனக்கு திருப்தியா இருக்கு...''

மணி பேசியதைக் கேட்டு, இப்படியும் ஒரு பரிமாணமா என்று ஆச்சரியம் ஏற்பட்டது. ✪




திருமண மண்டபங்களில் உள்ள இருக்கைகளை, திரையரங்குகளில் உள்ளது போல் கீழிருந்து மேலெழுந்தவாரியாக உயர்த்தி அமைத்தால் மணமேடையில் தாலி கட்டும் காட்சியைத் தெளிவாகக் காண முடியும். நாம் ஆசீர்வதித்து தூவும் அட்சதையும், மலர்களும் மணமக்கள் மீது விழும்.

- சுமதி பாபு, சென்னை.



For Trade Enquiries Contact: Venus Home Appliances (P) Ltd., Central Mktg. Off.: 59, Vijayaraghava Road, T. Nagar, Chennai - 600 017. Ph: 42024656 /86
• **Branches:** Chennai, Ph: 28154497, Mr. Arul Mozhi, Ph: 9841936662 • Coimbatore, Ph: (0422) 2322339, Mr. Sivam Karthikeyan, Ph: 9894471526
• Madurai. Ph: (0452) 2373010, Mr. Victorraja, Ph. 9952248099



பாரம்பரிய ஜோதிடர்

துயரத்தின் பிடியிலிருக்கும் பலரும் இவர் பார்வை பட்ட பிறகு வாழ்க்கையின் உயர்ந்த நிலையை அடைந்து விடுகின்றனர்.

திருமணத்தடை, குழந்தையின்மை, கணவன் மனைவி பிரிவு, கல்வித் தடை, வேலையின்மை, கொடிய நோய்கள் போன்றவற்றை எளிமையான பரிகாரம் மூலம் இவர் தீர்க்கும் விதம் வியக்கத் தக்கது.

ஜாதகம் கணிப்பதிலும், குழந்தைகளுக்கு அதிர்ஷ்டப் பெயர் சூட்டுவதிலும் வல்லவர் இவர்.

வெளியூர் அன்பர்கள் ஒரு ஜாதகத்தின் மூன்று கேள்விகளுக்குப் பதில் பெற ரூ.**150/-MO (or) D.D** அனுப்பவும். ஜாதக நகல் + ரூ.5 அஞ்சல் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவர் இணைக்க வேண்டும். ஜாதகம் இல்லாதவர்களுக்கு எங்கள் பிரசன்ன முறையில் பதில் பெறலாம்.

Prof. S. பஞ்சநாதன்

வாக்குச் சித்தர் ஜோதிட நிலையம், எண். 8/27, 3rd மெயின்ரோடு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை 600 061 தொலைபேசி - (044) 22670573 , 9444453693

ரகசியங்கள் ரகசியமாய் இருக்கும் ♦ தொலைபேசி மூலம் முன் அனுமதி பெற்று வருக!

SATISFACTION GUARANTEED

என் செல்லம்





தாத்தா : எஸ். கலியமூர்த்தி
பாட்டி : கே. இராஜேஸ்வரி
பேரன் : எஸ். அர்ஜுன்



தாத்தா : வெங்கடேசன்
பாட்டி : ஜெயலக்ஷ்மி
பேத்தி : வர்ணிகா

தாத்தா : ஏ.ஆர். கைலாசமூர்த்தி
பாட்டி : எஸ். வசந்தகோகிலம்
பேரன்கள் : கே. அனிருத்
கே. ஆகாஷ்





தாத்தா : ஸ்ரீனிவாசன்
பாட்டி : லலிதா
பேரன் : ப்ரசித்





தாத்தா : டி. சூரியநாராயணன்
பாட்டி : எஸ். செல்லம்மாள்
பேத்தி : ஆராதனா

பாதுகாப்பான லேசர் சிகிச்சை



- தேவையற்ற ரோமங்கள் நீக்குதல்
- பரு மற்றும் பருத் தழும்புகள் நீக்குதல்
- கரும் புள்ளிகளை நீக்குதல்
- வார்ட் ரிமூவெல் (Wart Removal)

25% புதுவருட சிறப்புத் தள்ளுபடி

Satin Skin
Laser Clinics



- சருமத்துக்குப் புத்துணர்வு அளித்தல்
- சருமத்தின் சுருக்கங்களை அகற்றுதல் (Skin Tightening)
- சருமத்தைப் பளபளப்பாக்குதல்
- சூரிய ஒளியால் சருமம் பாதிக்கப்படுவதைத் தடுத்தல் (Sun Damage)
- மைக்ரோடெர்மாப்ரேஷன் (Microdermabrasion)
- பிக்மெண்ட்டேஷன் (Pigmentation)
- கெமிக்கல் பீல் (Chemical Peel)

9.30 am to 6.30 pm
Tuesday Holiday

* Valet Parking * Credit Cord Accepted

16, Jagannathan Road, Opp. Lister Labs, Nungambakkam, Chennai - 600 034.
Tel : 2821 6316 / 6332 Cell : 98408 92505

ஸ்ரீ குரு ராகவேந்திராய நமஹ

புனித யாத்திரை | 49 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்

ஸ்தாபகர் : வி.சுப்பாராவ் உரிமையாளர் : எஸ்.பத்ரி ESTD : 1959

18.01.2008 21.02.2008	4 நாட்கள் கொண்ட மந்த்ராலயயாத்திரை நெல்லூர், ஸ்ரீசைலம், மந்த்ராலயம், அஹோபிலம், மஹாநந்தி ஆகியன கட்டணம் ரூபாய் 2000/- (2 ம 2 புஸ்பேக் பஸ்) (14.03.2008 - 15.04.2008 - 01.05.2008 - 01.06.2008 - 01.07.2008 - 01.09.2008 - 07.10.2008)
11.02.2008 03.03.2008	9 நாட்கள் கொண்ட காசி யாத்திரை காசி, கயா, அலகாபாத் ஆகியவை கட்டணம் ரூபாய் 4300/- (16.06.2008 - 12.07.2008 - 13.09.2008 - 10.10.2008 - 02.11.2008)
09.02.2008 25.03.2008	12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை, பூரி, புவனேஸ்வர், கோனாரக், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைம்மசாரண்யம் ஆகியவை கட்டணம் ரூபாய் 6,250/-
25.01.2008 07.03.2008 05.09.2008	14 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை பாம்பே, நாசிக், பஞ்சவடி, திரியம்பகேஸ்வர், சீரடி, சனிசிங்கனாப்புர், நாகநாதம், பண்டரிபுர், பீமாசங்கர், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர், வைத்தியநாதம், உஜ்ஜயின் அஷ்டகணபதி ஆகியவை கட்டணம் ரூபாய் 7,900/-
25.01.2008 09.03.2008 05.09.2008	14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகா யாத்திரை அகமதாபாத், டாக்கூர் துவாரகா, பேட்டி துவாரகா, நாகேஸ்வரம், ஹரிசித்திமாதா, போர்பந்தர், புஸ்கர், மாத்ருகயா, அம்பாஜி, மவுண்டாபு, சோம்நாத், ஸ்ரீநாத்துவாரகா, காங்குரோலி, கோமதி துவாரகா ஆகியவை கட்டணம் ரூபாய் 7,400/-
07.04.2008 01.09.2008	15 நாட்கள் கொண்ட காசி, கயா, பொக்ரா, முக்திநாத், சித்ரகூடம், நேபாள், அலகாபாத், நைம்மசாரண்யம், பசுபதிநாதர் ஆகியவை கட்டணம் ரூபாய் 9,000/- (ஹெலிகாப்டர் கட்டணம் தனி)
17.04.2008 12.09.2008	15 நாட்கள் கொண்ட சிம்லா டூர் ஆக்ரா, மதுரா, டெல்லி, குருசேத்திரா, வைஷ்ணவிதேவி, சிம்லா, குலு மணாலி, அமிர்சர் கட்டணம் ரூபாய் 8,500/-
01.05.2008 01.06.2008	12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை, பூரி, புவனேஸ்வர், கோனாரக், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைம்மசாரண்யம் ஆகியவை கட்டணம் ரூபாய் 6,250/-

மேலும்விவரங்களுக்கு : ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்

உலகில் மூத்தவர்

உலகம் தோன்றிய நாள்முதல் அனைத்து ஜீவராசிகளையும் கண்டவர் என்பதால் சூரியனே உலகில் மூத்தவர் என்ற பெருமை பெறுகிறார். சூரியனுக்குச் சூடான சர்க்கரைப் பொங்கலும் மிளகு அதிகமில்லாத வெண்பொங்கலையும் படைப்பது பண்டைய வழக்கம்.

மூன்று பண்டிகை தத்துவம்

போகிப் பண்டிகையின்போது நம் மிடமுள்ள கெட்ட குணங்கள் போகின்றன. பொங்கல் பண்டிகையன்று நம்மிடம் நல்ல குணங்கள் பொங்கிப் பெருக ஆரம் பிக்கின்றன.

காணும் பொங்கல், எதிர்வரும் (காணும்) காலங்களில் நல்ல எண்ணங்கள் எங்கும் எதிலும் நீடித்து நிற்க இறைவன் அருள்புரிய கொண்டாடப்படுகிறது.

போகியின் தத்துவம்

போகிப் பண்டிகையன்று வீட்டின் அகத்தையும், புறத்தையும் சுத்தம் செய்து குப்பைகளை எரிப்பது வழக்கம். இதன் தத்துவம், தீய எண்ணங்களாகிய குப்பை களை உள்ளத்திலிருந்து வெளியில் கொண்டு வந்து பக்தி என்ற தீயால் அதை எரிக்க வேண்டுமென்பதே.



சங்கராந்தி


ஆதியில் நம் முன்னோர்கள் வட துருவப் பகுதியில் வசித்தவர்கள் என்றும், அவர்களுக்கு ஆறு மாதம் பகலாகவும், ஆறு மாதம் இரவாகவும் இருந்ததென்றும், பகலில் மட்டும்தான் பிதுர்கடன்களை ஆற்ற முடியுமாதலால், மகர ராசியில் சூரியன் பிரவேசித்து உலக கோளத்தின் வடபாகத்தில் ஒளிபரப்ப சங்கராந்தியைப் பண்டிகையாகக் கொண்டாடினர்.



போகாலி பிகு

அசாமிலும், மணிப்பூரிலும் அறு வடைத் திருவிழா 'போகாலி பிகு' என்று அழைக்கப்படுகிறது. அறுவடை முடிந்த வயல்களில் கூரைக் கொட்டகைகள் போடப் படும். முதல் நாள் இரவு, அங்கு இளை ஞர்கள் விருந்து உண்பர். மறுநாள் காலை பந்தலுக்குத் தீயிட்டு அறுவடைத் திருநாள் ஆரம்பமாவதை அறிவிப்பர்.





பொங்கல்!

கிச்சடி அமாவாசை

மகாராஷ்டிரத்தில் பொங்கல் திருநாளில் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, சில வண்ண தானியங்களைப் பரிமாறிக்கொள்கின்றனர். காஷ்மீரில் இத்திருநாளன்று கிச்சடி அமாவாசை எனப்படும் அறுவடைத் திருநாள் கொண்டாடப்படுகிறது. பருப்பு, நெய், அரிசி கலந்த கிச்சடியை அனைவருக்கும் பரிமாறுகின்ற

லோகிரி

பொங்கல் திருநாளை பஞ்சாபிலும் ஹரியானாவிலும் 'லோகிரி' எனப்படும் விழாவாகக் கொண்டாடுகின்றனர். இனிப்புச் சுவை மிகுந்த அரிசி, சோளப் பொரி ஆகியவற்றைத் தீயிலிட்டு கிராமியப் பாடல்களைப் பாடி மகிழ்வர்.

கனுப் பொங்கல்

அன்றைய தினம், உடன்பிறந்த சகோதரர்களுக்காக சகோதரிகள் நோன்பு நோற்பர். மேலும், சங்கராந்தியில் வைத்து வழிபட்ட புது மஞ்சளை மூத்த பெண்களிடம் கொடுத்து, அந்த மஞ்சள் கொம்பினால் தம் நெற்றியில் மஞ்சள் அடையாளம் இடச் சொல்லி மஞ்சள் நீராடுவர்.

காமதேனு பூஜை

மாட்டுப் பொங்கலும், வடநாட்டில் கொண்டாடப்படும் கோ பூஜையும் ஒன்றே. தமிழர்கள் பசுக்களை வழிபடுவது போலவே 'கோ' பூஜையிலும் வேதமந்திரம் முழங்க கோமாதா பூஜிக்கப்படுகிறாள்.

- நெ. இராமன்,
சென்னை.



உங்கள் மாமியாரைச் சமாளிப்பது எப்படி? - தமிழ் சுஜாதா - கிழக்கு வெளியீடு, சென்னை - 18. விலை ரூ.70.00

மாமியார் - மருமகள் பிரச்னை என்பது எழுதவும் படிக்கவும் சுவையான விஷயம் தான். நகைச்சுவை கலந்த நடையில், ஆரோக்கியமான ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார். குழந்தை Vs மாமியார் கட்டுரை அட்டகாசம்! மாமியாருக்குத் தெரியாமல் இந்த நூலைப் படிக்க வேண்டுமாம். படித்த பிறகு மாமியார் கண்ணில் படும் படி வைக்க வேண்டுமாம். ஜாலி!



சித்திரத் திருப்பாவை - கே. சிறிய திருவடி, அருள்மிகு அம்மன் பதிப்பகம், 8, கங்கையம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை,







சென்னை - 14. விலை ரூ. 30.00

முப்பது பாசுரங்களுக்கும் அழகான இரு பக்கக் கோட்டுப் படங்களை வரைந்திருக்கிறார் ஓவியர் கே. சசி. பாசுர விளக்கம் எளிமையாக உள்ளது. இன்னும் சற்று நல்ல தாளில் அச்சிட்டிருக்கலாம்.

அல்-குர்ஆன் - ஓர் அறிவியல் பூங்கா. டாக்டர் எம்.கே.எஸ். சம்சுதீன் மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. விலை ரூ. 90.00

பிரபஞ்ச இயலை அறிந்துகொள்ள திருக்குர்ஆன் - புனித நூலின் வாசகங்களைக் கொண்டே விளக்கம் தருகிறார் ஆசிரியர். இஸ்லாமியர் அல்லாதவர்களுக்கும் நன்கு புரியும்விதமாக அறிவியல் கருத்துக்களை விளக்கியிருப்பது அருமையான பணி.

அதிருஷ்ட இரகசியம் - கே.ஆர். பிரபாகர் ராஜ். மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. விலை ரூ. 125.00

எண் சோதிடம் பற்றி விரிவான தகவல்கள் உள்ளன. விருப்பம் போல் அதிர்ஷ்ட எண் வரும் வகையில் பெயச் மாற்றம் செய்து கொள்ளலாம்.

மைசூர் மாநில முக்கியக் கோயில்களுக்கு ஒரு சுற்றுலா வழிகாட்டி - சேலம் பா. அன்பரசு. புதிய புத்தக உலகம், 52-சி, வடக்கு உஸ்மான் சாலை, சென்னை - 17. விலை ரூ. 60.00

கர்நாடக மாநிலத்திலுள்ள பதினெட்டுத் திருத்தலங்களைப் பற்றிய சுற்றுலா நோக்கிலான ஆன்மிகக் கட்டுரைகள். பயனுள்ள கையேடாகப் பயன்படும். 'மைசூர் மாநிலம்' என்று நூல் தலைப்பில் போட்டிருப்பது ஏன்?

நந்தினி என் காதலி - இந்திரா சௌந்தரராஜன். திருமகள் நிலையம், சென்னை -17. விலை ரூ. 55.00

'நான்தான் அவன்' என்ற நெடுங்கதையும் சேர்ந்தது. சுவையான குடும்ப உறவுகளைப் பற்றிய கதைகள்.

தேகமே கண்களாய் - உத்தம சோழன், திருவரசு புத்தக நிலையம், சென்னை - 17. விலை ரூ. 60.00


பார்வைக் குறைபாடுடைய பலர் நம் கண்களில் படத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்க்கை முறையை நுணுகி ஆராய்ந்து பரிவோடு எழுத எல்லோராலும் முடிகிறதா? அருமையாக எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

- **வாசகன்**

வாதவலி மற்றும் பிற வலிகளிலிருந்து உங்கள் வாழ்க்கையை மீட்டுப் பெறுங்கள்!!!

ரிஷி™
பெயின் கில்லர்-H
Hrishi PAIN KILLER-H™







100ml, 50ml. மற்றும் 20ml. அளவுகளில் கிடைக்கிறது

- ★ மூட்டு வலி
- ★ முதுகு வலி
- ★ தசை வலி
- ★ கழுத்து வலி
- ★ சுளுக்கு
- ★ மாதவிடாய் வலி
- ★ வாதநோய்

முதலிய வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்

For external use only



இதுவரை கண்டுபிடிக்கப்படாத மிகவும் சக்திவாய்ந்த ஆயுர்வேத மருந்து

மணி பேக் சலுகை* (Money Back Offer*)

எங்கள் மருந்தில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால் அதற்கான பணத்தை திரும்ப பெறலாம். *விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும். மேலும் விவரங்களுக்கு வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்ளவும்: 044-26241190

ரிஷி பெயின் கில்லர்-H™

இது ஒப்பற்றமூலிகைகளின் தனித்துவம் நிறைந்த சேர்க்கை. இது அனைத்து வலிகளிலிருந்தும் உடனடி நிவாரணம் தரவல்லது. பாரம்பரியமிக்க ஆயுர்வேத வல்லுனர்களால், சகல வலிகளிலிருந்தும் நிவாரணம் பெறபுதுப்பொழிவுடன் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புராதன அரிய மருந்து.

ரிஷி பெயின் கில்லர்-H-ல் உள்ள அரிய மூலிகை எண்ணைகள், முதுகு வலி, மூட்டு வலி, தலை வலி, தசைப்பிடிப்பு, மாதவிடாய்க்காலத்தில் வரக்கூடிய வலிகள், கழுத்து வலி, சுளுக்கு, வாதம் சம்பந்தப்பட்ட வலிகள் மற்றும் வீக்கம் ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணம் தரவல்லது. மிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட இந்த மருந்தானது 100% பாதுகாப்பும் உங்கள் பணத்திற்கு முழுப்பலனும் தரவல்லது.

வாதம் (Arthritis)

இன்றைய நாட்களில், நடுத்தர வயதைத் தாண்டிய மூன்றில் ஒருவருக்கு வாத நோய் வந்து அவதிப்படுகின்றனர். வாத நோய் (Arthritis) ஒரு வியாதிமட்டுமல்ல, எந்த வயதிலும் தாக்கக்கூடிய சிக்கலான உடல் கோளாறு.

ரிஷி பெயின் கில்லர்-H மருந்தை பாதிக்கப்பட்ட மூட்டுகளில் தடவினால், அந்த இடங்களில் ரத்த ஓட்டம் சீராகி, மூட்டுகளின் தசைகள் வலிமை பெற்று விறைப்புத்தன்மை நீங்கி, உடனடியாக வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது.

மாதவிடாய் கால வலி (DYSMENORRHEA)

உங்களுக்குத் தெரியுமா? பத்தில் ஐந்து பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் வலி மிகவும் கடுமையாக ஏற்படுவதால் அந்நாட்களில் அன்றாட வேலைகளைக்கூட செய்ய முடியாமல் சோர்வும், பலவீனமும் ஏற்படுகிறது.

அப்படிப்பட்ட நாட்களில் அடிவயிற்றில் ஏற்படும் வலிகளுக்கு ரிஷி பெயின் கில்லர்-H மருந்தை மாதவிடாய்க்கு ஒரு நாள் முன்பும், மாதவிடாய்க் காலத்திலும் தொப்புழ் சுற்றிலும், அடிவயிற்றிலும், கீழ் முதுகு பகுதியிலும் தடவினால் வலியிலிருந்து முழுமையான பாதுகாப்பான நிவாரணம் தரக்கூடியது.

அடிவயிற்றிலும், கீழ் முதுகு பகுதியிலும் தாங்கமுடியாத வலி ஏற்படுவதே மாதவிடாய் வருவதற்கு அறிகுறியாகும். அப்பெண்ணுக்கு அந்நேரங்களில் கடுமையான வலியோ அல்லது மிதமான வலியோ ஏற்படலாம். அந்நேரங்களில் கர்ப்பபை தசைகள் அதிக அளவில் சுருங்கி, தற்காலிகமாக ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு அடிவயிற்றில் வலியை ஏற்படுத்துகின்றன. ரிஷி பெயின் கில்லர்-H மருந்தை அடிவயிற்றில் தடவினால், ரத்த ஓட்டத்தை சீர் செய்து, கர்ப்பபை தசைகள் சுருக்கங்களிலிருந்து குறைத்து வலியை கட்டுப்படுத்துகிறது.

ரிஷி பெயின் கில்லர்-H

இதுவரை கண்டுபிடிக்கப்படாத மிகவும் சக்திவாய்ந்த ஆயுர்வேத மருந்தாகும். இதன் சக்தியானது உங்களது தசை மற்றும் மூட்டுகளின் அசைவுகளுக்கு ஆறுதலாக இருந்து மூட்டு அசைவுகளின் கடினத்தன்மையை குறைத்து வலியிருந்து முழுமையான நிவாரணம் கொடுக்கிறது.

தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

பெங்களூர்: அப்போலோ பார்மஸி (Bangalore: Apollo Pharmacy)

Formulation & Manufactured by:

Indo Asian Herbs & Homoeo Research Laboratories

பூனை செய்த அபிஷேகம்!

பொழுது விடிந்தால் என் சகோதரிக்குத் தலை தீபாவளி. வெளியூரிலிருந்து உறவினர்களும் வந்தாயிற்று. இரவு 12 மணி வரையில் வைபவத்துக்கான ஏற்பாடுகளைக் கவனித்து விட்டுத் தூங்கச் சென்றோம். விடியற்காலை மூன்று மணி இருக்கும். 'டமால், டுமீல்' என்று ஒரே சத்தம் ஹாலில். எல்லோருமே விழித்துக் கொண்டோம். வந்து பார்த்தால் ஒரு பூனை - அதன் தலை வெள்ளிச் செம்புக்குள். அதன் உடலெங்கும் நெய் வழிகிறது. அங்கும் இங்கும் அது தவித்துக் குதித்ததில், சுவரெல்லாம் நெய், சோபா முழுதும் நெய். தாம்பாளத்தில் வைத்திருந்த பழங்கள், பூமாலை, புதுத்துணிகள் எல்லாம் நெய் அபிஷேகம்!

எங்களுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. அண்ணன் கத்தினார். ''முதலில் பூனையை வெளியே துரத்த வேண்டும். கதவைத் திறந்து விடுங்கள்'' என்று. அம்மா அலறுகிறார் ''ஐயோ!, வெள்ளிச் செம்பை எப்படி எடுக்கப்



போகிறீர்கள்?'' என்று. என் சகோதரி மகன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அதை ஒருவழியாக அடக்க, என் அண்ணன் அதன் தலையிலிருந்து செம்பைப் பிடுங்க, நாங்கள் வீட்டை எப்படிச் சுத்தம் செய்வதென்றறியாமல் சோர்ந்து உட்கார, எங்கள் பாட்டி சாவதானமாக, ''ஏண்டி, ஒரு கிலோ நெய் இருக்குமா கொட்டினது?'' என்று விசனப் பட்டார்.

- கே. ஹம்ஸா, சென்னை - 33.




வீட்டில் தினமும் ஸ்வாமி அறையில் விளக்கு ஏற்றி, ஸ்வஸ்திக் கோலம் போட்டு வந்தால் ஐஸ்வர்யம் பெருகும்.

- ஆர். சுபா,
ஈரோடு - 8.



TVS
உங்கள் கனவுகளுக்கு
உயிர் கொடுங்கள்
உங்கள் புத்தம் புதிய ஸ்கூட்டி
உடன், பல பல கனவுகளையும்,
தூரங்களையும் வெற்றி
கொள்ளுங்கள். அது மட்டுமா?
ஸ்கூட்டி இப்போது அறிமுகம்
செய்கிறது டேஸில் பிரீமியம்
சீரீஸ், நீங்கள் வெகு ஸ்டைலாக
ஓட்டிச் செல்வதற்கு.
டேஸில்
பிரீமியம்
சீரீஸ்
புதிய பளபளப்பான வண்ணங்களில்
Scooty Pep+



















தேவையான பொருள்கள் :

- சார்ட் பேப்பர் - விருப்பமான கலர் 1,
- ஒயிட் கம் - சிறிது,
- பட்டு நூல் (அ) கலர் கயிறு - (தொங்கவிட) - சிறிது,
- தங்கநிற மோதிரங்கள் ஒட்டி அலங்கரிக்க - 20 துண்டுகள்,
- பென்சில், கத்தரிக்கோல் - வரைய, வெட்ட...
- ஃபேப்ரிக் பெயிண்ட் நீல நிறத்தில் - விருப்பமானது 1 பாட்டில்.
- கண்ணாடித் துண்டுகள், வண்ண சமிக்கி - அலங்கரிக்க...

செய்முறை :

✱ சார்ட் பேப்பரில் விருப்பமான அளவு வட்ட வடிவம் வரைந்து 20 துண்டுகளை (ஒரே அளவாக) வெட்டவும்.

சிறிய பந்து வேண்டுமெனில் வட்டம் சிறியதாகவும் பெரிய பந்து வேண்டுமெனில் வட்டம் பெரியதாகவும் இருக்கட்டும்.

✱ வெட்டிய வட்டத்தை மூன்றாக மடிக்கவும். அதாவது மூன்று













பக்கத்திலும் மடிக்கவும். இப்போது வட்ட வடிவம் முக்கோண வடிவம் பெறும்.

* அதே மாதிரி மற்ற சார்ட் வட்டங்களையும் மடித்து, தயார் செய்து கொள்ளவும்.

* அதில் ஐந்து வட்டங்களை மட்டும் எடுத்து அடுத்து, அடுத்து வட்டமாக இணைத்துச் சேர்த்து ஒட்டவும்.

* அதே மாதிரி

காகிதப்பந்து!

ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை

பார்வை!



ஆருத்ரா தரிசனத்துக்காக அருகிலிருந்த கோயிலுக்கு எனது எட்டு வயது மகனுடன் சென்றிருந்தேன். கூட்ட நெரிசலில் சிக்கித் திண்டாடிய என்னை, எங்களுக்கு முன்னே நின்று கொண்டிருந்த சில பார்வையற்றவர்கள் வியப்பில் ஆழ்த்தினர்.

என்னையறியாமல், ''இவங்களுக்கு என்ன தெரியப் போகுதுன்னு இப்படிக் கூட்டத்துல இடிபட வந்திருக்காங்களோ...?'' என சொல்ல,

என் மகன், ''அவங்க சாமியைப் பார்க்காட்டா என்னப்பா... அந்த 'சாமி' அவங்களைப் பார்ப்பார் இல்லையா...?'' என்றான் சட்டென்று.

நான் கண்கள் பனிக்க, கைகூப்பி தொழுதேன்!

- லட்சுமி ரகுகுமார், சென்னை - 17.

இன்னொன்றும் தயார் செய்து கொள்ளவும். ஒன்று மேற்புறம் மற்றொன்று கீழ்ப்புறம் வைக்க வசதியாக இருக்கும்.

* அந்த ஐந்து வட்டங்களின் கீழும் பார்டர் கட்டவும். அதாவது வட்டங்களின் கீழ் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வட்ட பீஸை ஒட்டவும்.

* இப்பொழுது நடுவே உள்ள இடைவெளியில் மீதியுள்ள ஐந்து வட்ட பீஸ்களை ஒட்டி, பந்தின் மேற்புறம் முழுவதையும் தயார் செய்யவும்.

* ஏற்கெனவே ஐந்து வட்ட பீஸ்களை ஒட்டி தயார் செய்த கீழ்ப்புறத்தை, மேற்புறத்தோடு ஒட்டினால், பந்து தயாராகி விடும்.

* விருப்பத்துக்குரிய நிறமோ, பவழக் கலரோ அடிக்கவும். நீல நிறம் அடித்தால் பளபளப்பாகத் தெரியும்.

* மேலும் அலங்கரிக்க கண்ணாடித் துண்டுகள் அல்லது சமுக்கி ஏதாவது ஒட்டி க்ளிட்டர் 3டி அவுட்லைனர் தந்து மேலும் அழகாக்கலாம்.

* கடைசியாக பட்டு ரிப்பன் அல்லது கலர் கயிறு கட்டித் தொங்கவிட்டால் வண்ணமயமாக ஜொலிக்கும் பந்து தயார்!

சின்னது, பெரியது, அதற்கும் பெரியது என ஒரே வரிசையாகச் செய்தும் தொங்க விடலாம். புதுவருடப் பார்ட்டிகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் போன்ற அனைத்து விழாக்களுக்கும் விதவிதமாகச் செய்து அசத்தலாம்.

பெரிய பந்தாகச் செய்தால், பந்தின் நடுவில் பல்ப் வைத்து வயரிங் செய்து, நைட் லேம்ப் ஆகவும் பயன்படுத்தலாம்.

- சுதா செல்வகுமார்

மாடல் : நந்தினி அரவிந்தன்

படங்கள் : ஸ்ரீஹரி



Maya Appliances (P) Ltd.


Regional Service Centres:

TAMIL NADU: Chennai - ***T. Nagar*** ☎ 24347418, 24363366. ***Nanganallur*** ☎ 65916104. ***Kellys*** ☎ 26420318. ***Avadi*** ☎ 9940619508. **Vellore** ☎ 2215916. **Villupuram** ☎ 251004. **Tiruchi** ☎ 2751288. **Pudukottai** ☎ 221585. **Karaikudi** ☎ 236376. **Tiruvarur** ☎ 251266. **Mayiladuthurai** ☎ 241202. **Thanjavur** ☎ 273565. **Salem** ☎ 2250578. **Erode** ☎ 2221200. **Tirupur** ☎ 4242341. **Coimbatore** ☎ 2232687. **Udumalapet** ☎ 221477, 225388. **Madurai** ☎ 2347386. **Theni** ☎ 320603. **Tirunelveli** ☎ 2501824. **PUDUCHERRY:** ☎ 2346383.

இவை எல்லாமே...

2008 புத்தாண்டு காலண்டர் கிடைக்க தாமதமாகலாம். தேதி, கிழமை பார்க்க ஜனவரி மாத காலண்டர் இல்லா விட்டால், இதோ ஒரு சாய்ஸ் : சென்ற வருடத்திய (2007) மே மாத ஷீட்டை ஜனவரி 2008க்கான காலண்டராகப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ் வொரு வருஷமும் இது மாறாது. சென்ற ஆண்டின் மே மாதம்தான், அடுத்து வரும் ஜனவரி மாதமாக இருக்கும்.

- கே. புஷ்பா, சேலம் மாவட்டம்.



காலண்டர் கிடைக்கலையா?

அதிகாலையில் பல வீட்டு வாசல் களில் அழகான கோலங்கள், போட்டிருப் பார்கள். காலணியுடன் நடைப்பயிற்சி செல்பவர்கள் அவற்றை மிதிக்காமல் செல்ல வேண்டும். கோலங்கள் வெறும் கோடுகளல்ல. திருமகளுக்கான ஒரு வரவேற்பு.

- ஜெயஸ்ரீ மகேஷ், வடபழநி.

புது வருடம் பிறந்து விட்டது. இதுவரை நீங்கள் எதிர்கால சேமிப்புக்காக, வருமான வரிக்காக எத்தனையோ காப்பீடுகளை எடுத்திருப்போம். ஆனால், மிக முக்கிய மான மருத்துவக் காப்பீடு எடுத்திருக்க மாட்டோம். நோய் யாருக்கும் வரலாம். எப்போதும் வரலாம். ஆதலால், புத்தாண் டுப் பரிசாக மருத்துவப் பாலிசிகளை நம் குடும்பத்தினர் அனைவருக்கும் எடுக்க லாமே!

- ஆர். ஆனந்தஜோதி, துரைப்பாக்கம்.

புத்தாண்டு கொண்டாட்டத்தில் கிறிஸ்தவ ஆலயங்களிலிருந்து தங்கள் ஆலய உறுப்பினர்களின் இல்லங் களுக்கு கேரல் குழுவினர்கள் கிறிஸ்து வின் நற்செய்திகளைப் பாடி, கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைத் தெரிவிப்பார்கள். அப் போது ஒருசிலர் தாங்கள் அணிந்திருக்கும் காலணிகளைக் கழற்றாமலே பெட்ரூம் வரை வந்துவிடுகின்றனர்.

இவர்கள் தங்கள் காலணிகளைக் கழற்றி விட்டு வீட்டுக்குள் வந்தால் இன்னும் மகிழ்ச்சிதானே!

- ஜி.ஆர்.எஸ். பெரம்பூர்

விடியற்காலையில் வாசலில் பெரிய கோலம் போடும்போது, கை, கால்களில் சிறிது ஓடோமாஸை தடவிக்கொண்டு போட்டால், கொசுக்கடித் தொல்லையிலிருந்து விடுபட்டு நிம்மதியாகப் போடலாம்.

- உஷா நாராயணன், குரோம்பேட்டை

கனு பிடி வைக்கும்பொழுது கலர் கலர் சாத உருண்டைகளைப் பார்த்து காக்காய் எடுப்பதேயில்லை. அதற்குப் பதிலாக எலுமிச்சை சாதம், தயிர் சாதம், சர்க்கரைப் பொங்கல் வைக்கலாமே. காக்காயுடன் குருவி, அணிலும் சந்தோஷமாகச் சாப்பிடும்.

- பி. கமலா, கல்பாக்கம்.

...ஆஹா 50 தான்!

ஆசை கனவே கூடுமா? தாய்மை ஏக்கம் தீருமா?
எல்லாம் கிடைத்தது எளிதாக
தாய்மை மட்டும் ஏன் தாமதமாக?



உங்கள் கனவு நனவாகப்போகிறது.

அப்போலோவின் அதிநவீன சிகிச்சையால் நீங்கள் தாய்மை அடையும் நேரம் வந்துவிட்டது.

கருவுறுதலுக்கு துணைசெய்யும் அசிஸ்டட் ரீப்ரொடக்டிவ் என்கிற மருத்துவத் தொழில்நுட்பத்தில் மிகச்சிறந்த பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் எங்களிடத்தில் உள்ளனர். உங்கள் ஆசையைப் பூர்த்தி செய்யும் அதிநவீன சிகிச்சையும், நீங்கள் எதிர்பார்க்கும் மிகச் சிறந்த மருத்துவச் சேவையையும், கண்ணை இமை காப்பது போன்றதொரு கவனிப்பையும் உங்களுக்கு இவர்கள் அளிப்பார்கள்.

நீங்கள் தாய்மை அடையப்போகும் அந்த காலங்களில் அப்போலோ, தாய்போல் தனது அன்பான அரவணைப்பால் உங்களை இனிமையாகக் காக்கும். மிகச்சிறந்த சிகிச்சையுடன் அன்பையும் நீங்கள் சேர்ந்தே பெறுவீர்கள்.

முன்பதிவிற்கு **044-6060 1066** ல் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். ஒரு இனிய அற்புதத்தைப் பெற்றெடுக்க அப்போலோ உங்களுக்குத் துணை நிற்கிறது.

Apollo Assisted Reproduction Centre

அதிசயங்களின் பிறப்பிடம்

25 Years

Apollo Hospitals

touching lives

- IUI • IVF • ICSI • TESA
- Semen Freezing and Banking
- Oocyte Donation / Sharing
- Embryo Freezing
- Assisted Hatching

சொல்ல விரும்புகிறோம்

☎ "வித்திட்டவன் உணவில்லாமல் விழித்துக் கொண்டிருக்கையில் வெளிநாடு எதற்கு?" என்று எ. ஜெனோ பர்வீன் கேட்டது நாட்டுப்பற்றை நெஞ்சில் அழுத்தமாகப் பதித்தது.
சென்னை - 18, எஸ். சுந்தரவல்லி.

☎ சர்வஜித் பெண்ணாக, எம்.டி. கண்ணாவைத் தேர்ந்தெடுத்து பாராட்டியதற்கு நெல்லை மாவட்ட வாசகியர் சார்பில் நன்றி. மகிழ்ச்சி.
பத்தமடை, எம்.லெட்சுமி.





வயசு குறைஞ்சு போச்சு!

☎ 'மனிதர்களைப் போல மிருகங்களுக்கும் பி.பி., ஷுகர் வருமா' என்ற கேள்விக்கு அனுஷா அளித்த பதில் சூப்பர்!
திருவான்மியூர், ஆர். புவனேஸ்வரி.

☎ இனி விளக்குக்குப் பழைய திரியைப் போட மாட்டேன். என்னுடைய நீண்ட நாள் சந்தேகத்தைத் தீர்த்த, குடவாசல் மோகன கல்யாணிக்கு நன்றி.
சென்னை - 18, பி. ஹரிணி.

☎ 'பூஞ்சாரல்' மகிழ்ச்சி பரப்பியது. மறுபடியும்... மறுபடியும்... பக்கங்களைப் புரட்டச் செய்து, பரவசத்தில் துள்ள வைத்தது.
இணாம்மணியாச்சி, பி. வெங்கடலட்சுமி.

☎ 'பூஞ்சாரல்' நிகழ்ச்சிகள் வெகு அமர்க்களமாக இருக்குமென இணைப்பே சொல்லி விட்டதே!
தேனி, அகிலா அருண்குமார்.

☎ பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாய் கல்லூரி மாணவ மாணவியருக்கு மெஹந்தி போட்டி, பூஞ்சாரல் எனப் பார்க்கும் போது எங்களுக்கும் வயது குறைந்து விட்ட உணர்வு.
திருநெல்வேலி, எஸ். சித்ரா சதாசிவம்.

☎ 'வாள் எடுத்தவன் வாளால் மடிவான்' எனும் திருவிவிலியத்தின் பிரதிபலிப்பாக அமைந்தது 'விஷக் கொட்டு' பரிசுக் கதை.
அடையாறு, பூங்கோதை இராஜா.

☎ "நட்டப் பாத்தியில் கதிர்விடும் நெற்பயிறுக்குப் பழைய பாத்தியை நினைந்து ஏக்கம் இருக்குமா?" எவ்வளவு யதார்த்தமான வார்த்தைகள்! 'பாவம் அப்பா' மினி தொடரின் கதாசிரியை குமுதினிக்குப் பாராட்டு!
நவிமும்பை, பத்மா சுப்ரமணியன்.

☎ 'அழகு வீடு 64 !' வெகு ஜோர்! நூற்றுக்கு நூறு ப்ராக்டிகலான டிப்ஸ் தந்திருக்கிறார் கட்டடக் கலை நிபுணர் பி. கோகுலபாலன்!
திண்டுக்கல், வே. சுகன்யாராம்.

☎ ஜே.எஸ். ராகவனின் சிரிகதை, 'அவள் விழி தனி விழி' அசத்தல்!
சென்னை-83. வள்ளி சிதம்பரக்குமாரசாமி.



ஸ்ரீ அய்யப்பா டிராவல் ஏஜன்ஸி

ஸ்தாபகர் : S.V. அய்யப்பன்

S.A.T.A

13/27, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை-84. (தபால் நிலையம் எதிரில்). போன் : **26431023, 42020059**

E-mail : sriayyappatravels@hotmail/yahoo/rediff/gmail.com/touchtelindia.net Visit us : www.geocities.com / sriayyappatravels

- மஹாராஷ்டிரா பஞ்ச ஜோதிர்லிங்கம், அஷ்டகணபதி, உஜ்ஜயினி, ஓம்காரம். 28.01.08 முதல் 15 நாட்கள். ரயில், பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. 7,200/-
- பஞ்சத்துவாரகா, புஷ்கர், ஆஜ்மீர் யாத்திரை. சென்னை, அஹமதாபாத், டாகூர் (துலாபாரத் துவாரகா), கோமதி துவாரகா, பேட்டி துவாரகா, நாகேசம் (ஜோதிர்லிங்கம்), சோமநாதபுரம், போர்பந்தர் (சுதாமபுரி), ஜஞ்சாமாதா (சக்திபீடம்), மாத்ருகயா, அம்பாஜீ (சக்திபீடம்), ஏக்லிங்ஜீ, மவுண்டு ஆபூ, புஷ்கரம், காங்குரோலி, ஸ்ரீநாத் துவாரகா, உதயபூர், சியாமளாஜீ, அக்ஷர்தாம், அஹமதாபாத். 13.02.08 முதல் 15 நாட்கள். ரயில், பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. 7,800/-
- **முக்திநாத் நேபாளம் :** பூரி, கோனார்க், புவனேஸ்வர், கயா, புத்தகயா, வாரணாசி, போக்ரா, முக்திநாத் (ஹெலிகாப்டர் மூலம்), காட்மண்டு (நேபாளம்), அயோத்யா, நைமிஷாரண்யம், அலஹாபாத், சித்ரகூடம், காசி, சென்னை. 1.03.08 முதல் 15 நாட்கள். ரயில், பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. 8,400/-
- **வடநாட்டு சக்தி பீடங்கள் (12) :** சென்னை, டில்லி, குருக்ஷேத்திரம், சாவித்ரி பீடம், ஜலந்திரபீடம், அமிர்தசிரஸ், வாகா பார்டர், ஸ்ரீநகர், க்ஷீர்பவானி, ஜம்மு, வைஷ்ணவிதேவி, சாமுண்டாதேவி, காங்டாதேவி, ஜ்வாலாமுகி, சித்தபூரணி (சின்னமஸ்த்தாதே), நைனாதேவி, சண்டிகர் (மானசாதேவி), ஹரித்வார், சண்டி, மானஸா, மாயாதேவி (முப்பெரும் தேவியர்), டில்லி, சென்னை. 20.03.08 முதல் 16 நாட்கள். ரயில், பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. 9,000/-
- **மங்களா சாசன திவ்யதேசங்களில்** சோழநாடு 40, நடுநாடு 2, தொண்டை நாடு 22, ஆக 64 திவ்ய தேசங்களை ஒருங்கே தரிசிக்கும் அரியவாய்ப்பு. 6.4.08 முதல் 6 நாட்கள். பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. 3,560/-
- **நால்வர் பாடிய திருமுறைத்தலங்களில்** காவேரி வடகரைத் தலங்கள் 63ம் தரிசிக்கும் அரிய வாய்ப்பு. 15.4.08 முதல் 6 நாட்கள். பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. 3,200/-
- **மங்களா சாசன திவ்ய தேசங்களில்** பாண்டிய நாட்டில் 18ம், மலை நாட்டில் 13ம் ஆக 31 திவ்யதேசங்களை தரிசிக்கும் அரியவாய்ப்பு. 23.4.08 முதல் 6 நாட்கள். பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. 3,560/-

இங்கேயும் பதிவு செய்யலாம் : திருமதி கலாவதி சஞ்சீவி
14, விநாயகம் அவின்யூ, ஐஸ்வர்யா அப்பார்ட்மெண்ட்ஸ்,
வெங்கடேசநகர், விருகம்பாக்கம், சென்னை-92. போன் : 24795017

மூலிகை மந்திரம்-11



"என்ன வசந்தா... வீடு முழுக்க ஒரு புதுமையான இனிமையான வாசனை... என்ன ஸ்பிரே இது...?" விருந்துக்கு வந்திருந்த சித்ரா கேட்க,

முகமெல்லாம் மலர, எல்லா அறைகளிலும் ஜன்னலிலோ, மூலையிலோ இருந்த சிறு தொட்டிகளைக் காட்டினாள் வசந்தா.

ஏதோ அழகுச் செடிகள் போல இருக்கிறதே என்று நெருங்கிப் பார்த்தால்...! அட! புதினா செடிகள்!

"புதினா செடிகளோட, ரோஸ் மேரி செடி, லெமன் கிராஸ் சேர்த்து சின்னச் சின்னத் தொட்டியில வளர்க்கிறேன்.. அதை ரூம்லே வச்சா போதும். ரொம்ப ஃப்ரெஷ்ஷா நல்ல வாசனை..." என்று விவரிக்க, புதினாவுக்கு இப்படி ஒரு மகிமையா என்று வியந்தாள் சித்ரா.

ஆரோக்கியத்துக்கு...

புதினாவில் ஏகப்பட்ட இரும்புச் சத்து, கால்சியம், விட்டமின் எல்லாமே இருக்கு. ரத்தத்தைச் சுத்தம் செய்யற சக்தி புதினாவில் நிறையவே இருக்கு. வாந்தியில தவிக்கிற மசக்கை பெண்களுக்கு புதினா ரொம்ப நல்லது.

புதினாவை இலேசா வதக்கி கொதிக்கிற நீரில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி, கொஞ்சம் மிளகு, உப்பு தூவிக் கொடுங்க. வாந்தி நின்னுடும்!

புதினாவுல இருக்கிற மெந்தால் **(menthol)** தருகிற வாசமும், புத்துணர்ச்சியும் தனி சுகம்.

அழகுக்கு...

புதினா இலைகளைச் சுத்தம் செஞ்சு காயவைங்க. காய்ந்தபின் அதோட கொஞ்சம் வேப்பங்குச்சி, கொஞ்சம் உப்பு சேர்த்துப் பொடி பண்ணுங்க. இந்தப் பொடியால் பல் தேய்ச்சா வாய் மணக்கும். பல்லும் பளீர்.

முகத்துல பரு வந்தா சில பேர் கொதி நீர்ல ஆவி பிடிப்பாங்க. அப்படி பிடிக்கறப்போ வெந்நீர்ல கொஞ்சம் புதினா இலைகளையும் போடுங்க. பருக்களால, வற்ற சீழ், தழும்பு, பள்ளம் எல்லாவற்றையுமே அப்படியே தடுத்துவிடும்.

பருவே வராமல் தடுக்க ஒரு பேக் **(pack)** செய்யலாம்.

ஜாதிக்காய், மாசிக்காய், வெட்டிவேர் பொடி எல்லாம் நாட்டு மருந்துக் கடைகள்ல கிடைக்கும். (ஜாதிக்காய், மாசிக்காய்

ராஜம் முரளி

புதினாவுக்கு எங்கிருந்து அப்படி ஒரு மெந்தால் வாசம்?

கிரேக்க புராணத்துல ஒரு கதை..

கிரேக்கக் கடவுள் ப்ளூட்டோவின் மனைவி பெர்சபோன். ராட்சசியான அவளை விட்டுட்டு 'மெந்தே' என்கிற தேவதை மேல் ப்ளூட்டோவுக்கு காதல் வர, அவ்வளவுதான்... 'மெந்தே'யை குட்டைச் செடியாகும்படி மனைவி சாபமிட்டு விட்டாளாம்... பாவம், ப்ளூட்டோ குட்டைச் செடியாகிவிட்ட தன் காதலிக்கு இனிமையான மெந்தால் வாசத்தை மட்டும் தர முடிந்ததாம்! அதுதான் புதினாவாம்!



மிக்ஸியிலேகூட பொடிக்கலாம்]. எல்லாப் பொடியும் ஒரு சிட்டிகை எடுத்து, அதோட கொஞ்சமா பச்சைக் கற்பூரம், கால் டீஸ்பூன் முல்தானிமட்டி, கால் டீஸ்பூன் புதினாப் பொடி சேர்த்துக் குழைத்து, முகத்துல தடவி ஃபேஷியல் பண்ணலாம். பருவே வராதுன்னு புதினா கியாரண்டி கொடுக்கும். தழும்புகளையும் சுத்தமாப் போக்கிடும்.

முகத்துக்கு மட்டுமில்ல... தலை முடிக்குக்கூட புதினாவால பேக் செய்ய முடியுமே!

புதினாச் சாறு, பூண்டுச் சாறு, எலுமிச்சைச் சாறு தலா ஒரு ஸ்பூன் எடுத்துக் கலந்து, கூந்தல்ல தடவி ஊற வையுங்க. கொஞ்ச நேரம் கழிச்சு ஷாம்பு போட்டு அலசினா பொடுகுக்கு பை! பை!

புதினா ரெஸிபிஸ்!

புதினா தட்டை :

அரிசி மாவு - 2 கப்,
பொட்டுக்கடலை மாவு - ½ கப்,
எள் - 1 தேக்கரண்டி,
புதினா இலை - 10,
பச்சை மிளகாய் - 2,
உப்பு, பெருங்காயம் - தேவையான அளவு.

செய்முறை :

புதினா இலை, பச்சை மிளகாய் இரண்டையும் அரைத்து விழுதாக்கவும். அரிசி மாவு, பொட்டுக்கடலை மாவு இவற்றுடன் விழுதைக் கலந்து, பெருங்காயம், உப்பு சேர்த்து தட்டை களாகத் தட்டவும். எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

புதினா சாஸ் :

புதினா கீரை - 2 கப் [அரைக்கவும்],
சர்க்கரை - 4 கப்,
மிளகு - 1 டீஸ்பூன்,
மிளகாய்ப் பொடி - 2 ஸ்பூன்.

செய்முறை :

சர்க்கரைப்பாகு வைக்கவும். சர்க்கரை கரையும்போதே புதினா விழுது, மிளகு, மிளகாய்ப் பொடி, பெருங்காயம், உப்பு சேர்த்துக் கிளறவும். பின் வடிகட்டியில் வடிகட்டி, மீண்டும் அடுப்பில் வைத்து சாஸ் பதம் வரும்வரை காய்ச்சவும்.

– பத்மினி பட்டாபிராமன்

படங்கள் : ஸ்ரீஹரி



பசுவுக்கு (கோமாதா) இணையாக எந்த தெய்வமும் உலகில் இல்லை! கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை!

உங்கள் இல்லங்களில் சகல செல்வங்களும் நிறைய

மாட்டுப்பொங்கல் அன்று (16-01-2008)

கோபூஜையுடன் கோதானம் செய்து

பித்ரு தோஷம், புத்திர தோஷம், நவகிரஹ தோஷம், திருமண தடை மற்றும் அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுபட்டு சகல ஐஸ்வர்யங்களையும் பெற அன்புடன் அழைக்கிறோம்

கோதானம் செய்வது ஓராயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலனை கொடுக்கும்

அனைத்து தெய்வங்களும் உள்ளடங்கிய கோமாதாவை கோதானம் (பசுவும் கன்றும்) செய்தால், பித்ரு தோஷம், புத்திர தோஷம், திருமண தடை மற்றும் அனைத்து தோஷங்களும் விலகி குடும்பத்தில் மங்கல காரியங்கள் தடையின்றி நடைபெறும். கோதானம் செய்ய ரூ.9,000/- கீழ் கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான பெரிய கோமாதா விக்ரகமும், ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும் அனுப்பி வைக்கப்படும். கோதானம் செய்பவர்களின் இல்லங்களில் மஹாலக்ஷ்மி விரும்பி வந்து வாசம் செய்வாள்.

மாட்டுப் பொங்கல் அன்று நடைபெறும் கோபூஜையில் கலந்து கொள்பவர்கள் தங்களது பிரார்த்தனைகளுடன் ரூ.500/- அனுப்ப வேண்டுகிறோம். கோபூஜையில் கலந்து கொண்டு பராசக்தியின் பேரருளை பெற்ற தங்களுக்கு பிரசாதத்துடன் வெள்ளியிலான ஸ்ரீராமர் பாதம் 2 அனுப்பி வைக்கப்படும். மேலும் கோதானம், கோபூஜை மற்றும் வயது முதிர்ந்த, பால்வற்றிய, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்க தங்கள் நன்கொடையை கீழ்கண்ட முகவரிக்கு Cheque/DD/MO மூலமாக Sri Ghosala Seva Trust, Chennai என்ற பெயருக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

மாவட்டங்கள் தோறும் வயதான பசுக்கள் பாதுகாப்பிற்கு மடங்கள் அமைக்க ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கப்படுகிறது. மேலும் வயதான பசுக்கள் பாதுகாப்பிற்கு செல்: 93400 22233

சுத்தமான பசுஞ் சாணத்தில் தயார் செய்யப்பட்ட விபூதி, பிரசாதங்களுடன் அனுப்பி வைக்கப்படும்.



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

பசுமடம்

வயதான பசுக்கள் பாதுகாப்பு இல்லம்

(Recognised by Animal Welfare Board of India)

பெருமாளகரம், திருவேற்காடு(PO), சென்னை-77 போன்: 044-3299 9888



நாஞ்சில் நாட்டுச் சமையல்!

புத்தாண்டும்
அதுவுமா
புது விதமான
சமையலை
சொல்லித் தரப்
போறேன்!
என்றென்றும்
நாவில்
ருசிக்கக் கூடிய
நாஞ்சில்
நாட்டுச் சமையல்!
செஞ்சுப் பார்த்து,
சுவைச்சு
மகிழுங்க!

ருசியோ... ருசி - 1



நளபாக சக்கரவர்த்தி **ஜேக்கப்**

விமலா அருணி வேறு யாருமல்ல; என்னுடைய தாயாரேதான்! நர்ஸிங் கல்லூரியின் முதல்வரா பணிபுரிந்தவங்க. அருமையா சமைப்பாங்க. நான் இன்னிக்கு விதவிதமா சமைக்கிறேன்னா, அதுக்கு முழு முதற்காரணமே அம்மாவோட கைப்பக்குவம்தான். இப்பதான் அண்மையிலே இறந்துட்டாங்க. ஆனா அவங்களோட ரெஸிபிகளின் தனி ருசி என்னிக்குமே இருக்கும்!



தக்காளி சால்னா

- விமலா அருணி

தேவையான பொருள்கள் :

தக்காளி - 5,
கேரட் (நறுக்கியது) - ½ கப்,
பீன்ஸ் (நறுக்கியது) - ½ கப்,
தேங்காய் எண்ணெய் - 20 மில்லி,
தேங்காய் - 1 கப்,
பட்டை, கிராம்பு, ஏலக்காய் - 10 கிராம்,
கசகசா - 5 கிராம்,
அன்னாசிப்பூ - 2 கிராம்,
பச்சை மிளகாய் - 3,
முந்திரி (அரைத்தது) - 1 கப்,
சோம்பு - 5 கிராம்,

சிகப்பி பயிறு குழம்பு

- ஈடித் ஃப்ளாரென்ஸ்

ஈடித் ஃப்ளாரென்ஸ், எனக்கு மாமா வழியில் சொந்தம். 'சிகப்பி'ங்கிறது ஈடித்தோட பாட்டி பேரு! பாட்டியோட ஸ்பெஷல் ரெஸிபிக்கு அவங்க பேரையே சூட்டியிருக்காங்க. பொடிச்ச பரோட்டா, சால்னா... இதெல்லாம் ஈடித்தோட ஸ்பெஷல் மெனு!



தேவையான பொருள்கள் :

காராமணி பயிறு - 1 கப்,
பச்சைப் பயிறு - 1 கப், தக்காளி - 2,
இஞ்சி (சிறிதாக நறுக்கியது) - 5 கிராம்,
பூண்டு (சிறிதாக நறுக்கியது) - 5 கிராம்,
பச்சை மிளகாய் - 3,
கடுகு, உளுந்து - தாளிக்க,
தேங்காய் (சிறிதாக நறுக்கியது) - 1 கப்,
மஞ்சள் தூள் - ½ தேக்கரண்டி,
பச்சரிசி (அரைத்தது) - ½ கப்,
உப்பு - தேவையான அளவு,





சீரகம் - 5 கிராம்,
இஞ்சி, பூண்டு விழுது - சிறிது,
வெங்காயம் (நறுக்கியது) - 1 கப்,
உருளைக் கிழங்கு - ½ கப்.

செய்முறை :

★ கேரட், பீன்ஸை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். உருளைக்கிழங்கையும் வெட்டிக் கொள்ளவும்.

★ தேங்காய், சோம்பு, சீரகம், பட்டை, கிராம்பு, ஏலக்காய், அன்னாசிப்பூ, பச்சை மிளகாய், கசகசா இவையனைத்தையும் சேர்த்து சிறிது தண்ணீர் ஊற்றி, அரைத்துக் கொள்ளவும்.

★ பின்னர், முந்திரியை ஊறவைத்து மைய அரைத்துக் கொள்ளவும்.

மிளகாய்த் தூள் -10 கிராம்,
தனியா - 20 கிராம்,
நல்லெண்ணெய் - 25 மில்லி

செய்முறை :

★ காராமணி மற்றும் பச்சைப் பயிறு களை வேகவைத்துக் கொள்ளவும்.

★ ஒரு பாத்திரத்தில் எண்ணெய் காய்ந்தவுடன் அதில் கடுகு, உளுந்து, நறுக்கிய இஞ்சி, பூண்டு ஆகியவற்றைச் சேர்த்து வதக்கவும்.





அமைதியின் இருப்பிடம்





Sreevatsa Dwaraka
COIMBATORE

ஸ்ரீவத்ஸா துவாரகா

தனி வீடுகள்

2700 சதுர அடிக்கும் மேல் கட்டப்படும்
தனி வீடுகள் 7.35 சென்ட் நிலத்தில்

VLB ஜானகியம்மாள் கல்லூரி எதிரில்,
ஸ்ரீவத்ஸா ஹில் வியூ அருகில், கோவைப்புதூர், கோயமுத்தூர்

இயற்கையான சூழல்... இயல்பான வாழ்க்கை இவை இணைந்த ஓரிடம்தான் துவாரகா... வாழ்க்கை முழுவதும் அமைதியை பூரணமாக அனுபவிக்க ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் அரிய வாய்ப்பை வழங்குகிறது. உங்களுக்கேற்ற வீட்டை தேர்ந்தெடுத்து இனியதொரு வாழ்க்கைக்கு தயாராகுங்கள்.

10 வீடுகள் மட்டுமே... புக்கிங் நடைபெறுகிறது.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் பி. லிட்.

8/2, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர் - 641043.
Cell : 94433 41901, Tel : 0422 - 2437422 / 2441481 / 2432184 / 2432042,
Fax : 0422 - 2430899 E-mail : realestate@sreevatsa.com

★ வாணலியில் எண்ணெயை ஊற்றி, அதில் நறுக்கிய வெங்காயம் சேர்த்து பொன்னிறமாக வதக்கவும். பின் அதனுடன் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து வதக்கவும்.

★ பின்பு, அதில் பொடியாக நறுக்கிய தக்காளியைச் சேர்த்து நன்றாக வதங்கியவுடன் வெட்டிய காய்கறிகளைச் சேர்த்து, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி அரைத்த தேங்காய்க் கலவையைச் சேர்த்து நன்றாக வதக்கவும்.

★ வறுத்துப் பொடியாக்கிய தனியா மற்றும் முந்திரி பேஸ்ட் சேர்த்து நன்றாகக் கொதிக்க விடவும்.

★ காய்கறிகள் வெந்த வுடன் உப்பு சேர்த்து இறக்கினால் தக்காளி சால்னா தயார்.

★ பிறகு அதில் வெட்டிய தக்காளி, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள் சேர்த்து வதக்கவும்.

★ மற்றும் நறுக்கிய பச்சை மிளகாய், சிறிதாக நறுக்கிய தேங்காயைச் சேர்த்து நன்றாக வதக்கவும்.

★ பின்னர் வேகவைத்த பயிறுகளை அதனுடன் சேர்த்து நன்றாகக் கலக்கவும். வறுத்து அரைத்த தனியா சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

★ நைசாக அரைத்த பச்சரிசியைச் சேர்த்து நன்றாகக் கொதிக்கவிடவும். இறுதியில், உப்பு சரிபார்த்து இறக்கினால் சிகப்பி பயிறு குழம்பு ரெடி!

கறிவேப்பிலை கெட்டிக் குழம்பு

- சீதா

எங்கம்மாவிடமே சமையலில் நற்சான்றிதழ் வாங்கிய பெருமைக்குரியவர்தான் சீதா. வீட்டுல என்ன இருக்கோ அதை வெச்சே, அசத்தலா விருந்து சமைச்சுடுவாங்க. இவங்க சமைக்கிற கறிவேப்பிலை கெட்டிக் குழம்பு ரொம்ப ருசியா இருக்கும். ட்ரை பண்ணிப் பாருங்க!

தேவையான பொருள்கள் :

கறிவேப்பிலை - 2 கப்,
சின்ன வெங்காயம் - 1 கப்,
பச்சை மிளகாய் - 3,
இஞ்சி - 5 கிராம், பூண்டு - 5 கிராம்,
சோம்பு - சிறிது,

வெங்காயச் சாறு

- சித்ரா

தேனி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற நாடார் சமுதாயத்து நல்லதொரு ரெஸிபி வெங்காயச் சாறு! தக்காளி, சின்ன வெங்காயம் குளிர்ச்சி தரும். மிளகு, சீரகம், பூண்டு சூடு தரும். இரண்டையுமே முறையாகக் கலந்து ஆல் டைம் சூப்பாகத் தயாரித்துத் தந்திருக்கிறார் சித்ரா. ருசியான, கமகமக்கும் சமையல் மட்டுமே செய்யத் தெரிந்தவர் இவர்!

தேவையான பொருள்கள் :

தக்காளி - 2, சீரகம் - 10 கிராம்,
மிளகு - 15 கிராம்,
சின்ன வெங்காயம் - 1 கப்,
பூண்டு - 5 பல்,
கடுகு, உளுந்து -



நல்லெண்ணெய் - 25 மில்லி,
கடுகு - சிறிது,
முந்திரி - 20 கிராம்,
வெந்தயம் - 5 கிராம்,
தக்காளி (அரைத்தது) - 1 கப்,
மஞ்சள் தூள் - சிறிது,

புளித் தண்ணீர் - 1 கப்,
தனியா - 10 கிராம்,
உப்பு - தேவையான அளவு.

செய்முறை :

★ இஞ்சி, பச்சை மிளகாய், சீரகம்,

5 கிராம்,
பெருங்காயத் தூள் - சிறிது,
தனியா - 10 கிராம்,
கறிவேப்பிலை - சிறிது,
மல்லித்தழை - சிறிது,
உப்பு, காய்ந்த மிளகாய் - தேவையான அளவு,

எண்ணெய் - 20 மில்லி

செய்முறை :

★ வரமல்லியை (தனியா) நிறம் மாறும் வரை வறுத்துப் பொடியாக்கவும்.

★ பிறகு சீரகம், மிளகு, பூண்டு



கறிவேப்பிலை, சோம்பு, சின்ன வெங்காயம், கடுகு, முந்திரி இவையனைத்தையும் சிறிது நல்லெண்ணெய் ஊற்றி நன்றாக வதக்கவும். அதைச் சிறிது தண்ணீர் ஊற்றி அரைத்துக் கொள்ளவும்.

★ ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு அதில் கடுகு, சோம்பு, வெந்தயம் சேர்த்து வதக்கவம்.

★ பின்னர் அதில் சின்ன வெங்காயம், பூண்டு சேர்த்து வதக்கவும். வதங்கியபின் அதில் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள் மற்றும் வறுத்து அரைத்து வைத்த மல்லியையும் சேர்த்து வதக்கவும்.

★ புளித் தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவும்.

★ பிறகு, அரைத்து வைத்த கலவையைச் சேர்த்து நன்றாகக் கொதிக்க வைக்கவும்.

★ இறுதியில், உப்பு சேர்த்து இறக்கினால், கறிவேப்பிலை கெட்டிக் குழம்பு ரெடி.

இவற்றை இடித்துக் கொள்ளவும்.

★ ஒரு பாத்திரத்தில் சிறிது எண்ணெய் ஊற்றி அதில் வெங்காயம், நறுக்கிய தக்காளி சேர்த்து வதக்கவும்.

★ பின்னர், இடித்து வைத்த மிளகு, சீரகம், பூண்டு இவற்றுடன் சேர்த்து வதக்கவும்.

★ பின் வறுத்துப் பொடியாக்கிய தனியாவை இதனுடன் சேர்த்து வதக்கவும். தேவையான அளவு தண்ணீர் ஊற்றிக் கொள்ளவும்.

★ பின்பு ஒரு பாத்திரத்தில் சிறிது எண்ணெய் ஊற்றி அதில் கடுகு, உளுந்து, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை, சிறிது பெருங்காயத் தூள் சேர்த்து வதக்கி அதனுடன் சேர்க்கவும்.

★ தேவையான அளவு உப்பு சேர்த்து, அதில் நறுக்கிய மல்லித்தழையை சேர்த்து இறக்கினால் வெங்காயச் சாறு தயார்.

நளபாகப் போட்டி - 12 (முடிவு)

டிசம்பர் 2007ல் இடம்பெற்ற போட்டியின் விடை :

விடைகள் :

1. அவரைக்காய், 2. வாழைக்காய், 3. வாழைத்தண்டு, 4. பலாக்காய், 5. பூசணிக்காய், 6. வெண்டைக்காய், 7. கத்தரிக்காய், 8. வெங்காயம்.

வந்து குவிந்த கூப்பன்களில் ரூ. 150/- பரிசு பெறும் 20 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்!

---

1. செந்தமிழ் ராமலிங்கம், நாகை. 2. ஆர். ஜனனி பார்கவி, புதுக்கோட்டை. 3. எம். வரலக்ஷ்மி, கிழக்கு முகப்பேர் 4. ஏ. சாந்தா ராமானுஜம், சென்னை - 97, 5. லலிதா ராமசேஷன், பெங்களூர் - 78, 6. ஆர். ரங்கநாதன், மும்பை -77, 7. ஜி. கௌரி, ஈரோடு - 2, 8. எஸ். பிருந்தா, திருச்சி -6, 9. நா. அலமேலு மங்கம்மாள், திருச்செங்கோடு, 10. பி. செல்வி. கோயமுத்தூர் - 16, 11. லலிதா பலராமன், கர்நாடகா, 12. ரெ. பூங்கொடி, திருச்சிராப்பள்ளி, 13. என். லலிதா, கிருஷ்ணகிரி, 14. ஆர். உமாமஹேஸ்வரி, ஈரோடு - 1, 15. பி. சிவரஞ்சனி, வேலூர் - 1, 16. சி. தன்யா, நாமக்கல், 17. கே. சுப்புலக்ஷ்மி, பவானி, 18. ஆர். கலைச்செல்வி, நெய்வேலி, 19. எஸ். ஜெயந்தி, பெரம்பலூர் மாவட்டம், 20. ஆர். ராஜலக்ஷ்மி, சென்னை - 33.



ஒவ்வொரு கேள்வியிலும் உள்ள வாக்கியங்கள் எதைக் குறிக்கின்றன? கீழே உள்ள பட்டியலிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுத்துப் பொருத்துங்கள்.

1. இதை உணவில் சேர்த்துக் கொள்வதால் உடலில் புதிய ரத்தம் உற்பத்தியாகும். தாது விருத்தி உண்டாகும். உடல் பலம் பெறும்.

2. வாய்ப்புண் ஆறுவதற்கு இதைப் பயன்படுத்துவதுண்டு. கேரள உணவில் அதிகம் பயன்பட்டாலும், சர்க்கரை நோய்க்காரர்கள் இதைத் தவிர்க்க வேண்டும்.

3. பெரும்பாலும் ஊறுகாயாகத்தான் பயன்படுத்துகின்றனர். தலைமுடி தைலத்தில் இடம்பெறுவதுண்டு. அதியமானுக்குப் புகழ் சேர்த்த காய்.

4. மணம் பெறுவதற்காகச் சேர்க்கப்படும் இதை, எல்லோருமே தூக்கி எறிந்துவிடுகிறோம். வைட்டமின்களும் சுண்ணாம்புச் சத்தும் கொண்ட இதில் துவையல் செய்வதுண்டு.

5. பற்கள், நரம்புகளுக்கு பலம் தரும் இதை பசுக்களுக்கு அளிப்பது புண்ணியம் என்று கருதப்படுகிறது.

6. அபூர்வத்துக்கு உதாரணமாக இதன் பூ பூப்பதைக் குறிப்பிடுவார்கள்.

7. துவையலுக்குப் பயன்படும் இதில் பல்பொடியும் செய்வதுண்டு.

8. ஊறுகாய்க்குப் பயன்படும் இந்தக் காயின் சாறு தாகத்தைத் தீர்க்கும். வைட்டமின் சி நிறையக் கொண்டது.

விடைப் பட்டியல் :

தேங்காய், கறிவேப்பிலை, அத்தி, முருங்கைக்காய், நெல்லிக்காய், அகத்திக்கீரை, எலுமிச்சை, புதினா

– ஜி.எஸ்.எஸ்.

இங்குள்ள புதிரைச் சரியாக நிரப்பி வெட்டி மங்கையர் மலருக்கு அனுப்புங்க. குலுக்கல் முறையில் 20 பேருக்கு 150 ரூபாய் பரிசு! ஜெராக்ஸ் அனுப்பக் கூடாது!

கடைசித் தேதி : 15.1.2008

உறையின் மீது நளபாகப் போட்டி - 13 என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....



பெயர் மாற்றங்கள்!

★ வளையாபதியாகிய நான், திருமணத் துக்குப் பின் 'வளைஞ்சபதி' எனப் பெயர் மாற்றம் செய்து கொண்டுள்ளேன்.

★ செல்வமுத்து ஆகிய நான், பெரிய பட்ஜெட் படம் எடுத்து ஊற்றிக் கொண்ட தால் இப்போது 'பிச்சைமுத்து'வாகி விட்டேன்.

★ சேரன் எனும் பெயர் கொண்ட நான், ரிடையர் ஆகிவிட்டதால் என் பெயரை 'ஈஸிசேரன்' என்று மாற்றிக் கொண்டுள் ளேன்.

★ ரங்கிலால் என்ற பெய ரைக் கொண்ட கட்சித் தலைவன் நான். பல கட்சி களுக்கு மாறிக் கொண்டே யிருப்பதால் தொண்டர் கள் எனக்கு 'மங்கிலால்' என நாமகரணம் செய்துள் ளார்கள்.

★ ஆதிசேஷன் என்ற என் பெயர் நாய் வண்டி டிரைவராக வேலை கிடைத்த தும் 'அல்சேஷன்' என மாறிவிட்டது.

★ கந்தசாமி என் பூர் விகப் பெயர். லேவா தொழிலை மேற்கொண்ட பின் நான் 'கந்துசாமி'யாகி விட்டேன்.

★ வாசுதேவன் எனும் நாமகரணம் உடைய அடியேன் வாஸ்து சாஸ்திரம் கற்றுத் தேர்ச்சி பெற்றதிலிருந்து 'வாஸ்து தேவனாக' உருவெடுத்துள்ளேன்.

★ அகர்வால், சர்க்கரை வியாதி உள்ளது என்பதை உணர்ந்தபின் 'சுகர்வால்' ஆகிவிட் டார்.

★ ரோஷன்லால் கடும் உடற்பயிற்சி மூலம் எடையைக் குறைத்து விட்டதால் அவர் இப்போது 'ரேஷன்'லால்.

– ஆர். மாலதி தமன்,
சென்னை - 103.



பொங்கலுக்கு வாங்கி வரும் கரும்பை தோகையுடன் வைக்கவும். அப்பொழுது தான் கரும்பு வாடாமல் இருக்கும். கரும்பை குழந்தைகளுக்கு மதிய வேளை களில் சாப்பிடக் கொடுங்கள். குளிர்காலம் என்பதால் சளி பிடிக்க வாய்ப்புகள் அதிகம்.

– சிவகாமி, குஜராத்.

SUMMER SPECIAL

பத்ரிநாத் - கேதார்நாத் - ஹரித்துவார்
12 Days Tour - Rs.7,950/-

சிம்லா - குலுமணாலி - அமிர்தசரஸ்
டெல்லி - ஆக்ரா
12 Days Tour - Rs.7,350/-

கோவா - உடுப்பி - மூகாம்பிகை
அலிபேரு - மைசூர்
9 Days Tour - Rs.5,950/-

காசி - அலகாபாத் - ஹரித்துவார்
டெல்லி - ஆக்ரா - மதுரா
12 Days Tour - Rs. 6,475/-

கல்கத்தா – டார்ஜிலிங் – கேங்டாக்
10 Days Tour - Rs. 6,600/-

ஒரே குரூப்பாக வரும் அன்பர்களுக்கு அவர்கள் விரும்பும் இடங்களுக்கு அவர்கள் விரும்பும் தேதியில் யாத்திரை செய்து தரப்படும்.

Avail LTC / LFC

SINGAPORE - MALAYSIA

8 Days - 7 Nights

2 N - GENTING HIGHLAND
2 N - KUALA LUMPUR
3 N - SINGAPORE

RS.35,500



Every Month Tour

Cell: 9941 99 99 88

METRO TRAVELS
No.67, Basha St, Chennai - 94.
Ph- 2374 2466/ 2994 / 2882

E-mail - metrotravelsindia@yahoo.co.in, www.metrotravelsindia.com

திறமைகள் இங்கு திறக்கப்படும்..



Creative Kids
Add Value to Self



அபாகஸ், வேதிக்மேக்ஸ், அழகிய கையெழுத்து பயிற்சி, One word subtitution முதலிய தரமான புத்தகங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் வரவேற்பறையிலே, உங்களது ஓய்வு நேரத்தில் பயன் உள்ள முறையில் பணம் சம்பாதிக்கலாம்.

சிறிய முதலீட்டில் பெரிய லாபம் அடையலாம், இதற்கான பயிற்சி உங்களுக்கு தேவைப்பட்டால், நாங்கள் பயிற்சி அளிக்கிறோம்.

புத்தகங்கள் மட்டும் தேவையென்றாலும் எங்களிடம் கிடைக்கும்.

பிரான்சைஸி பீஸ் மற்றும் ராயல்டி எதுவும் கிடையாது.

creative_creativekids@yahoo.co.in

கிரியேட்டிவ் கிட்ஸ் 36, மஹால் 5வது தெரு மதுரை-625001. PH : 98421 32115

அருளாசித் தொடர்-7

மல்லிகை



மல்லிகை, மனத் தூய்மையைக் குறிக்கும் மலர். அன்னையிடம் இந்த மலரைச் சமர்ப்பிப்பதால் மனக்கலக்கம் போகும். சரும வியாதிகள் குணமாகும். மதுப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள், அன்னைக்கு மல்லிகையைச் சமர்ப்பிப்பதால் மன திடம் பெற்று மதுப்பழக்கத்திலிருந்து மீளலாம்.

ஸ்ரீ அன்னை

திருப்பூர் கிருஷ்ணன்

யார் எந்த நேரத்தில் யாரைச் சந்திக்க வேண்டும் என்பது ஆன்மிக உலகில் எப்படி முடிவாகிறது? அதை முடிவு செய்வது சம்பந்தப்பட்ட இருவரும் அல்ல; வேறு ஏதோ தெய்விக சக்திதான்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் தமது சீடர்களுக்காகப் பல்லாண்டுகளாய்க் காத்துக் கிடந்தார். நரேந்திரர் உள்பட யார் யார் அவரிடம் வந்து சேர்வார்கள் என்பதை, காளி அகக் காட்சியில் அவருக்குக் காட்டி அருளினாள். ஆனால் அவர்கள் என்று வருவார்கள் என்பதுதான் பரமஹம்சருக்குத் தெரியவில்லை. மண்ணில் விழுந்து புரண்டும் கதறியும் 'காளீ! அவர்களைச் சீக்கிரம் வரச் சொல்!' என்று அவர் தாபத்தோடு அழுதிருக்கிறார். அவரது அடியவர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கியதும், தாம் அகக் கண்களில் கண்டவர்களை பரமஹம்சர் புறக் கண்களிலும் கண்டுணர்ந்தார்.

பிரதான சீடர்களின் வரிசை யாரின் வருகையோடு நிறைவடைகிறது என்பதைக் கூட அவர் அறிந்திருந்தார். 1885ஆம் ஆண்டு பூர்ணர் தம்மைத் தேடி வந்தபோது ''நான் தெய்விகக் காட்சியில் கண்ட பக்தர்களின் வருகை பூர்ணருடன் முற்றுப்பெறுகிறது. இனிமேல் இத்தகைய உயர்நிலையிலுள்ள பிரதான சீடர்கள் வரமாட்டார்கள்'' என்று அறிவித்தார். ஒரே இடத்தில் ஒருசில பக்தர்கள் ஒன்றாய்க் கூட்டுச் சேர்ந்து ஆன்மிகச் சோதனைகளில் ஈடுபடுவதும் தெய்வ சங்கல்பமே!

இணையான இருபெரும் ஆன்மிகச் சக்திகளாக இயங்கியவர்கள் ஸ்ரீ அன்னையும் ஸ்ரீ அரவிந்தரும். புனிதமே வடிவான அவ்விருவரும் அதிமனச் சக்தியை மண்ணில் கொண்டுவரச் சாதனை நிகழ்த்திய ஒப்பற்ற ஆன்மிக விஞ்ஞானிகள். தனித்தனியே ஆன்மிக சாதனை செய்துவந்த அவ்விருவரும் ஒரே இடத்தில் இணைந்து தங்கள் சாதனையைத் தொடர்ந்தது இறையருளின் திட்டம்.

ஸ்ரீ அன்னையின் ஆன்மிக வரலாற்றை, இறைச்சக்தி காலக் காகிதத்தில் தன் புனிதத் திருக்கரத்தால் எழுதிய நேர்த்தி இருக்கிறதே, அது பயிலப் பயிலப் பரவசம்

தருவது. ராமாயண மகாபாரத இதிகாசங்களைப் போல ஸ்ரீ அன்னையின் சரிதமும் வாசிக்க வாசிக்க மனத்தில் மங்கலங்களைச் சேர்ப்பது. புண்ணியம் அளிப்பது. இதயத்தில் தீய நினைவுகளையெல்லாம் துப்புரவு செய்து தூய நினைவென்னும் தீபமேற்றக் கூடியது. அன்னை, ஸ்ரீஅரவிந்தரின் முதல் சந்திப்புக் குறித்த வரலாறு, முழு ராமாயணத்தில் சுந்தர காண்டம் தனி முக்கியத்துவம் பெறுவது போல் பெரும்சிறப்பு நிறைந்தது.

பிரெஞ்ச் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்கோடு திகழ்ந்தவர் பால்ரிச்சர்ட். அதன் காரணமாக பிரெஞ்ச் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாண்டிச்சேரியில் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புப் பெற்றார். வேட்பாளரின் மனைவி





வேட்பாளருடன் செல்வது இயல்புதானே? பால்ரிச்சர்டுடன் பாண்டிச்சேரி புறப்பட்டார் மிர்ரா. அந்தத் திருத்தலம், தன்னை முற்றிலுமாக ஆட்கொள்ளப் போகிறது என்பதையும் மிகவிரைவில் அங்கே நிரந்தரமாய்த் தங்கும் முடிவைத் தான் எடுக்கப் போகிறோம் என்பதையும் அவர் அப்போது அறியவில்லை.

பிரான்சிலிருந்து முதலில் ஜெனிவா. அங்கிருந்து காமகாரு என்ற ஜப்பானியக் கப்பலில் கொழும்பு பயணம். கொழும்பிலிருந்து தனுஷ்கோடி. பின்னர் தனுஷ்கோடியிலிருந்து அவர்கள் இருவரும் பாண்டிச்சேரி நோக்கிப் பயணப்பட்டனர்.

அது ஒரு ரயில் பயணம். காற்றைக் கிழித்துக் கொண்டு ஓடிய ரயிலில் அதிகம் பேசாமல் அமைதியாக அமர்ந்திருந்தார் மிர்ரா. அவரைச் சுற்றி ஓர் ஒளி கவியத் தொடங்கியதை அவரே உணர்ந்திருக்க வேண்டும். அந்த மௌனத்தின் ஆழம், மிகுந்த அர்த்தங்கள் நிறைந்தது என்பதை ரிச்சர்டும் உணர்ந்திருக்கக்கூடும். ரிச்சர்டுக்கும் ஆன்மிக நாட்டங்கள் இருந்தன. ஆனாலும் தன் மனைவி மிர்ரா தன்னிலும் மேலான ஆன்மிக உணர்வுள்ளவர் என்பதையும் ஆன்மிகப் பெருவெளியில் எட்டாத உயரத்தில் அவர் இருக்கிறார் என்பதையும் ரிச்சர்ட் உணர்ந்தே இருந்தார். விரைவில் உலகியலான குடும்ப வாழ்விலிருந்து அவர் பிரியப் போகிறார் என்பதையும் தன்னை முழுவதுமாக ஆன்மிகத்திற்கே அர்ப்பணித்துக்கொள்ளப் போகிறார் என்பதையும்கூட ரிச்சர்டின் அடிமனம் உணர்ந்திருக்கலாம்.

'தடதட' என ஓடிக்கொண்டிருந்தது ரயில். ஜன்னலின் வழியாக வெளியே பார்த்

தார் மிர்ரா. ஆகா! என்ன அற்புதக் காட்சி! மாபெரும் ஒளித்தூண் ஒன்று மண்ணையும் விண்ணையும் இணைத்துக் கொண்டு கம்பீர மாக நின்றது. வானகம் இங்கு தென்பட வேண்டும். தென்படப் போவதற்கான அறிகுறிதான் இந்த ஒளித்தூணா? மண்ணில் தெரியுது வானம் அது நம் வசப்பட லாகாதோ? வசப்படத் தொடங்குவதன் சாட்சிதான் இந்த ஒளியா?

எத்தனை ஆன்மிக சாதனைகள் நிகழ்த்தினேன்! தெய்வமே! எப்படி எப்படி எல்லாம் என்னைக் காத்தருளினாய்! மலை யிலிருந்து விழும்போது உன் திருக்கரங்கள் என்னைத் தாங்கினவே! எங்கிருக்கிறாய் நீ? மிர்ரா அந்த ஒளித்தூணை உற்றுப் பார்த்தார். இதென்ன வியப்பு! அதன் நடுவே ஓர் அழகிய முகம்.

அந்த முகத்தை விட்டுக் கண்பார் வையை அங்கே இங்கே திருப்ப முடிய வில்லை. என்னையே பார் பார் என்று சொல்லும் ஒரு மாயக் கவர்ச்சி அதனிடம்! யாருடைய முகம் இது? காற்றுவெளியில் ஒளித் தூணின் நடுவே ஏன் இந்த வசீகர முகம் இப்போது எனக்குக் காண்பிக்கப் படுகிறது? இந்த முகத்துக்குரியவர் யார்? தெய்வமா? கிருஷ்ணர்தானா? அடிக்கடி என் கனவில் வந்து சாந்தி தவழப் புன்முறுவல் பூப்பது இதோ இந்த முகம்தானே? மிர்ரா கண்ணை மூடி தியானத்தில் ஆழ்ந்தார்.

பாண்டிச்சேரி வந்ததும் மிர்ரா ரயிலி லிருந்து அந்த மண்ணில் கால்வைத்து இறங்கினார். அந்த மண்ணை அவர் பாதம் தொட்டதும் அவர் மேனி முழுவதும் ஆன்மிக அதிர்வலைகள் விறுவிறுவெனப் பாய்ந்தன. உடல் மயிர்க்கூச்செறிந்தது. அந்த மண்ணுக்கும் தனக்கும் நெருங்கிய தொடர் பிருப்பதை உணர்ந்துகொண்டார். ரிச்சர்டு டன் விருந்தினர் விடுதிக்குச் சென்றார். மாலை ஸ்ரீ அரவிந்தரைச் சென்று சந்திப்ப தாக ஏற்பாடு.

1914 மார்ச் 29. மாலை மூன்றரை மணி. ஆன்மிக உலகில் மாபெரும் புரட்சிக்கு வித்திட்ட நேரம் அது. பிரான்சிஸ் மார்ட்டின் தெருவில் முப்பத்தேழாம் எண்ணுள்ள வீடு. ஸ்ரீ அரவிந்தர் அங்குதான் அப்போது தங்கி யிருந்தார். அந்த வீட்டின் உள்ளே நுழைந்தார் கள் ரிச்சர்டும் மிர்ராவும். அந்த இல்லமே ஒளிவெள்ளத்தில் மிதப்பதுபோல் இருந்தது மிர்ராவுக்கு.

யார் அங்கே? தன்னந்தனி அறை ஒன்றில் உயர்ந்த நாற்காலியில் அமைதி தவழ அமர்ந் திருக்கிறாரே, அவர் யார்? மிர்ரா அந்த அறை யின் உள்ளே கால்கள் இழுக்கப்பட்டுத் தன்னிச்சையாய் நடந்தார். அமர்ந்திருந்த பெருமகனின் திருமுகத்தை ஏறிட்டுப் பார்த் தார். ஆயிரம் தாமரைகளைச் சேர்த்துச் செய் ததுபோல் தென்பட்ட அந்த முகத்தின் குளுமை, அவரை வியப்பு கலந்த மௌனத் தில் ஆழ்த்தியது. அவரது உணர்வுகளில் பளீரென ஒரு மின்னொளி பாய்ந்ததுபோல் இருந்தது.

தன் முன் அமர்ந்திருக்கும் அவர் வேறு யாருமல்ல. அவர் அவரேதான். கனவுகளில்

தொல்லை தரும் மனைவி!

ஒரு பக்தர், தன் மனைவியுடனும் தன் குழந்தையுடனும் தான் எடுத்துக்கொண்ட ஒரு நிழற்படத்தை ஸ்ரீ அன்னைக்கு அனுப்பி யிருந்தார். அவருடைய விளக்கக் கடிதத்தில் அவருடைய மனைவி மிகவும் தொல்லை தருகிறாள் என்று கூறி ஸ்ரீ அன்னையின் உதவியை நாடியிருந்தார். ஸ்ரீ அன்னை, அந்த நிழற்படத்தை உற்றுப் பார்த்து கணவனைத் தன் விரலால் சுட்டிக்காட்டினார். 'தொல்லை தருவது கணவனே அன்றி மனைவியல்ல' என்பதே அதன் பொருள். பல வருடங்களுக்குப் பிறகு, அந்தக் கணவரிடம் நான் இதைக் கூறியபோது அவர் பெருந்தன்மையுடன் 'ஸ்ரீ அன்னையின் கணிப்பு சரியானதே' என்று ஒப்புக்கொண்டார்.

(மா.பு. பண்டிட் எழுதிய 'ஸ்ரீ அன்னையின் மகிமையை விளக்கும் நிகழ்ச்சிக் குறிப்புகள்' என்ற நூலிலிருந்து)

அடிக்கடி வந்தவர். சற்றுமுன் காற்று வெளியில் ஒளித்தூணின் நடுவே தரிசனம் தந்தவர். ஸ்ரீகிருஷ்ணர் என்று தன் ஆழ்மனத்தால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டவர். மகான் ஸ்ரீஅரவிந்தர்.

மிர்ராவின் எல்லாப் புலன்களும் உள் ஒடுங்கின. மனம் சிந்தனையைத் தாண்டி ஏதோ ஒன்றைத் தன் உள்ளுணர்வால் உணர்ந்துகொண்டது. ஆன்மிகத்தின் பேரெல்லையைத் தொட்டுக்கொண்டிருந்த அவரது திருமுகத்தைத் தரிசனம் செய்த நிறைவில் பணிவோடு தலைகுனிந்தார். ஸ்ரீஅரவிந்தரின் பாதங்கள் அவர் கண்ணில் பட்டன. செண்பக மலர்களைச் சேர்த்துச் செய்ததுபோன்ற பொன்னிறப் பாதங்கள். தன்னைச் சரணடைவோரின் பாவங்களைத்



* ஸ்ரீ அரவிந்தர் - ஸ்ரீ அன்னை புனிதச் சின்னங்கள் மலர்களால் வரையப்பட்டுள்ளன.

தொலைக்கவென்றே காத்திருந்த பாதங்கள். மிர்ரா தன்னையறியாமல் ஸ்ரீஅரவிந்தரின் புனிதத் திருவடிகளை விழுந்து வணங்கினார். பின் எழுந்து தியான நிலையில் அமர்ந்தார். தியானத்தில் மூழ்கினார்.

எத்தனை ஆண்டுகளாக தியானம் செய்து வருகிறேன்! ஆண்டுகளாக இல்லை யுகங்களா! என் தெய்வமே! இந்தப் பெருமகனைத் தரிசிப்பதற்குத்தானே இத்தனை காலம் என் ஆன்மா காத்திருந்தது. எத்தனை நாடுகளுக்குச் சென்றேன். எத்தனை நூறு ஞானிகளைச் சந்தித்தேன். ஆன்மிகம் தொடர்பாகப் பேசிய பேச்சும் எழுதிய எழுத்தும் கொஞ்சமா? கீதையைக் கரைத்துக் குடித்துப் படித்தேன். கனவில் வந்து வந்து காட்சி தந்தும்கூட, என் கனவில் வந்த கிருஷ்ணர் பாண்டிச்சேரியில் வாழ்வதை நான் ஏன் முன்னரே உணரவில்லை? எதற்கும் வேளை வரவேண்டும் என்கிறார்களே? அந்த வேளை என் வாழ்வில் இப்போதுதான் வந்ததோ?

பாண்டிச்சேரியில் பொங்கிப் புரண்ட கடல் அலைகளுக்கு இணையாக மிர்ரா மனத்தில் சிந்தனைகள் அலையடித்தன. ஒரு மாபெரும் பிரளயமே அவர் உள்ளத்தில் உருவாகிப் பின் மெல்ல மெல்லக் கரைந்தது. அவரது அத்தனை ஆன்மிக சந்தேகங்களும் தகர்ந்து தூள் தூள் ஆகின. பின்னர் விவரிக்க இயலாத பேரமைதி. தன் தெய்வம் எது என்பது தனக்கு உணர்த்தப்பட்டுவிட்டதை மிர்ரா உணர்ந்து கொண்டார். அவர் மனத்தில் சந்தேகங்களற்ற திட நம்பிக்கை ஒளியலைகளாய்ப் பாய்ந்தன.

ஸ்ரீ அன்னை அறிந்ததை ஸ்ரீஅரவிந்தர் அறிந்து கொண்டார். பக்திப் பரவசத்துடன் மிர்ரா ஸ்ரீஅரவிந்தரிடமிருந்து விடை பெற்றுச் சென்றார். மிர்ரா ஸ்ரீ அரவிந்தரைச் சந்தித்த முதல் சந்திப்பின் அனுபவம் அவரது நாட்குறிப்பில் எழுதப்பட்டுள்ளது.

'தெய்வமே! நான் தேடிய மகாபுருஷரை நீ எனக்குக் காட்டிக் கொடுத்து விட்டாய். அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கும் உலகை உய்விக்க வந்த பெருமகனைக் கண்டுகொண்டேன். இனி தெய்வத்தின் ஆட்சி உலகில் நிலைபெறும் என்பதற்கு இந்த மகானே சாட்சி. நான் உலகெங்கும் சென்று தேடிய வாயில்படியை இதோ இங்கே பாண்டிச்சேரியில் அடைந்து விட்டேன்.'

ஓ. அந்த வாயில்படிதானே மிர்ராவை எண்ணற்ற சாதனைப் படிகளில் மேலே மேலே உயர்த்திச் சென்றது. மண்ணுலகில் வாழும்போதே அவரை தெய்வமாக மாற்றிய புனித வரலாறு, ஸ்ரீ அரவிந்தரை அவர் கண்டுகொண்ட பின்தானே தொடங்கியது!

(அருள் பெருகும்)

ராதா கிருஷ்ணமூர்த்தி, குடந்தை - 1.

மயிலாப்பூர் வாசகி விஜயலக்ஷ்மி எங்கு 25 பைசாவுக்கு அஞ்சல் அட்டை வாங்குகிறார் என்று தெரியவில்லை. 2008 - 2009 பட்ஜெட்டில் விலை குறையுமோ?

ஜனனி விஜய்குமார் கரூர் - 6.

எஸ். அலமேலு ஸ்ரீனிவாசன்,
விஷ்ணம்பேட்டை.

தபால் கார்டின் விலை நாடு முழுக்க 50 காசுகள் என்றிருக்க எஸ். விஜயலக்ஷ்மிக்கு மட்டும் 25 காசுகளுக்கு போஸ்ட் கார்ட் கிடைக்கிறதாமே! நீங்களும் நம்பி விட்டீர்களே!

இப்படி நிறைய கடிதங்கள் வந்துள்ளன. 'மேகதூத்' என்ற பெயரில் விற்கப்படும் அஞ்சலட்டைகளின் விலை 25 காசுகள்தான்! பின்பக்கம் விளம்பரம் ஒன்றை வெளியிட்டு, தயாரிப்புச் செலவை தபால் துறையினர் ஈடுகட்டுகிறார்கள்! எனவே... 25 காசுகளுக்கு அஞ்சல் அட்டை கிடைக்கிறது. விஜயலக்ஷ்மி எழுதியது சரிதான் என பதினெட்டுப்பட்டி மக்கள் முன்னிலையில் தீர்ப்பளிக்கிறேன்.





பிடித்தது

-அனுஷா நடராஜன்

கே.எஸ். கிருஷ்ணவேணி,
குடந்தை-1.

இப்பொழுதெல்லாம் யார் வீட்டுக்காவது சென்றால், பெண்கள் கதவைத் திறந்து விசாரிப்பது கூட இல்லை. ஏதாவது தகவல் கேட்டால், ஜன்னல் வழியே பார்த்து, 'தெரியாது' என்று முகத்தில் அடித்தாற்போல் கூறி விடுகிறார்கள். முகவரி தெரியாமல் தவிக்கும்போது, ரொம்பவே சலிப்பாக உள்ளது. தமிழ் மக்களின் விருந்தோம்பல் குணம், இன்முக வழிகாட்டல் எல்லாம் எங்கே போயிற்று?



மோட்டார் பைக்கை நிறுத்தி லிஃப்ட் கேட்கிறார்கள். ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் இறங்கிக் கொண்டு, கத்தியைக் காட்டி, வழிப்பறி செய்கிறார்கள்.

"கொஞ்சம் குடிக்க தண்ணீ வேணும்!" என்று கெஞ்சுகிறார்கள். உள்ளே போய் எடுத்து வருவதற்குள், மயக்க மருந்து தெளித்து, வீட்டைக் கொள்ளை அடித்து விடுகிறார்கள்.

"இந்த அட்ரஸ் எங்க இருக்கு

மேடம்?'' என்று பேச்சு கொடுத்து, கழுத்தில் கிடக்கும் தங்கச் செயினைப் பறித்துக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். தமிழர்களின் விருந்தோம்பலும் இன்முக வழிகாட்டலும் இத்தகையவர்களுடன் சேர்ந்து தான் எங்கேயாவது ஓடிப் போயிருக்கணும்.

எஸ். சௌந்தரவல்லி,



டாப் 10?

திண்டுக்கல்.

அனுஷா, புனித யாத்திரை போவதுண்டா?

நான் போகாவிட்டால் என்ன? நம்ப வாசகிகள் போய் வந்த அனுபவங்களைப் படித்துப் படித்தே, ஏகப்பட்ட புண்ணியம் சேர்ந்துவிட்டது. சமீபத்தில் சாளக்கிராம யாத்திரை போய் வந்த நமது சென்னை வாசகி பத்மாவதி கோவிந்தாசாரி, தமது அனுபவங்களை, டயரிக் குறிப்பு போல மிக விவரமாக எழுதியிருந்தாள். [சுமார் 12 பக்கங்கள்] நானும் அவருடன் சங்கமித்ரா எக்ஸ்பிரஸில் ஏறி திவ்ய தரிசனம் முடித்து, வீடு வந்து சேர்ந்ததும் ததியாராதனையில் கலந்து கொண்டு யாத்திரையைப் பூர்த்தி செய்தேன்!



சரோஜாவாஞ்சி, பெங்களூரு - 93.

தூதுவர்களிலே சிறந்தவர் யார்? அனுமாரா? ஸ்ரீ கிருஷ்ணரா?

ஸ்ரீ கிருஷ்ணர், குருக்ஷேத்ர போரை, முடித்து வைக்கவில்லை; ஆரம்பித்து வைத்தார். பங்காளிகளுக்கு இடையே பஞ்சாயத்துப் பண்ணினார் என்றாலும்... கிருஷ்ணரை, தூதுவர் என்பதைக் காட்டிலும், சூத்தரி என்பதே வெகுப் பொருத்தம்!

ஆனால் அனுமன் அப்படியல்ல! அவரது செல்லப் பெயரே ஸ்ரீராமதூதன்தான்! தன்னுடைய எஜமானின் வீரத்தைப் பற்றி எதிராளியிடம் போய்ச் சொன்னது, எதிராளியின் படைபலத்தைத் தெரிந்து கொண்டு வந்தது, சீதையைச் சந்தித்து விவரம் தெரிவித்தது, ராமரிடம் ஓடோடி வந்து 'கண்டேன் சீதையை!' என்று நின்றது... பொறுப்பும், சுறுசுறுப்பும் கொண்ட அனுமாருக்கே அனுஷாவின் வோட்டு!

எம்.எஸ். ராகவன், மயிலாப்பூர்.

மௌன விரதம், உண்ணாவிரதம் எது ரொம்ப சிரமம்?

பெண்களுக்கு மௌனவிரதம்

ஆண்களுக்கு உண்ணாவிரதம்

அரசியல்வாதிக்கு இரண்டுமே!

எம். மாலதிராமன், ஹைதராபாத்.

அனுஷாவின் தினசரி பிரார்த்தனை என்ன?

''நன்றி, கடவுளே!''

ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை

தேடித் தேடி...



வீடே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. லட்சுமியின் கணவர் ஒருபுறம் தேடிக் கொண்டிருந்தார். மருமகள்கள் இருவரும் பரபரப்பாகத் தேடிக்கொண்டிருந்தனர். வீட்டில் வேலை செய்யும் வள்ளியும் ரொம்ப பயத்துடன் தேட ஆரம்பித்தாள். "இங்கதானே வெச்சேன். பெருமாளை சேவித்துவிட்டு வந்ததும் இங்கேதானே வெச்சேன்"னு புலம்பிக் கொண்டேயிருந்தாள் லட்சுமி.

அப்போது, "பாட்டி, நீ தப்புத் தப்பா எழுதியிருக்கே. உனக்கு ஃபெயில் மார்க்தான் போட்டிருக்கேன்" என்று லட்சுமியின் ஸ்ரீராமஜெயம் நோட்டை எடுத்துக்கொண்டு ஓடி வந்தாள், லட்சுமியின் குட்டிப் பேத்தி ஸ்ரேயா. லட்சுமியின் பல் செட் சிரித்தது! எல்லோருக்கும் போன உயிர் திரும்பி வந்தது.

- அனுராதா மணிவண்ணன், கோயமுத்தூர்.

காந்தி நகர் எஸ். பானுமதி,
வேலூர் - 6.

ஆஹா 50! போன்ற குறிப்புகளை ஒரு தாளில் ஒன்றுதான் எழுத வேண்டுமா? அஞ்சலட்டையில் எழுதச் சொல்வதற்கு விசேஷ காரணம் உண்டா? தயவுசெய்து பதிலளிக்கவும்.

ஆஹா 50! குறிப்புகளை வெள்ளை நிறத்தாளின், ஒரு பக்கத்தில், நல்ல இடைவெளி விட்டு, ஐந்து அல்லது ஆறு குறிப்புகளை எழுதி அனுப்பலாம். அஞ்சலட்டையில் எழுதினால் படிக்கச் சுலபமாக இருக்கிறது. இலேசில் கசங்குவதும் இல்லை. அதனால்தான் அஞ்சலட்டையில் எழுதச் சொல்கிறோம். வேறு விசேஷ காரணமில்லை! துணுக்கு சுவாரசியமாக இருந்துவிட்டால், கையெழுத்தோ, தாளோ ஒரு பொருட்டே அல்ல!

வாக்தேவி, ஹுப்ளி.

தங்களுக்கு மிகவும் பிடித்த டாப்-10 பாடல்கள் எவை?

சங்கீத சீஸன் களைகட்டியிருக்கே! எனக்கிருக்கும் புள்ளி அளவு ரசனையைக் கொண்டு கர்நாடக இசைப் பாடல்களாகவே பட்டியலிட்டு விடுகிறேன்!

1. ஜகதோதாரண / ரங்கபுர விஹார எம்.எஸ். சுப்புலக்ஷ்மி
2. பாரோ கிருஷ்ணய்யா - எம்.எல்.வி.
3. எப்படிப் பாடினாரோ/ சாந்தி நில வேண்டும் - டி.கே. பட்டம்மாள்
4. என்ன கவி பாடினாலும்/மாடு மேய்க்கும் கண்ணா - அருணா சாய்ராம்
5. அழகு தெய்வமாக வந்து - சௌம்யா
6. நாணாட்டி பதுக்கு நாடகமு? - ப்ரியா சிஸ்டர்ஸ்
7. பிரம்மம் ஒகடே - சுதா ரகுநாதன்
8. கூவியழைத்தால் குரல்கொடுப்பான் - பாம்பே ஜெயஸ்ரீ
9. சின்னஞ்சிறு கிளியே - காயத்ரி கிரீஷ்
10. ராகத்தில் சிறந்தது/தீராத விளையாட்டுப் பிள்ளை - நித்யஸ்ரீ


பத்துக்கும் மேலே போயிடுச்சோ? ஸாரி... இசை தந்த மயக்கம்! எல்லாமே பெண் குரல்களா அமைஞ்சுடுச்சோ? எஸ்! இது மங்கையர் மலர்!



ஸ்ரீஅவ்வை ஹோம்

(Registered as a Public Chartitable Trust)

4/252, ஸ்ரீதேவி நகர், புளியம்பேடு,
சென்னை-600 077. போன்: 044-3200 4200



ஆதரவற்ற அன்னையருக்கு புகலிடம் அளிக்கும் ஓர் அன்பாலயம்!



பேரன்புடையீர்!

புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

வேதமாதா காயத்ரி தேவியின் பேருளாலும் அவ்வையாரின் திருவருளாலும் ஸ்ரீ அவ்வை ஹோம் என்ற தொண்டு நிறுவனம் ஆதரவற்ற, வயதான அன்னையரை காக்கும் தெய்வீக புனித கைங்கர்யத்தை செய்து வருகிறது. ஆதரவின்றித் தவிக்கும் வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் இலவசமாகப் பூர்த்தி செய்து, தினசரி இறை வழிபாடு, கூட்டு பிரார்த்தனை செய்து பராமரித்து வருகிறது. ஆதரவற்ற அன்னையரின் வாழ்வில் மகிழ்ச்சி மலர்ச்சி, வாழ்க்கையில் பிடிப்பு ஆகியன ஏற்படுத்தித் தர உங்கள் அன்பளிப்புகளையும் நன்கொடைகளையும் பொருளாகவோ தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். வயதான அன்னையருக்கு தாங்கள் செய்யும் சிறு உதவியும் நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தை குளிரச் செய்வதற்கு இணையாகும்.

ஒரு நாள் காலை உணவு 30 பேருக்கு ரூ.350/- அனுப்புவோருக்கு துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் மதிய உணவு 30 பேருக்கு ரூ.450/- அனுப்புவோருக்கு ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் இரவு உணவு 30 பேருக்கு ரூ.350/- அனுப்புவோருக்கு நவரத்தின மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் உணவு 30 பேருக்கு ரூ.1100/- அனுப்புவோருக்கு ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்

10 நாட்கள் உணவு 30 பேருக்கு ரூ.11,000/- அனுப்புவோருக்கு பவள மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவு ரூ.4,000/- அனுப்புவோருக்கு முத்துமணி மாலை அனுப்பி வைக்கப்படும்

தங்களின் திருமண நாள், பிறந்த நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள் மற்றும் பண்டிகை நாட்களில் வயதான அன்னையருக்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எதுவாயினும் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று நன்கொடை அளிப்பவர்களின் சார்பாக ஸ்ரீஅவ்வை ஹோமில் ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் காயத்ரி ஹோமம் நடைபெறும்

காயத்ரி வழிபாடு உலக வழிபாடு; அது ஆன்மாவுக்கு புத்துயிர் அளிக்க வல்லது. மேலும், காயத்ரி வழிபாடு நமக்கு நீண்ட ஆயுளையும் ஆற்றலையும், புகழ், செல்வத்தையும் அளிக்கிறது. காயத்ரி மூல மந்திரம் பாவங்களை அழித்து, புண்ணியத்தை வளர்ப்பதற்கு தோன்றிய மந்திரமாகும். நோய் நொடிகளை தவிடுபொடியாக்கும் சக்தி இதற்கு உண்டு. உண்மையான ஞானத்தை தருவதால் மந்திரங்களில் மணிமகுடம் என்று அழைக்கப்படுகிறது. வயதான அன்னையர்களை பாதுகாக்கும் இறைபணிக்கு நன்கொடை அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் தெளிவாக எழுதி அனுப்பினால், தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம், மகா மந்திர ஆடியோ கேசட், ஸ்ரீகாயத்ரி மகா மந்திரம் ஒலிக்கும் சிறிய பாக்கெட் ரேடியோ ஒன்றும் அனுப்பி வைக்கப்படும். காயத்ரிதேவியின் மகா மந்திரம் அனைத்து இல்லங்களிலும் ஒலிக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.



தாங்கள் அளிக்கும் நன்கொடையை மேற்கண்ட முகவரிக்கு Cheque/DD/MO மூலமாக SRI AVVAI HOME, CHENNAI என்ற பெயருக்கு அனுப்பி காயத்ரி தேவியின் திருவருளைப் பெற்று பூரண ஆயுளும், ஆரோக்கியமும், ஐஸ்வர்யமும் பெற அன்புடன் வேண்டுகிறோம்.

ஆதரவற்ற அன்னையருக்கு உதவி செய்ய செல்: 98843 43436 (24 Hrs)

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு



செலவில்லாத தர்மம்!

பல ஆண்டுகளுக்கு முன் டெல்லிக்குப் போயிருந்தேன். புகை வண்டி நிஜாமுதீன் ரயில் நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது சில சிறுவர்கள், வண்டியில் ஏறி, ஒவ்வொரு சீட்டுக்கு அடியிலும் கிடந்த செய்தித்தாள், வார, மாத இதழ்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் தமிழ்ச் சிறுவன். அவனிடம் பேசிய பொழுது, அவன் ஓர் அநாதை என்றும் தெருக்களிலும், பஸ் ஸ்டாண்டு, ரயில் நிலையம் போன்ற இடங்களில் கிடைக்கும் தாள்களைப் பொறுக்கி, விற்றுப் பிழைப்பதாகவும் சொன்னான். அவனுக்கு டிபன் சாப்பிட ரூபாய் கொடுத்து வந்தேன்.

மதுரைக்குத் திரும்பியதும், என் நண்பர்களிடம் இதுபற்றிப் பேசி, இதை வேறு வடிவில் செயல்படுத்தினோம். அந்த மாதத்தில் வாங்கிய இதழ்களையெல்லாம் எஸ்.எஸ். காலனியில் சேகரித்தோம். அவற்றை பழைய பேப்பர் கடையில் விற்றுக் காசாக்கினோம். அந்தப் பணத்தில் இனிப்பு, காரப் பலகாரங்களை வாங்கி, அருகில் உள்ள ஏழைகளுக்கு வழங்கினோம்.

மே - ஜூன் மாதங்களில் மாணவர்கள் தூக்கியெறியும் நோட்டுப் புத்தகங்களையும் இதுபோல், பலமுறை, சேகரித்துப் பயன்படுத்தியிருக்கிறோம்.

எங்களுக்கு எந்தச் செலவுமில்லாமல், ஏழைகளுக்கு உதவிய திருப்தி கிடைத்தது. நீங்களும் முயற்சிக்கலாமே!

- எஸ். நாராயணன்,
சென்னை - 23.



அப்பளக் கட்டு வாங்கி வந்தவுடன் அதைத் தனித்தனியாக 10 அப்பளங்களாகப் பிரித்து பாக்கெட் போட்டுக் கொண்டால் அப்பளம் மழை மற்றும் பனிக்காலத்தில் நமுத்துப் போகாமல் இருக்கும்.

- என்.பி. சிவகாமி செல்வம்,
குஜராத்.



சுப யாத்ரா



எண்.43, தெற்கு மாட வீதி,
(சித்ரகுளம் எதிரில்) மயிலாப்பூர், சென்னை-4
Ph : 2495 0218, 24952319

ஷிரிடி பாபா தரிசனம் பிரதி வாரம் வியாழக்கிழமை

4 நாட்கள் ரயில், பஸ் மற்றும் தங்கும் வசதி ரூ.2200/-

மந்திராலயம், நவபிருந்தாவனம்
07.02.2008 | 06.03.2008
3 நாட்கள் ரூ.2000/-

பண்டரிபுரம், துல்ஜாபூர், சோலாபூர்
31.01.2008 | 28.02.2008
3 நாட்கள் ரூ.2000/-

சாய்சரண்
முதியோர் இல்லம்

தங்கள் வாழ்க்கையில் முதுமை கட்டத்தில் உள்ள தூய்மை உள்ளங்களுக்கென்று பிரத்யோகமாக ரம்யமான சூழலில் ஆறுதல் சேவை அளிக்கும் இல்லம். அத்தகைய பெரியோர்கள் மற்றும் நன்கொடை அளிப்பவர்கள் அணுகவும்

Ph : 2495 0218, 24952319

ANBAHAM REHABILITATION CENTRE

(Run by TERDOD A Regd. Public Charitable Trust)
Thirunilai Village, Vichur Post, Chennai - 600 103.
Phone : 25015165 / 9444009988 Website : www.anbaham.org.

புத்தாண்டு-பொங்கல் நல்வாழ்த்துக்கள்

'அன்பகம்' சாலையோரத்தில் கவனிப்பாரற்று சுற்றித்திரியும் அனாதை ஆண் மன நோயாளிகளைக் காப்பாற்றி, அன்பகத்தில் தங்கவைத்து, மருத்துவ வசதி அளித்து, அவர்களை தங்கள் இல்லங்களில் கொண்டு சேர்க்கும் நல்லதொரு பணியினை செவ்வனே செய்யும், ஒரு தொண்டு நிறுவனம்.

45 நோயாளிகளைப் பராமரிக்கும் வசதி கொண்டது. கடந்த 7 ஆண்டுகளாக 375 மனநோயாளிகளைக் காப்பாற்றி அவர்தம் இல்லங்களில் கொண்டு சேர்த்து உள்ளோம். பராமரிப்பு செலவு அனைத்தும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலமே நடைபெற்றுவருகிறது.

அன்பகத்திற்கு வரும் பொழுது



அன்பகத்திற்கு வந்த பிறகு



- காலை சிற்றுண்டி ரூ. 250/-
- இரவு உணவு ரூ. 300/-
- மதிய உணவு ரூ. 500/-
- ஒரு நாள் உணவுக்கு ரூ. 1,000/-
- ஒரு நோயாளியை ஒரு மாதம் பராமரிக்க ரூ. 1,500/-

மகத்தான மனித நேயப்பணி தொடர, தாராள நிதி தாரீர், மனித நேயப்பணியில். நீவிரும் ஒருவராவீர் !

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு. FCRA Regn. No. 075900916 தங்கள் நன்கொடையை TERDOD என்றபெயரில் மேற்கண்ட முகவரிக்கு Cheque/DD/MO தபால் மூலம் மட்டும் அனுப்பி வைக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். [கொரியரில் அனுப்புவதைத் தவிர்க்கவும்]

என் செல்ல வளர்ப்பு மகன் 'டாமி' என்றொரு வாமனன் - டாஷன்ட் நாய். மிக மிகக் குட்டையான, நீண்ட உடல் அதற்கு. மிகவும் புத்திசாலி. தெருவில் சர்வசுதந்திர மாக நடைபோட்டுக் கொண்டிருக்கும் இரண்டு வயது டாமியைப் பார்த்து சிறிய குட்டி என்று நினைத்துப் பல சமயம் சிறுவர்கள் அதைத் தூக்கிச் செல்ல முயல்வது உண்டு. (காலர் போடுவதை டாமி விரும்புவதில்லை. போட்டு விட்ட ஒரு மணி நேரத்தில் அது காணாமல் போய்விடும் அவ்வளவுதான்!) தன் கோரைப் பற்களைக் கோபத்துடன் காட்டி பயமுறுத்தும், டாமி. அதைக் கண்டு சிறுவர்கள் சிட்டாய்ப் பறந்து விடுவார்கள்.

''அம்மா கடைக்குப் போய்விட்டு வரும் வரை வீட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னால் போதும், ஓர் அங்குலம் கூட நகராமல் ஒரு மணி நேரமானாலும் வாசலில் அமர்ந்திருக்கும்.



சீன் காட்டும் சிறுசு; பிகு பண்ணாத பெருசு!



அன்று டாமிக்கு நள்ளிரவில் பாத்ரூம் போக வேண்டியதாயிற்று. அதன் 'அப்பா' புரிந்துகொண்டு கதவைத் திறந்து விட்டார். ஆனால், தூக்கக் கலக்கத்தில் டாமி உள்ளே நுழையுமுன் கதவை அடைத்துவிட்டுத் தூங்கிவிட்டார். டாமி கதவைத் தட்டியது. யாரும் திறக்கவில்லை. 'சரி என்ன செய்வது' என்று வாசலிலேயே படுத்துக் கொண்டது. சிறிது நேரம்தான் ஆகியிருக்கும். வானம் இடிந்தது போல் சத்தம். டாமி நடுநடுங்கியது. அப்போது ஊரில் திருவிழா. காவல் தெய்வம் காளி, சிவகாசியின் ரதவீதிகளில் நள்ளிரவு ஊர்வலம் வந்துகொண்டிருந்தாள். அவள் வேட்டைக்குப் போவதைக் குறிக்கும் வகையில் வெடிகள் அதிர்ந்து கொண்டிருந்தன. நடுங்கியபடி டாமி கதவைத் தட்டியது. ஒருவரும் திறக்கவில்லை. டாமி பார்த்தது. தாவி ஓடியது. மூன்று தெருக்களைக் கடந்து அண்ணன் கிஷோரின் (என் மகன்) பாட்டி வீட்டுக்கு ஓடியது. கதவைத் தட்டியது. நள்ளிரவில் யார் கதவைத் தட்டுவது என்று பாட்டி திறந்து பார்த்தார். துரதிருஷ்டவசமாக அந்தத் தெருவில் டாமியைப் போலவே இருந்த சபாபதி என்ற டாஷண்ட் நாய்தான் வந்துவிட்டது என்று அவர் நினைத்துக் கொண்டார். ''என்ன சபா இந்நேரம்? போ உன் வீட்டுக்கு'' என்று விரட்டி விட்டுப் 'படார்' என்று கதவைத் தாழிட்டார். டாமிக்கு நகர உத்தேசமில்லை. மறுபடி கதவைத் தட்டியது. இம்முறை பாட்டி கதவைத் திறந்ததும் ஒரே பாய்ச்சலாக வீட்டுக்குள் ...

கொண்டது. உடனே பாட்டி, ''ஓ! டாமியா? உன்னைத் தவிர வேறு எந்த நாய் இவ்வளவு உரிமையாக வீட்டுக்குள் நுழைய முடியும்?'' என்று சொல்லிவிட்டுக் கதவை மூடினார். விடிந்ததும் டாமி வீட்டுக்கு வரவில்லை.

ஆபத்தைப் புரிந்துகொள்ளாமல் தூக்கம் தான் பெரிது என்று நினைப்பவர்களிடம் எதற்காகப் போக வேண்டும்? அவர்களாக வரட்டும் என்ற ரோஷம்! வீட்டிலுள்ளோர் தேட ஆரம்பித்தார்கள். கிஷோர் தனது பாட்டி வீட்டுக்குக் கவலை தோய்ந்த முகத்துடன் நம்பிக்கையின்றிச் சென்றான். டாமி அங்கே ஜாலியாக விளையாடிக்கொண்டிருந்தது!

தான் வாமனன் என்பது டாமிக்குத் தெரியும். அதனால் தனக்கு ஒரு





இமேஜை உருவாக்குவதற்காகப் பல நேரங்களில் அது பாடுபடும்.

ஒருமுறை யானை வீட்டினருகே வந்து விட்டது. தன் டெரிடரியைக் காக்க வேண்டியது டாமியின் கடமையல்லவா? அதே சமயம் ராட்சச உருவம் கொண்ட யானைக்குக் கோபம் வந்து விட்டால்? டாமி பாய்ந்து சென்று யானைக்கு முன்னே நின்று குரைத்து விட்டு அடுத்த வினாடி பாய்ந்து வீட்டுக்குள் சென்று விடும்! இப்படி ஒரு பத்து முறையாவது செய்து தன் இமேஜைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்த்தது. யானை ஒன்றும் கண்டு கொள்ளவில்லை. ''டாமி சீன் காட்டுவதைப் பார்த்தாயா?'' என்று சிரித்துக் கொண்டோம்!

டாமியின் அப்பாவுக்கு அண்ணன் வீட்டில் இருக்கும் திரிவிக்கிரமனோ நேர் எதிர். பெரிய சைஸ் 'கிரேட்டேன்' அது. ஆறு மாதக் குட்டிதான் என்று எந்தக் கோயிலில் சத்தியம் செய்தாலும் நம்ப மறுக்கும் அளவு பெரிய உருவம். ஆனால் உள்ளத்தில் குழந்தை. பக்கத்து வீடுகளில் உள்ள குட்டீஸ் எல்லாம் அதன் ஃபிரண்ட்ஸ். 'மேக்ஸிமஸ்' என்ற அதன் பெயரை 'மேக்ஸி மேன்' என்று கூப்பிடும் ஐந்து வயது அஜய் அதன் தலையைத் தடவிக் கொடுத்தால், வாக்கு சேகரிக்க வரும் அரசியல்வாதியைப் போல் குனிந்து பணிந்து நிற்கும். வாலைப் பிடித்தாலும் பேசாமல்தான் இருக்கும். காம்பவுண்டு சுவருக்கு வெளியே அவர்கள் ஓடினால், இது உள்ளே ஓடும். பிகு பண்ணத் தெரியாத சாது!

– பி. சாரதாதேவி, சிவகாசி.

இவை எல்லாமே...



வீட்டுக்கு வர்ணம் அடிக்கப் போறீங்களா? ஈயம் உடம்புக்கு ரொம்பக் கெடுதல். குழந்தைகளுக்கு விஷம். லெட் எனப்படும் ஈயம் இல்லாத பெயிண்டாகப் பார்த்து விசாரித்து வாங்கவும்.

- வத்சலா ராமதுரை, செம்பூர், மும்பை.

வர்ணம் அடிக்கிறீங்களா?

நகச்சுற்று வந்தவர்கள் எலுமிச்சம் பழத்தைத் துளையிட்டு விரலில் செருகுவர். இதனால் எரிச்சலும் வேதனையும் உண்டாகும். கடைகளில் 'சப்ஜா' (திருநீற்று பத்திரி) விதை என்று விற்பார்கள். அதை வாங்கி ஊறவைத்து, ஒரு துணியில் வைத்து நகச்சுற்று வந்த விரல் மேல் வைத்துக் கட்டுங்கள். மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். அதே சமயத்தில் ஒரே நாளில் குணமாகிவிடும். வலி சிறிதளவும் தராது.

- ரம்யா கிருஷ்ணன், காயக்காடு.

வெளியூருக்குச் சுற்றுலா செல்பவர்கள் புத்தம் புது செருப்பை அணியக் கூடாது. பத்து நாள் போட்டுப் பழகியபின் ஊருக்குப் போட்டுச் செல்லவும். இல்லையேல் புதுச் செருப்பு கடித்து, கால் புண்ணாகி பயணத்தையே பாழாக்கிவிடும்.

- மீனாக்ஷி நாகராஜன், பம்மல்.

கிழிந்த ரூபாய் நோட்டுக்களை முட்டையின் வெள்ளைக் கருவைக் கொண்டு ஒட்டினால் நன்றாக ஒட்டிக் கொள்ளும்.

- ஓ. ஆர்த்தி, ஈரோடு.

மழை நீரில் வைட்டமின் பி 12 உள்ளது. ரத்தசோகை நோயைக் குணமாக்கும்.

- ஆர். தங்கராஜ், திருப்பூர்.

நித்திய மல்லிச் செடி இலைகளை கஸ்தூரி மஞ்சளோடு சேர்த்து அரைத்து பருக்களின் மேல் தடவி அரை மணி நேரம் கழித்து முகத்தை நல்ல நீரால் கழுவிக் கொண்டு வந்தால் நாளடைவில் பருக்கள் மறைந்து விடும்.

- ஆர். ராஜலட்சுமி, விழுப்புரம்.

துணிகளில் பால் பாயிண்ட் பேனாவின் மை பட்டுவிட்டால் கறையிருக்கும் பகுதியில் சில துளிகள் டெட்டாலை விட்டு, பிறகு சலவை செய்தால் கறை மறைந்து விடும்.

- ஏ.எஸ். யோகானந்தம், கோபி.

...ஆஹா 50 தான்!



Geethanjali

presents

Geethanjali brings you a classic combination of traditional and unconventional with a range of audio and video CDs and DVDs. A forerunner in the audio industry, the products that Geethanjali offer reflect the evolving facet of the brand, that continually strives to offer you a wide selection of audio and video series.

Featured here are titles from our dance series with **Sudharani Raghupathy** and **Srikala Bharath**

Available on DVD and VCD

For more information log onto
www.musicandchants.com

Shop Online At :
www.superaudio.in

Super Audio (Madras) Pvt. Ltd.
Carex Centre,II Floor, 713, Anna Salai,
Chennai-600006. India.
Phone: +91-44-42140067/68

fingerprintsweb.com

ஆல்ஃபா மைண்ட் பவர்

ஆழ்மனதின் சக்தி!

ALPHA™ MIND POWER

"Unwind Your Mind & Empower Yourself"

மனோ சக்தி நிபுணர் டாக்டர் விஜயலக்ஷ்மிபந்தையன்

அளிக்கும் ஒரு நாள் இந்தியாவின் பழம்பெரும் சித்தர்களின் சக்தியுடன் கூடிய ஒரு நாள் ஆல்ஃபா தியான பயிற்சி



- மன அழுத்தம் குறைக்க
- பண வரவை அதிகரிக்க
- உறவுகளை சீர்படுத்த
- குடும்பத்தில் அன்பு நிலவ செய்ய
- நோய் தீர்க்க, நிம்மதியாக தூங்க
- பரீட்சையில் அதிக மார்க் வாங்க
- மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழ

தபால் மூலம் கற்கலாம் ஆல்ஃபா மைண்ட் பவர் ஆடியோ சிடி மற்றும் பயிற்சி புத்தகம் ஆங்கிலம் மற்றும் தமிழில் தபால் மூலம் பெறலாம்.

ஒரு நாள் பயிற்சி மட்டுமே!

எனது மகன் 1500 மீ ஓட்டப்பந்தயத்தில் ஓடும் நாளன்று கால்கள் வலி என்று சொன்னான். நான் ஆல்ஃபாதியானத்தில் அவன் முதல் பரிசு வாங்குவது போல் பார்த்து மகிழ்ந்தேன். அவனும் அதுபோலவே வாங்கி விட்டான். என்னிடம் நான் எப்படி ஓடினேன் என்றே தெரியவில்லை என்று கூறினான்.

ஆல்ஃபாவிற்கு நன்றி!

G. நளினி - திருச்சி

பயிற்சி வகுப்புகள்


சென்னை
மும்பை
டெல்லி
பெங்களூர்
ஹைதராபாத்
கோவை
சண்டிகர்
பாண்டிச்சேரி
கோவை
திருச்சி
மதுரை
திருநெல்வேலி
சேலம்
கொச்சின்
[illegible]
போன்ற
நகர்களிலும்
நடத்தப்
படுகின்றன.


ஆர்.எஸ்.ஆர்.பிளாசா, 3வது தளம், 50, 51 ஆற்காடுரோடு,
சாலிகிராமம், சென்னை - 600 093, இந்தியா
போன் :+91-44-2376 0007, 2376 6555
மொபைல் : 98414 02000, 98412 72146

அடுத்துவரும் பயிற்சி வகுப்பு


சேலம்	: 06.01.08
சென்னை	: 20.01.08
ஹைதராபாத்	: 27.01.08

11 புள்ளி 10 புள்ளி 11 புள்ளி
6லிருந்து 1 வரை (இடைப்புள்ளி)
- ஆர். பிரமிளா, திருச்சி - 20.






13 புள்ளி 13 வரிசை
(நேர்ப்புள்ளி)
- பா. முத்துமாணிக்கம்,
பட்டுக்கோட்டை.




பொங்கல் கோலங்கள்

19-1 (நேர்ப்புள்ளி)
எஸ். ஜெயராணி, விருதுநகர்.






15 புள்ளி 5 வரிசை 5ல்
நிறுத்தவும் (நேர்ப்புள்ளி)
ஏ. லாவண்யா அன்புசெல்வம்,
சென்னை - 51.



11 புள்ளி 6ல் நிறுத்தவும்.
(இடைப்புள்ளி)
- டி.ஆர். அலமேலு
பெங்களூரு - 47.


7 புள்ளி 7 வரிசை (நேர்ப்புள்ளி)
4 பக்கமும் 4-1 (இடைப்புள்ளி)
- திலகவதி அறிஞன், நாமக்கல் -1.





17 புள்ளி - 17 வரிசை
- லெக்ஷ்மி ஸந்தானம்,
ஸ்ரீரங்கம்.

13-1 (நேர்ப்புள்ளி)
- கௌரி வாசுதேவன்,
சென்னை - 35.





கன்யா கோலம்

- சீதா கணேசன், பீஹார்.

அமாவாசை நிலவு

தேவிபாலா

“**எ**ன்ன சொன்னே இப்ப?” ஈஸ்வர் கடுமையான தொனியில் கேட்டார்.

“குடியை விட்டுட்டான். நிர்வாகத்துல பங்கு எடுத்துக்கறேன்னு சொன்னப்ப, ரெண்டு பேரும் பூரிக்கப் போனோம். இந்த மாற்றங்களுக்கெல்லாம் சேர்த்து வச்சு, ஒரு பரிசு கேக்கறான்!”

“என்ன அது?”

“மைத்ரேயியைக் கேக்கறான்!”

ஈஸ்வர் படக்கென எழுந்துவிட்டார்.

“என்ன உளர்றே? அவனைக் கூப்பிடு. நானே சொல்லிடறேன். அதுக்கு வாய்ப்பே இல்லை. அந்தப் பெண் இப்பத்தான் பள்ளிக்கூடப் படிப்பை முடிச்சிருக்கா. இன்னும் நாலஞ்சு வருஷம் போகணும். வாழ்க்கைல அவ கால் ஊன முடியும். அது தான் யதார்த்தம். மேலும், இதுக்கு அவ விரும்பணும். அவ அம்மா ஒப்புக்கணும். எத்தனையோ இருக்கு!”

“இதை கோகுல்கிட்ட அழகாச் சொல்லுங்களேன். இதப் பாருங்க. திருந்தி, பொறுப்பை ஏத்துக்க ஒரு பிள்ளை வந்திருக்கும்போது கடுமையா பேச வேண்டாமே?”

“திலகம்! பழசையெல்லாம் ஞாபகப் படுத்தாதே. மன உளைச்சலை அதிகமாக்கி என்னை மரணப் படுக்கைல தள்ளிடாதே!”

“என்ன பேசறீங்க? எனக்கு உங்களை விட்டா யார் இருக்கா? உங்களை இழக்கணும்னு நான் விரும்புவேனா?”

“அப்படீன்னா இந்தப் பேச்சை விட்டுடு!”

“சரிங்க! நான் விடலாம். கோகுல், மைத்ரேயிகிட்ட நேராப் போய் இதைப் பேசுவான். அப்ப பிரச்னை இன்னும் கூடுதலாகுமில்லையா?”

“அதுக்குத்தான் கோகுலைக் கூப்பிடு. இந்த விவகாரத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வச்சிர்றேன்னு சொல்றேன்!”

“இல்லீங்க. திருந்தின என் பிள்ளை நீ நம்பவும் போனதல விழக் கூடாது!”

“அதுக்காக மைத்ரேயியை பலிகொடுக்கப் போறியா?”

“இல்லீங்க. இந்தப் பிரச்னையை எங்கிட்ட விட்டுருங்க. கோகுல்கிட்ட இதை நான் பேசிக்கறேன். யாருக்கும் பாதகமில்லாம இதைச் சரி பண்ண நான் முயற்சி செய்யறேன்!”

திலகம் வெளியே வந்தாள்.


முதலில் கோகுலிடம் பேச வேண்டும். அவன் பிடிவாதமானவன். கொஞ்சம் முரட்டுத்தனமானவன். ஒன்றை விரும்பி விட்டால், அது வேண்டுமென்று முரண்டு பிடிப்பான். பக்குவமாய்ப் பேச வேண்டும்.

திலகம் மாடிக்கு வர, அவுட்ஹவுசை நோக்கி கோகுல் நடப்பது தெரிந்தது.

“இவன் எதுக்கு அங்கே போறான்?”

அதற்குள் கோகுல் கதவைத் தட்டி விட்டான்.

படித்துக்கொண்டிருந்த மைத்ரேயி வந்து


9

திறந்தாள். கண்களில் ஆச்சர்யம்.

''வாங்க! அம்மா கோயிலுக்குப் போயிருக்காங்க!''

''நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். மைத்ரேயி! நான் போதைல புரண்டு கிடந்தேன். என் குடியை நிறுத்தி, எதிர்காலம் பற்றி யோசிக்கிற அளவுக்கு என்னை மாற்றினது நீதான்!''

''நான் அப்படி என்ன செஞ்சிட்டேன்?''

''அப்பாவுக்கு முடியலை. நான் நிர்வாகத்துல பொறுப்பேத்துக்கப் போறேன். உன்னையும் நிர்வாகத்துல கொண்டு வரப் போறாங்க!''

''சொன்னாங்க...''

''நீ பக்கத்துல இருந்தா, இன்னும் நிறைய சாதிப்பேன். ஒவ்வொரு மனுஷனையும் செலுத்த ஏதாவதொரு சக்தி வேணும் மைத்ரேயி. எனக்கு நீதான்! என் மனசுல எதையும் வச்சுக்கத் தெரியாது. உடைச்சுப் பேசிடறேன். எனக்கு நீ வேணும்.''

இதைச் சொல்லும்போது திலகம் வாசலில் வந்து நின்றுவிட்டாள்.

மைத்ரேயி சிரித்தாள்.

''ஏன் மைத்ரேயி சிரிக்கறே?''

''பெண்ணின் திருமண வயது இருபத்தொன்னுன்னு ஆட்டோலகூட எழுதியிருக்கு. எனக்கு பதினேழுதான் முடிஞ்சிருக்கு. நானும் என் கால்ல நிக்கணும். குறைந்தபட்சம் நாலு வருஷங்கள் போகணும். அப்புறம்தான் வாழ்க்கையைப் பற்றி யோசிக்கணும். அதுதான் நியாயம். அப்ப இதையெல்லாம் பேசலாமே!''

''நிச்சயமா மைத்ரேயி. ஆனா காலங்கள் மாறும்போது சில முடிவுகள் மாறும். அது கூடாது. எனக்கு நீதான்னு ஒரு முடிவு எடுத்துட்டா, அதை இப்பவே உறுதிப் படுத்திக்கலாம் இல்லையா?''

''உறுதின்னா?''

''ஒரு நிச்சயதார்த்தம்?''

மைத்ரேயி முகம் மாறியது.

''இதப் பாருங்க! இப்படியெல்லாம் சடசடன்னு முடிவெடுக்கற அளவுக்கு யாரோட வாழ்க்கையும் மலிவானதில்லை. அவசரம், எந்தப் பிரச்னையையும் தீர்த்ததும் இல்லை. நீங்க கோடீஸ்வரர். நான் அகதியா ஆதரவு தேடி வந்தவள். நம்ம இணைப்பு சாத்தியப்படுமான்னு எனக்குத் தெரியலை. இதை நாம ரெண்டு பேரும் மட்டுமே முடிவெடுக்கவும் கூடாது. நமக்குப் பெரியவங்க இருக்காங்க. புரியுதா?''

''மைத்ரேயி! இப்ப எதுவும் நடக்கணும்னு நான் சொல்லலை. உறுதிப் படுத்திக்கலாம்னுதான் சொல்றேன்!''

''ப்ளீஸ் கோகுல்... நான் சொன்னாக் கேப்பீங்களா?''

''சொல்லு மைத்ரேயி!''

''நிர்வாகப் பொறுப்புகளை முதல்ல ஏத்துக்குங்க. வேலைகளைக் கத்துக்குங்க. நானும் கூடவே இருக்கேன்.''



எல்லோர் வீட்டிலும் தோசைக் கல் ஒன்றுதான் இருக்கும். அதனால் காலை நேரத்தில் ஒரே கல்லில் தோசை சுட நேரம் அதிகமாகும். டென்ஷனும் ஏறும். இன்னொரு தோசைக் கல் வாங்கி விடுங்கள். வேலை மிகவும் சுலபமாக முடியும். இரவு நேரங்களிலும் மிகவும் உதவியாக இருக்கும். நான்கு பர்னர் உள்ள அடுப்பை வாங்குகிறோம். இன்னொரு தோசைக்கல் வாங்கினால் என்ன?

- நளினி ஜெயபால், ஈரோடு.

இயற்கையான, குளுமையான கண் மை வேண்டுமா?

ஒரு அகல் விளக்கில் தீபம் ஏற்றி, அந்த தீபத்தில் கற்றாழை மடலை இலேசாக வாட்டவும். மடல் நன்றாகப் புகைந்து, அதன் மேற்பகுதியில் கருநிறத் திட்டுக்கள் படியும். இந்தத் திட்டுக்களைச் சேகரித்து மை கூட்டில் அடைத்து, ஒரு சொட்டு விளக்கெண்ணெய் கலந்து வைத்து உபயோகிக்கவும். கண்களுக்கு அழகையும், குளுமையையும் அள்ளித் தரும் இந்த இயற்கை கண் மை!

– பா. பனிமலர், மதுரை – 14.



''தேங்க்யூ மைத்ரேயி!''

''இருங்க. அவசரப்படாதீங்க. வேலைகளைக் கத்துக்கிட்டு பெரிசா சாதிக்கணும். உங்க சாதனையை இந்த தேசமே பாராட்டணும். அப்படி நடந்துட்டா, நானே உங்களைத் தேடி வந்து உங்க மனசு குளிரும்படியா ஒரு பதிலைச் சொல்றேன். அதுவரைக்கும் எதைப் பற்றியும் பேசக் கூடாது. சரியா?''

கோகுல் பேசவில்லை.

மைத்ரேயி பக்கத்தில் வந்து அவன் கைகளை மெல்லப் பற்றினாள்.

''ஆல் தி பெஸ்ட்!''

அதை எடுத்து மெல்ல முத்தமிட்டாள்.

கோகுல் சிலிர்த்துப் போனான். அவனுடன் வாசல் வரை மைத்ரேயி வர, திலகம் பதுங்கிக்கொண்டாள்.

அந்த ஸ்பரிசமும், வார்த்தைகளும், அதில் பொதிந்து கிடந்த உத்வேகமும், உள்ளங்கையில் பதிந்த முத்தமும் கோகுலை எங்கோ கொண்டுபோனது.

பெண் ஸ்பரிசம், உடம்பில் மின்சாரம் பாய்ச்சும். அதையும் கடந்து மனசுக்குள் மின்சாரம் இறங்கியது.

அவனது நடையில் ஒரு கம்பீரம் தொற்றிக்கொண்டது.

அவன் பங்களாவுக்குப் போய்விட, திலகம் மைத்ரேயியிடம் வந்தாள்.

கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

''ஒரு தாய், இருபது வருஷத்துக்கு மேலா சாதிக்க முடியாததை, ஒருசில நிமிடங்கள்ல நீ சாதிச்சிட்டியே மைத்ரேயி!''

''அம்மா! உங்க பிள்ளை ரொம்ப வேகமா இருக்கார். அவரைக் கட்டுப்படுத்தி திசை திருப்பணும். காட்டாறை அப்படியே விட்டா, ஊரை அழிச்சிடும். திசை திருப்பிப் பக்குவமா ஓட விட்டா, அது நதியா மாறி, நல்லதைச் செய்யும். உங்க பிள்ளை நதியா மாறி நல்ல பலனைத் தருவார்னு எனக்கு நம்பிக்கை இருக்கு!''

''இத்தனைக்கும் காரணம் நீ! நீ அவனுக்குக் கிடைப்பேன்னு நம்பித்தான் இப்ப அவன் போயிருக்கான்.''

''தெய்வத்தோட தீர்ப்பு எதுவா இருந்தாலும், அதை யாரும் மறுக்க முடியாதம்மா!''

தேவகி வந்ததும், திலகம் இதைச் சொல்லிப் பெருமைப்பட்டாள்.

''மைத்ரேயி முன்னால நான் சொல்லலை தேவகியம்மா. ஆனா, உங்க மகள்தான் எங்க மருமகள் ஆகணும். நானே அதுக்கு ஆசைப்படத் தொடங்கிட்டேன்!''

தேவகி பூரித்துப் போயிருந்தாள்.

உமாவின் சொற்கள் காதில் ஒலித்தது.

''இருட்டுல பொறந்த உங்க பொண்ணு, இருட்டுல மலர்ந்த உங்க மகள், இருட்டுலதான் வாழ்வா. அது அவ தலைவிதி!''

'இல்லை... இல்லை... என் மகளைத்



திறக்கவேயில்லை!

நான் ஒரு கல்லூரியில் நூலகர் வேலைக்குச் சேர்ந்த புதிது. ஒரு மாப்பிள்ளை வீட்டார் என்னைப் பெண் பார்க்க வீட்டுக்கு வந்திருக்கின்றனர். ஆனால் நான் கல்லூரிக்குச் சென்றிருக்கவே, மாப்பிள்ளை மட்டும் நண்பருடன் நான் வேலை செய்யும் கல்லூரிக்கே வந்து விட்டார். இருவரும் படிப்பறையில் அமர்ந்து என்னைக் கவனித்தபடி இருந்திருக்கின்றனர். ஒரு கட்டத்தில் இருவரும் ஏதோ சத்தமாகப் பேசிவிட, நான் சற்று கோபத்துடன், ''அமைதியா படிங்க! இல்லாவிட்டால் மரத்தடிக்குப் போங்க!'' என்று கூறினேன். இருவரும் வெளியேறி விட்டனர். சிறிது நேரம் கழித்து, என் அப்பா ஃபோன் செய்து விஷயத்தைச் சொல்லவும் அதிர்ந்து விட்டேன். [அப்போதெல்லாம் செல்ஃபோன் இல்லையே!]

அந்த மாப்பிள்ளையே என் கணவரானதும், அவ்வப்போது என் குழந்தைகளிடம், ''அன்னிக்கு உங்கம்மா போட்ட அதட்டலில் வாயை மூடினவன்தான்! இன்னும் திறக்கவேயில்லை'' என்று கிண்டல் செய்வார்!

– பா. பனிமலர், மதுரை – 14.

தேடி எல்லா செல்வங்களும் வரப் போகுது. அமாவாசைல உதிச்ச பௌர்ணமி என் பொண்ணு!''

தேவகி அழுதுவிட்டாள்.

திலகம் சகலத்தையும் கணவரிடம் போய்ச் சொல்ல, அவரே ஒரு மாதிரி ஆடிப் போயிருந்தார்.

''கடந்த காலம் எதையும் நீங்க பேச வேண்டாம் இப்ப. அவனை ஒரு மாதிரி செலுத்தி விட்டிருக்கா மைத்ரேயி. அவனோட போக்கைக் கணிச்சு, முடிவுகளை அப்புறமா எடுப்போம்!''

மறுநாளே கம்பெனியின் நிர்வாக அதிகாரிகளை, மூத்தவர்களை, முக்கியஸ்தர்களை ஈஸ்வர் வீட்டுக்கு அழைத்துவிட்டார்.

''கோகுல் பொறுப்பை ஏத்துக்கப் போறான். ஒரு போர்ட் மீட்டிங் உடனே நடக்கணும். அவனுக்கு எல்லா வேலைகளையும் கற்றுத் தரணும்!''

''சரி சார்!''

அடுத்த நாள் நல்ல நாளாக அமைந்து விட, கோகுலுக்கு பதவிப் பிரமாணம் செய்விக்கப்பட்டது. முக்கியமான காண்ட்ராக்டில், காசோலைகளில் கோகுல் கையெழுத்திட்டான்.

ஈஸ்வர் கைகுலுக்கினார்.

''நிரூபிச்சிட்டு, இந்த அப்பா முன்னால வந்து நில்லு. வாழ்த்துக்கள்!''

அவர் காலில் விழுந்து வணங்கினான்.

அன்றையிலிருந்து அசுர வேகத்தில் நிர்வாகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆரம்பித்தான். ராப்பகலாக பயிற்சி எடுத்தான். ஏற்கெனவே பட்டதாரி - கணிப்பொறி தெரிந்தவன். அதனால் எந்தச் சிக்கலும் இல்லை. மூன்றே வாரங்களில் அத்தனையும் விரல் நுனிக்கு வந்துவிட்டன.

பலத்த போட்டிகளுக்கு மத்தியில், தனியாக ஒரு காண்ட்ராக்டைப் பேசி முடித்து விட்டான். முப்பது கோடி ரூபாய் பெறுமான முன்ன ப்ராஜக்ட்! அப்பாவின் காலடியில் கொண்டுவந்து வைத்தான். அவர் சந்தோஷத்தில் இக்குமுக்காடிப் போனார்.

(தொடரும்)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612, 22762299.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

புத்தாண்டு-பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	**1,000/-**
• மதிய உணவு	ரூ.	**2,000/-**
• இரவு சிற்றுண்டி	ரூ.	**1,000/-**
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	**1,000/-**
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	**1,000/-**
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	**12,000/-**
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	**2,00,000/-**

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ சர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

வாலாட்டும் வாண்டுகளை வசப்படுத்த...



சமீபத்தில்தான் எனக்கு இரண்டாவதாக, பெண் குழந்தை மகதி பிறந்திருக்கிறாள். மூத்த பையன் பிரணவுக்கு இப்போது மூன்றரை வயதாகிறது. வீட்டில் அவனது லீலைகள் சொல்லி மாளாது. கையில் கிடைக்கும் பொருள்களை எல்லாம் ஜன்னல் வழியாகக் கீழே வீசி எறிவது, வாட்டர்கேனில் உள்ள தண்ணீரைக் கீழே கொட்டி ஹாலில் நீச்சலடிப்பது என்று சொல்லிக்கொண்டே போகலாம். அதுவும், தங்கை பிறந்தபின், 'முத்தம் கொடுக்கிறேன் பேர்வழி' என்று அவளை அலறடிப்பது, 'நானும் குழந்தையைக் குளிப்பாட்டுகிறேன்' என்று தண்ணீரை அள்ளிவிடுவது என விஷமங்கள் அதிகரித்தன.

இதற்கிடையில், ''நான் ரொம்ப sad ஆக இருக்கேன். என்னைப் பார்த்துக்க யாருமே இல்லை'' என்று பெரிய மனிதன் மாதிரி டயலாக் வேறு!

இன்னொரு குழந்தை வந்தபின் நார்மலாக எல்லா குழந்தைகளிடமும் தோன்றும் காம்ப்ளெக்ஸ் அவனுக்கும் வந்துள்ளது புரிந்தது. மெடர்னிட்டி லீவில், அவனுடனும் மேலும் நேரம் செலவழித்து பயனுள்ளதாக்க நினைத்தேன்.

சிங்கப்பூர் டீவி.யில் ஒளிபரப்பாகும் சூப்பர் நானி தொடரைப் பார்த்ததில் (அமெரிக்காவில், மிகவும் முரண்டு பிடிக்கும் குழந்தைகளைப் பிரத்யேகமாகக் கையாள்வதற்காக, சூப்பர் நானி பெற்றோருடன் தங்கி, எப்படி அவர்களை நல்வழிப்படுத்துகிறாள் என்பதைப் பற்றிய தொடர் அது), சில யோசனைகள் தோன்றின. அவற்றை ஒவ்வொன்றாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறேன். கைமேல் பலன் கிடைத்திருப்பதோடு இப்போது பிரணவ் ஸ்கூலிலும் முன்பைவிட நன்றாகச் செய்வதாக அவனது ஆசிரியை கூறுகிறார்.

எனது யோசனைகள் எல்லோர் வீட்டிலும் பயன்படக்கூடும் என நினைத்ததால் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஸ்டார் ட்ரீ :

ஒரு பேப்பரில் இடுக்குப் புள்ளி வைப்பது போல 7, 6, 5 என்று ஒன்று வரை பெரிய ஸ்டார்களை வரைந்து கொண்டேன். பார்க்க கிறிஸ்துமஸ் மரம் போல இருந்ததால் அதற்கு 'Good boy star Tree' என்று பெயரிட்டேன்.

அதை ஹாலில் என் மகனுக்கு சேரில் ஏறினால் மட்டுமே எட்டும் உயரத்தில் ஒட்டினேன். ஒவ்வொரு நாளும் அவன் சேட்டை பண்ணாமல் 'குட் பாய்' ஆக இருந்தால் (Good boy என்ற வார்த்தைக்குள், நாம் எதிர்பார்க்கும் சகல நற்குணங்களும் அடக்கம்) அவனுக்குப் பிடித்த நிறத்தில் ஒரு ஸ்டார் கலர் பண்ண லாம் என்றும் சேட்டை பண்ணினால் கிடையாது என்றும் கூறினேன்.

எல்லா ஸ்டார்களையும் கலர் பண்ணி முடித்தால் கார் (பொம்மைக் கார்தான்) வாங்கித் தருவதாக உடன்பாடு. அவனுக்கு கலர் பண்ணுவது, ஸ்டார், கார் எல்லாம் பிடிக்குமென்பதால் இந்த யோசனை.

அடம்பிடிக்கும் ஒவ்வொரு விஷயத்துக்கும் ஸ்டார் ஞாபகப்படுத்தப் படும். மனதுக்குள் அவன், ''ஆஹா! இந்தச் சின்ன ஸ்டாரைக் கலர் பண்ண என்ன பாடுபடுத்துறாங்கப்பா'' என்று வடிவேலு ஸ்டைலில் திட்டித் தீர்ப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஏதோ, அவ்வப்போது விஷமங்கள் தொடர்ந்தாலும், கார் யோசனை கைகொடுத்தது. கடைசியாக, ஹாலில் கலர் கலராய் ஸ்டார் ட்ரீ கண்ணைப் பறித்தது.

ஜூஸ் குடிக்கும் ஸ்ட்ராவை வெட்டி மாலையாக அணிவித்துப் பாராட்டு விழா நடத்தி, கார் பரிசளிக்கப்பட்டது. அவனது முகத்தில் சந்தோஷத்தைப் பார்க்க வேண்டுமே! அதைப் பார்த்த எங்களுக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி.



ஸ்டிக்கர் போர்டு :

எத்தனை நாளைக்குத்தான் ஸ்டாரை மட்டும் வைத்துக் கொண்டு ஏமாற்ற முடியும்?



கழிசடைகள்!

முன்பு ஒரு சமயம் கும்பகோணத்திலிருந்து திருக்கார்த்திகையை முன்னிட்டு பக்தர்கள் பலர் பஸ் ஏற்பாடு செய்துகொண்டு திருவண்ணாமலை சென்றார்கள். தீப தரிசனம் செய்துவிட்டு திருக்கோவிலூர் சென்று ஞானாநந்தகிரி ஸ்வாமிகளையும் தரிசிக்கச் சென்றார்கள். அவர்களுக்குத் தரிசனம் தந்த ஸ்வாமிகள், ''என்ன... திருவண்ணாமலை கழிசடைகள் எல்லாம் வந்திருக்கிறார்களா...?'' என்றாராம்.

''ஒரு ஸ்வாமிகள் இப்படிச் சொல்லலாமா?'' என்று ஆளாளுக்கு அங்கலாய்த்துக் கொண்டனர். பல வருடங்களுக்குப் பின் இப்போது அதைச் சிந்திக்கும் போது, ''அவர் மஹாஞானி... நூற்று நாற்பது வயது வாழ்ந்தவர்... திருவண்ணா மலையில் தன் பாபங்களைக் கழித்துவிட்டு வந்தவர்கள் என்ற அர்த்தத்தில் தமக்கே உரிய சிலேடையில்தான் 'திருவண்ணாமலை கழிசடைகள்' என்று சொல்லியிருக்கிறார்'' என்பது புரிகிறது.

- மன்னை ஜி. நீலா.

அடுத்ததாக ஸ்டிக்கர் போர்டு ஐடியாவை அமுல்படுத்தினேன்.

சார்ட் பேப்பரை சின்னதாக ஒரே அளவில் வெட்டி, அதில் கலர் கலராக பிரஷ், பால் தம்ளர், தட்டு, ஸ்லோக புக், ஸ்கூல் யூனிஃபார்ம் என வரைந்து கொண்டேன். ஃபிரிட்ஜில் ஒரு பேப்பரில் அவன் பெயரையும், என் பெயரையும் எழுதி ஒட்டினேன். பிரிட்ஜில் ஒட்டக்கூடிய சின்னச்சின்ன காந்தங்களை வாங்கிவைத்தேன்.

காலையில் பல் தேய்த்தால், யார் முதலில் தேய்க்கிறார்களோ அவர் ஸ்டிக்கரை (பிரஷ் படத்தை) அவர்கள் பெயருக்கு நேரே ஒட்டிக் கொள்ளலாம் என்றும் வாரம் முழுவதும் எல்லா வேலைகளுக்கும் ஸ்டிக்கர் ஒட்டி விட்டால் உண்டியலில் போடகாக தருவதாகவும் கூறினேன். போட்டியில் சில சமயம் தோற்றும், ஜெயித்தும் அவனை உற்சாகப்படுத்தினேன். போட்டியின் நடுவே வேலைகள் எல்லாம் ஜோராகாக நடந்தன.

நீங்களும் இந்த முறையைப் பின்பற்றலாம். இரண்டு, மூன்று குழந்தைகள் இருந்தால் போட்டி இன்னும் சூடுபிடிக்கும். நமக்கு அவர்கள் பின்னால் நடக்கும் வேலை குறையும்.

இந்த யோசனைகளைச் சற்றே உங்கள் குடும்பத்துக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம். உங்கள் குழந்தைகளுக்குப் பிடித்த செயல்கள், பொருள்களைப் பயன்படுத்தி அவர்களை வசப்படுத்த முடியும். பரிசுகளை நம் பட்ஜெட்டுக்கு ஏற்ப, ஆனால் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த பரிசுகளாக நிர்மானித்துக் கொள்ளலாம்.

கலர் கலரான செயற்கை மலர்களை ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று கொடுத்து அவர்களது ரூமை அலங்கரிக்கச் செய்வது, சாக்லேட் வரும் டப்பாக்களில், ஒவ்வொரு சாக்லேட் உள்ள இடத்திலும் ஒவ்வொரு காசாகப் போடச் செய்வது, மிகவும் பிடித்த ஸ்நாக்ஸ் செய்து கொடுப்பது என உங்கள் குழந்தைகளை அசத்தி ஜமாயுங்கள்!


- திவ்யா ஹரி, சிங்கப்பூர்.

ஜொலிக்கும் ஃபேஷன் ஜுவல்ஸ்

30-12-2007 முதல்
30-01-2008 வரை

ஸ்ரீ பல்சானி ஜுவல்லர்ஸ்

தங்க முலாம் பூசப்பட்ட தகதகவென மின்னும் எண்ணற்ற புதிய டிசைன்கள்,
எண்ணிலடங்கா மாடல்கள், சொர்ணங்களின் சொர்க்கம்.



உங்களின் கண்களை கவரும் Temple Jewels பல வண்ணங்களில், பல வித டிசைன்களில் உங்கள் பல்சானி ஜீவல்லர்ஸ்-ல் இப்பொழுது மிக மிக குறைந்த விலை அறிமுகமாகி உள்ளது



இளைய தலைமுறைகளை சுண்டி இழுக்கும். வெள்ளியில் பதித்த அமெரிக்கன் டயமண்ட் நகைகள், அழகான டிசைன்களில்... குறைந்த விலையில்... பாலீஷ் போய்விடுமே என்ற கவலை வேண்டாம். மீண்டும் பாலீஷ் செய்து கொள்ள லாம். இதன் விலை ரூ.1000/- முதல் ஆரம்பம்.



ஒரு வித ஸ்பெஷல் உலோகத்தின்மேல் ½ கிராம் அல்லது 1 கிராம் தங்கம் 'கோட்' செய்யப்பட்டு உருவாக்கும் தங்க நகைகள்தான் இன்றைய பேஷன் உலகின் நவநாகரீக மங்கைகளின் உள்ளத்தில் நம்பர் ஒன் இடத்தை பிடித்திருப்பது.

நீங்கள் வாங்கிச் செல்லும் ½ கிராம் தங்க நகையை உபயோகப் படுத்திய பின் ஆறு மாதத்துக்குள்ளும், ஒரு கிராம் தங்க நகையை உபயோகப்படுத்திய பின் ஒரு வருடத்திற்குள்ளும் எங்களிடம் திருப்பித் தந்தால் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்து வேறு புதிய நகையை எங்களிடம் பெற்று மீண்டும் நீங்கள் ஜொலிக்கலாம்.

உங்கள் வாழ்க்கையில் வளம் பெற, வியாபாரத்தில் செழிக்க, கண்களை கவரும் விலை உயர்ந்த ஒரிஜினல் ராசிக்கற்களை வெள்ளியில் பதித்து 350 ரூபாய்க்கு குறைந்த விலைக்கு விற்பது நாங்கள் மட்டும்தான் இது தவிர 22 கேரட் ராசிக்கல் மோதிரமும் உண்டு. அதுவும் 100 சதவிகிதம் உத்திர வாதத்துடன்.

சிறப்புச் சலுகைகள்:

(1gm மற்றும் American Diamond நகை வாங்குபவர்களுக்கு மட்டும்)

உங்கள் நகைகளுக்கு 100% உத்திரவாதம் உண்டு

ரூ. 100 முதல் ரூ.1000 வரை மாத சீட்டும் உண்டு

ரூ. 500 முதல் 1,500 வரை வாங்குபவர்களுக்கு ஒரு ஜோடி American Diamond கம்மல் இலவசம்.

ரூ. 1,500/- முதல் ரூ. 2,500/- வரை வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Dollar இலவசம்.

ரூ. 2,500/- க்கு மேல் வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Necklace Set இலவசம்.

இந்த விளம்பரத்தை கத்தரித்து வருபவர்களுக்கு 5% கூடுதல் கழிவு

நீங்கள் வாங்கிச்செல்லும் மூக்குத்தி ஜோடியை தோடுகள் மேல் தோடாகவும், அல் லது குழந்தைகளுக்கும் தோடாக அணிவித்து அழகுபடுத்தலாம். பரவசப் படுத்தும் எண்ணற்ற வண்ணங்களில் 22 கேரட் தங்கத்தினால் தயாரிக்கப்பட்ட விலை ரூ.100/- முதல்...

பல்சானி ஜுவல்ஸ் நகைகளை ஆன்லைன் மூலமாகவே வாங்கலாம்!
எங்களுடைய புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையதளம் www.sripalsanijewels.com
மூலம் நகை வாங்குபவர்களுக்கு டெலிவரிசார்ஜில் 50% சிறப்புத் தள்ளுபடி
வழங்கப்படும். இச்சலுகை டிசம்பர் 30 முதல் ஜனவரி 30 வரை மட்டும்.

SRI PALSANI JEWELS

110, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, (ஏவி.எம்.ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் அருகில்),
சென்னை - 600 004 ☎: 28111737 28117036 www.sripalsanijewels.com

கேட்டானே ஒரு கேள்வி!



"அம்மா ப்ளீஸ்!''

மேஜை மேல் இரவுச் சாப்பாட்டை வைத்துக் கொண்டிருந்த பிருந்தா திரும்பி, குனிந்தாள்.

ஐந்து வயது பிரேம்.

''என்னடா வேணும் செல்லம்?''

''அதான் காலையிலேயே கேட்டேனேம்மா!''

* * *

காலையில் குட்மார்னிங் மம்மியோடு சேர்த்து அவன் கேட்ட கேள்வி இது.

''நான் எங்கேயிருந்து வந்தேன்?''

திடுக்கிட்டாள்.

''வந்தது இருக்கட்டும். இப்போ மம்மி கூட வர்ற வழியைப் பாரு. இன்னைக்கு ஆட்டோ ஸ்டிரைக். அம்மாதான் உன்னை ஸ்கூல்ல விட்டுட்டு, ஆபீஸ் போயாகணும்... ம்...ம்... சீக்கிரமா கிளம்பு'' என்றதோடு விட்டுவிட்டாள்.

ஆனால், பிரேம் விடவில்லை.

மாலை பள்ளியிலிருந்து வந்ததிலிருந்து அப்பப்போ இதே கேள்விதான்.

* * *

இது ஐந்தாவது தடவை.

இவள் பதிலுக்குக் காத்திருக்கும் அவன் முகத்தைப் பார்த்ததும் உள்ளே எழுந்த இலேசான கோபம் காணாமல் போயிற்று.

''எங்களுக்கு ஒரு பிரேம் வேணும்னு ராத்திரி பூராவும் நானும் அப்பாவும் கடவுள்கிட்டே வேண்டினோமா, காலையில எழுந்து வந்து பார்த்தால் மொட்டை மாடியிலே...

''காக்கா கொண்டுவந்து போட்டுச் சாக்கும். ஐயோ இந்த மாதிரி ஸில்லியான பதில் வேண்டாம்மா. நா சீரியஸாய்க் கேட்கிறேன்.''

பிருந்தாவும் சீரியஸாகிவிட்டாள்.

வேறு வழியில்லை. இந்தக் கால குழந்தைகளுக்கு ஆர்வம் அதிகம். எதைப் பற்றியாவது சந்தேகம் வந்துவிட்டால், முழுமையாய்த் தெரிந்து கொள்ளாமல் விட மாட்டார்கள். நாம் மறைத்தால் இதில் 'ஏதோ இருக்கிறது' என்று தப்பாய் நினைக்கத் தோணும்.

யோசித்து - ஒருமாதிரியாய் அப்படியும் இப்படியுமாய் சொல்லி வைத்தாள்.

புரிந்ததோ என்னவோ -

'புரியவேயில்லைம்மா' என்று சொல்ல பயமோ தெரியவில்லை. அதிருப்தியாய் போனவனை கைபிடித்து நிறுத்திக் கேட்டாள்.

''ஏண்டா இப்படிக் கேட்டே?''

''ப்ச்! ஒண்ணுமில்லேம்மா. எங்க கிளாஸுக்குப் புதுசா வந்திருக்கிற முகேஷ் டெல்லியிலேயிருந்து வந்ததாய்ச் சொன்னான். அதான் கேட்டேன்'' என்றானே பார்க்கணும்!

- ஏ.கே. மீனா கந்தன்,
திருநெல்வேலி.

Wish you all a happy & Prasperaus New Year 2008

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

Old No. 102, New No. 138, USMAN ROAD, T.NAGAR, CHENNAI - 600 017.
PH : 24344442, 24327764. Proprietor: P. RAVINDHIRAN

TUESDAY HOLIDAY
Timings : 10.00 AM to 1.30 - 3.30 to 8.00 PM

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்

22ம் ஆண்டில் வெற்றிநடை போடும் நாங்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் குறைந்த செலவில் பயன்பெற வருக வருக என வரவேற்கிறோம். ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி. எங்கு ஜோதிடம் பார்த்தாலும் P.R. ஜுவல்லரிக்கு வந்து ரூபாய் 500/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன் பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம். எங்களிடம் பெங்சூய், சீன வாஸ்து பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும். அதிர்ஷ்ட சீனக் காசுகள். சிகப்பு ரிப்பனினால் கட்டப்பட்ட 3 ஐ சிங் காசு வைப்பதால் பண வாய்ப்புகள் பெருகும்.

எல்லாவயதினரும் பர்ஸ், பாக்கெட், ஹேண்ட் பேக், சூட்கேஸ், கல்லாபெட்டி, பீரோ, பாதுகாப்பு பெட்டகம் போன்ற எல்லா இடங்களிலும் வைக்கலாம். விலை ரூபாய் 30/- தபாலில் பெற ரூ. 60/- M.O. அனுப்பவும். மேலும் எங்களிடம் சீன வாஸ்து பிரமிடு, மூங்கில்செடி, பாகுவா கண்ணாடி, தொங்கும் மணிகளும் காசுகளும், செல்வத் தவளை, தங்க இன்காட், இரட்டை மீன்கள், செல்வக்குபேரர், குழந்தை செல்வம் தரும் குபேரர், கிரிஸ்டல் பால், திருஷ்டியை போக்கி சகல செல்வங் களையும் தரும் வெள்ளெருக்கு விநாயகர் அனைத்தும் கிடைக்கும். தபால் எழுதினால் முழுவிபர பாம்லெட் அனுப்புகிறோம்.



செல்வத் தவளை

மேஷம், விருச்சிகம்	-	பவழம்
ரிஷபம், துலாம்	-	வைரம்
மிதுனம், கன்னி	-	மரகதபச்சை
கடகம்	-	முத்து
சிம்மம்	-	மாணிக்கம்
தனுசு, மீனம்	-	புஷ்பராகம்
மகரம், கும்பம்	-	நீலம்



செல்வக் குபேரர்

எங்களது சிறப்பு பேட்டியை விஜய் T.V. யில் திங்கள் காலை 9.00 மணிக்கும்

நவஜோதிர்லிங்கம்
சிறப்பு யாத்திரை ரயில்

IRCTC

ஓம்காரேஷ்வர் - மஹாகாலேஷ்வர் - சோம்நாத்
பீம்சங்கர் - திரையம்பகேஷ்வர் - குருஸ்னேஸ்வர்
அவுங்நாக்நாத் - பார்லி வைத்யநாத் - ஸ்ரீசைலம்



12 நாட்கள்	புறப்படும் நாள் 29-1-2008	கட்டணம் Rs. 6295

மகா சிவராத்திரி காசி யாத்திரை
அலகாபாத் – காசி – கயா – ஹரித்வார்
ரிஷிகேஷ் – டெல்லி – மதுரா – ஆக்ரா

புறப்பாடு : 2-03-2007
கட்டணம் : ரூ. 6700
நாள் : 13 நாட்கள்

(இரயில், தங்கும் வசதி, உணவு, உள்ளூர் சுற்றிப்பார்த்தல்)

Travel Times (India) P. Ltd
இந்திய அரசின் சுற்றுலா துறையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
11, Club House Rd, Anna Salai, Chennai-2.
Ph : 28461213, 28461131, 28461113

39, New LIG Colony, Anna Nagar, Madurai - 20
மதுரை : 4391228, 9443307132

49, 9th St., Opp. Ganga Yamuna Theatre, Tatabad, Kovai-12
கோவை : 2496667, 9345796778



தங்க ரூபம்
தெய்வ கடாட்சம்

Thejus
24 ct GOLD PLATED GIFTS

Show room:
Next to jeeva park old # 85 G.N.Chetty Road, T.Nagar, Chennai - 17, Mobile: 98400 21384,
Timing: 9.30 am to 7.00 pm SUNDAY HOLIDAY for online purchase visit:


2008
எப்படி?
செவ்
ரா
ராசி நிலை
சனி (வ) கே
ல சந்
சுக்
சூ பு குரு
ல கேது
குரு
நவாம்ஸ நிலை
சூ சனி (வ)
சுக்
பு.சந் ரா.செவ்
புத்தாண்டு பிறப்பின்போது கிரக நிலை
புத்தாண்டு பலன்களும் எளிய பரிகாரங்களும்
கணித்து வழங்குபவர் :
டாக்டர் முருகடிமை துரைராஜ்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ஆம் பாதம்)

பொதுவான பலன்கள் :

புத்தாண்டு உமக்கு சாதகமாக உள்ளது. குரு சந்திரயோகம், குரு மங்களயோகம் உண்டாகிறது. மூர்த்தி கர நிர்ணயத்தில் ஸ்வர்ணமூர்த்திகரம் வருகிறது. இதனால் பொன், பொருள், பூஷணம் சேரும். சந்திரன் 6ல் மறைவுற்றாலும் விரோதிகள் விலகுவர். கோர்ட் வழக்குகள் தீரும். கடன் தீரும்.

குருபகவான் உமது ராசிக்கு 9.12.2008 வரை பாக்யஸ்தானமான 9ஆம் வீட்டில் உள்ளதால், ஏற்றுமதி, இறக்குமதி போன்ற வாய்ப்புகள் தேடி வரும். தொழில் துவங்க கடன் கிட்டும். பதவி உயர்வு கிட்டும்

சனிபகவான் உமது ராசிக்கு ஐந்திலிருப்ப தால் செய்தொழிலில் மேன்மை கிட்டும். சனிபகவானுக்கு குருபகவானின் சக்தி வாய்ந்த பார்வை கிடைப்பதால் புதிய முயற்சிகள் வெற்றி கிட்டும். பிரிந்து வாழும் தம்பதியர் இணைந்து வாழ இடமுண்டு.

ராகு கேது முறையே 1.5.2008 வரை 11, 5லும் பின்பு 10, 4-லிலும் சஞ்சரிப்பர். இதனால் சிலர் மறுமணம் புரிய நேரும். செய்தொழிலில் மிகுந்த சுறுசுறுப்புடன்

(கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1- 2 ஆம் பாதங்கள்)

பொதுவான பலன்கள் :

புதிய முயற்சிகள் எதுவானாலும் அதில் நேரடி கவனம் செலுத்தினால் கைமேல் பலன் தரும். மனைவி பேரில் வீடு, மனை, பூமி வாங்கும் யோகம் உண்டு. தூர தேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். கடன் குறையும். ரியல் எஸ்டேட் லாபம் தரும். நீர்நிலைகளில் மிகுந்த எச்சரிக்கை தேவை.

உமது ராசிக்கு 8க்குடைய குருபகவான் 8ல் ஆட்சி பெறுவது விபரீத ராஜயோகம் ஆகும். புத்தாண்டுப் பிறப்பின்போது மூர்த்திகர நிர்ணயத்தில் ராஜதமூர்த்திகரம் வருகிறது. ராஜமரியாதை கிட்டும். நீண்ட கனவுகள் மற்றும் முடியாது எனக் கிடப்பி னில் போட்டவை வெற்றி தரும்.

அர்த்தாஷ்டமச் சனி என்ற அச்சம் வேண் டாம். சனிபகவான் உமது ராசிக்கு 9, 10 ஆகிய வீடுகளுக்கு அதிபதி. எனவே கெடு தல் செய்ய மாட்டார். 9ஆமிடம் தர்மஸ்தானம், 10ஆம் இடம் கர்மஸ்தானம். எனவே தர்மம் செய்யுங்கள். தர்மம் தலைகாக்கும்.

ராகு கேது முறையே உமது ராசிக்கு 10, 4ல் 1.5.2008 வரையிலும் பின்பு 9, 3ஆம் சஞ்சரிப்பார்கள். தொழில் வழி ப்பிரயாணம்

(மிருகசீரிஷம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

பொதுவான பலன்கள் :

தொட்டது துலங்கும். தந்தையுடன் கருத்து வேறுபாடு விலகும். புதிய மூதலீடு பெருகும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். பிரிந்து வாழும் தம்பதி யர் சேர்ந்து வாழ வாய்ப்பு உண்டு. வெளி நாட்டு நபர்களின் அறிமுகம் கிட்டும். 'குருமங்கள யோகம்' உண்டாவதால் வீடு, மனை என வாங்க நேரும்.

மணவாழ்வில் மகிழ்ச்சி கிட்டும். தூர தேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். தனவரவுக்கு இடமுண்டு. விரும்பிய இடமாறுதல் கிட்டும். செல்வந்தர்களின் நட்பு கிட்டும். புதிய தொழிலில் கூட்டாளி கள் கிடைப்பர்.

கடந்த 2½ வருடங்கள் 7½ சனியின் இறுதிக் கட்டத்தை எப்படியோ சமாளித்து விட்டீர்கள். இனி எதற்கும் கவலையே வேண்டாம். 8ல் உள்ள சனி பகவானை, குருபகவான் பார்வை செய்வதால், ''குரு வால் பார்க்கப்பட்ட சனி, குபேர யோகம் தருவார்'' என்ற கூற்றுக்கிணங்க பெரும் பாலும் நற்பலன்களே நிகழும். மேலும் 3, 6, 11ல் மந்தன் நின்றால், மகத்தான யோகம் வரும்.

மேஷம்

திகழ்வீர்கள். கருவுற்ற தாய்மார்கள் மிகக் கவனமுடன் இருப்பது நலம்.

குடும்பத்தில் சுபச்செலவுகளுக்குக் குறைவிருக்காது. நேர்த்திக் கடனைச் செலுத்துவீர்கள். புதிய பொறுப்பால் எப்போதும் பம்பரமாகப் பணிபுரிய நேரிடும். பணிநிமித்தம் வெளிநாடு செல்ல வாய்ப்பு கிட்டும்.



பரிகாரம் :

பிரதோஷ காலத்தில் சிவபெருமானை, கெட்டித் தயிரால் அபிஷேகம் செய்து வழிபடவும். முடிந்தவர்கள் திருச்செந்தூர் முருகனையும் பழநி முருகனையும் தரிசித்து வரவும்.

ரிஷபம்

அதிகரிக்கும். ஞானிகள் அருளாசி கிட்டும்.

விசேஷ பலன்கள் :தாயார் வீட்டுச் சீதனம் வரும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். சேமிப்பு வளரும். வீடு, மனை என வாங்குவீர்கள். உமது மகன் (அ) மகள் திருமணம் இனிதே நடக்கும். புகுந்த வீட்டினர் ஒத்தாசை புரிவர்.



வேலைப் பளு கூடும். புதிய பொறுப்பைச் சுமக்க நேரிடும். உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

பரிகாரம் :

உங்கள் இல்லங்களில் தினசரி அந்தி, சந்தி நேரங்களில் தீபம் ஏற்றவும். திருமகள் தேடி வருவாள்.

மிதுனம்

ராகு,கேது முறையே உமது ராசிக்கு 9, 3 லும் 1.5.2006-ல் 8, 2லும் சஞ்சாரம். இதனால் தந்தையின் உடல்நலனில் மிக்க கவனம் தேவை. சிலர் வெளிநாடு, புனித ஸ்தல யாத்திரை செல்ல இடமுண்டு.



கருவுற்ற தாய்மார்கள் கவனமாக இருக்க வேண்டும். குடும்ப விவகாரங்களில் வேற்று மனிதர்களை அனுமதிக்க வேண்டாம். உமது மகன் (அ) மகள் திருமணம் இனிதே நடக்கும்.

பரிகாரம் :

பிரதி வியாழன் தட்சிணாமூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றி, மஞ்சள் வண்ண மலர்களால் அர்ச்சித்து வணங்கவும். ''ஓம் நமசிவாய'' என்று காலை 16 முறை, மாலை 16 முறை ஜபிக்கவும்.

(புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)

பொதுவான பலன்கள் :

குடும்பத்தில் சுபச் செலவுகள் வந்த வண்ணம் இருக்கும். கடன் கணிசமாகத் தீரும். தொழில் வழியில் முதலீடுகள் பெருகும். பதவி உயர்வு காரணமாக இடமாற்றம் கிட்டும். சிலர் தனிக்குடித்தனம் செல்ல நேரும். எனினும் யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டாம். புதிய முயற்சி எதுவானாலும் நிதானமும் நேரடி கவனமும் தேவை.

வாக்கினால் ஜீவனம் புரிவோர் ஏற்றம் பெறுவர். பிரயாணத்தின்போது கவனம் தேவை. தந்தையுடன் கருத்து வேறுபாடு விலகும். கணிசமான பொருள் தனம் கிட்டும். 7½ சனி நடக்கிறதே என்ற அச்சம் வேண்டாம். கூடவே கேது இணைந்து இருப்பதும் குருபகவான் பார்வை செய்வதும் விசேஷம். இதனால் இன்னல் விலகும். மனோபலம் மிகும். தெய்வீகத் திருப் பணிகள் செய்வீர்கள்.

ராகு, கேது முறையே 1.5.2006 வரை உமது ராசிக்கு 8, 2லும் பின்பு 7, 1லும் சஞ்சரிப்பர். இதனால் கூட்டாளிசவ்'டம்

(மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்)

பொதுவான பலன்கள் :

எண்ணம் ஈடேறும். எடுத்த காரியம் யாவினும் வெற்றியே கிட்டும். சிலருக்கு மறுமணம் நடக்க வாய்ப்புள்ளது. பதவி உயர்வு கிட்டும். மூத்த சகோதர வழியில் முன்னேற்றம் கிட்டும். தடைப்பட்ட திருமணம் நடக்கும். மாமன், மைத்துனர் வலிய வந்து உதவுவர். காதல் கைகூடும். கல்யாணம் நடக்கும். புதிய முதலீடுகள் செய்வீர்கள்.

''அஞ்சிலே குரு வர, பஞ்சம் போம்'' என்ற கூற்றின்படி வளமை கூடும். புத்திர பாக்கியம் கிட்டும். பூர்விக தனம் கிட்டும். தெய்வானுக்கிரகம் கூடும். இஷ்ட தெய்வம் குலதெய்வம் போன்றவற்றுக்கு நேர்த்திக் கடனைச் செய்வீர்கள்.

திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக்கும். வேலை தேடி அலை பவர்களுக்கு நற்செய்தி தேடி வரும்.

ராகு, கேது முறையே 1.5.2006 வரையில் உமது ராசிக்கு 7, 1 லும் அதன் பின்னர் 6, 12லும் சஞ்சாரம் செய்வர். இதனால் கணவன் மனைவி இடையில் விட்டுக் கொடுத்துப் போகும் குணம் பெருக வேண்டும். தேவையற்ற பிரயாணம் தவிர்க்கவும். பாதியில் நின்ற படிப்பைத் தொடரவும்

(உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்)

பொதுவான பலன்கள் :

ஒருபுறம் 7½ சனியின் ஆரம்பமாயிற்றே என்ற அச்சம். மறுபுறம் 4ல் குரு நன்மை செய்யார் என்ற நடுக்கம். இவை இரண்டும் போதாது என்று ராகு-கேது பிடியில் உமது ராசி. இவ்வளவுக்கும் இடையில், உமக்கு நற்பலன் நடக்கும் என்பதுதான் நிதர்சன உண்மை. வீடு, மனை, வாங்க இடமுண்டு. கடன் தீரும். நோய் விலகும். புத்திரபாக்கி யம் கிட்டும். தெய்விகப் பிரார்த்தனைகள் பலிக்கும். திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணை நிற்கும். எதிரிகள் விலகுவர்.

'நாலிலே குரு நன்மை செய்யார்' என்பது அனைவரும் அறிந்த ஜோதிடக் கூற்று. அவர் சொந்த வீட்டில் ஆட்சி பலம் பெறுகிறார். அவர் ராகுவின் பார்வை பெறு வதும், குருபகவானின் 8,10,12ம் வீட்டில் பதிவதால் நற்பலன் விளையும் என்பதில் ஐயம் வேண்டாம். கல்வியில் தேர்ச்சியும், கலைகளில் நாட்டமும் புதிய முயற்சிகள் கணிசமான வெற்றியும் கிட்டும். செல்வந்தர் களின் சேர்க்கை கிட்டும்.

7½ சனி என்ற அச்சம் வேண்டாம். சனி பகவான் உமது ராசிக்கு 5, 6க்குடையவர். '1, 5, 9க்குடையவர் பாபியே ஆனாலும் சுபப் பலனையே தருவார்' என்பது ஜோதிட விதி.

மிகவும் பக்குவமாக நடந்துகொள்ளவும். குடும்பத்தில் வீண் வாக்குவாதம் தவிர்த்தல் நலம்.

தெய்விகப் பிரார்த்தனைகள் பலவிதம் ஆகும். விவாகரத்து வழக்கில் சாதகமான தீர்ப்பு கிட்டும். எதிரிகள் விலகுவர். நாட்பட்ட நோய் விலகும்.

பதவி உயர்வு கிட்டும். வேலைப் பளு கூடும். விரும்பிய இடமாறுதலுக்கு வாய்ப்பு உள்ளது.

கடகம்



பரிகாரம் :

7½ சனியில் கடைசி 2½ வருடம் நடக்கிறது. பிரதி சனிக்கிழமை, சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றுக. இயன்ற அளவு அன்னதானம் செய்யவும்.

வாய்ப்பு உள்ளது. தாயாரின் உடல்நலனில் மிக்க கவனம் தேவை.

பிரிந்து வாழும் தம்பதியர் இணைந்து வாழ இடமுண்டு. நீண்ட காலக் கனவுகள் நனவாகும். கடினமான பணிகளைச் செய்ய வேண்டாம். விவாகரத்தானவர்கள் மறுமணம் புரிவர். பதவி உயர்வு கிட்டும். கேட்ட இடமாறுதல் கிட்டும். நினைத்தது நடக்கும். உயர் அதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிட்டும். எனினும் கீழ்நிலை சிப்பந்தி களிடம் மிகவும் கவனமாக இருக்கவும்.

சிம்மம்



பரிகாரம் :

பிரதோஷ காலத்தில், முக்கூட்டு எண்ணெயில் தீபம் ஏற்றி, மனமுருக வழிபட்டால் சஞ்சலம் அணுகாது.

ராகு, கேது முறையே 1.5.2008 வரை 6, 12லும் அதன் பின்னர் 5, 11லும் சஞ்சாரம் செய்வர். இதனால் விரோதி கள் விலகுவர். புனித ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

கன்னி

தாய் வீட்டுச் சீதனம் கணிசமாகக் கிட்டும். வீடு, மனை, புதிய வாகனம் வாங்குவீர்கள். புத்திர பாக்கியம் கிட்டும். செல்வந்தர்களின் ஆதரவு கிட்டும். மேல் முறையீட்டில் வெற்றி கிட்டும். பிரயாணம் அதிகரிக்கும்.



பரிகாரம் :

பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க. அபிஷேகத்துக்கு பால் (அ) தயிர் எடுத்துச் செல் வது நலம். நந்திதேவரைத் தரிசித்து, சிவபெரு மானை வழிபடவும்.

(சித்திரை 3, 4 -ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 -ஆம் பாதங்கள்)

பொதுவான பலன்கள் :

சரளமான பணப்புழக்கம் நிலவும். கணவன் - மனைவி இடையில் சந்தோஷம் மிகுந்து காணும். குடும்பத்தில் விருந்தினர் வருகை குறையாது. தொழில் வழியில் உற்சாகம் நிலவும். கண் சம்பந்தமான உபாதைகளால் அவ்வப்போது செலவுகள் உண்டாகும். பழைய வீட்டைப் புதுப்பிக்கவும் புதிய வீடு, மனை வாங்கவும் வாய்ப்பு உள்ளது.

உமது ராசிக்கு குருபகவான் 3,6க்கு உடையவர். அவர் 3ஆம் வீட்டில் ஆட்சி பலம் பெறுவது விபரீத ராஜயோகம் ஆகும். இதனால் கடன் தீரும். கவலைகள் அணுகாது. காதல் கைமேல் பலன் தரும்.

வீடு, மனை என வாங்குவீர்கள். மூத்த சகோதர வழியில் உதவி கிட்டும். புதிய முயற்சிகளில் நேரடிக் கவனம் செலுத்தவும். சிலர் மறுமணம் புரிய வாய்ப்பு உள்ளது. வழக்கில் வெற்றி கிட்டும். பதவி உயர்வு கிடைக்கும்.

ராகு-கேது முறையே 1.5.2008 வரை உமது ராசிக்கு 5, 11லும் பின்பு 4, 10லும்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

பொதுவான பலன்கள் :

வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. மனைவி/கணவரின் விருப்பத்தை விருப்பமுடன் நிறைவேற்றுவீர்கள். கடன் தீரும். சகோதர வழியில் நிலவிய சஞ்சலம் விலகும். பூர்விகச் சொத்தில் வில்லங்கம் தீரும். வியாபார ஸ்தலம், குடியிருக்கும் வீடு போன்றவற்றை மாற்ற இடமுண்டு. தந்தை மூலம் தனலாபம் கிட்டும். இந்தப் புத்தாண்டில் மூர்த்திகர நிர்ணம் உமது ராசிக்கு ஸ்வர்ண மூர்த்திகரம் வருகிறது. இதனால் நிறைய ஆடை அணிமணிகள், தங்கம், வெள்ளி என சேரும்.

குடும்பத்தில் சரளமான பணப்புழக்கம் உண்டாகும். நீண்ட கால கனவுகள் நனவாகும். பெண்களால் வாழ்வில் வளமும் நலமும் சேரும். குடும்பத்தில் சுபச்செலவுகள் வந்தவண்ணம் இருக்கும். செய்தொழிலில் நல்ல அபரிமிதமான வளர்ச்சி கிட்டும். புதிய தொழில் கூட்டாளிகள் கிடைப்பர். அரசு வழி அல்லல் அகலும். வீடு, மனை என சேரும். மகான்களின் நல்லாசி கிட்டும்.

ராகு, கேது முறையே 1.5.2008 வரை உமது ராசிக்கு 4, 10லும் பின்பு 3, 9லும் சஞ்சாரம். இதனால் எதிர்பாராத தனவரவு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்)

பொதுவான பலன்கள் :

எதிர்பாராத தனலாபம் கிட்டும். பூர்விகச் சொத்தில் வில்லங்கம் தீரும். பிரயாணத்தினால் தொழில்புரிபவர்கள் மிக்க அனுகூலம் பெறுவர். தந்தையின் உடல்நலன், குடியிருக்கும் வீடு, தொழில் செய்யும் இடம் போன்றவைகளில் மாற்றம் ஏற்படும். குலதெய்வத்துக்கு நேர்ந்த பிரார்த்தனையைச் செய்து முடிப்பீர்கள்.

ஜென்ம குரு என்ற அச்சம் வேண்டாம். உமது ராசி நாதன் குருபகவான். எனவே அவர் உமது ராசிக்குத் தீங்கு செய்ய மாட்டார். பிரயாணம் மூலம் பொருள் செலவாகும். பணபரிமாற்றங்களில் மிகவும் கவனமுடனிருப்பது நலம்.

உமது ராசிக்கு 9ல் இருப்பதும் அவர் குருபகவானின் பார்வை பெறுவதும் மிகவும் விசேஷம். 'குரு பார்த்த சனி குபேர யோகம் தருவார்' என்பது ஜோதிடக்கூற்று.

ராகு-கேது முறையே 1.5.2008 வரை உமது ராசிக்கு 3, 9லும் பின்பு 2, 8லும் சஞ்சாரம் செய்வர். இதனால் திடீர் தனலாபம் கிட்டும்.

சஞ்சரிப்பர்.

பொன், பொருள், பூஷணம் சேர்க்கை உண்டு. கணவன் - மனைவி இடையில் அன்னியோன்யம் மிகும். திருமணம் கைகூடும். மேல் முறையீடு களில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பதவி உயர்வு கிட்டும். புதிய வாகனம் வாங்க நேரும்.

துலாம்



பரிகாரம் :

பிரதி மாதம் சுவாதி நட்சத்திர தினத்தில் யோகநரசிம்மரை வழிபடவும். பிரதி வியாழன் தட்சிணாமூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றவும். ஏற்றம் நிச்சயம் கிட்டும்.

கள் கிட்டும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கலில் முன்னெச்சரிக்கையுடன் செயல்படவும். புனித ஸ்தலங்களுக்குச் செல்வீர்கள். அருளாளர் களின் அருளாசி கிட்டும்.

விருச்சிகம்



புத்திரபாக்யமில்லாதவர்களுக்கு புத்திர பாக்யம் கிட்டும். கடன் தீரும். வழக்குகள் முடிவுக்கு வரும். வீடு, மனை, வாகனம் என வாங்க நேரும். விரும்பிய இடமாறுதல் கிட்டும். பதவி உயர்வுக் கும் சாத்தியம் உள்ளது.

பரிகாரம் :

தினசரி காலையில் எழும்போதே குலதெய்வப் பிரார்த்தனையுடன் எழுந்திருக்கவும். விநாயகரை அருகம்புல் மாலையிட்டு வழிபடவும்.

வெளிநாட்டுத் தொடர்பு கிட்டும். சிலர் வெளிநாடு செல்லவும் இடம் உண்டு. குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதம் தவிர்க்கவும்.

தனுசு



தாயார் வீட்டு அரவணைப்பும் ஆதரவும் பெருகும். வீடு, மனை, வாகனம், ஆடை அணிமணிகள் வந்து சேரும். விரும்பிய இடமாறு தல் கிட்டும்.

பரிகாரம் :

பிரதி சனிக்கிழமை ஆஞ்சநேயருக்கு வெண் ணெய்க் காப்பு செய்து வழிபடவும். ஞாயிறு ராகு காலத்தில் நாகதேவதைகளுக்குப் பூஜை செய்ய வும்.

(உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்)

பொதுவான பலன்கள் :

குடும்பத்தில் சுபச்செலவுகள் வரும். கொடுத்த வாக்கை நிறைவேற்றலாம். கடன் கணிசமாகத் தீரும். தொழில்வளம் சேரும். விரோதிகள் விலகுவர். வெற்றிகள் குவியும். சகோதர வழியில் எதிர்பாராத செலவுகள் வரும்.

உமது ராசிக்கு 3, 12க்குடைய குருபகவான் 12ல் ஆட்சி பலம் பெறுவது விபரீத ராஜயோகம் ஆகும். மேலும், குரு செவ்வாய் பார்வையினால் குரு மங்கள யோகம் உண்டாகிறது. புத்தாண்டு பிறப்பின் போது மூர்த்திகர நிர்ணயத்தில் ரஜதமூர்த்திகரம் வருகிறது. இதனால் சகல சந்தோஷங்களும் தேடி வரும். மகன் (அ) மகள் வழியில் நற் செய்தி கிட்டும். சகல செல்வ யோகமும் சேரும்.

சனிபகவான் உமது ராசிக்கு 8ல் கேதுவுடன் அமர்வு. அஷ்டமச்சனி என்ற அச்சம் வேண்டாம். சனிபகவான் உமது ராசிநாதன். அவர் கெடுதி செய்ய மாட்டார். சனி, கேது ஆகியோரை குருபகவான் பார்வை செய்வதால் இறையருள் கூடும்.

ராகு, கேது முறையே 1.5.2008 வரை உமது ராசிக்கு 2, 8ல் அமர்வு. அதற்குப்

(அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்)

பொதுவான பலன்கள் :

நீண்ட காலக் கனவுகள் நனவாகும். நினைத்தது நடக்கும். கேட்டது கிடைக்கும். எப்போதும் பரபரப்புடன் திகழ்வீர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். கடன் தீரும். கணவன் - மனைவி இடையில் நிலவிய சிறு சிறு மனஸ்தாபங்கள் விலகும். காதல் நிறைவேறும். புத்திரபாக்யம் கிட்டும்.

மூத்த சகோதர வழியில் முன்னேற்றம் கிட்டும். இளைய சகோதர வழியில் நற்செய்திகள் வரும். பதவி உயர்வு கிட்டும். வளமும் நலமும் சேரும்.

சனி பகவான் 7ல் வருவதை, கண்டச் சனி என்று சுருதிகள் கூறுகின்றன. எனினும் சனிபகவான் உமது ராசிநாதன். அவர் உமக்குக் கெடுதி செய்ய மாட்டார் என்பது துணிபு.

ராகு, கேது முறையே 1.5.2008 வரையில், 1, 7லும் பின்னர் 12லும் 6லும் சஞ்சரிப்பர். தண்ணீரில் எச்சரிக்கை தேவை. முன் அறிமுகம் இல்லாதவர்களிடம் எச்சரிக்கை தேவை. விநாயகரை தினசரி வழிபட வல்வினை தீரும்.

(பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

பொதுவான பலன்கள் :

தொட்டது துலங்கும். முடியவில்லை என மலைத்து நின்ற அலுவல்கள் சர்வ சாதாரணமாக நடக்கும். வழக்கில் வெற்றி கிட்டும். தெய்விகப் பிரார்த்தனைகள் கை மேல் பலன் தரும். நோய் தீரும். விரோதிகள் விலகுவர். வரவேண்டிய பாக்கிகள் வசூல் ஆகும். கடன் கணிசமாகத் தீரும்.

''பத்திலே பார்ப்பான் பதவியைப் பறிப்பான்'' - என்ற பழமொழியைக் கண்டு அஞ்ச வேண்டாம். குருபகவான் உமது ராசிநாதன். பத்துக்குடையவரும் அவரே ஆவார். இதனால் அவர் உமக்குக் கெடுதி செய்ய மாட்டார். மாறாக அதிக வேலை, அதிக பொறுப்பு, இடமாற்றம் என உண்டாக வாய்ப்பு உண்டு.

சனிபகவான் உமது ராசிக்கு 11, 12க்குடையவர். அவர் 6ல் வருவது மிகவும் அருமையான யோகம் ஆகும். ''3, 6, 11ல் மந்தன் வந்தால் மகத்தான யோகம் சொல்லும் பாலனுக்கு'' என்பது சுருதிகள் கூற்றாகும். எனவே 6ஆம் வீட்டால் சனிபகவான் சஞ்சரிக்கும் காலம் உமக்கு பொற்காலம் என்றே சொல்லலாம். கடன் தீரும்.

ராகு, கேது முறையே உமது ராசிக்கு

பின்பு, 1, 7ல் சஞ்சாரம். இதனால் பணம் கையாளும் பணியினர் மிகவும் கவனமுடன் பணிபுரிதல் நலம். வீண் வாக்குவாதம் தவிர்த்தல் நலம். தெய்விகப் பிரார்த்தனைகளை கவனமுடன் நிறைவேற்றுங்கள். இறையருளால் வெற்றிகள் குவியும்.

மகரம்



கணவனிடம் வீண் வாக்குவாதம் தவிர்த்தலாலே மிகுந்த சந்தோஷத்தைப் பெறலாம். பணிச்சுமையுடன் கூடிய பதவி உயர்வுக்கு வாய்ப்புண்டு.

பரிகாரம் :

'காகத் வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி தன்னோ மத்த பிரசோதயாது' என்ற மந்திரத்தை தினசரி 27 முறைக்குக் குறையாமல் ஜெபிக்கவும்.

கும்பம்



திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். புத்திரபாக்யம் இல்லையே என ஏங்கியவர் களுக்கு புத்திர பாக்யம் கிட்டும். புதிய முயற்சிகள் எதுவானாலும் அதில் அபாரமான வெற்றி கிட்டும். தடைகள் அகலும், பதவி உயர்வு கிட்டும். மேலதிகாரிகளின் உதவியும், ஒத்தாசையும் கிட்டும்.

பரிகாரம் :

அருகில் உள்ள ஐயனார் கோயிலுக்குச் சென்று பக்திசிரத்தையுடன் வழிபடவும். பிரதி ஞாயிறு துர்க்கைக்கு தீபம் ஏற்றி வழிபடவும். ''ஜெய ஜெய துர்க்கா! ஜெய ஜெய துர்க்கா!'' என்று 27 முறை ஜெபிக்கவும்.

மீனம்



1.5.2008 வரை *12, 6*ல் அமர்வு. பின்பு *11, 5*ல் சஞ்சாரம். அகால உறக்கம், அகால போஜனம் தவிர்க்கவும். தெய்விகப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத தனவரவுக்கு இடம் உண்டு. வெளிநாடு செல்ல வாய்ப்புகள் தேடி வரும். மாணவர்கள் ஏற்றம் பெறுவார்கள். வீடு, மனை, பூமி, வாகனம் என வாங்குவீர்கள். புகுந்த வீட்டினர் ஒத்தாசை உண்டு. இடமாறுதல் கிடைக்க வாய்ப்பு உண்டு. பதவி உயர்வுக்கு வாய்ப்புகள் பெருகும்.

பரிகாரம் :

பிரதி வியாழன் தட்சிணாமூர்த்திக்கு ஒரு சதுரமான மஞ்சள் வண்ணத் தாளில் 3 பிடி கொண்டைக் கடலையை, தாம்பூல தட்சிணையுடன் சமர்ப்பித்து, நெய் தீபம் ஏற்றி வழிபடவும்.

தைராய்டு... நோய்களின்

பற்பல ஆரோக்கிய பிரச்னைகளின் மூலகாரணமாக இருக்கும் தைராய்டு கோளாறுகள் பற்றி விளக்கம் தருகிறார் டாக்டர். ஆர். ஞானசம்பந்தம். இவர், தமிழக ஹோமியோபதி மருத்துவக் கவுன்சிலின் தலைவர். மத்திய அரசின் மருந்துக் கட்டுப்பாட்டு மையத்துக்கு ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

''முன்னே ரொம்ப ஒல்லியா இருந்தேன். கல்யாணத்துக்கு அப்புறம் ரொம்ப குண்டாயிட்டேன்!''

''ரொம்ப இளைச்சுப் போயிட்டாப்பா என் மவ; கழுத்துலே வேறே வீங்கி இருக்கு! ரொம்ப கோபப்படறா... கை கால் எல்லாம் நடுங்குது. எப்பவும் படபடப்பா இருக்குறா!''

''பீரியட்ஸ் சரியாகவே வர்றதில்லே. கல்யாணமாகி நாலு வருஷமாவுது. இன்னும் குழந்தை பிறக்கலை. இப்ப எல்ட்ராக்ஸின் சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன்!''

''எனக்கு தலைமுடி அடர்த்தியா இருக்கும். எல்லாம் கொட்டிப் போய், எலி வால் மாதிரி ஆயிடுச்சு. தலையிலே எண்ணெய் வச்சா மண்டையெல்லாம் தெரியுது!''

- இப்படி சங்கிலித் தொடர் போல தொந்தரவுகள் தற்போது பெண்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றன. இதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது நமது கழுத்தின் முன்பகுதியில் அமைந்துள்ள நோய்களின் அரசன் தைராய்டு சுரப்பிதான். இப்பல்லாம் எந்த ஒரு நோயை எடுத்தாலும், தைராய்டு சுரப்பியில் கோளாறு உள்ளதா என்றுதான் மருத்துவர்களே பார்க்கிறார்கள்.

இந்தத் தைராய்டு சுரப்பி அதிகமாகச் சுரந்தாலும் தொல்லை; குறைவாகச் சுரந்தாலும் தொல்லை. அதுமட்டுமா? உடலில் அயோடின் சத்து குறைந்தால் வீக்கம் வேறு வந்துவிடும். சில சமயங்களில் எல்லாம் சரியாக இருந்தும், சிறு சிறு கட்டிகள் தோன்றி, கேன்சராக இருக்குமோ என்று மன உளைச்சல் தந்துவிடும்.

● சிகிச்சைக்கு முன்... (வீங்கிய நிலையில்)



தைராய்டு கோளாறுகளைப் பகுத்தறிவது மிகவும் சுலபம். இரத்தப் பரிசோதனை, T_3, T_4, TSH ஆகிய பரிசோதனைகளைச் செய்து ஹார்மோன்கள் பற்றி முதலில் பார்க்க வேண்டும். TSH அதிகமாக இருந்தால், தைராய்டு சுரப்பி நன்றாகச் சுரக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளலாம். அதே போல் TSH குறைவாக இருந்தால், தைராய்டு சுரப்பி அதிகமாகச் சுரக்கிறது

என்று தெரிந்து கொள்ளலாம். கட்டிகள் எப்படிப்பட்ட வகை என்பதை ஸ்கேன் மூலம் அறிந்து கொள்ள முடியும். கேன்சர் போன்ற சந்தேகங்கள் இருந்தால் தெளிவு படுத்திக் கொள்ள ஊசியால் கட்டியிலிருக்கும் செல்களை எடுத்து நுண்பெருக்கி மூலம் தெளிவு கொள்ள முடியும்.


தைராய்டு குறைவாக இருந்தால்...

ஒரு பெண்மணிக்கு தைராய்டு சுரப்பி குறைவாகச் சுரந்தால் (Hypothyroidism) ஆரம்பத்தில் அவருக்குத் தெரிந்தோ, தெரியாமலோ இருக்கும். முதலில் மாற்றம் மாதவிலக்கில் ஏற்படலாம். தீட்டு தாறுமாறாக, அதிகமாக அல்லது ஏற்படாமல் இருக்கலாம். அதோடு மட்டுமில்லாமல் உடல் பருமனாக ஆரம்பித்து விடும்!

• சிகிச்சைக்குப் பின்...



ராஜா!



டாக்டர் **ஆர்.ஞானசம்பந்தம்**

இளம்பெண்களுக்கு இந்தக் கோளாறுடன் கருமுட்டையில் நீர்க்கட்டிகள் (Poly Cystic Ovarion Disease) இருக்கலாம். குழந்தைப்பேற்றுக்குப் பின் சில பெண்களுக்கு தைராய்டு சுரப்பியில் அலர்ஜி ஏற்பட்டு, தைராய்டு சுரப்பி குறைவாக சுரக்க ஆரம்பிக்கலாம். அதனால்தான் பெரும்பாலான பெண்கள் பிரசவத்துக்குப் பிறகு குண்டாகி விடுகின்றனர்.

முகம், பருமனாக ஆரம்பித்து விடும்; கைகளில் வீக்கம் இருப்பது போல தோன்றும்; உடல் பருமன் அதிகமாவதால் களைப்பு, குளிர்ச்சியைத் தாங்க முடியாத நிலை தோன்றும், கை கால் உளைச்சல், மூட்டுவலி என்று இத் தொல்லைகள் வளர்ந்து கொண்டே போகும். ஞாபகமறதி, மனச்சோர்வு அதிகமாக இருக்கும். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எந்த வேலையிலும் நாட்டம் இல்லாமல் இருப்பார்கள். சிலருக்குக் குரல் மாற்றம் வரலாம்; சருமம் வறண்டு காணப்படும்; பொலிவு இருக்காது.

அது மட்டுமா? தான் ஸ்ட்ரைக் செய்வதோடு மற்ற நாளமில்லா சுரப்பிகளையும் அதனதன் வேலைகளைச் சரிவர செய்ய முடியாவண்ணம் செய்துவிடும். இதனால்தான் முடிவளர்ச்சிக்குக் காரணமாக இருக்கும் டெஸ்டோஸ்டீரான் ஹார்மோன் பாதிப்பு ஏற்பட்டு, தலையில் வழுக்கை விழுகிறது. மேலும் மீசை தாடியை வளரச் செய்கிறது.

கருமுட்டைப்பையில் சிறுசிறு நீர்க்கட்டிகள் (PCOD) தோன்றக் காரணமாக இருக்கும் இந்த ஹார்மோன், மாதவிலக்குக் கோளாறுகளை ஏற்படுத்தி கருமுட்டை சரியாக வெளியேறாமல் தடுத்து விடுகிறது. இதனால் கர்ப்பம் தடைபடுகிறது. குழந்தைப்பேறு இல்லாமல் பல தம்பதியர் தவிக்க நேர்வது இந்த ஹார்மோன் பிரச்னையால்தான்!

தைராய்டு அதிகமாகச் சுரந்தால்...

தைராய்டு சுரப்பி அதிகமாகச் சுரந்தால் நோய்குறிகள் அப்படியே எதிர்மாறாக இருக்கும். கழுத்துப் பகுதியில் தைராய்டு

ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை

"என்னாச்சு பத்மா?"



மணி பதினொன்றாகியும் வேலைக்கு வராத முனியம்மாவை நினைத்து பத்மாவுக்குக் கோபமாய் வந்தது. 'இவளுக்குக் கேட்ட போதெல்லாம் அட்வான்ஸ் தாரணும். என் வீட்டுக்கு மட்டும் முன்னே பின்னே வருவாள். எல்லாச் சலுகையும் என்னிடம்தான்! கேட்டால் ஆயிரம் கஷ்டம் சொல்வாள். மற்றவர்களிடமும் சொல்லவேண்டியதுதானே?' என்று நினைத்துக் கொண்டே சாமி அறைக்குள் புகுந்தாள்.

விளக்கில் இருந்த திரியை மட்டும் எடுத்து மாற்றி ஏற்றிவிட்டு ஹாலில் வந்து அமர்ந்தாள். பின்னாலேயே வந்த பத்மனாபன், "என்ன பத்மா, இன்னிக்கு புது கோலமில்ல, விளக்குத் தேய்க்கல, ஸ்லோகமும் படிக்கல என்ன ஆச்சு? ஓ, முனியம்மா வராததால எல்லாம் நீயே செய்யவேண்டி வந்துடுச்சோ, அதனால் பகவான்தானே, ஒண்ணும் சொல்ல மாட்டாருனு எல்லாம் ஷார்ட்டா முடிச்சிட்டியாக்கும்?" என்று சொன்னார்.

அதைக் கேட்ட பத்மாவுக்கு ஓர் உண்மை பளிச்சிட்டது. 'கருணை உள்ள இடத்தில்தானே சலுகை எடுத்துக்கொள்ள முடியும்? முனியம்மாவும் அதைத்தானே செய்கிறாள்?' என்று நினைத்து, இரண்டு நாள் சம்பளத்தை, 'கட்' செய்ய நினைத்த தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

- ஜி. ஜீவா ரேகா, மஹாராஷ்டிரா.

சுரப்பி வீக்கம் ஏற்பட ஆரம்பிக்கும். உடல் முழுவதும் சூடாக இருத்தல், படபடப்பு, வெயிலைத் தாங்க முடியாமை, கை, கால் நடுக்கம் போன்ற அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிடும். வியர்வை அதிகமாகச் சுரக்கும். இதயத் துடிப்பு மிகவும் அதிகமாக இருப்பதால், இதயப் படபடப்பை பாதிக்கப் பட்டவர்களே உணர்ந்து கொள்ளலாம். களைத்துப் போவார்கள். நாக்கு வறண்டு விடும்; குமட்டல் வாந்தி கூட வரும்; எந்த வேலையும் சரிவர செய்ய முடியாமல் தவிப்பார்கள்; தூக்கம் சரியாக இருக்காது. தீட்டுக் கோளாறுகள் பல்வேறு கோணங்களில் தோன்ற ஆரம்பிக்கும். சிலருக்குக் குறைப்பிரசவம், கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல் போன்ற அவதிகள் நேரும்.

ஒருசிலருக்குக் கண்கள் பெரிதாக வீங்கத் தொடங்கி, வெளியே தள்ளிக்கொண்டு வந்து விடும். பார்வைக் கோளாறுகூட ஏற்படலாம்.

"தைராய்டு பிரச்னை இருந்தால் வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிடணுமாமே!" இது பலரது சந்தேகம். அடிப்படையாகப் பார்த்தால் பரம்பரைத்தன்மை, சுயநோய் எதிர்ப்புத்திறன் குறைதல் (Auto Immune Disease), உடல் இயக்கக் கோளாறுகளால்தான் இந்நோய் ஏற்படுகிறது. எனவே, இந்த அடிப்படைக் கோளாறைச் சீராக்கினாலே நோய் நீங்கும். தைராய்டு அதிகம் சுரந்தாலும், குறைவாகச் சுரந்தாலும், கட்டிகள் இருந்தாலும் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் மருந்துகளாலேயே குணமாக்கலாம்.

ஹோமியோபதி 'roots the disease' என்று கூறலாம். நேரடியாகச் செயல் புரியாமல் அடிப்படையாகச் செயல் புரிந்து கொஞ்சம் கொஞ்சமாக நமது இயல்பு நிலைக்கு கொண்டுவந்துவிடும் சிறப்பு, ஹோமியோபதிக்கே உரியது. பக்கவிளைவும் இருக்காது!

(அடுத்த இதழில் பெண்களுக்குத் தேவையற்ற முடி வளர்வது ஏன்?)



எங்கள் தங்க செயின்களை கண்கள் மூடி
தேர்ந்தெடுக்க மேலும் பல காரணங்கள்.
- 13% வரை குறைவான சேதாரம்.
- செய்கூலி இல்லை.
- 250க்கும் மேற்பட்ட டிசைன்கள்.
75 years of Craftsmanship & Trust
OKJ™
SINCE 1933
THE JEWELLERY STORE
GOLD | DIAMONDS | PLATINUM
PRECIOUS STONES | SILVER
ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அல்ல : வாலே பார்க்கிங் வசதி உண்டு
Exclusive Stores: CHENNAI: T.Nagar: 74, Usman Road. Ph: 24340027 • Annanagar: 3rd Avenue. Ph: 26268000.

தாய்மை என்பது பாசத்தின் முகடு. அன்பு கடல் என்றால், அதன் அடி ஆழம். பேசத் தெரியாத நாள் முதல், பேச முடியாத நாள் வரை ஓர் உயிரைப் புரிந்துகொள்ளக்கூடிய அனுபவ அகராதி தாய் மட்டுமே. பெண்மையின் முழுமை, தாய்மைதான். கருப்பை வெறும் பாதுகாப்புப் பெட்டியல்ல. உயிரின் தியான மண்டபம். கர்ப்பப்பை என்பது கடவுளின் கேம்ப் அட்ரஸ்!

பொதுவாக, ஒரு பெண் பிறரால் விரும்பப்படுகிறாள். ஆனால், ஒரு தாய்தான் பிறரால் மதிக்கப்படுகிறாள். இந்தியப் பெண்கள் பிறரால் விரும்பப்படுவதை விடவும் மதிக்கப்படுவதை அதிகம் விரும்புகிறார்கள். மேலைநாடுகளில் பெண்மைதான் அதிகம் கொண்டாடப்படுகிறது.



பெண்ணே, நீ வாழ்க!





சுகிசிவம்

ஆனால் இங்கோ, தாய்மை சிறப்பிக்கப்படுகிறது.

தாய்மை எவ்வளவு புனிதமாகக் கொண்டாடப்படுகிறது என் பதற்கு நான் ஒரு நிருபணம் தந்தால், நீங்கள் திகைப்படைவீர்கள். கெட்ட வார்த்தையிலேயே அதி மோசமான கெட்ட வார்த்தை ஒருவன் தாயாரைக் குறைத்துப் பேசுவதுதான். அந்த வார்த்தை அளவு கடந்த ரோஷத்தை ஒருவனுக்கு உண்டுபண்ணுகிறது. காரணம், தாய்மை அத்தனை புனிதமாகக் கருதப்படுகிறது.

தாய்மையை அதிகம் புகழ்வதே பெண்மைக்கு எதிரான ஒரு சூழ்ச்சி என்று ஒருசில பெண்கள் கருதுகிறார்கள். இப்படிப் புகழ்வதன் மூலம் வஞ்சனையாகக் குழந்தைச் சுமையைப் பெண்மீது சுமத்தி அவளை ஆண்கள் அடிமையாக்குவதாகப் புரட்சிப் பெண்கள் மேடையேறி முழங்குகிறார்கள். இவர்கள் இயற்கையைப் புரிந்துகொள்ள வேண்டும். இயற்கைக்கு ஓர் ஆணைப் போன்ற உள்நோக்கமோ வஞ்சனையோ இருக்க முடியாது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

தாய்மைக்கு ஏன் இத்தனை புனிதத்தன்மை



தரப்பட்டது தெரியுமா? இழுத்தல், தன்னைக் கரைத்துக்கொள்ளுதல் என்கிற தியாக உணர்வின் உற்பத்தி ஸ்தானமே தாய்மை தான். விலங்கானாலும் சரி, மனிதரானாலும் சரி, தாய்மையில்தான் ரட்சகத்தின் ஆவேசம் தரிசனமாகிறது.

தொலைக்காட்சியில் டிஸ்கவரி சேனல் பார்ப்பதுண்டா... ''உங்களை அதில் பார்த் திருக்கிறேன்'' என்று என்னைப் பற்றி உடனே ஜோக் அடிக்க வேண்டாம். என் உயிரைச் சுருட்டி உள்வாங்கும் சேனலே அதுதான். ஆம். அதில் வருகிற எந்த மிருக மும் மேக்கப் போடாது. வசனம் பேசாது. நடிக்காது. பொய் சொல்லாது. அந்த



உண்மையின் தரிசனம் எனக்கு வெகு பிடித்தம்.

ஒருமுறை மலைப்பாம்பு, முதலை பற்றி நான் பார்த்து அறிந்துகொண்ட செய்தி என்னை அதிரவைத்தது. தின்பதற்கு அலை யும் விலங்குகளில், தரையில் மலைப் பாம்பும் தண்ணீரில் முதலையும்தான் தலைமைதாங்கவல்லவை. தின்ன அலை பவர்களை ''பார், முதலை மாதிரி வாயைப் பிளக்கறதைப் பாரு'' என்றும், நன்றாகத் தின்றுவிட்டு சிரமப்படுகிறவரை, ''முழுங் கிட்டு மலைப்பாம்பு மாதிரி நெளியறதைப் பாரு'' என்றும் நாம் கிண்டலடிப்போம். ஆனால், மலைப்பாம்பும் சரி, முதலையும் சரி, தாய்மையில் காட்டும் தியாக வெறியை டிஸ்கவரி சேனலில் நான் பார்த்துத் திகைத் துப் போனேன். அவை தங்கள் முட்டை களை மணலில் மூடிவைத்துவிட்டு ஆடா மல் அசையாமல் அடைகாக்கும் நேர்த்தியே நேர்த்தி. பசியாவது ஒன்றாவது. பட்டினி... பட்டினி... பட்டினி... முப்பது கிலோகூட தாய்மையால் பறிபோகக்கூடும். அடுத்த தலைமுறையை உருவாக்கும் அக்கறைமிக்க ஆவேசத்தில் அவை அப்படியொரு தவம் செய்யும். கண்களில் பசி வழியும். ஆனா லும், அப்படி இப்படி நகர்ந்து போகும் போது, அடுத்த தலைமுறையை யாராவது அழித்துவிட்டால் என்கிற பயம் கண்களில் பாய்ந்து கொட்டும். பட்டினியோடு காத்துக் கிடந்து அவை அடுத்த தலைமுறையை உற்பத்தி செய்யும்.

நான் படித்தறிந்த மற்றொரு செய்தி. நண்டு, ஆக்டோபஸ் போன்ற உயிரினங் கள் தம் வாரிசுகளை உருவாக்கும் ஆவேச வெறியில் தங்களையேகூட பலி யாக்கிக் கொண்டுவிடும். தாய்மை ஓர் அதிசய ஆவேசம். ஆனால் தாய்மை யில் இத்தனை சிறப்பிருந்தா லும், ஓர் ஆபத்து இருக்கிறது. அதுதான் பிள்ளைப்பேறு. பிரசவம் என்பது பிள் ளைக்கு ஜனனவாசலும், தாயாருக்கு மரணவாச லும் ஒருசேரத் திறந்து மூடும் அதிசய சம்பவம்.

பத்திரிகைகளில் இலவச இணைப்பு தரப்படுவதுபோல இயற்கை ஒவ்வொரு இன்பத்துக்கும் ஒரு துன்பத்தை இலவச இணைப்பாகத் தருகிறது. தாம்பத்யத்துக்கு என்ன இலவச இணைப்பு என்று பார்ப் போமா? தாம்பத்யம் என்கிற உடல் உள்ள உச்சநிலை இன்பத்துக்குத் தண்டனையாக, மகப்பேறு என்ற துன்பம் பெண்ணைக்கு மட்டும் வழங்கப்படும் இலவச இணைப்பு. அண்மைக்கால பெண்ணுலகம், பிள்ளைப் பேறு தண்டனை என்றுதான் கருதுகிறது. கருத்தரிக்காத காமநுகர்ச்சிக்கான வழிமுறை கள் இந்தச் சிந்தனையின் விளைவே. நான் இதற்கு எதிரியல்ல. ஒரு பெண்ணின் நியாய மான பயத்தை என்னால் உணர முடிகிறது.

ஏனென்றால், ஏதோ ஒரு ஜன்மத்தில் நானும் பெண்ணாகப் பிறந்திருப்பேன் அல்லவா? ஆனால் தாம்பத்யத்தைப் பொருத்தமட்டில்... இயற்கை ஆண்களுக்கு ஒரு நீதியும் பெண்களுக்கு ஒரு நீதியும் வழங்குகிறது. தாம்பத்யத்தின் சுகம் மட்டுமே ஆணுக்கு, துயரமோ பெண்ணுக்கு. இப்படிச் சொல்லத் தோன்றுகிறது அல்லவா. மேம்போக்காகப் பார்த்தால் இப்படித்தான் தோன்றும். ஆனால் இயற்கையின் இதயத் துடிப்பை உணராதவர்கள், பிரபஞ்சத்தின் நீதியுணர்வைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் மட்டும்தான் இப்படிப் பேசுவார்கள்.

உண்மையில் பிளந்து கிடந்த ஆண்மையும் பெண்மையும் இணையும் பெருநிகழ்வின் பரவசம் ஆணுக்குத் தற்காலிகப் பரிசு... ஆனால், பெண்ணுக்கோ நிரந்தரப் பரிசு. வாழ்நாள் முழுவதுமான நினைவுப் பரிசு. கட்டிலிலிருந்து விலகிய மறுகணமே ஆண் தனிமையில் தள்ளப்படுகிறான். ஆனால் உயிர்க்கலப்பை உள்ளே சுமக்கும் பெண்ணோ, சேர்க்கையின் ரம்மியத்தை இணைப்பின் இனிமையை மணிக்கணக்காக, நாள் கணக்காக, மாதக்கணக்காக அனுபவிக்கிறாள். அதனால்தான் ஆண் தாம்பத்யத்துக்கு அடிக்கடி ஏங்குகிறான். ஆனால் பிள்ளை பெற்ற பெண்ணோ அப்படி ஏங்குவதில்லை. குழந்தைக்குத்தான் பிரதானம் தருகிறாள். அந்தச் சுகம் இரண்டாம்பட்சம் என்கிறாள். பள்ளிப் பாடத்தில் படித்திருக்கலாம். கலப்பு என்பது வேறு. கூட்டு என்பது வேறு. கலந்தவை பிரிக்க முடிந்தால் கலப்பு. பிரிக்க முடியாதபடி இணைந்தால் கூட்டு. ஆணுக்குத் தாம்பத்யம் வெறும் கலவி. பெண்ணுக்கோ அது கூடுதல். அதனால்தான் அதிக சுவையும், அதிக சுமையும் பெண்மைக்கு இயற்கை கொடுத்திருக்கிறது. யார் அதிக சுவை பெற்றார்களோ அவர்கள் அதிக சுமை பெறவேண்டும் என்பது இயற்கையின் உத்தரவு. தாம்பத்தியத்தின் முடிவில் ஆண் ஓர் இழப்பை, வெறுமையை நுகருகிறான். ஆனால், பெண்ணோ ஏதோ ஒன்றை அடைந்த முழுமையைப் பெறுகிறாள்.

ஆனால் கருச்சுமப்பை ஒரு துன்பமாகக் கருதும் பெண்களும் உண்டு. மேற்கே மிக அதிகம். தெற்கே குறைவு. அது துன்பம்தான். ஆனால், ஒரு பெண் பல பிள்ளைகளைப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இயற்கை ஒவ்வொரு மாதமும் பெண்ணைத் தயார்ப்படுத்துகிறது.

ஆடாமல் அசையாமல் அடைகாக்கும் நேர்த்தியே நேர்த்தி. பசியாவது ஒன்றாவது. பட்டினி... பட்டினி...பட்டினி...



அவள் கருவில் தோன்றும் சினை முட்டை ஏகப்பட்ட எதிர்பார்ப்புடன், ஒரு உயிர்விதையை ஆனந்தமாகக் கருப்பையில் வளர்க்கிறது. கருத்தடைச் சாதனங்கள் மூலம் கலப்பு தடுக்கப்படுகிறது. அல்லது கலைப்பு அரங்கேறுகிறது. கனவு கலைந்து, கரைந்து, சிதைந்து மரண ஓலத்துடன் வெளியேறும் அந்தச் சினை முட்டை, ஒரு பெண்ணின் மனநிலைச் சமநிலையை உண்மையில் வெகுவாகப் பாதிக்கிறது. அவளுக்குக் காரணமில்லாமலேயே கோபமும் எரிச்சலும் கொப்பளிப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். இதற்கு என்ன செய்யலாம்? அடுத்த இதழில் சொல்கிறேன்.

(தொடரும்)

"ஏதாவது போட்டியா? கூட்டி வா எஸ். சரவணப்ரியாவை'' என்பார்கள் எங்கள் ஊரில்! அந்தளவுக்கு பள்ளிக்கூடத்திலும் வெளியிடங்களிலும் ஏகப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு, பரிசுகளையும் சான்றிதழ்களையும் வாங்கியுள்ளேன். அப்படிப்பட்ட எனக்கு கோலப் போட்டி என்றாலே அலர்ஜி. ஆனால் என் தாயாரோ, என்னை ஊக்குவித்து, நிறையப் பயிற்சி எல்லாம் கொடுத்து, கோலப்போட்டிக்கு அனுப்பி வைத்தார். நடுங்கிக் கொண்டே வரைந்தேன். என்ன ஆச்சரியம்.. முதல் பரிசு எனக்குத்தான்! அதை அறிந்த என் தாயார், பள்ளிக்கே வந்து நான் வரைந்த கோலத்தைப் பார்த்து என்னை முத்தமிட்டு வாழ்த்தினார். அந்த முத்தம் தந்த ஆனந்தச் சிலிர்ப்பு... வாழ்க்கையில் மறக்காது!

- எஸ். சரவணப்ரியா,
தேவக்கோட்டை.



டீன் ஏஜ் வாசகிகள் தங்கள் அம்மா சம்பந்தப்பட்ட சுவையான நிகழ்ச்சிகளை புகைப்படத்துடன் எழுதி அனுப்பினால் பிரசுரித்து, பரிசும் தருகிறோம் - ஆர்.

சீதா அவர் கீதா!



நான் கீதா ராமன். என் அம்மா பெயர் சீதா ராமன். பெயரிலேயே என்ன ஒரு ரைமிங் பாருங்கள்!

எங்கள் முகங்கள் உங்களுக்குப் பரிச்சயமானதாகத் தெரியலாம். காரணம் நாங்கள் அடிக்கடி டீ.வி. நிகழ்ச்சிகளில் முகம் காட்டுபவர்கள். ஜெயா டீ.வி.யின் 'ஜாக்பாட்' நிகழ்ச்சியில் என் தாயார், தன தோழிகளுடன் கலந்து கொண்டு, ஜெயித்திருக்கிறார். என் அம்மாவுக்கு பொது அறிவு அதிகம். எனக்கும் நிறைய விஷயங்கள் சொல்லித் தந்து உதவுகிறார். அம்மா என்றால் அன்பு! சீதா அம்மா என்றால் அறிவு!

- கீதாராமன், கொல்கத்தா.

ஸ்ரீ வெங்கடாஜலபதி துணை

ஜெய் ஹோட்டல்ஸ் & டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்

முதல் மாடி, சாரதா, 36, சிருங்கேரி மடசாலை, (சாரதாம்பாள் கோவில் அருகில்)

100 அடி ரோடு, எல்லப்பிள்ளை சாவடி, பாண்டிச்சேரி - 605 005.

போன்: 0413-2201552, செல்: 94432-52652 E-mails: jhat@sify.com & jhat@sancharnet.in

20-01-08	வைஷ்ணவ திவ்யதேச யாத்திரை தமிழக கேரள திவ்ய தேசங்கள் 95 மற்றும் பல முக்கிய ஸ்தலங்கள். மஸ்தா டீலக்ஸ் வேனில் 12 நாட்கள்.புதுவை (To) புதுவை ரூ. 6,800/- சென்னை (To) சென்னை ரூ. 200/- கூடுதல் பெங்களூர் (To) பெங்களூர் ரூ. 300/- கூடுதல் Pickup சேலம், கோவை, மற்றும் வழியில் Drop சென்னை (அ) புதுவை ரூ. 6,800/- (சைவ உணவு, இருவர் தனியறை) மலைநாடு, மட்டும் 4 நாட்கள் ரூ. 2575/- மலைநாடு. பாண்டிய நாடு மட்டும் 6 நாட்கள் ரூ. 3,760/- மலைநாடு, பாண்டிய நாடு, சோழ நாடு மட்டும் 10 நாட்கள் ரூ. 5,823/-.
03-02-08	கர்நாடக சுற்றுலாக்கள் பெங்களூர், மேலக்கோட்டை, ஸ்ரீரங்கப்பட்டினம், மைசூர், தலை காவேரி, பாக மண்டலா, சுப்ரமன்யா, கட்டில், உடுப்பி, முருடேஷ்வர், கோகர்னா, கொல்லூர், சிருங்கேரி, தர்மஸ்தலா, ஹொரநாடு, பேலூர், ஹலபேடு ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 10 நாட்கள் ரூ. 4,120/- சென்னை / திருச்சி / மதுரை / கோவை / ஹைதராபாத் / மும்பை (To) பெங்களூர் & பேக் ரயில் (SL) கட்டணம் தனி. (04.02.08 முதல் 11.02.08 வரை 8 நாட்கள் புஷ்பேக் பஸ்ஸில் சுற்றுலா) (சைவ உணவு, இருவர் தனியறை) இதில் பெங்களூர் தவிர மீதமுள்ள இடங்கள் பார்க்க மொத்தம் 9 நாட்கள் ரூ. 3,605/- புறப்படும் தேதி 04.02.08
05-02-08	தலை காவேரி, பாக மண்டலா, சுப்ரமன்யா, கட்டில், துர்கா, உடுப்பி, முருடேஷ்வர், கோகர்னா, கொல்லூர், சிருங்கேரி, தர்மஸ்தலா, ஹொரநாடு, பேலூர், ஹலபேடு ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 8 நாட்கள் ரூ. 3,090/- சென்னை / வேலூர் / சேலம் / கோவை / மும்பை (To) மங்களூர் & பேக் ரயில் (SL) மங்களூர் (To) மங்களூர் புஷ்பேக் பஸ்ஸில் 6 நாட்கள் சுற்றுலா.
13-02-08	வடமாநில யாத்திரைகள் பஞ்ச துவாரகா (நவ துவாரகா) அகமதாபாத், போர் பந்தர், சோம்நாத், நாகேஸ்வரம், துவாரகா, பேட்துவாரகா, கோமதி துவாரகா, மூல துவாரகா, மோட்ச துவாரகா, டாக்கூர் துவாரகா, ஸ்ரீ நாத் துவாரகா, காங்ரோலி துவாரகா, மாத்ருகயா அம்பாஜி, மவுண்ட் அபு, உதயப்பூர், ஆஜ்மீர் (புஷ்கர்), ஜெய்பூர், உஜ்ஜயினி ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 14 நாட்கள் ரூ. 8,500/- (சைவ உணவு, இருவர் தனியறை)
07-03-08	புவனேஷ்வர், பூரி, கோனார்க், கல்கத்தா, பைத்யாநாதம் (ஜோதிர்லிங்கம்), கயா, புத்தகயா, காசி, சாரநாத், அலகாபாத், சித்திரகூடம், ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 13 நாட்கள் ரூ. 7,800/- (சைவ உணவு, இருவர் தனியறை) இத்துடன் அயோத்யா, நைமிசாரன்யம் பார்த்துவர மொத்தம் 15 நாட்கள் ரூ. 9,000/- இத்துடன் நேபாள் (17.03.08 யாத்திரை) பார்த்துவர மொத்தம் 23 நாட்கள் ரூ. 13,800/- முக்திநாத், (ஹெலிகாப்டர் கட்டணம் ரூ. 8,500/- தனி)
07-03-08	புவனேஷ்வர், பூரி, கோனார்க், கல்கத்தா, பைத்யாநாதம் (ஜோதிர்லிங்கம்), கயா, புத்தகயா, காசி, சாரநாத், அலகாபாத், சித்திரகூடம், அயோத்தி, நைமிசாரன்யம் ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், கோகுலம், டெல்லி, ஹரித்வார், ரிஷிகேஷ் ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 18 நாட்கள் ரூ. 10,800/- (சைவ உணவு, இருவர் தனியறை)
10-03-08	காசி, சாரநாத், கயா, புத்தகயா, அலகாபாத், சித்திரகூடம், நைமிசாரன்யம், அயோத்யா, ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 12 நாட்கள் ரூ. 7,200/- (சைவ உணவு, இருவர் தனியறை) இத்துடன் ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், கோகுலம், டெல்லி, ஹரித்வார், ரிஷிகேஷ் பார்த்துவர மொத்தம் 15 நாட்கள் ரூ. 9,000/-
10-03-08	காசி, சாரநாத், கயா, புத்தகயா, அலகாபாத், சித்திரகூடம், நைமிசாரன்யம், அயோத்யா, கோரக் பூர், லும்பினி, போக்ரா, கண்டகி நதி, முக்திநாத், (ஹெலிகாப்டர் கட்டணம் ரூ. 8,500/- தனி) சாரங்கோட், காட்மாண்டு, பசுபதிநாத், ஜனகபுரி ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 20 நாட்கள் ரூ. 12,000/- (சைவ உணவு, இருவர் தனியறை)
17-03-08 & 05.05.08 (A/C III Tier)	கோரக் பூர், லும்பினி, போக்ரா, கண்டகி நதி, முக்திநாத், (ஹெலிகாப்டர் கட்டணம் ரூ. 8,500/- தனி) சாரங்கோட், காட்மாண்டு, பசுபதி நாத், ஜனகபுரி ரயில் (SL) & புஷ்பேக் பஸ்ஸில் 13 நாட்கள் கட்டணம் முறையே ரூ. 7,800/- / ரூ. 9,945/- (சைவ உணவு, இருவர் தனியறை) இத்துடன் அயோத்தி, நைமிசாரன்யம் பார்த்துவர மொத்தம் 15 நாட்கள் ரூ. 9,000/- / ரூ. 11,590/-
25-04-08	ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், கோகுலம், டெல்லி, ஹரித்வார், ரிஷிகேஷ், தேவப்ராயகை (கண்டங்கடி நகர்), ஜோஷி மட் (திப்பிரிதி), பத்ரி, கேதார் ஏ.சி ரயில் மற்றும் புஷ்பேக் பஸ்ஸில் 12 நாட்கள் ரூ. 9,270/- (சைவ உணவு, இருவர் தனியறை). இத்துடன் அயோத்தி, நைமிசாரன்யம் பார்த்துவர மொத்தம் 14 நாட்கள் ரூ. 10,815/- இத்துடன் நேபாள் (05.05.08 யாத்திரை) பார்த்துவர மொத்தம் 22 நாட்கள் ரூ. 15,965/- முக்திநாத், (ஹெலிகாப்டர் கட்டணம் ரூ. 8,500/- தனி)

வடமாநில யாத்திரைகளுக்கு 60 நாட்களுக்கு முன்பு முன்பணம் செலுத்துவோர்க்கு 5% கட்டணச் சலுகை அளிக்கப்படும்.
தவிர முதியோர்சலுகை ரூ.300/- (அ) ரூ.750/- மேலும் ஏ/சி ரயில் கூடுதல் கட்டணத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

பூஞ்சாரல் பக்கங்கள் ஆரம்பம்!

இனி இப்படித்தான்!

பாரதியின் புரட்சிக் கவிதைக்கு கை கால் முளைத்தது போலிருந்த ரமணி, மின்னல் போன்ற பளிச் நடையில் வங்கிக்குள் நுழைந்தபோது, தொலைபேசி அழைத்தது.

''ஹலோ'' என்று கூறி பதிலுக்குக் காத்திருக்கையில்,

''நான்தாம்மா அப்பா பேசறேன்.''

''என்னப்பா இது புதுப் பழக்கம்? ஆபீஸுக்கு ஃபோன் பண்ணியிருக்கீங்க?''

''ஒரு முக்கியமான விஷயம் ரமணி. இன்னிக்கு மூணு மணிக்கெல்லாம் நீ வீட்ல இருக்கணும்.''

''என்னப்பா விஷயம்?''

''அது வந்தும்மா... நானும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கோ, கல்யாணம் பண்ணிக்கோன்னு பலமுறை சொல்லிப் பார்த்துட்டேன். ஏன், கெஞ்சியும் பார்த்துட்டேன். ஆனா.. நீ எங்களைப் பார்த்துக்க யாருமே இல்லைன்னு உன் வாழ்க்கையைத் தனிமரமா நகர்த்திக்கிட்டு இருக்கே...'' ரங்கநாதன் மெல்ல இழுத்தார்.

''கதை சொன்னதெல்லாம் போதும்! சீக்கிரம் விஷயத்துக்கு வாங்கப்பா!''

ரமணி சீறினாள்.

''அதாம்மா அவங்களைப் பொண்ணு பார்க்க வரச் சொல்லிட்டேன். அவங்களும் சாயங்காலம் நாலு மணிக்கு வர்றாங்க; காலையிலே நான் சொல்லணும்னுதான் நெனைச்சேன். நான் வாக்கிங் போயிட்டுக் கொஞ்சம் லேட்டா வந்ததால நான் வர்றதுக்கு முன்னாடியே நீ ஆபீஸுக்குப் போயிட்டே. அதனாலதான் ஃபோன் பண்ணி...

''அப்பா, இது கொஞ்சம் கூட நல்லா இல்லே! என்னைக் கேட்காமலே எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டு இப்பச் சொன்னா எப்படி?''

எனக் கடிந்து கொண்ட ரமணி, அப்பாவின் பாசத்துக்குக் கட்டுப்பட்டு சில நிபந்தனைகளுடன் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாள்.

'**ச**சகச' என்ற பேச்சுடனும், புன்முறுவலுடனும் தோள்களை நிமிர்த்திக் கொண்டே உள்ளே நுழைந்தனர் மாப்பிள்ளை வீட்டார். அலங்கரிக்கப்பட்ட குத்துவிளக்காய் ரமணி வெளியே வந்தாள். பணிவோடு அனைவருக்கும் காப்பி கொடுத்துவிட்டு ஓரமாய் நின்றாள்.


''உங்ககிட்டே அதிகமா எல்லாம் ஒண்ணும் கேட்க மாட்டேன்; ஒரு 60 பவுன் நகையும், 2 லட்சம் ரொக்கமா பணமும், அழகா ஒரு காரும், சிக்கனமா ஒரு வீடும் அப்புறம் அதுல வைக்கிறதுக்கு சாமான்களெல்லாம் தரணும்; அது உங்களுக்கே தெரியும். இவ்வளவு செய்யறவங்க அப்படியே கல்யாணச் செலவையும் சேர்த்துப் பார்த்துக்குங்க''

என்று ஒருவழியாய் சொல்லி முடித்தாள் பிள்ளையின் அம்மா!

''என்னங்கம்மா இவ்வளவு அதிகமா கேட்கிறீங்களே...'' என்று தாழ்ந்த குரலில் மிரண்டு போய் கேட்டார் ரமணியின் தந்தை.

''இதெல்லாம் எனக்கா கேட்டேன்? உங்க பொண்ணுதான் எல்லாத்தையும் அனுபவிக்கப் போறா. அதுவும் எம் பையன் தகுதிக்கு இதெல்லாம் கால் தூசிக்குச் சமம்!'' என்று குரா உயர்த்திப் பேசினாள் மாப்பிள்ளை அம்மா.

''சரிங்கம்மா... நீங்க கேட்ட மாதிரி செய்யறேன்'' என்று ரங்கநாதன் பணிவ



பேசிக் கொண்டிருக்கையிலே...

''ஒரு நிமிஷம்பா'' என்று அழுத்தமான குரலோடு எழுந்தாள் ரமணி.

அனைவரது பார்வையும் அவளைக் கேள்விக்கணைகளால் துளைத்தது. அழுத்த மானக் குரலில் சொன்னாள்,

''சரிங்க! நீங்க கேட்ட மாதிரியே எல்லாத் தையும் செய்யறோம். ஆனா ஒரு கண்டி ஷன்! தாலியை நான்தான் கட்டுவேன்.''

''என்னது...?''

திகைத்துப் போய், அனைவரும் எழுந்து நிற்க, மாப்பிள்ளை அவமானத்தில் குறுகி நின்றான்.

''என்னடியம்மா புதுப்பழக்கம்?''

எல்லோரும் அக்னி வீசும் பார்வையுடன் அவளைப் பார்த்தனர்.

''இனிமே இப்படித்தான்...'' என்றாள் ரமணி தீர்மானமாக.

''டேய்... இன்னும் என்னடா இந்த மானங்கெட்ட எடத்துல நின்னுக்கிட்டு இருக்கே. எல்லோரும் கிளம்புங்க!''

''அம்மா... அவ சின்னக் குழந்தை. ஏதோ தெரியாமப் பேசிட்டா. நான் உங்க கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கிறேன்'' கெஞ்சினார் ரங்கநாதன்.

''என்னது... குழந்தையா? இவ இப்பவே இப்படிப் பேசுறாளே. வாழ்க்கைப்பட்டு வந்துட்டான்னா, வாயாடியே குடும்பத்தைக் குட்டிச்சுவரா ஆக்கிடுவா. உங்க சம்பந்தம் எங்களுக்கு வேண்டாம்'' என்று உதறிக் கொண்டு கிளம்பினாள் அவன் தாய்.

''உனக்கு எங்கேயிருந்து இப்படி தைரியம் வந்தது?'' என்று அதட்டி கண்ணீர் சிந்தினாள் ரமணியின் தாய் ஆனந்தவல்லி. அவமானத்தில் தலைகுனிந்திருந்தார் ரங்க நாதன்.

''அம்மா, கடையிலே கூட நாம காக கொடுத்துத்தான் பொருள் வாங்கறோம். ஆனா இந்தக் கல்யாண வியாபாரத்துல மட் டுந்தான் பொண்ணையும் கொடுத்து, பொரு ளையும் கொடுக்கிறீங்க. சரிம்மா! நீங்க எப்படியாவது அவங்க கேட்கிறதை குடுத் துடுவீங்க. பணம் இல்லாதவங்க என்ன செய்வாங்க? நாம கொடுத்து பழக்கி விடற ஒரு வழக்கம், நாளைக்கு பல ஏழைப் பெண்களைக் கல்யாணத்தை வெறும் கனவுல மட்டுமே பார்க்கச் செஞ்சுடும். படிச்ச எனக்கே இந்த நிலைமைன்னா? படிக்காத ஏழைப் பொண்ணுங்களோட நிலைமைய நினைச்சுப் பாரும்மா. நான் கல்யாணம் பண்ணிக்கிறேன், எங்கிட்ட இருந்து எதையும் எதிர்பார்க்காம என்னை மட்டுமே எதிர்பார்க்கிற ஒருத்தர் கிடைக் கும்போது'' என்று சொல்லிவிட்டு அறைக் குள் சென்றாள் ரமணி.

பொழுது விடிந்தது, ரமணி தனக்கே உரித்தான புத்துணர்ச்சியுடன் வழக்கம் போல் தன் அலுவல்களில் ஈடுபட்டாள். ஆனந்தவள்ளியும் வழக்கம் போல் சமைய லறையில் சங்கமமாகியிருந்தாள். ஆனால் ரங்கநாதன் மட்டும் வழக்கத்திற்கு மாறாக தன் பெண் ரமணிக்கு, மாப்பிள்ளையைத் தேடுவதற்குப் பதிலாக புரட்சிப் பெண் ணுக்கு ஒரு பாரதியைத் தேடிக் கொண் டிருந்தார்.

- ஏ. மேரி டயானா, ஆக்ஸிலியம் கல்லூரி, வேலூர்.



''பாத்ரூம்ல ஒரு கறுப்பு சோப் இருக்கே... அதுல குளிச்சா நுரையே வரலையே!''

''ஐயோ அது என் செல்ஃபோன். குளிக் கறப்ப பேசிட்டு அங்கேயே மறந்து வச்சிட் டேன்...!''

- பெ. அருண்குமார், பி.எஸ்சி. இரண்டாம் ஆண்டு, எஸ்.ஏ. பொறியியற் கல்லூரி, திருவேற்காடு, சென்னை - 77.

M R HOSPITALS

A Multi Speciality Hospital Offers Total Healthcare under Single Roof

An ISO 9001:2000 Certified



Integrated Haemodialysis Renal Care Centre

சிறுநீரகம் சம்மந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் மிகச் சிறந்த முறையில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சிகிச்சை மற்றும் அதிநவீன சிறுநீரக சுத்திகரிப்பு மையம்.



Cardiology and Cardiothoracic Surgery

இதயம் சம்மந்தப்பட்ட அனைத்து நோய் மற்றும் கொரோனரி பைபாஸ், வால்வு மாற்று அறுவை சிகிச்சைக்கும் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மிகச் சிறந்த சிகிச்சை மையம்



Plastic, Cosmetic & Breast Surgery

முகம், தாடை சீரமைப்பு, மூக்கழகு அறுவை சிகிச்சை, மார்பகம் சம்மந்தப்பட்ட குறைபாடுகள் நீக்குதல், தீப்புண், வெட்டுக்காயம், கை மற்றும் பிறவி குறைபாடுகள் நீக்க குறைந்த கட்டணத்துடன் கூடிய மிகச்சிறந்த சிகிச்சை மையம்.




Orthopaedic Surgery


விபத்து மற்றும் அனைத்துவித எலும்பு முறிவு சிகிச்சை, மூட்டு மாற்று அறுவை சிகிச்சை கை, கால், தோள்பட்டை, மூட்டுவலி சம்மந்தமான அனைத்து நோய்களுக்கும் இயன்முறை பயிற்சி (Physiotherapy) சிகிச்சையுடன் கூடிய சிகிச்சை மையம்

CASHLESS BENEFITS UNDER TPA SERVICES AND HEALTH CHECKUP PACKAGES

எம்.ஆர். மருத்துவமனை

20, கோவிந்தன் தெரு, அய்யாவு காலனி, அமைந்தகரை, சென்னை - 600 029.
போன்: 23633317 / 18 / 19 ஃபேக்ஸ்: 2363 1615
www.mrhospitalchennai.com | E-mail: mail@mrhospitalchennai.com







தூய்மையான வைரங்கள்,
பாரம்பரியமிக்க வடிவங்கள்,
125 வருட பாரம்பரியம்...

வைர நகைகளின் தாயகம்!



Joshis'

DIAMOND MERCHANTS & JEWELLERS

V. Bhavanishanker Joshi, 1B, 'Sudarsan Mahal', 16, Hanumantha Road
Balaji Nagar, Royapettah, Chennai - 600 014 Ph : 2813 3162, 2813 3062
Mobile : 94442 25807, 98410 87661 Website : www.joshis.in





சமாதானம்!

உள்ளத்துக்கும்
உள்ளத்துக்கும்
சமாதானம் - உறவு
அன்புக்கும்
பண்புக்கும்
சமாதானம் - இல்லறம்
விழிக்கும் மொழிக்கும்
சமாதானம் - காதல்
விண்ணுக்கும் மண்ணுக்கும்
சமாதானம் - மழை
உள்ளத்துக்கும் உதட்டுக்கும்
சமாதானம் - கவிதை
முஷரப்புக்கும் மன்மோகனுக்கும்
சமாதானம் - காஷ்மீரில் அமைதி
பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும்
சமாதானம்
இந்தியாவின் பெருமை

- டி. சரண்யன், ஸ்ரீராம் பொறியியல் காலேஜ், எர்ணாவூர்.

செந்தமிழ் நாட்டு மாணவனே!
தமிழைப் பேசத் தயங்குறியே!
சங்கம் வளர்த்த தமிழ்நாட்டில்
இங்கிலீஷ் பேசி அலையுறியே!
தமிழை மட்டும் பேசும் நாவில்
தங்கிலீஷ் பேசி கலங்குறியே!
செந்தமிழ் நாட்டு மாணவனே!
தமிழைப் பேச தயங்குறியே!

- டி. சத்யா, ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கலைக் கல்லூரி, சென்னை - 57.

'செந்தமிழ் நாட்டு தமிழச்சியே' என்ற திரைப்படப் பாடல் மெட்டில் பாடவும்.



ஹாய் காலேஜ் பாய்ஸ் & கேர்ள்ஸ்!



சிரிக்க... சிந்திக்க...
எஸ்.எம்.எஸ். ஜோக்ஸ் போட்டி!

மெஹந்தி டிஸைன்ஸ் போட்டியில திரளாகக் கலந்துக்கிட்டு அசத்திட்டீங்க... நன்றி! அடுத்த போட்டிக்கு ரெடியா? சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் எஸ்.எம்.எஸ். ஜோக்ஸ்களை எழுதி அனுப்புங்க. ஒருவரே எத்தனை ஜோக்குகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். தேர்ந்தெடுக்கப்படும் டாப் 10 எஸ்.எம்.எஸ். ஜோக்குகள் வரும் பிப்ரவரி 2008 ஆண்டு மலரில் பிரசுரிக்கப்படும். இதர சுவையான ஜோக்குகள் அடுத்து வரும் இதழ்களில் அவ்வப்போது பிரசுரமாகும். பிரசுரமாகும் ஜோக்குகளுக்கு சன்மானம் + சான்றிதழ் உண்டு!

- கல்லூரி மாணவ/ மாணவிகளுடன் பிளஸ்டூ மாணவர்களும், மாணவிகளும் பங்கேற்கலாம்.
- படிக்கும் படிப்பு, துறை, பள்ளி/கல்லூரி போன்ற தகவல்களோடு அதற்கான அத்தாட்சியையும் புகைப்படத்துடன் மறக்காமல் இணைக்கவும்.
- துளிக்கூட ஆபாசக் கலப்பில்லாத ஜோக்குகளை எழுதி அனுப்புங்க!

கடைசித் தேதி : 12.1.2008

பெயர் :

பள்ளி/கல்லூரி : ....

....

விலாசம் : ....

....

....

....

வாழ்க்கை!



வாழ்க்கையை நினைக்காதே
வாடி விடுவாய்!
சோகத்தை நினைக்காதே
சோர்ந்து விடுவாய்!
காதலை நினைக்காதே
கவிழ்ந்து விடுவாய்!
உன்னை நினைத்துப் பார்
வெற்றி பெறுவாய்!

மதிப்பு!



மண்பாண்டம்
ஆகும்வரை
மண்ணுக்கும்
தெரிவதில்லை
அதன் விலை!

தெய்வம்!



நேர்த்திக் கடனாய்
பலியாகும்
எந்தக் கடாவுக்கும்
உயிர்ப் பிச்சை
கொடுப்பதில்லை
சாமிகள்

- பெ. அருண்குமார்,
எஸ்.ஏ. பொறியியல் கல்லூரி,
கம்ப்யூட்டர் சயின்ஸ் இரண்டாம் ஆண்டு,
வீரராகவபுரம்.

Advanced & Diploma Level in Hairdressing
Advanced & Diploma Level in Beauty Therapy

City & Guilds and HABIA

2 INTERNATIONAL DIPLOMAS FOR ONE PRICE!

Course related tools, books & products free!

JOBS GUARANTEED

Migration Opportunities To Canada & Australia



IMAGE CONSULTANTS
ACADEMY OF HAIR & BEAUTY

CALL 044-28343064 FOR FREE INTRODUCTORY SEMINAR

Sterling Point, 124, G.N.Chetty Road T.Nagar, Chennai-17. Ph: 28343064
www.salonnayana.com E-mail: salonnayanachennai@yahoo.co.in

1	19.01.2008	முதல்	03.02.2008	வரை	பஞ்ச துவாரகா யாத்திரை.
2	11.02.2008	முதல்	21.02.2008	வரை	ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், டெல்லி, அக்ஷர்தாம், ஹரித்துவார், ரிஷிகேஷ், சுகர்தல், (பரீக்ஷித் மகாராஜாவிற்கு சுகபிரம்மம் 7 நாட்களில் ஸ்ரீமத் பாகவதம் சொன்ன இடம்.
3	24.02.2008	முதல்	11.03.2008	வரை	ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், நைமிசாரண்யம், அயோத்தியா, சித்திரக்கூடம், விந்தியவாசினி, அலகாபாத், காசி, கயா, பூரி, புவனேஸ்வர், கோனார்க் உள்ளிட்ட மகா சிவராத்திரி, காசி யாத்திரை.
4	27.03.2008	முதல்	09.04.2008	வரை	நேபாள், முக்திநாத், அயோத்தியா, காசி, அலகாபாத் உள்ளிட்ட யாத்திரை.
5	27.03.2008	முதல்	16.04.2008	வரை	நேபாள், முக்திநாத், அயோத்தியா, காசி, கயா, அலகாபாத் உள்ளிட்ட யாத்திரை.
6	05.04.2008	முதல்	16.04.2008	வரை	காசி, அலகாபாத் உள்ளிட்ட யாத்திரை.
7	25.04.2008	முதல்	01.05.2008	வரை	சோலாபூர், பண்டரீபுரம், சீரடி, சனி சிங்கணாப்பூர் உள்ளிட்ட யாத்திரை.
8	02.05.2008	முதல்	16.05.2008	வரை	பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்துவார், ரிஷிகேஷ், ஆக்ரா, மதுரா, புதுடெல்லி, அக்ஷர்தாம் உள்ளிட்ட யாத்திரை.
9	22.05.2008	முதல்	04.06.2008	வரை	ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், புதுடெல்லி, அக்ஷர்தாம், அமிர்தசரஸ், குருக்ஷேத்ரம், சிந்தாபூரணி, ஜ்வாலாமுகி, வஜ்ரேஸ்வரி, நங்கல், நைனாதேவி, வைஷ்ணவிதேவி உள்ளிட்ட சக்தி பீட யாத்திரை.

குறிப்பு : 60 நாட்கள் முன்னதாக டிக்கெட் ரிசர்வ் செய்ய வேண்டி இருப்பதால்
அதற்கும் முன்னதாக ரிசர்வ் செய்து கொள்வது நல்லது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்

1, யூசுப் லேன், அருணாசலம் தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி : ஆபீஸ் : 044 - 28516845, வீடு : 044-28516957

காம்பஸ் காமெடி!

முகமூடிச் சிரிப்பு!



நானும் என் தோழி கிருத்திகாவும் லைப்ரரி பீரியட்டை கட் அடித்து, கேன்டீன் போய்விட்டு அந்த பீரியட் முடியும் சமயத்தில் திரும்பி வந்து கொண்டிருந்தோம். வேறொரு ஆசிரியர், எதிரே வந்து கொண்டிருந்தார். அவரிடமிருந்து தப்பிக்க துப்பட்டாவால் தீவிரவாதிகள் போல் முகத்தை மறைத்துக் கொண்டோம். ஆனால் பாச்சா பலிக்கவில்லை. அவர் எங்களை அடையாளம் கண்டுபிடித்து விட்டார்.


''உங்களுக்கு இது லைப்ரரி பீரியட் அல்லவா? முகத்தை மறைத்துக் கொண்டு எங்கே சுற்றுகிறீர்கள்?'' என்று கேட்டதும், நான் விழிக்க, கிருத்திகா சட்டென்று முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு, ''சார், இவளுக்குத் தலைச்சுற்றலும் மயக்கமுமாக இருந்தது. கேன்டீனுக்கு அழைச்சுக்கிட்டுப் போய் லிம்கா வாங்கிக் கொடுத்து, கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க வைத்து இப்போதுதான் கிளாஸுக்கு அழைத்து வருகிறேன். வெயிலிலிருந்து தப்பிக்கத்தான் துணியால் தலையை மறைத்துக் கொண்டோம்'' என்றாள்.

உடனே ஆசிரியர் என்னைப் பார்த்து, ''ஜாக்ரதைமா! ரொம்ப முடியலைன்னா வீட்டுக்குப் போயிடு'' என்றும் சொல்லிவிட்டு நகர, அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்தோம்.

அந்த நிகழ்ச்சியின் ஞாபகமாக பின்னர் ஒருநாள் துப்பட்டாவால் முகத்தை மறைத்து புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.

- எஸ். லட்சுமிப்ரியா,
பி.டெக் (ஐ.டி.) இரண்டாம் ஆண்டு, ஈஸ்வரி இன்ஜினியரிங் கல்லூரி, ராமாபுரம்.

www.hrjohnsonindia.com



இணைப்புக்களை குறையுங்கள்

ரெகுலர் 2 x 2 அடி (600 x 600 மிமீ) டைல்களுக்கான தேர்வான மார்போனைட் XL இணைப்புகளை குறைப்பதற்கு உங்களுக்கு வழி செய்கிறது. இந்த புதிதான (700 x 700 மிமீ) டைல்கள் தேர்வான அனுகூலத்தை கொண்டுள்ளன. மேலும் ஃப்ளோர் அழகாக இருப்பதற்கான சிறந்த தேர்வு இது ஆகும். இது செலவு குறைவானதும் பயன்படுத்த எளிதானதுமாகும்.

Marbonite XL

Preferred over Italian Marble, worldwide


மங்கையர் மலர் அழைக்கிறது!
பூஞ்சாரல்
2007 - 2008
ஆட்டம்... பாட்டம்...
கொண்டாட்டம்!
Fashion
Fusion
Fiction
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தமிழ்நாட்டின் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!
CINTHOL
CINTHOL
மதுரை
10.01.2008
வியாழக்கிழமை
மன்னர் திருமலை
நாயக்கர் கல்லூரி
பசுமலை, மதுரை-625 004
கால்
இறுதிப்
போட்டி
ஈரோடு
24.01.2008
வியாழக்கிழமை
வேளாளர் மகளிர் கல்லூரி
கஸ்தூர்பா காந்தி கலையரங்கம்
திண்டல், ஈரோடு - 638 009
ல அளவில்... பிரம்மாண்டமாய்...
கல்லூரிகளுக்கிடையே...
கலைத்திறமைப் போட்டிகள்!
காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை ❖ அனைவரும் வருக!

"நாங்க படும் சிரமங்களை எல்லாம் மங்கையர் மலர்ல எழுதுங்க! அப்புறமாவது ஜனங்கள் எங்களைப் பாராட்டாவிட்டாலும் போகுது; தப்பா பேசாம இருக்கட்டும்!"

இப்படி மனம்விட்டு பேசி, கண்கலங்கிய, அனுபவம் மிகுந்த ஒரு நர்ஸின் குமுறலுடன் தொடங்கியது அந்தச் சந்திப்பு, மதுரை நகரத்தின் பல்வேறு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்ஸுகளுடன்.

தடை

"நர்ஸ் வேலை, பெண்களுடைய திருமணத்துக்கு பெரிய தடை! முதிர்க் கன்னிகளாகவே வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் அரசாங்க மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்ஸ்கள் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னால் வெகு சகஜம். இன்று நிலைமை சற்று முன்னேறியிருக்கிறது என்பது உண்மைதான். ஆனாலும் இன்றைக்கும்கூட ஒரு பெண் நர்ஸ் என்றால், அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தயங்கும் ஆண்கள் நிறைய இருக்கிறார்கள்."



தவிக்கும் தனிமரங்கள்

பற்றாக்குறை

"நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவில் நர்ஸ்கள் இருப்பதில்லை. ஐ.சி.யு.வில் கூட ஐந்தாறு நோயாளிகளுக்கு ஒரு நர்ஸ் என்ற விகிதத்தில்தான் நர்ஸ்கள் இருப்பார்கள். டியூட்டி நேரம் முழுவதும் ஏறத்தாழ நின்று கொண்டும், வார்டுகளில் சுற்றிக்கொண்டும் இருக்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளில் நிலைமை ஓரளவுக்குப் பரவாயில்லை; ஆனால் அரசு மருத்துவமனைகளில் பத்து நர்ஸ்கள் இருக்க வேண்டிய இடத்தில் நாலு நர்ஸ்கள்தான் இருப்பார்கள்."



கேலி; சந்தேகம்

"நர்ஸ்களையும், டாக்டர்களையும் இணைத்து கொச்சைப் படுத்தி வருகிற ஜோக்குகளைப் படிக்கிறபோது அதை எங்களால் எப்படி நகைச்சுவையாக எடுத்துக் கொண்டு சிரிக்க முடியும்? நர்ஸ்களைப் பற்றி கேலியாகவும் தவறாகவும் சித்திரிக்கும் காட்சிகள் எத்தனை சினிமாக்களில் இட

மாறுபட்ட பணி நேரம்

"இரவு ஷிப்ட் வேலை என்பது மிகவும் சிரமமானது. பொதுவாக காலை ஏழு மணிக்கு முதல் ஷிப்ட் ஆரம்பித்தால் பகல் ஒரு மணிக்கு முடியும். அடுத்த ஷிப்ட், ஒரு மணிக்கு ஆரம்பித்து இரவு ஏழு மணிக்கு முடியும். ஆனால் இரவு ஷிப்ட் இரவு ஏழு மணி முதல் மறுநாள் காலை ஏழு மணி வரை. அதாவது பன்னிரண்டு மணிநேரம். ஷிப்ட் நேரம் முடிந்தவுடன் நாம பாட்டுக்கு புறப்பட்டு வந்துவிடவும் முடியாது. அடுத்த ஷிப்ட் டியூட்டிக்குரிய நர்ஸ் வந்த பிறகு ஒவ்வொரு நோயாளிக்கும் உரிய மருந்து, மாத்திரை பற்றிய விவரங்களைச் சொல்லி, அனைத்து கேஸ் ஷீட்களையும் முறையாக ஒப்படைத்தபிறகேதான் புறப்பட முடியும்."



புகார் பட்டியல்

"அவசரம் அவசரமாக ஒரு நோயாளி மருத்துவமனையில் அட்மிட் ஆனவுடன், அவர்களை டாக்டர்கள் வந்து பார்ப்பதற்கு முன்பாகவே உடனடியாக கவனிப்பது நர்ஸ்கள்தான். ஆனால், நம்ம ஜனங்களுக்கு ஒரு நர்ஸ் எவ்வளவுதான் பரிவோடு கவனித்துக் கொண்டாலும், திருப்தியே ஏற்படாது. உடம்பு சரியாகி, வீட்டுக்குப் புறப்படும் சமயத்தில் டாக்டர்களைப் பார்த்து நன்றி சொல்லிவிட்டுப் போவார்களே தவிர, நர்ஸ்களை ஒரு வார்த்தை பாராட்டி விட மாட்டார்கள். அது மட்டுமா! நர்ஸ்கள் மீது பெரிய புகார்ப் பட்டியலை வேறு சொல்வார்கள்."

பெறுகின்றன? அப்படிப்பட்ட ஒரு சினிமா காட்சியை நானும் என்னுடைய கணவரும் சேர்ந்து பார்க்க நேரிட்டபோது ''நீ கூட அப்படித்தானா?'' என்று என் கணவர் தமாஷாகத்தான் கேட்டார் என்றாலும், அது என் மனத்தை மிகவும் புண்படுத்திவிட்டது. இப்படி வீணான சந்தேகம் வேறு. அதன் காரணமாக, வாழ்க்கையில் நிம்மதி இழந்து தவிக்கிற நர்ஸ்கள் பலர். விவாகரத்து வரைகூட போய், இன்று தனி மரமாக நிற்கும் நர்ஸ்களும் இருக்கிறார்கள்.''

கண்ணோட்டம்!

''நர்ஸ்கள் என்றாலே, ஆண், பெண் வித்தியாசமில்லாமல் நோயாளிகளைத் தொட்டு பணியாற்ற வேண்டிய சூழ்நிலை. இதையெல்லாம் சரியான கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவம் நமது சமூகத்தில் இல்லை.''

மத்தள இடி!

''மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி என்பதுபோல, எங்களுக்கு நோயாளிகளிடமிருந்தும் பிரஷர்; டாக்டர்களிடமிருந்தும் பிரஷர். ஒரு நோயாளிக்கு இரத்த அழுத்தம் சோதித்துக் கொண்டிருக்கும்போது டெலிபோன் மணி அடித்தால் உடனே எடுத்துப்பேச முடியாது. இரண்டு நிமிஷம் தாமதமானாலும் மறுமுனையில் டாக்டர், ''ஏன் இவ்வளவு லேட்? என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க?'' என்று கடுகடுப்பார். டாக்டர்கள் இப்படி என்றால், நோயாளிகளுடன் கூட இருக்கும் குடும்பத்தினர் அதற்கும் ஒருபடி மேல்! எப்பவாவது நாங்கள் நோயாளிகளின் தொந்தரவு தாங்கமுடியாமல், எரிச்சல் அடைந்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும், டாக்டர் ரவுண்ட்ஸ் வரும்போது எங்களைப் பற்றி குற்றப் பத்திரிகை வாசித்து வெறுப்பேற்றுவார்கள்.''



உடல்நலம் பாதிப்பு!

''இரவு நேர வேலை முடித்துவிட்டு வீடு திரும்பும் நாங்கள் பகலில் படுத்து ஓய்வு எடுக்கவும் முடியாது. இப்படி பணிக்காலம் முழுவதும் நேரத்துக்கு சாப்பிட முடியாமல், இரவு பகல் பாராமல் கண்விழித்து, நைட் டியூட்டியும் பார்க்கிற நர்ஸ்களின் உடல்நலம் எந்த அளவுக்கு பாதிக்கப்படும் என்று யாருமே யோசிப்பதில்லை.''



குற்ற உணர்வு!

"பொதுவாகவே, குடும்பப் பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லையே என்ற குற்ற உணர்வு நர்ஸ் வேலை பார்க்கிற எல்லா பெண்களுக்கும் இருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. இதைப் புரிந்துகொண்டு குடும்பப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்கிற கணவர்களும், மாமியார்களும் அதிகம் பேரில்லை. நர்ஸ் வேலை பார்க்கிறவர்களுக்கு முக்கியமான தேவை பொறுமை என்றால், அவர்கள் குடும்பத்தினருக்கு முக்கியமான தேவை புரிந்து கொள்ளுதல். இன்றைக்கு அதில்தான் பிரச்னையே!"

பணம் படுத்தும் பாடு!

"பல வெளிநாடுகளில் இன்றைக்கு நர்ஸுகளுக்கும் ஏக டிமாண்டு இருக்கிறது. நர்ஸ்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, நிறைய பணம் சம்பாதிக்கலாம் என்று கணக்குப் போடும் ஆண்கள் இன்று அதிகம். அவர்களுக்கு, நர்ஸ் வேலை பார்க்கும் பெண்களைவிட அவர்கள் அயல் நாட்டில் சம்பாதிக்கப் போகும் லட்சக் கணக்கான சம்பளம்தான் முக்கியம். நர்ஸ் வேலை என்று சொல்லி அயல் நாடுகளுக்கு அழைத்துக் கொண்டு போய், அங்கே மருத்துவமனைகளிலும் வீடுகளிலும் ஆயா வேலை பார்க்க கட்டாயப்படுத்தப்படுகிற சம்பவங்களும் நடக்கின்றன."

அடுத்த இதழில்
பெண் போலிஸுகள் மனம்விட்டுப் பேசுகிறார்கள்

ஆர்.டி.எக்ஸ் குண்டு

"பலவிதமான தொற்று நோய்த் தாக்குதல்களுக்கு எளிதான இலக்குகளாக இருப்பவர்கள் நர்ஸ்கள்தான். என்னதான் கையுறை, முகமூடி எல்லாம் அணிந்துகொண்டு நோயாளிகளை அணுக வேண்டும் என்று சொன்னாலும், பிராக்டிகலாக அது சாத்தியமில்லை. அதனால், உயிர்க்கொல்லி நோய்கள்கூட தாக்கும் அபாயம் இருக்கிறது."

தொகுப்பு : எஸ்.சந்திரமௌளி

புகைப்படங்கள் : மதுரை டி.எம்.பாலசுந்தர்



பெண் குழந்தைகளின் பள்ளி, கல்லூரி தோழிகளை கண்காணித்து, அவர்கள் நல்ல நடவடிக்கைகள் உள்ளவர்கள்தானா என்பதை அறிந்து வைத்து கொள்ள வேண்டும். ஏனெனில் நம் வளர்ப்பு, நம் குடும்ப சூழல் நன்றாக இருப்பினும் பெரும்பாலான பெண் குழந்தைகள் கெட்டுப் போவதற்கு தீய நட்பும் ஒரு காரணமாகிறது. வருடாவருடம் பள்ளி, கல்லூரி தோழிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம்.

-ப. பனிமலர், மதுரை - 14

A TRUST FOR YOUR LIFE

திருநெல்வேலி

"ஷிபா கோல்டன் சிட்டி" - யின்

இரண்டாவது பகுதி II PHASE

குதூகல ஆரம்பம்

வாழ்வதற்க்கும்

பெருமை கொள்வதற்க்கும்

தனித்தனி பங்களாக்கள்

ரூ.14 லட்சத்திலிருந்து

- நீச்சல் குளம்
- கான்பரன்ஸ் ஹால்
- ஷாப்பிங் மால்
- சிறுவர் பூங்கா
- 24 மணி நேர தண்ணீர் வசதி
- 24 மணி நேர மின்சார வசதி
- 24 மணி நேர பாதுகாப்பு

இன்னும் எண்ணற்ற வசதிகள்





Conduct :
94431 25525
94425 25525
94437 25525

NEAR SHIFA HOSPITAL,
TIRUNELVELI, JUNCTION,
TAMILNADU - 627 001
PHONE NO: 0462-2333015
2335858
Web : www.shifahousing.com
Mail : info@shifahousing.com

Shifa
HOUSING (P) LTD
TIRUNELVELI
(A GROUP OF SHIFA HOSPITAL)

பொங்கல் வெளியீடு

அனுராதா ரமணன்

கை நிறைய பூ



மங்கையர் மலரில் வெளியான
அழகான குடும்பக் கதைகளின் தொகுப்பு



- ஜன்னல்
- சாதகப் பறவை
- கை நிறைய பூ
- அம்மா
- தொப்புள் கொடி
- கிழம்

விலை ரூ.35/

படிக்க...ரசிக்க...பரிசளிக்க... ஏற்றது!

மங்கையர் மலர் விற்பனையாகும் அனைத்துக் கடைகளிலும் கிடைக்கும்.

தபாலில் பெற ரூ. 15/- சேர்த்து டி.டி./எம்.ஓ. அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்குலேஷன் மேனேஜர், பாரதன் பப்ளிகேஷன்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32.

டைஜஸ்ட்

உங்கப் பிரதிக்கு முந்துங்க!

கல்கி நிறுவன வெளியீடு



பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு

யுவஸ்ரீ கலா பாரதி விருது

துரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, டிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பச்சு, கவிதை, விளையாட்டு ஆகிய றைகளில் ஏதேனும் ஒரு துறையில் றந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற ிருதினையும் கல்லூரி மாணவ ாணவியருக்கு **'சுவாமி ிவேகானந்தர்'** விருதினையும் வ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக ழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக ாலையும் வழங்கப்படும்.

மிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் பங்களூர் மற்றும் திருவனந்தபுரத்திலுள்ள அனைத்து மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி ாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் டைபெற உள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் அந்தந்த ள்ளியைச் சார்ந்த முதல்வர்கள் ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் ிருந்தும் முதல் 3 ரேங்க் பெற்ற மாணவ ாணவியர் மற்றும் இசை, UC MAS, ABACUS ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, அனைத்து விளையாட்டு, பொது அறிவுத்திறன், யோகா ஆகிய துறைகளில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் **15** பேர் கொண்ட பெயர் பட்டியலை **நெல்லை பாலு, நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா, G-28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை-16. செல் 94439-30815, 94426 30815.** என்ற முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய **ரூ.10** அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் 30 தினங்களுக்குள் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும். 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியரை இவ்விருதுக்கு அனுப்பி வைக்கும் பள்ளிக்கு சிறப்புக் கேடயம் வழங்கப்படும்.

யுவஸ்ரீ கலா பாரதி விருதுக்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்றவர்களும் தாங்கள் பெற்ற பரிசுக்கான ஜெராக்ஸ் பிரதிகளுடன், ரூ 10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் தனியாகவும் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இசை, பரத நாட்டிய ஆசிரியைகள், ஓவியம், கராத்தே, யோகா மற்றும் UC MAS, ABACUS, HINDI மாஸ்டர்களும் தங்களிடம் பயிலும் சிறப்பானவர்களின் பெயர் பட்டியலையும் அனுப்பலாம்.

கவிதை தொகுப்பு நூல்

பாரதி யுவ கேந்திரா சார்பில் 200 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து ஒரு கவிதைத் தொகுப்பு நூல் பிப்ரவரியில் வெளியிட உள்ளோம். இந்நூலுக்கு கவிஞர்கள் 24 வரிகளுக்குள் மரபு அல்லது புதுக்கவிதை ஒன்று எழுதி எமது மேற்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். அத்தோடு ரூபாய் 250/- M.O. மூலம் அனுப்பவும். ஒவ்வொருவருக்கும் 5 புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படும்.

முதல் பரிசு டேபிள் டாப் வெட்கிரைண்டர் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
பி. சிவகாம சுந்தரி,
மணப்பாக்கம்.

பொருள் : வெல்லம்

வெல்லப்பால் கொழுக்கட்டை

தேவையான பொருள்கள் :
வெல்லம் - ¼ கிலோ,
தேங்காய்ப் பால் - 2 பெரிய கப்,
புழுங்கல் அரிசி - 1 தம்ளர்,
ஏலக்காய் - 4,
முந்திரி - 50 கிராம்,
தேங்காய்த் துருவல் - சிறிதளவு,
ஜவ்வரிசி - 50 கிராம்.

செய்முறை :

★ முதலில் ஜவ்வரிசியைத் தண்ணீரில் ஊறவைக்கவும்.

★ புழுங்கல் அரிசியை ஒரு மணி நேரம் ஊறவைத்து, அதிகம் நீர் விடாமல் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும்.

★ அரைத்த மாவில் கையளவு மாவை எடுத்து தனியாக வைக்கவும்.

★ மீதியுள்ள அரிசி மாவை கைகளால் உருட்டி, கோதுமையை விட சற்றுப் பெரிதாகத் தேய்த்துத் துணியில் போட்டு ஒரு மணி நேரம் உலர வைக்க வேண்டும். நன்கு காய்ந்ததும், இந்தச் சின்ன உருண்டைகளை இட்லித் தட்டில் எண்ணெய் தடவி, வேக வைத்துக் கொள்ளவும்.

★ வெல்லத்தை கல், மணல் நீக்கி, அரை தம்ளர் நீர் சேர்த்து வாணலியிலிட்டு கரைத்துக் கொள்ளவும்.

★ வெல்லம் நுரைத்துக் கொதிக்கும் போது கையளவு அரிசி மாவைக் கரைத்து ஊற்றிக் கிளற வேண்டும். பிறகு, ஜவ்வரிசி, வேகவைத்த சின்ன உருண்டைகள் போட்டு, நன்றாக வேகும் வரை, கலக்க வேண்டும்.

★ அடுத்ததாக, தேங்காய்ப் பால் சேர்த்து, கொதித்ததும் ஏலப்பொடி தூவி இறக்கவும்.

★ தேவைப்பட்டால் தேங்காய்த் துருவலை இலேசாகத் தூவிக் கொள்ளலாம்.



★ சின்ன உருண்டைகளாக பொறுமையாகக் கைகளால் தேய்த்துப் போடவும்.

★ இதை சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் உண்பர்.

இதயம் கலந்த அமிர்த்தாவின் சிறப்பான தரம் மற்றும் பல்வேறு சிறப்பம்சங்கள் உங்களுக்கு என்றும் துணையிருக்கும்
அமிர்த்தா™
டேபிள் டாப் வெட் கிரைண்டர்
Let it assist you

இம்மாத இல்லத்தரசி

இரண்டாம் பரிசு ரூ.300/-

டிங்லாடு

தேவையான பொருள்கள் :

உருண்டை வெல்லம் - ½ கிலோ,



சம்பா கோதுமை - 250 கிராம்,

கறுப்பு முழு உளுந்து - 100 கிராம்,

வெந்தயம் - 1 மேஜைக்கரண்டி,

கோந்து - 100 கிராம் (இது நாட்டு மருந்துக் கடைகளிலும் 'எடிபிள் கம்' என்ற பெயரில் பெரிய மளிகைக் கடைகளில் கிடைக்கும்)

பாதாம் - 100 கிராம்,

ஏலக்காய்ப் பொடி - 1 டீஸ்பூன்,

பசு நெய் - 200 கிராம்.

செய்முறை :

கோதுமை, உளுந்து, வெந்தயம் இவற்றைச் சுத்தம் செய்து, கனமான இலுப்பச்சட்டியில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு வாசனை வரும் வரை வறுக்கவும். ஆறியதும் மிக்ஸியில் நைசாக பொடித்துக் கொள்ளவும்.

2 ஸ்பூன் நெய்யை வாணலியில் விட்டு கோந்துத் துண்டுகளை 4-5களாகப் போட்டுப் பொரித்தெடுக்கவும்.

பாதாம் பருப்புகளை சிறு துண்டுகளாக வெட்டவும்.

அகலமான பேசினில் மாவுக் கலவை, பொரித்த கோந்து, பாதாம் பருப்பு, ஏலக்காய்ப் பொடி, நெய் எல்லாம் சேர்த்து நன்கு கலக்கவும்.

உருண்டை வெல்லத்தை சிறு துண்டுகளாக்கி 1 கப் வெந்நீரில் கரையவிட்டு வடிகட்டி பாகு காய்ச்சவும்.

பாகுபதம் : பாகை சிறிது எடுத்து நீரில் விட்டால் உருட்ட வரும். அதைத் தட்டில் வீசிப் போட்டால் 'டங்' என்று சப்தம் வரும். (இதுவே 'டங்' பதம்). இந்தப் பதத்தில் பாகை பேசினில் உள்ள மாவுக் கலவையில் விட்டு நன்கு கலந்து சிறிது ஆறியதும் சிறு உருண்டைகளாகப் பிடித்து வைக்கவும்.

வயதுக்கு வந்த பெண்களுக்கும், பிரசவித்த பெண்களுக்கும், தினம் காலை, மாலை ஒரு உருண்டை வீதம் கொடுத்து வந்தால், இடுப்பு பலம்பெறும். இந்த 'டிங்லாடு' வடநாட்டில் மிகவும் பிரசித்தமானது.

இதை கர்நாடகாவில் 'அண்டின உண்டே!' என்பார்கள். அண்டு என்றால் பசை! (கோந்து), 'உண்டே' என்றால்



உருண்டை!

- ஜெயலக்ஷ்மி கணேசன், மும்பை - 71.

மூன்றாம் பரிசு ரூ.200/-

ஜவ்வரிசி லாடு

தேவையான பொருள்கள் :

ஜவ்வரிசி, சேமியா - 1½ கப் (இரண்டும் சேர்த்து),
தேங்காய்த் துருவல் - ½ கப்,
வெல்லம் - 2 கப்,
முந்திரித் துண்டுகள் - 2 ஸ்பூன்,
ஏலம் - வாசனைக்கு,
நெய் - சிறிதளவு.

செய்முறை :

ஜவ்வரிசி, சேமியா இரண்டையும் எண்ணெயில் பொரித்து வைத்துக் கொள்ளவும். வெல்லத்தைச் சுத்தம் செய்து பாகு செய்து தேங்காய்த் துருவல், பொரித்த ஜவ்வரிசி, சேமியா, முந்திரி, ஏலம் இவற்றைச் சேர்க்கவும். வெல்லக் கலவையில் சிறிது நெய் சேர்த்துக் கிளறி, பின் சிறு உருண்டைகளாகப் பிடிக்கவும். பார்க்க அழகும், நாவில் சுவையும் தரும் இந்த லாடு செய்வதற்கு மிகவும் எளிதானது.

- சரோஜா,
(முழு முகவரி தேவை)

ஆறுதல் பரிசு ரூ.100/-

வெல்ல குஞ்சாலாடு

தேவையான பொருள்கள்:

கடலை மாவு - ½ கிலோ,
அரிசி மாவு - 100 கிராம்,
வெல்லம் - 1 கிலோ,
முந்திரிப் பருப்பு - 100 கிராம்,
ஏலக்காய்த் தூள் - (10 ஏலக்காய்).
எண்ணெய் - ½ கிலோ,
எலுமிச்சம் பழம் - ½ மூடி (அ) 1 பழம்.

செய்முறை :

கடலை மாவையும், அரிசி மாவையும் கலந்துகொண்டு, தண்ணீர் விட்டு தோசை மாவு போல் கரைத்துக் கொள்ள வேண்டும். எண்ணெய் காய்ந்தவுடன், பூந்தி தேய்க்கும் கரண்டியில் ஊற்றித் தேய்க்க வேண்டும். நன்றாகக் கரகரப்பாக 'மொறுமொறு' என்று எடுத்து வைத்துக் கொள்ளவும்.

பிறகு வெல்லத்தைக் கெட்டிப் பதமாகப் பாகாகக் காய்ச்சி இறக்கி வைத்துக்கொண்டு பாகு சர்க்கரைப் பதமாக மாறாமல் இருக்க அரை மூடி எலுமிச்சம் பழச்சாற்றைப் பிழிய வேண்டும்.


வறுத்து வைத்திருக்கும் முந்திரிப் பருப்பையும், பொடி செய்து வைத்திருக்கும் ஏலப்பொடியையும் போடவும்.

கரகரப்பாகத் தேய்த்து வைத்திருக்கும் பூந்தியைச் சிறிது சிறிதாக வெல்லப்பாகில் போடவும். பின்னர் நன்றாகக் கலந்து வைத்துக் கொண்டு பொரி உருண்டை உருட்டுவது போல் (சிறிது கைகளினால் பிடித்து விட்டு பின்னர் முறத்தில் போட்டு) உருட்டிட வேண்டும்.

ஆறிய பின்னர் எடுத்துச் சாப்பிட மிக அருமையாக, கரகரப்பாக இருக்கும். ஒரு மாதம் வரை கூட கெடாமல் கரகரப்பாகவே

புத்தாண்டு பொங்கல் சலுகை

30-12-07 முதல்
30-01-08 வரை





60%
கிராமுக்கு
விலை
குறைப்பு

கிப்ட் வவுச்சர்ஸ்

நீங்கள் வாங்கும் அனைத்து வைர நகைகளுக்கும் 250, 500, 1000, 2000, 5000 மதிப்புகளில் வழங்கப்படும்.

அனைத்து வைர நகைகளுக்கு (VVSI FG கலர்) தரம் கொண்டது.



- செய்கூலி இல்லை
- மிக குறைந்த சேதாரம்
- சாதா கற்களுக்கு விலை இல்லை

www.sripalsanijewels.com ஆன்லைன் மூலம் நகை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு டெலிவரி சார்ஜில் 50% தள்ளுபடி உண்டு இச்சலுகை 30.12.07 முதல் 30.01.08 வரை

SRI PALSANI JEWELS

110, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, (ஏவி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் அருகில்),
மைலாப்பூர், சென்னை - 600 004. போன்: 28111737, 28117036

ஸ்ரீ டிராவல்ஸ்

194/A, 2வது மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை- 600 006.
☎ : 044-65345081, 082, 083, 2851 6799. Email : sritrave@satyam.net.in

அருமையான தங்கும் வசதிகளுடன் தென்இந்திய சைவ உணவுடன் 2008ஆம் ஆண்டின் சுற்றுலாக்கள்

எழில் கொஞ்சும் அந்தமான் தீவுகள்

புறப்படும் நாள் : 16.02.08, பயணத் தொகை : ரூபாய் 5,500 + விமானம் + கப்பல் பயண டிக்கெட்

ஹெலிகாப்டர் மூலம் முக்திநாத் தரிசனம்

சென்னை-அலகாபாத்-சித்ரகூடம்-நைமிசாரண்யம் - போக்ரா - முக்திநாத் - ஜனக்புரி-காத்மாண்டு-அயோத்யா-வாரணாசி-சென்னை புறப்படும் நாள்: 22.03.2008, 14.04.2008

பஞ்ச துவாரகை யாத்திரை

புறப்படும் நாள்: 22.02.2008, பயணத் தொகை : ரூபாய் 6,900 + ரயில் டிக்கெட்

பிரதி மாதமும்

காசி கயா - அலகாபாத் யாத்திரை புறப்படும் நாள் : 11.02.2008, 10.03.2008 பயணத் தொகை : ரூபாய் 3,000 + ரயில் டிக்கெட்

ஜோதிர்லிங்க தரிசனம்

பீமசங்கரேஷ்வர் (பூனா) - சனிசிங்கனாப்பூர் (நாசிக்) - குருஷ்னேஸ்வர் (அவுரங்காபாத்) - எல்லோரா - சீரடி - திரியம்பகேஷ்வர் (உஜ்ஜெயனி) முக்திதாம் - சோமநாத் - துவாரகா - நாகேஷ்வர் மகாகாளேஷ்வர் - ஓம்காரேஷ்வர் (இந்தூர்) புறப்படும் நாள் :07.03.2008, பயணத்தொகை : ரூபாய் 8,500 ரயில் டிக்கெட்டுடன்)

ராஜஸ்தான் சுற்றுலா

சென்னை - ஜெய்ப்பூர் - பிகானிர் - ஜெய்சால்மர் - ஜோத்பூர் - உதயபூர் - மவுண்ட் அபூ - சித்தோர்கார் - ஆஜ்மீர் - புஷ்கர் - ஜெய்ப்பூர் - சென்னை புறப்படும் நாள் : 09.04.2008, பயணத்தொகை : ரூபாய் 6,900+ரயில் டிக்கெட்

திருக்கைலாய யாத்திரை

(எமது வெற்றிகரமான 25வது பயணம்) மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில்

இருக்கும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சுவைத்துச் சாப்பிடுவார்கள்.

- சே. கோமளவல்லி, குளித்தலை.

ஆறுதல் பரிசு ரூ.100/-

வெல்லம் பீட்டா

தேவையான பொருள்கள்:

ரவை - 1 கப்,
தண்ணீர் - 1 கப்,
தேங்காய் துருவியது - 1 கப்,
வெல்லம் - ½ கப்,
ஏலக்காய் - 4,
நெய் - 2 ஸ்பூன்,
எண்ணெய் - தேவையான அளவு.

செய்முறை :

தண்ணீரைக் கொதிக்கவைத்து அதில் ரவையைப் போட்டுக் கிளறி வேகவிடவும். சிறிது நேரம் ஆறவைக்கவும். பின் சிறிது நெய்விட்டுப் பிசைந்து கொள்ளவும்.

பூரணம் கிளறுவதற்கு : வாணலியில் சிறிது தண்ணீருடன் வெல்லத்தூளைப் போட்டு வடிகட்டவும். பிறகு தேங்காய்த் துருவலைப் போட்டு அடுப்பில் வைத்து பூரணம் கிளறவும். அத்துடன் ஏலக்காய்த் தூள், நெய்யும் சேர்க்கவும்.

ரவை கலவையை வடை போல் தட்டி நடுவில் பூரணக் கலவை வைத்து மூடி எண்ணெயில் பொரித்தெடுக்கவும். இந்தப் பட்சணம் 'பீட்டா' என்று ஒரிஸ்ஸாவில் மிகவும் பிரபலமானது.

- ராதா கிருஷ்ணமூர்த்தி,
ஒரிஸ்ஸா.

பிரசுரத்துக்கு...

நேந்திரப் பாகு

தேவையான பொருள்கள் :

நேந்திரம் பழம் - 4 (கேரளாவில் ஏத்தன்)
வெல்லம் - ½ கிலோ,
சுக்கு - சிறிதளவு,
ஏலக்காய் - 4 (அ) 5,
தேங்காய்ப் பால் - 1 கப்,
நெய் - 4 டீஸ்பூன்.

செய்முறை :

நேந்திரம் பழத்தைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வைக்கவும். பிறகு வெல்லத்தை அடுப்பில் வைத்துச் சூடாக்கி பாகு பதத்தில் கொண்டு வரவும். அதில் நேந்திரப் பழத் துண்டுகள், பொடித்த ஏலக்காய், சுக்கு போட்டு கிளறி விடவும். பிறகு தேங்காய்ப் பால், நெய் ஊற்றி சிறிதளவு சூட்டைக் குறைத்து ஆறவைக்கவும். இப்பொழுது பாகு ஜாம் பதத்தில் வந்ததும், வேறு ஒரு பாத்திரத்தில் பரந்த அகப்பையால் கிளறி எடுத்து வைக்கவும். இப் பொழுது 'வெல்ல நேந்திரப்பாகு' ஜாம் ரெடி!

- ராதா சுப்பிரமணியம்,
வளசரவாக்கம்.



வடை, பஜ்ஜி போன்றவற்றில் எண்ணெய் அதிகம் இருந்தால் செய்தித்தாளில் வைத்து எண்ணெயைப் பிழிந்துவிட்டுச் சிலர் சாப்பிடுகிறார்கள். அச்சு மையில் இரசாயனப் பொருட்கள் உள்ளன. அவை குடல் அழற்சி, அல்சர் போன்ற நோய்களை உண்டாக்கும். வடையை டிஷ்யூ பேப்பரில் ஒற்றிச் சாப்பிடலாம்.

- இராஜம், சாத்தூர்.



தையில் வழி!

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். சில பேருக்கு சக்ர தோஷம் இருந்தாலும் விவாஹம் தள்ளிப் போகும். அதற்குப் பரிகாரம் ஸ்ரீரங்கம்தான். அங்கு சென்று, தேவையான பரிகாரம் செய்தால், நல்ல பலன் கிடைக்கும்.

காலை அல்லது மாலையில், ஆலயத்தில் நெய் விளக்கேற்றி, சக்திக்கு ஏற்ப பிரதட்சணம் செய்தல், ஏழைப் பெண்ணுக்கு வஸ்திரம் வாங்கித் தருதல், மிகவும் ஏழைப் பெண்களுக்குத் திருமணம் நிச்சயமானால், திருமாங்கல்யம் வாங்கிக் கொடுத்தல், ஆண்டவன் ஆலயத்தில், தாயார் அல்லது அம்பாளுக்கு, மாங்கல்யம் சாற்றுதல், மாலைகள் சாற்றுதல், வெள்ளிக் கிழமைகளில் முடிந்தால் விரதம் இருத்தல், திருவோண விரதம், சஷ்டி விரதம் இருத்தல் இவை எல்லாம் கண்டிப்பாகப் பலன் அளிக்கக் கூடியவைகளாகும். வெள்ளிக்கிழமைகளில், முக்கியமாக தை வெள்ளிக்கிழமைகளில், தாயாருக்கு தாமரைப் புஷ்பம் வாங்கிக் கொடுத்தால், விரைவில் திருமணம் கூடிவரும்.

- வஸந்தா வேணுகோபால், கோடம்பாக்கம்.

WANTED
Marketing Staff

(Full Time or Part Time)

For our Matrimonial Website Service

For all the Major Cities and District Head Quarters of T.Nadu

Salary: upto Rs. 10,000/- month
(Chances for more earnings)

Qualification: Any Degree or Diploma with Computer Knowledge and Interest in Matrimonial Services (Only Female Candidates)

Age : 20 to 40

முடியும் என்ற நம்பிக்கையும், செயல்பட வேண்டும் என்ற ஆர்வமும், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளும் ஆசையும், பிறருக்கு உதவிடும் எண்ணமும் உள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்.



Apply with Bio-Data preferably on or before **31.01.08** to

www.mykalyaan.com

ANYWHERE INDIA
ON-LINE TRADE & SERVICES

25, Loganathan Nagar 2nd Street, MB Complex, 100 ft Road, Chennai - 94.



கேன்ஸர் நோயா ?



Dr. K. Sri Sridar

கவலைப்பட வேண்டியதில்லை.

INTRA PROSTATE CYST (NON-MALIGNANT)



Transrectal Scan Report
Date: 08.08.06

[illegible] 44 [illegible] 3.96 sq.cm [illegible]



Transrectal Scan Report
Date: 22.11.06

After 68 days

16.10.06 [illegible] 37 [illegible] 0.24 sq.cm [illegible]

CA.PANCREAS




LIVER NORMAL STUDY
CT Scan
Date: 01.12.06

[illegible] 31 [illegible] 08.08.06 [illegible] CT Scan [illegible] 23mm×23mm [illegible] 01.12.06 [illegible] CT Scan [illegible] Liver Normal [illegible]

CA. BREAST TO LUNGS (மார்பக புற்றிலிருந்து நுரையீரல் புற்றுநோய்)




Before Treatment
NODULAR OPACITIES SEEN IN BOTH LUNG FIELDS METASTATIC DEPOSITS
Chest X-ray *Date: 08.06.05*



After 18 days Herbal Oncology
NORMAL STUDY
Chest X-ray
Date: 01.06.05

[illegible] 43 [illegible] X-ray [illegible]

GLIOMA




MRI SCAN
Date: 01.09.2006

[illegible] 58 [illegible] Glioma [illegible]

CA. BREAST TO LUNG, BONES

20 [illegible] 41 [illegible] 1½ [illegible]



X-ray Chest
Date: 14.05.2006

CA.RECTUM WITH LIVER METS

CEA 6390
After 43 Days
CEA 129



[illegible] 56 [illegible] CEA [illegible] TUMOUR MARKER TEST 6390 [illegible] 43 [illegible] 129 [illegible]

கை விடப்பட்ட கேன்ஸரா ? கவலை வேண்டாம்

GBM, CA. Oesophagus, Lung, Liver, Cervix, Bone, Prostate, Rectum, Ependymoma, Astro cytoma, Glioma, AML, CML [illegible] Herbal Oncology™ [illegible] 40% [illegible] Herbal Oncology™ [illegible]

Herbal Oncology, Medical Oncology & Radio Therapy advise are all under one roof.

Royale Apartment, 6, Mannar Reddy Street,
(Opp. Street to T.Nagar Bus Terminus)
T.Nagar, (Next to Krishnaveni Theatre),
Chennai - 600 017.
Weekdays : 10.00 am to 5.30 pm, Sunday Holiday
Clinic: Ph: 044-24339596, 24363835
Cell: 99400 58609

NO
METALS
MERCURY
STEROID
POISON

PURE HERBS BRINGS MIRACLE

Gurubalaa™ Clinic
Speciality Clinic for Herbal Oncology and Asthma

Treatment given by Qualified & Experienced Doctors.

We have no branches



ன்றும் பதினாறு
Introducing the "Sweet 16" collection from Angelform - a sensual range of seamless T-shirt bras that complement whatever you wear, as the only thing that shows on the outside is your true beauty.
angelform®
Sweet 16™

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. [illegible]
post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/06-08 Registered as a Newspaper in Sri lanka

916 தங்க நகைகளுக்கு

Approved Outlet

BUREAU OF INDIAN STANDARDS

ரூ. 45

கிராம் ஒன்றுக்கு குறைவு

செய்கூலி இல்லை

மிக குறைந்த சேதாரம் ▶ 916 தங்க நகைகள் மற்றும் பாரம்பரிய நகைகளுக்கு ரூபி, எமரால்டு மற்றும் ஜாதிக்கற்களுக்கு

சேதாரம் இல்லை கற்களுக்கு விலை இல்லை ▶ செயற்கை கற்கள் பதித்த 916 தங்க நகைகளுக்கு

Lalitha®

லலிதா ஜுவெல்லரி மார்ட் (பி) லிமிடெட்

எக்சேஞ் சலுகை

பழைய தங்க நகையை மாற்றி புதிய 916 தங்க நகை வாங்கும் போது

என்றும் உங்களுடன்

புத்தகம் - 2

மங்கையர் மலர்

திருமண மலர்

ஜனவரி 2008



வாழ்க்கையை இனிமையாக நடத்திச் செல்வதற்கான அறிவை தெருக்களில் ''ஐஸ்-ஐஸ்'' என்று கூவி, ஐஸ் விற்கும் நடை வண்டிக்காரர்களின் அறிவிப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அன்று பொங்கல். பிரேமா புதுப் புடைவை உடுத்தி இருந்தாள். அவளது கணவன் சுந்தர் வாங்கிக் கொடுத்ததுதான். அவளது புடைவையைப் பார்த்த பலரும் அதைப் பாராட்டினர்.

''என்னங்க... என்னோட புடைவை எப்படி இருந்தது?''

''நல்லாதான் இருக்குது!'' அதற்கு மேல் அதைப் பற்றிச் சொல்ல அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை.



ஐஸ்... ஐஸ்!

பிரேமாவுக்கோ மனவருத்தம். முகத்தைத் திருப்பிக் கொண்டு உறங்கத் தொடங்கினாள். ''நீ இந்தப் புடைவையில் எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?'' என்று அவன் கொஞ்சம் 'ஐஸ்' வைத்திருந்தால், எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும்!

இதோ 'ஐஸ்' வைக்கத் தவறிய இன்னொரு கேஸ் :

ரேணுகாவின் மாமியார் ஊரிலிருந்து வந்திருந்தார். பூண்டு ஊறுகாய் கொண்டு வந்திருந்தார். தான் கொண்டு வந்திருந்த பூண்டு ஊறுகாயைப் பாராட்டி தன் மருமகள் ஒரு வார்த்தையாவது சொல்வாளா என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் மாமியார். ரேணுகா அந்த ஊறுகாயைப் பாராட்டி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. இந்த ஆதங்கம் மாமியாரின் மனத்தில் இருந்தது.

ஒருநாள் ரேணுகா செய்த ஏதோ ஒரு அயிட்டத்தில் சற்று உப்பு அதிகமாக இருந்ததற்கு, ''இதை யாராவது வாயில் வைக்க முடியுமா?'' என்று தன் மகனின் எதிரில் சத்தம் போட்டாள். அவளது மனதில் ரேணுகாவைப் பழிவாங்கி விட்டாற்போன்ற திருப்தி! இந்த வெறி ஏற்படக் காரணம், தான் செய்த அயிட்டத்தை தன் மருமகள் பாராட்டவில்லையே என்ற ஏக்கம்தான்! இதை ரேணுகா தவிர்த்திருக்கலாமல்லவா?

''அத்தை, நீங்க கொண்டு வந்த பூண்டு ஊறுகாய் ரொம்ப டாப்!'' என்று பாராட்டி 'ஐஸ்' வைத்து இருந்தால் பிரச்னை எவ்வளவு சுமுகமாகப் போயிருக்கும்.

